பொது நூலகம்
கோண்டாவில்
நல்லூர் பிரதேச சபை

# உதயன்




சுடர் 30 கதிர் 347 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 22, ஞாயிற்றுக்கிழமை 08.11.2015

# இலங்கையில் புயல் அபாயம்

## வடக்கிலும் பாதிப்பு இருக்கும் என எச்சரிக்கை




கொழும்பு, நவம்பர் 8

வங்காள விரிகுடாவில் உருவாகி வரும் புதிய வெப்ப மண்டலச் சூறாவளியினால் இலங்கையில் இந்த வார முற்பகுதியில் பெரியளவிலான புயல் அபாயம் ஏற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்திலும் மேக் எனப்படும் இந்தப் புயல் பாதிப்பு இருக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளதால் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அக்குவெதர் வெப்பமண்டலப் புயல் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளதாவது:-

புதிதாக வரவுள்ள மேக் எனப்படும் வெப்ப மண்டலப் புயல் தென்கிழக்கு இந்தியாவிலும், இலங்கையிலும் பெரியளவிலான வெள்ள அபாயத்தை ஏற்படுத்தும். இந்த அபாயம் இந்த வார ஆரம்பத்தில் நிலவும்.

வங்காள விரிகுடாவில் குறைந்தளவில் ஏற்பட்டுள்ள இந்தப் புயல் இந்த வார ஆரம்பத்தில் மேற்குப் புறமாக நகர்ந்து இலங் கையிலும் தென்னிந்தி பக். 21

## 17ஆம் திகதி சர்வகட்சி மாநாடு

கொழும்பு, நவ.8

ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காக, ஜனாதிபதியின் தலைமையில் கூடும் சர்வகட்சி மாநாடு எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கும் இந்த மாநாடு எதிர்வரும் 17 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, கடந்த ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி இறுதியாக நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஜெனிவா அறிக்கை பக். 21

## கூட்டு எதிர்க்கட்சி உருவாக்கியது மகிந்த அணி

கொழும்பு, நவ.8

கூட்டு எதிர்க்கட்சியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

நல்லாட்சி அரசுக்கு ஆதரவளிக்காத சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுடன், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஏனைய தரப்புக்களும் இணைந்து கூட்டு எதிர்க் கட்சி ஒன்றை உருவாக்கியுள்ளன.

மக்களின் நலன் பேணும் பக். 21

## வடக்கு அமைச்சரவையுடன் ஜனாதிபதி விசேட சந்திப்பு

### 12ஆம் திகதி கொழும்பில்

யாழ்ப்பாணம், நவ.8

வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

வடக்கின் அபிவிருத்தி மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் இதன்போது பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான த.குருகுலராஜா, பொ.ஐங்கரநேசன், ப.சத்தியலிங்கம், பா.டெனீஸ்வரன் ஆகியோருடன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், மற்றும் அமைச்சுக்கள் ஒவ்வொன்றினதும் செயலாளர்களும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில், பக். 21

## வடக்கு முதலமைச்சரின் கூற்று முற்றிலும் தவறு

### ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.8

வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்ததைப் போன்று, இணைந்த தேவை மதிப்பீட்டின் வெளிப்பாடுகளுக்கும் அதற்கான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான நிதியத்தின் மூலமான உத்தேச ஆதரவுக்கும் எதுவித நேரடித் தொடர்பும் இல்லை என்று ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் 36 ஆவது அமர்வு கடந்த மாதம் இடம்பெற்றது. இதன்போது முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா எழுப்பிய கேள்விக்குப் பதி பக். 21

## 11ஆம் திகதி வடக்கில் கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கவேண்டும் முதலமைச்சர்

### தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.8

தீபாவளிக்கு மறுநாள் 11 ஆம் திகதி வடக்கு மாகாணம் முழுவதும் கடையடைப்புக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுக்கவேண்டும் என்று தமிழ் அரசியல் கைதிகள் தமது உறவினர்கள் ஊடாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய, தங்களின் விடுதலை இடம்பெறாததைக் கண்டித்தும், தமது விடுதலையை வலியுறுத்தியும் இந்தக் கடையடைப்பு மேற்கொள்ளப்படவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு தொகுதியினர் இரண்டு கட்டங்களில் விடுவிக்கப்படவுள்ள நிலையில், எஞ்சிய அரசியல் கைதிகள் இன்று முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற் கொள்ளவுள்ளனர்.

கடந்த மாதம் 12 ஆம் திகதி பக். 21

## மகிந்த காலத்துக் கொலைகளின் விசாரணைக்கு விசேட நீதிமன்றம்

### *அமைக்கக் கோருகிறது ஐ.தே.க.*

கொழும்பு, நவ.8

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற படுகொலைகளை விசாரிக்க விசேட நீதிமன்றம் ஒன்றைநிறுவுவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொள்கையளவில் ஏற்றுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த கொலைச் சம்பவங்கள் குறித்துச் சாட்சியங்கள் இருந்தும் விசாரணைகள் தாமதமடைவதால் தனியான நீதிமன்றம் அமைத்து விசாரணைகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க ஜனாதிபதியுடன் பக். 21

## இருநாட்டு மீனவரையும் விடுவிப்பதற்கு அனுமதி

கொழும்பு, நவ.8

இரு நாடுகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு நாட்டு மீனவர்களையும் விடுதலை செய்வதற்கு இருநாட்டு அரசுகளும் அனுமதி வழங்கியுள்ளதாகக் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்வதற்கான நீதிமன்ற நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களையும் விடுதலை செய்வதற்கு இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்திய மீனவர்கள் 126 பேர் இலங்கையிலும், இலங்கை மீனவர்கள் 36 பேர் இந்தியாவிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்திய மீனவர்களின் விடுதலையின்போது அவர்களின் படகுகள் விடுவிக்கப்படமாட்டாதெனக் கடற்றொழில் அமைச் பக். 21






# 50 மில்லியன் டொலர் செலவில் அழகுபடுத்தப்படவுள்ளது யாழ்.

## மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.8
யாழ்.மாநகரம் 50 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அழகுபடுத்தப்படவுள்ளது. நவீன நகராக - அபிவிருத்தி செய்யும் இந்த நடவடிக்கை அடுத்த வருடம் மார்ச் மாதம் அளவில் ஆரம்பமாகவுள்ளது. அதற்குரிய முன்னேற்பாட்டுக் கூட்டங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.
உலக வங்கியின் நிதியுதவியில் கொழும்பு நகரம் அழகுபடுத்தப்பட்டதைப் போன்று, யாழ்.நகரத்தையும் அழகுபடுத்தும் நோக்கிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.
இதற்கான முன்னாயத்த கூட்டங்கள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன. அதில் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகளும் பங்கெடுத்துள்ளனர். வேலைத் திட்டங்களை ஒருங்கிணைந்து முன்னெடுப்பதற்காக சகல திணைக்களங்களையும் சேர்ந்தவர்களையும் உள்ளடக்கி குழு நியமிக்கப்பட்டுள்ளது.
இந்த அழகுபடுத்தும் அபிவிருத்தித்திட்டத்தின் போது, வீதி அகலிப்பு மற்றும் புனரமைப்பு, நகர் ஒழுங்கு படுத்தல், நகருக்கான ஒரு வழிப் போக்குவரத்துப் பாதை, நகருக்குப் புறம்பான போக்குவரத்துப் பாதை உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.
இந்த அபிவிருத்தி வேலைத்திட்டம் அடுத்த ஆண்டுமார்ச்மாதம்ஆரம்பமாகவுள்ளது. வைத்திய சாலை வீதியிலிருந்து இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்கள் முழுமையு[illegible] உள்ளடங்குவதுடன், திருநெல்வேலி ஆடியபாதம் வீதி வரையிலான பிரதேசங்களும் இந்த அபிவிருத்தித் திட்டத்தினுள் உள்ளடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### தென்மராட்சி வலய பிரதி கல்விப் பணிப்பாளருக்கு இடமாற்றம்

தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிவந்த சு.சுந்தரசிவம் நாளை முதல் தீவக வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்படவுள்ளார்.
தீவக வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய குயின்ரஸ், மடு கல்வி வலயத்துக்கு மாற்றலாகிச் செல்கின்றார். (ற-9)

### விபத்துப் பிரிவுக்கான கட்டடநிர்மாணப் பணிகள் ஆரம்பம்

*சாவகச்சேரி வைத்தியசாலையில்*

சாவகச்சேரி, நவ.8
சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை வளாகத்தில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்கான ஆரம்பப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆண்டு முற்பகுதியில் சுகாதார அமைச்சால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மற்றும் வவுனியா பொது வைத்தியசாலை ஆகியவற்றில் தலா 200 மில்லியன் ரூபா செலவில் விபத்து மற் றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.
தற்போது அதற்கான ஆரம்பப் பணிகள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிகிச்சைப் பிரிவு 3 மாடிகளைக் கொண்டதாக அமையவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## தனியார் துறை பணியாளருக்கு இளைப்பாற்றுப் பணிக் கொடை

கொழும்பு, நவ.8
தனியார் துறைப் பணியாளர்களின் நலன் கருதி ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றை இணைத்து தேசிய இளைப்பாற்றுப் பணிக் கொடை வழங்கும் புதிய நடைமுறை ஒன்றைச் செயற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.
அரசின் பொருளாதார இடைநிலைத் திட்டத்தின் கீழ் இதனை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.
உத்தேச தேசிய இளைப்பாற்றுப் பணிக்கொடை நிதியத்தை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்துவதில் தொழிற் சங்கங்களுக்கும் இடமளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நாட்டின் மூன்றாவது தலைமுறைக்கு உகந்த வகையில் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காண்பதனை இலக்காக வைத்து புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு அவை மக்களுக்கு விரைவில் அறிவிக்கப்படும் என்றும் பிரதமர் தகவல் வெளியிட்டார். (அ)

## நாடளாவிய ரீதியில் நடைபெற்றது இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல்



யாழ்ப்பாணம், நவ.8
கொள்கை திட்டமிடல் அமைச்சின் வழிகாட்டலில் இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் மூன்றாவது இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல் நேற்றுச் சனிக்கிழமை நாடளாவிய ரீதியில் 334 பிரதேச செயலகங்களில் நடைபெற்றது. காலை 7 மணி முதல் பி.ப 3 மணி வரை நடைபெற்ற இந்த இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலில் காரைநகரில் 14 இளைஞர் கழகங்களைச் சேர்ந்த 350 இளைஞர் யுவதிகள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.
யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்தத் தேர்தல் நடைபெற்றது. மொத்தமாக 482 இளைஞர் கழகங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் 13 ஆயிரத்து 628 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.
மன்னார் மாவட்டத்தில் ஒரு இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்யவுள்ள நிலையில் 12 பேர் போட்டியிட்டுள்ளனர். 3 ஆயிரத்து 867 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாணப் பணிப்பாளர் என்.எம்.முனவ்பர் தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலில் பெருந் தொகையானோர் வாக்களித்திருந்தனர். பச்சிலைப் பள்ளி, கண்டாவளை, கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேசங்களில் இருந்து மொத்தமாக 9 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந் தனர்.
மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 3 இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா, மட்டக்களப்பு மற்றும் பட்டிருப்பு தொகுதிகளில் நடைபெற்றன என்று இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.எல்.எம்.என். நைறூஸ் தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் 3 தொகுதிகளிலுமிருந்து தலா ஒருவராக 3 பேரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் 32 பேர் போட்டியிட்டனர். 13 வயது தொடக்கம் 29 வயது வரையான 18 ஆயிரத்து 607 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர் என்று மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.
மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற தேர்தலில் பெருமளவிலான வாக்காளர்கள் வாக்குகளை அளித்திருந்தனர். இந்தத் தேர்தலில் பட்டிருப்பு தொகுதியில் 08 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில் வேட்பாளர்களில் இருந்து ஒருவரே இளைஞர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படவுள்ளார். மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 25 இளைஞர் கழகங்களை சேர்ந்த ஆயிரத்து 242 இளைஞர், யுவதிகள் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர் என்று பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.தயாசீலன் குறிப்பிட்டார்.
கல்முனைத் தொகுதி இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலுக்கான சாய்ந்தமருது பிரதேசத்துக்கா[illegible] வாக்களிப்பு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீமின் வழிகாட்டலில் இளைஞர் சேவை அதிகாரி எம்.ஏ.ஏ.அஸ்வத் அலியின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் 20 இளைஞர் கழகங் களிலிருந்து 731 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.
கல்முனைத் தொகுதிக்கான தேர்தல் கல்முனை முஸ்லிம், கல்முனை தமிழ் ஆகிய பிரதேச செயலகங்களிலும் நடைபெற்றன.
காத்தான்குடி பிரதேச செயலகத்தில் வாக்களிக்க இளைஞர், யுவதிகள் ஆர்வமாக வாக்குச்சாவடிகளுக்கு சென்று வாக்களித்துள்ளனர். தேர்தல் கடமையில் காத்தான்குடி உதவிப் பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்கர் உட்பட பிரதேச செயலக அதிகாரிகள் ஈடுபட்டதுடன் சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளரும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.
காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 252 இளைஞர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர் என்று காத்தான்குடி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் எம்.ஸமீலுல் இலாஹி தெரிவித்தார். (ற-10.ரி3.56)

## 21 மீனவர்களின் படகுகள் கடற்படையால் கையளிப்பு

*உரியவர்களை அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு அறிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ. 8
போர்க்காலத்தில் மீனவர்களால் கைவிடப்பட்டு கடற்படையினர் வசமிருந்த 21 படகுகள் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றை உரிமையாளர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.
போர்க்காலத்தில் மீனவர்கள் இடம்பெயர்ந்து சென்றபோது குறித்த படகுகளைக் கைவிட்டுச் சென்றிருந்தனர். அந்தப் படகுகள் சுண்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தன. பல வருடங்களாக அவை மீனவர்களுக்குக் கிடைக்கவில்லை.
அவற்றைப் பெற்றுத் தருமாறு குறித்த படகுகளின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அதனால் அவற்றைத் தருமாறு குறித்த கடற்படையினரிடம் கேட்டிருந்தேன். அதனடிப்படையில் அவற்றை அவர்கள் ஒப்படைத்துள்ளனர். ஆனால் அவற்றில் திருத்த வேலைகள் பல உள்ளன. அவற்றைத் திருத்தும் நடவடிக்கை நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. - என்று கனகேஸ்வரன் தெரிவித்தார்.
அவற்றைத் திருத்துவதற்கு நான்கரை லட்சம் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் 10 நாள்களில் 21 படகுகளும் திருத்தப் பட்டுவிடும். அதன்பின்னர் அவை உரிமையாளர் களிடம் ஒப்படைக்கப்படும். படகுகளின் உரிமையாளர்கள் தத்தமது படகுகளை அடையாளம் காட்டுமாறு கோரப்பட்டுள்ளது.
அடையாளம் காணப்படாத படகுகள் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மீனவர்களுக்கு வழங்க எதிர்பார்ப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)



# உள்ளூராட்சி மன்ற எல்லைகள் நிர்ணயம் தொடர்பில் கூட்டம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், நவ.8

கடந்த அரசின் ஆட்சியின்போது நிர்ணயிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் விமர்சனங்கள் ஏற்பட்டுள்ளதை அடுத்து, அது குறித்து விரிவாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது. அதற்கமைவாக உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் ஆகியோர் இது தொடர்பாக அபிப்பிராயங்களை வரைபடங்களுடன் அறியத் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரியுள்ளது.

இது தொடர்பாக ஆராயும் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு வலி.தெற்கு பிரதேச சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா வால் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

கடந்த ஆட்சியின் போது நிர்ணயிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரங்கள் மற்றும் எல்லைகளை நிர்ணயம் செய்யும் பொருட்டு மத்திய உள்ளூராட்சி அமைச்சால் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதை அறிவீர்கள். அந்தக் குழுவின் அறிவித்தலின்படி அரச அதிகாரிகளால் உள்ளூர் ஆட்சியில் இருந்தோர், பொது அமைப்பினர் என்போரிடம் கருத்துக்கள் கோரப்பட்டிருந்தன. ஆயினும் ஒரு சிலரின் பக்கச் சார்பான முடிவுகளின் அடிப்படையிலேயே எல்லைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன என்றுவிமர்சனங்கள்எழுந்துள்ளன.

தற்போதைய உள்ளூராட்சி அமைச்சால் குறித்த விடயம் தொடர்பில் மேன்முறையீடுகளைப் பரிசீலிப்பதற்கும், பரிந்துரைகளை மேற்கொள்வதற்கும்குழுஒன்றுஅமைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.- என்றுள்ளது. (ற-ரி5)

# படையெடுத்த நாகபாம்புகளால் அல்லோல கல்லோலப்பட்ட சந்தை

### சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரி, நவ.8

சாவகச்சேரி பொது மைதானத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் சந்தை விற்பனை நிலையங்களுக்குள் நேற்றுமுன்தினம் நாக பாம்புகள் படையெடுத்தன. அதனால் சந்தை அல்லோல கல்லோலப்பட்டது.

வெற்றிலை வியாபாரிகளின் வெற்றிலைத் தட்டுகளுக்குள் 5 நாக பாம்புகளும், புடவை விற்பனை நிலையம் ஒன்றுக்குள் அளவில் பெரிய நாக பாம்பு ஒன்றும் காணப்பட்டன. அதனால் பொதுமக்கள் அலறியடித்து ஓடினர்.

சாவகச்சேரி பொதுச் சந்தைக் கட்டடம் நகர அபிவிருத்தி அதிகார சபையால் நீண்ட காலமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. சந்தைக் கட்டடத்தைப் புனரமைக்கும் பொருட்டு அங்கு இயங்கிய விற்பனை நிலையங்கள் அனைத்தும் அருகில் உள்ள பொது மைதானத்தில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு அங்கு மாற்றப்பட்டன. கடந்த ஒரு ஆண்டாக அங்கேயே தமது விற்பனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அங்கு தாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும், சந்தைக் கட்டடத்தை விரைவில் புனரமைத்துக் கையளிக்குமாறும் வியாபாரிகள் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை பகல் வேளையில் சாவகச்சேரி நகரப் பகுதியில் கடும் மழை பெய்துள்ளது. அதையடுத்து அங்கு வெள்ளம் தேங்கி நின்றது. மறுநாள் காலை வழமைபோன்று தமது விற்பனை நிலையங்களைத் திறந்த வியாபாரிகள் அங்கு மூடிக் கட்டி வைக்கப்பட்டிருந்த வெற்றிலைத் தட்டுகளுக்குள் நாகபாம்புகள் இருப்பதைக் கண்டு பதறி ஓடினர். அதே போன்று கட்டி வைக்கப்பட்டிருந்த புடவைக் கட்டுக்குள்ளும் நாகபாம்பு ஒன்று காணப்பட்டது. அதனால் அந்தப் பகுதி அல்லோல கல்லோலப்பட்டது. அவை பின்னர் அங்கிருந்தவர்களால் அடித்துக் கொல்லப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மைதானத்தின் தெற்குப் புறத்தில் பெரும் பற்றைகள் காணப்படுகின்றன. அவற்றுள் உள்ள பாம்புகளே மழை வெள்ளம் காரணமாகச் சந்தைவிற்பனை நிலையங்களுக்குள் நுழைந்திருக்கலாம் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். (ற-9)

# கர்ப்பிணிகளுக்கு மீண்டும் போசாக்கு உணவுப் பொதி

அச்சுவேலி, நவ.8

கர்ப்பிணிகளுக்கான போசாக்கு உணவுப் பொருள் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இடை நிறுத்தப்பட்ட ஜூன் மாதத்திலிருந்து ஒகஸ்ட் வரையிலான போசாக்கு உணவுப் பொதிகளை உடனடியாக வழங்குவதற்குப் பிரதேச செயலகங்கள் அனுமதிக் கட்டளைகளை வழங்கியுள்ளன.

கர்ப்பிணிகளுக்குப் பத்து மாத காலத்துக்கு மாதந்தோறும் தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான போசாக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. அவை கடந்த ஜூன் மாதம் முதல் இடை நிறுத்தப்பட்டன. மீண்டும் அதற்கான நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டதை அடுத்து, ஜூன், ஜூலை, ஒகஸ்ட் ஆகிய மூன்று மாதங்களுக்கு மான போசாக்கு உணவுப்பொருள் விநியோகம் நடைபெறவுள்ளது. மூன்று மாதங்களுக்குரிய 6 ஆயிரம் ரூபா பெறுமதியான போசாக்கு உணவுகள் ஒரே தடவையில் வழங்கப்படவுள்ளன. (ற-11)

# காலபோக நெற் செய்கைக்கான உரத்தை உரியவரே பெறமுடியும்

### கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவுறுத்து

கிளிநொச்சி, நவ.9

காலபோக நெற் பயிர்ச் செய்கைக்கான உரங்களைப்பெற்றுக்கொள்ள வேண்டுமானால் பயிர் செய்யும் விவசாயியே நேரடியாக வந்து உரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுக்குக் கடும் சுகவீனம் என்றால் மட்டும் மருத்துவ சான்றிதழையோ அல்லது சரியான ஆவணத்தையோ காட்டி வேறு நபர்கள் குறித்த உரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். - இவ்வாறு வவுனியா மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஓமந்தை கமநல சேவைகள் நிலையத்துக்குட்பட்ட பகுதியில் பயிர் செய்யும் விவசாயிகளின் உரத்தை அவர்களின் உறவினர்கள் பெற்றுக் கொள்ளச் சென்றபோது குறித்த நிலையத்தின் அதிகாரியால் மருத்துவச் சான்றிழ் கேட்கப்பட்டது என்று விவசாயிகள் தெரிவித்திருந்தனர். உரவிநியோகம்வழங்கப்பட்டதினத்தில் சாவு வீடொன்று நிகழ்ந்ததால் தம்மால் உரத்தைப் பெற்றுக் கொள்ள செல்லமுடியாதிருந்தது. அதனால் உறவினரை அனுப்பியபோது மருத்துவ சான்றிதழ் கேட்கப்பட்டது என்று விவசாயி ஒருவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்துக் கேட்டபோதே உதவி ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஆள் மாறாட்டங்கள், ஒருவரை ஒருவர்சாட்டி உரங்களைப்பெற்றுக் கொள்ளுதல் போன்ற விடயங்கள் இந்த முறை இடம்பெறக் கூடாது என்பதற்காகவே இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கட்டாயமாக உரியவரே வந்து உரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறினால் வருபவர், உரியவரின் மருத்துவச் சான்றிதழைக் கொண்டுவந்தாலே உரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். வழமையாக உரங்களைப் பெற்றுகொள்பவர்களுக்கு இந்தச் சட்டம் கடினமானதாகவே இருக்கும்.

பிரச்சினைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகவே இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இனி வரும் காலத்தில் ஏனைய இடங்களிலும் இது நடைமுறைக்கு வரும்.

காலபோகத்துக்குத் தேவையான உரங்கள் கமநல சேவைகள் திணைக்களத்தில் நிறையவே உள்ளன. வயல்களுக்கு உரியவர்கள் அடையாளப்படுத்தி அதைப் பெற்றுக் கொள்ளமுடியும். - என்றார். (ற-21)

# கிராம அலுவலர்களுக்கு ஜனவரி முதல் மாற்றம்

அச்சுவேலி, நவ.8

யாழ். மாவட்டத்தில் கிராம அலுவலர்களுக்கான பிரதேச செயலகங்களுக்கிடையிலான இடமாற்றம் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருகின்றது.

இடமாற்றம் பெறும் கிராம அலுவலர்களின் பட்டியல் யாழ் மாவட்ட அரச அதிபரால் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்களுக்கும் பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இடமாற்றம் பெற விண்ணப்பித்தவர்கள், இடமாற்றப் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் மேன்முறையீடு செய்வதற்கும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு பிரதேச செயலர் பிரிவில் நீண்டகாலம் கடமையாற்றிய மற்றும் வேறு பிரதேச செயலர் பிரிவுக்கு இடமாற்றம் பெற விரும்பி விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இடமாற்றம் தொடர்பான கடிதங்கள் கடந்த வாரம் சம்பந்தப்பட்டவர்களுக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி இடமாற்றம் கடந்த வருடம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதிலும் மீள்குடியேற்றம் உள்ளிட்ட பிரச்சினைகளால் நடை முறைப்படுத்தப்படவில்லை.

இந்தநிலையில் தற்போது கிராம அலுவலர்களின் பிரதேச செயலகங்களுக்கிடையிலான இடமாற்றம் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இடமாற்றத்துக்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் இடமாற்றப்பட்டியலில் பெயர் உள்ளவர்கள் மேன்முறையீடு செய்வதற்கும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (ற-11)

# துன்னாலையில் ஆடுகள் மாயம் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

கரணவாய், நவ.8

கரவெட்டி, துன்னாலைப் பகுதியில் தொடர்ச்சியாக நடந்து வரும் ஆடு திருட்டைத் தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துன்னாலைப் பகுதியில் தரவைகளில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகள் பட்டப்பகலில் களவாடிச் செல்லப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் துன்னாலை கலிகைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்த விலை மதிப்புள்ள ஆடு ஒன்று களவாடிச் செல்லப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மதிலால் பாய்ந்து ஆட்டைக் களவாடிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை அத்துப்பப் பகுதியில் உள்ள வீடொன்றிலும் அண்மையில் பெறுமதி மிக்க மூன்று மறியாடுகள் இரவோடு இரவாகக் களவாடப்பட்டுள்ளன என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ரு-108)

# செய்கை பண்ணப்படாத நிலங்களில் பயிரிட பாரம்பரிய நெல் இனங்கள்

### முல்லை, வவுனியா மாவட்டங்களில் ஜனாதிபதி செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.8

முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் 2015- 2016 கால போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாத ஆயிரத்து 435 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர் செய்கையை மேற்கொள்வதற்காகப் பாரம்பரிய நெல் இனங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி செயலகம் முன்வந்துள்ளது என்று முல்லைத்தீவுமாவட்டகூட்டுறவு உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தற்போது ஆயிரத்து 435 ஏக்கர் நிலப்பரப்பில் காலபோகச் செய்கை மேற்கொள்ளப்படவில்லை. அதையடுத்தே குறுகிய காலத்தைக் கொண்ட பாரம்பரிய நெல் இனங்களை வழங்குவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

பாரம்பரிய நெல் இனங்களான பச்சைப்பெருமாள், சீனட்டி, மொட்டைக் கறுப்பன் ஆகிய நெல் இனங்களே குறித்த நிலப்பரப்பில் பயிரிடப்படஉள்ளன. ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்படும் குறித்த நெல் இனங்கள் குறித்த மாவட்டங்களுக்குட்பட்ட கமநலசேவைகள்திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொண்ட விவசாயிகளுக்கே வழங்கப்பட உள்ளன.

குறித்த நெல் இனங்கள் முதற்கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 200 ஏக்கருக்கும், வவுனியா மாவட்டத்தில் 165 ஏக்கருக்கும் வழங்கப்பட உள்ளன. அறுவடையின் பின்னர் விவசாயிகளிடம் இருந்து கிலோ 60 ரூபாவுக்கு நெல் கொள்வனவு செய்யப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இன்று நடைபெறும் கூட்டத்தின் பின்பு ஒவ்வொரு கமநல சேவைகள் திணைக்களத்துக்கும் இது குறித்து அறிவிக்கப்படும் எனவும் கூட்டுறவு உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார். (ற-21,500)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வாசிப்புப் பழக்கத்தை தவறாது புகட்டுவோம்

*பிரதேச சபை ஒன்று நடத்தும் பொது நூலகத்தின் நேரத்தை அதிகரிக்குமாறு, குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மாணவர்களும் அரச பணியாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பது செய்தி; தகவல்.*

*வாரத்தில் ஏழு நாள்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு எட்டுமணி வரை குறித்த பொது நூலகத்தை திறப்பதற்கு நூலகத்தின் பணியாளர்கள் தயாராக உள்ளனர் --*

*ஆனால், வாசகர்கள் இன்றி, மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டி உள்ளது என்பது பிரதேச சபை நிர்வாகிகளின் ஆதங்கம். தேசிய நூலக வாசிப்பு மாதம் இடம்பெறும் வேளையில் தினமும் பன்னிரண்டு மணி நேரமும் நூலகத் தைத் திறந்து வைத்திருக்கவும் தயார் என்பது நிர்வாகத்தின் நிலைப்பாடு.*

*மேற்போந்த கோரிக்கை, இந்தக்காலத்தில் மிகப் புதுமையானது என்று கொள்ள, கருத வைக் கிறது. இது பாராட்டப்பட வேண்டிய ஒன்றுமாகும்.*

*இப்போதைய மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் வாசிப்புப்பழக்கம் ஒப்பீட்டளவில் அருகிவருவது கவலைக்கு உரியதாகும்.*

*கண்டதும் கற்கப் பண்டிதன் ஆவான் என்ற வழக்கு மொழிக்கு ஏற்ப, அறுபது அல்லது ஐம்பது ஆண்டுகளுக்கு முந்தைய மாணவர்களை தேடித்தேடி வாசிக்கவைக்கத்தூண்டப்பட்டது. அதனால் அவர்களிடம் பலதுறைகள் சார்ந்த அறிவும் திறமையும் மேலோங்கி நின்றன. ஆனால் இப்போது, அந்த நிலை அடியோடு அருகிவிட்டது என்று கூறுமளவுக்கு அற்றுப்போய் விட்டது!*

*வாசிப்பு மாதத்தில் (ஒக்ரோபரில்) வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க, ஒருசில பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வரவேற்கத்தகுந்தவை. ஆனால் மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை உண்டாக்கும் அளவுக்கு அவை மேலெழவில்லை.*

*சமகாலத்தில் அறிவைப் பெருக்குவதற்கு இப்போது வேறு பல ஊடகங்கள், குறிப்பாக கூறுவதாயின் இலத்திரனியல் ஊடகங்கள் உயர்ந்து நிற்பினும் --*

*வாசிப்பின் ஊடாக அறிவைப் பெருக்கிக் கொள்பவருக்கு உண்டாகும் புலக்காட்சி வேறு வகையினதாக, வித்தியாசமானதாக அமையும் வாய்ப்பு அதிகம்.*

*அதேவேளை, வாசிக்கும்போது உள்வாங்கப்படும் விடயங்கள் மனதில் நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கும்; மறதி என்ற வியாதி பின்னுக்குத் தள்ளப்பட்டு விடும்.*

*வாசிப்பு என்ற 'பெரும்பேறு' நல்லொழுக்கத்தையும் ஆக்கத்திறன் விருத்தியையும் மேலுயர்த்தும்.*

*இன்னொரு வகையில் எமது மொழியின் இருப்புக்கும், அதன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் வாசிப்புப் பழக்கம் இளமையிலேயே உற்பவிக்கப்பட வேண்டும்.*

*சம காலத்தில், ஐக்கிய அரபுக் குடியரசின் ஷார்ஜா நகரில், முப்பத்தி நான்காவது அனைத்துலக நூல்களின் கண்காட்சி ஷார்ஜா எக்ஸ்போ சென்ரரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

*1,250க்கும் மேற்பட்ட உலகளாவிய புத்தக நிறுவனங்கள் அந்தப் பிரமாண்டமான கண்காட்சியில் பங்கு கொள்கின்றன.*

*ஒரு நூல் நிலையம் திறக்கப்படும்போது பத்துச் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்ற வாக்கியம், மனிதர்களின் கொடிய பழக்க வழக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதனையும் மறந்து விடலாகாது.*

*இளவயது தொடக்கம், எமது சிறுவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை நிரந்தரக் கொடையாக வழங்குவதற்கு, மூத்தவர்கள் முன்னின்று உழைக்க வேண்டியது காலத்தின் தவிர்க்க முடியாத தேவை.*

# மாணவரின் சிறப்பான கற்றலுக்கு ஊக்கப்படுத்தலே மிக அவசியம்

## வலியுறுத்துகிறார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 8

கல்வியின் பத்தில் ஒன்பது பங்கு ஊக்கப்படுத்தலே என்று அனடோல் ப்ரான்ஸ் என்ற பிரான்ஸ் நாட்டுக் கவிஞர் தெரிவித்துள்ளதைக் கூறி, தனது இன்றைய நிலைக்குத் தனது தாயாரின் ஊக்கப்படுத்தலே காரணம் என்று தொட்டுக் காட்டியுள்ள முதலமைச்சர், மாணவர்கள் கற்பதற்கு இயன்றளவுக்குப் பலரும் ஊக்குவிப்பை வழங்குங்கள் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் நிறுவுனர்நினைவுநாளும்பரிசளிப்பு விழாவும் பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில்பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

இங்குகல்விகற்கின்ற மாணவ மாணவியர் பலரும் தமது கல்வி செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தோட்டங்களில், வயல்களில் தாய் தந்தையருக்கு ஒத்தாசையாக வேலைகள்செய்து முடித்த பின்னரே தமதுஇரவுநேரமீட்டற்பயிற்சிகளை மேற்கொள்கின்றனர்.

இன்னொருபுறம் பல பெற்றோர்கள் இன்று பிள்ளைகளைப் படியுங்கள் படியுங்கள் என்று நச்சரித்துவிட்டு வீட்டின் இருக்கை இடங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பெரிய சத்தத்தில் அலறவிட்டு நாடகம் பார்ப்பதும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப்பார்ப்பதுமாகஇருந்து விட்டு, பரீட்சைப் பெறுபேறுகள் வருகின்றபோது மட்டும் பிள்ளைகளைத் திட்டுகின்றார்கள், இது தவறு. எமது பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்கவேண்டும் என்றால் பெற்றோர்கள் தமது சுகங்களையும், சொகுசுகளையும் மட்டுப்படுத்தத் தெரிந்து வைத்திருக்கவேண்டும்.

நான் பரீட்சைகளுக்குப் படிக்கும் போது என்தாயார் உறங்கவே மாட்டார். இரவில் மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் வந்து நான்படிக்கின்றேனா, நித்திரைக்குப் போய்விட்டேனா என்று பார்ப்பார். அன்புடன் ஏதாவது குடிக்கத்தந்து எனக்கு ஊக்கமளித்துப் படிக்கச் செய்வார். அதன்மூலமாக மாணவர்கள் நன்றாகப் படிப்பதற்கு மாணவரது பெற்றோரினதும் ஏனையோரினதும் முழுமையான, அன்பான ஊக்குவிப்பை வழங்கவேண்டும்.

அன்பானமாணவ மாணவியரே நீங்கள் கல்வியில் மேம்படுவதற்காக கடுமையாக உழையுங்கள். இந்தப் பருவந்தான் கல்விக்கு உகந்த பருவம். கற்பதற்கு ஏற்ற பருவம். அதைத் தவற விட்டு விடாதீர்கள். முனைப்புடன் செயற்பட்டால் ஆகாதது ஒன்றும் இல்லை - என்றார்.

இதேவேளை, விழுமியங்கள் இணைந்த தலைமைத்துவம் எனும் தொனிப்பொருளில் அதிபர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று கைதடியிலுள்ள ஸ்ரீ விநாயகர் மண்டபத்தில் நேற்றுச் சனிக்கிழமை காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 4.30 வரை இடம்பெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய முதலமைச்சர், ஆசிரியர்–அதிபருக்கு இடையில் இருக்க வேண்டிய புரிந்துணர்வு பற்றிக் கூறினார்.

ஆசிரியர்களும்அதிபர்களும்மாணவ ஒழுக்கம் பற்றி ஒத்த கருத்துடையவர்களாக இருக்கவேண்டும். மாணவத் தவறுகள் சம்பந்தமாக சகலரும் இவ்வாறு தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே அதிபரும் ஆசிரியர்களும் ● புரிந்துணர்வைப் பெற்றிருக்கவேண்டும். அப்போதுதான் மாணவர்களும் வழிக்கு வருவார்கள். அதிபர் ஒரு வழி ஆசிரியர் இன்னோர் வழியென்றிருந்தால் மாணவர்கள் உங்களையும் ஆசிரியர்களையும் கொழுவி விட்டுவேடிக்கை பார்க்கத்தவறமாட்டார்கள். இவை ஆவணப்படுத்தப்பட வேண்டும். தேவையெனில் பெற்றோருக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

மாணவர்களது மட்டுமன்றி ஆசிரியர்களின் குறை நிறைகளும் ஆவணப்படுத்தப்படவேண்டும். வகுப்பறைகளுக்குப் போய் வருவதை அதிபர்கள் பழக்கமாக வைத்துக் கொள்ளவேண்டும். போகும் போது ஒருசில நிமிடங்களாகஇருந்தாலும் அதிபர்களான நீங்கள் அவதானிப்பவற்றை உள்வாங்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஆசிரியர்களையும் எடை போட்டு வைத்திருக்கும் அதிபர் எடை போடாத அதிபரிலும் பார்க்கக் கூடிய வலுவும் சக்தியும் உடையவராக இருப்பார். தன்னைச் சுற்றி நடப்பவற்றைத் தெரிந்து வைத்திருப்பவராக ஒரு நல்ல அதிபர் இருப்பார் என்று முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (த–4)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள முற்பணம், கடன் உதவி

## போராட்டத்தால் கிடைத்தது பயன்

கொழும்பு, நவ 8

தீபாவளிப்பண்டிகையைமுன்னிட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள முற்பணம் மற்றும் கடன் உதவித்தொகையும்வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

அதன்படி 6500 ரூபா சம்பள முற்பணமும், 3500 ரூபா கடன் உதவித் தொகையும் வழங்கப்படவுள்ளன. அமைச்சர் நவீன் திஸாநாயக்க, பிரதமரின் விசேட ஆலோசகர் ஆர். பாஸ்கரலிங்கம், நிதி அமைச்சின் செயலாளர் சமரதுங்க மற்றும் தேயிலை அதிகாரசபையின் தலைவர் ரோஹான்பெனியாகொட ஆகியோரது தலையீட்டினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்தச் சம்பள முற்பணத்தையும், கடன் உதவித் தொகையையும் வழங்குமாறு பணித்துள்ளார்.

தீபாவளியை முன்னிட்டு சம்பள முற்பணம்வழங்குமாறுவலியுறுத்தி அண்மைய சில நாட்களாக தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# மரம் வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணலயன்ஸ்கழகமும், திருநெல்வேலி வட்ட யாழ். லியோக் கழகமும் இணைந்து நடத்தும் மரம் வழங்கல் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பி.ப 1மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகலயன் 301பி1மாவட்டஆளுநர் லயன் கிறிஸ்ரி நாணயக் காரவும், சிறப்பு விருந்தினராக லயன் 306 பி1மாவட்டமுதலாவதுஉபமாவட்ட ஆளுநர் வைத்தியர் தியாகராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கும், லயன் பிராந்தியம் 10இல் உள்ள கழகங்களுக்கும் மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளனஎன்றுலயன்ஸ்கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (ற–ரி6)

# மாரப்பனவுக்கு எதிராக ஜே.வி.பி. நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, நவ.8

சர்ச்சையைக் கிளப்பியுள்ள அவன் காட் நிறுவனத்துக்கு சொந்தமான ஆயுதக் களஞ்சியக் கப்பல் தொடர்பில் சட்டம் ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் திலக் மாரப்பான அண்மையில் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் ஜே.வி.பி. நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜே.வி.பியின் அரசியல் உயர்பீடக் கூட்டத்தின்போதே இது தொடர்பில்தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

அவன்கார்ட் ஆயுதக் களஞ்சிய சாலையில் சட்டவிரோதமான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை என்றும், ஆட்சி மாற்றத்தை அடுத்து பொலிஸார் தமக்கு பெயர் எடுத்துக்கொள்வதற்காகவே இந்தப் பிரச்சினையைப் பெரிதுபடுத்தியதாகவும் அண்மையில் நாடாளுமன்றத்தில் வைத்து அமைச்சர் திலக் மாரப்பன கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவரது கருத்துத் தொடர்பில் அரசுக்குள் பெரும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ள நிலையில், அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

இந்தக்கடன்தொகையை வழங்குவதற்காக செலவிடப்படவுள்ள பணத்தைதோட்டநிறுவனங்களுக்கு வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன்திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (த)

## நிர்வாக சேவை பரீட்சையில் மூவர் சித்தி

நெல்லியடி, நவ.8

இலங்கை நிர்வாக சேவைக்கு புதியவர்களை இணைத்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் சித்தி அடைந்துள்ளனர்.

இமையாணன்அறிவாலயத்தைச் சேர்ந்த பாலன் முகுந்தன், கரணவாய், செல்வாபுரத்தைச் சேர்ந்த அருளானந்தம் சீராளன் மற்றும் வேலணைப்பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் பரமானந்தன் சத்தியராகவன் ஆகியமூவருமே சித்தியடைந்துள்ளனர்.

(ற-108)


**SAPARI**
**BOUQUETS CENTER**



இந்தியா, நுவரேலியா இயற்கை பூக்கள் திருமண பூங்கொதது, காதலர் பூங்கொதது மற்றும் திருமண மாலைகள், நாகசடை, ஆண்டாள் மாலைகள், மலர்வளையங்கள் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

No.551, K.K.S. Road, Manokara Junction, Jaffna.
077 942 4011, 077 296 3848 (65858)(10.15.17)



# Vacancy in Vavuniya

வவுனியாவில் இயங்கிவரும் வெதுப்பக உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் உள்ளன

**1.CEO (Male) 01No**

| | |
|---|---|
| Degree Level | Bachelor's or an master's degree |
| Degree Field | Business administration or an industry - related field. |
| Experience | Min 05 Years of prior management experience often required. |
| Age | 25 to 30 Years. |
| Key Skills | Effective communication, leadership and management skills, ability to work under pressure. |

**2.PRODUCTION MANAGER (Male) 01No**

| | |
|---|---|
| Degree Level | Bachelor's or master's degree |
| Experience | Min 04 years of Bakery production experience often required. |
| Age | 30 to 40 Years. |
| Key Skills | Planning and organising production schedules, Team working skills |

**3.ACCOUNTANT 03 Nos**

Degree in Accounting +2 years Releated Experience/ CIMA/fully / Part Qulified/ ACCA Fully/ Part Qulified 4Years Experience. Practical Knowladge in cost accounting, Metrial Management, Financial report preparation.
Age 28 to 40 Years.

**4.DRIVER 05 Nos**

Heavy vehicle licence
Age 30 to 45 Years.

**5.SALE PROMATION AND MARKETING MANAGER ( Male) 02Nos**

A/L 3 Pass
Age 25 to 35 Years.

**6.SHOR SALES MAN (Male/Female) 10 Nos**

Age 20 to 30 Years.

**7.DATA ENTRY GIRLS 05**

Computer knowledge, Ms office, A/LPass and English knowledge.
Age 20 to 35 Years.

**8.Bakery Production Staff**

5 Years Experience.

மேற்குறித்த பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் பின்வரும் எமது Email முகவரிக்கு அல்லது எமது நிறுவன முகவரிக்கு தங்களது சுயவிவரக்கோவையினை அனுப்பிவைக்கவும். (விண்ணப்ப முடிவு திகதி 25.11.2015)

**White Stone (P)Ltd.No16, 1st Floor, Kandy Road, Vavuniya.**
**077 313 6262**
**chef.theepan@gmail.com**



EUTECH INSTRUMENTS
Whatman
BROOKFIELD
VWR INTERNATIONAL
memmert
ESCO

## The Spotlight is on you !

... Be the best amongst the best !

*Hemsons International is a pioneer in the fields of Laboratory, Medical and Communication Equipment and currently leads the market in these areas. With the support of our partners worldwide, we are committed to market the very best !*

*...and this is where you come in. We are seeking dynamic, self-motivated individuals to fill key positions in our organization. If you have the right qualifications and are willing to take up a challenge, you may be the person we are looking for.*

LABORATORY DIVISION

**MARKETING EXECUTIVES**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்

- க.பொ.த. உயர்தர பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
- B.Sc., பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
- MS Office package பற்றிய அறிவு இருத்தல் வேண்டும்.
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தேர்ச்சியும் குறைந்த அளவு சிங்கள அறிவும் இருத்தல் சாதகமாகும்.
- Scientific Instruments விற்பனையில் 1-2 வருடகால முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் வடக்கு மற்றும் கிழக்கில் பயணம் செய்ய தயாராக இருத்தல் வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரருக்கு தொழில் தரத்திற்கேற்ற சிறந்த ஊதியம் மற்றும் கவர்ச்சிகரமான commission வழங்கப்படும்.

*ஆர்வமுடையவர்கள் உங்களது முழுவிபரங்கள் அடங்கிய விண்ணப்ப படிவத்தில் உறவினரல்லாத இருவரின் பெயர் விபரங்களை குறிப்பிட்டு இந்த விளம்பரம் வெளியாகி 10 நாட்களுக்குள் எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.*

The Human Resources Manager,
**Hemsons International (Pte) Ltd**
**(Formerly Hemas Laboratory & Communication Systems (Pte) Ltd.)**
**P.O.Box 1945,**
**36, Sir Razik Fareed Mawatha, (Formerly Bristol Street)**
**Colombo 01.**
**E-mail: hr@hemsons.lk**



**Sanken**
**CONSTRUCTION (PVT) LTD**
*sky's the limit*

## நல்லூர் மற்றும் யாழ். சுற்றுப்புறச் சூழலில் அமையவுள்ள நவீன தொடர்மாடி

### உங்கள் கனவு இல்லத்தை தெரிவுசெய்ய முந்துங்கள்













Type 1 – 1,500 sq.ft
Type 2 – 1,300 sq.ft
Type 3 – 1,200 sq.ft
Type 4 – 1,000 sq.ft

Type 1 – 7,575,000.00 இருந்து
Type 2 – 6,565,000.00 இருந்து
Type 3 – 6,060,000.00 இருந்து
Type 4 – 5,050,000 .00 இருந்து

- வரவேற்பறை
- படுக்கையறை
- சமையலறை
- குளியலறை அடங்கலாக

● உள்ளூர் அதிகார சட்டதிட்டத்திற்கு அமைவாக சிறு மாற்றம் ஏற்படலாம்.

● ரூபா 200,000.00 ஐ செலுத்தி இன்றே வீடொன்றை பதிவு செய்யுங்கள்.

● உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உள்ளக வடிவமைப்பு செய்து தரப்படும்.

**Contact Number:** MGR (Sales Rep) : **0776033259** Raguram (Sanken) : **0773126610** Office : **0212224840**

**Jaffna Address:** No: 31, Wyman Road, Nallur, Jaffna

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணியும் வீடும் விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கட்டப்பிராய் பருத்தித்துறை பிரதான வீதியில் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு உட்புகுகின்ற ஒழுங் கைக்கு எதிராக 6 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக் குண்டு.
தொடர்பு: V.நந்தகுமாரன் 077 602 8503

### காணி விற்பனைக்கு
நெடுந்தீவில் பிரதான வீதியில், வைத்தியசாலை, தபால் நிலையம் மற்றும் சமுர்த்தி அண்மித்ததாக இருக்கும் 10 பரப்புக்காணி உறுதியு டன் விற்பனைக்குண்டு.
விலை- 6இலட்சம்
தொடர்பு: 077 618 7553 (சி19945) (13,15,17)

### வீடு விற்பனைக்கு
வளன்புரத்தில் 1½ பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 075 435 4161

### வீடுகள், கட்டடத்துடன் காணி விற்பனைக்கு
நுணாவில் மேற்கு, சாவகச்சேரியில் சுமார் 74 பரப்புக் காணி கட்டடங்களுடன், முழுமையாக அல்லது பகுதியாக உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 486 6659

### விற்பனைக்கு உண்டு
வீடு மற்றும் கடைத் தேவைக்குப் பயன்படுத்தக்கூடிய இரும்பினால் ஆன ஒரு கதவு (Ranning gate) விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்க்கப்படும்.
தொடர்பு- 077 311 4803

### விற்பனைக்கு
அச்சு இயந்திரம் (Hamada printing Machine - A3 Size) மற்றும் Plate Maker ஆகியன விற்பனைக்கு.
தொடர்பு- 077 536 3796

### வீடு விற்பனைக்கு
யாழ். பெரியகோயிலுக்கு அருகில் கியூடெக்இற்கு சமீபமாக மேல்மாடி வீடு கிணற்று டன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 605 5559 (65861 (13,15,17)

### மலிவு விற்பனை
தீபாவளியை முன்னிட்டு கோழி இறைச்சி மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
1Kg இறைச்சி ரூபா 450 மட்டும்
தொடர்பு:
V.S.T பாம் சொப் பருத்தித்துறை வீதி, இலகடி ,கரவெட்டி.
T.P : 077 286 4828

### விற்பனைக்கு
NP LF- 16xx தொடர் இலக்கமுள்ள பாவனையில் உள்ள TATA 207 DI, Single cab பவர்ஸ்ரேறிங் வாகனம் மற்றும் நல்ல நிலையில் உள்ள, தண்ணீர் பவுசர்(4500லீற்றர்)(Tractor Bowser) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 088 5757

### தென்னந்தோட்டம் விற்பனைக்கு
பளைக்கும் தர்மக் கேணிக்கும் இடையில் உள்ள 20 ஏக்கர் தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 072 525 4133

## தேவை

### இடம் தேவை
மாட்டுப்பண்ணை அமைப்பதற்கு குத்தகைக்கு இடம் தேவை. (ஏற்கனவே பண்ணை அமைந்த இடம் விரும்பத்தக்கது)
தொடர்பு- 075 203 4139

### மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பத்தில் 1974ஆம் ஆண்டு பூராட நட்சத்திரம் தனியார் துறையில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு- 077 952 5015

### மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம் 1981 ரோகிணி 3 ஆம் பாதம் கிரகபாவம் 07 அரச தொழில்
தொடர்பு: 077 151 6659

### மணமகள் தேவை
பெல்ஜியம் நாட்டில் பணியாற்றும்,34 வயதுடைய, 8 இல் செவ்வாயும்,கிரக பாவம் 60, உத்தராட நட்சத்திரமும் கொண்ட,உயர் குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை.
தொடர்பு:
077 586 3692, 077 204 1018

### மணமகள் தேவை
மட்டக்களப்பு/ யாழ்ப்பாணம் இந்து தமிழ் கொம்பியூட்டர் எஞ்சினியர் UK PR உரிமையுடைய 40 வயது ஆயிலியம் 5' 4" உயரம் தீயபழக்கமற்ற மணமகனுக்கு ஆங்கிலம் ஓரளவு படித்த நற்குணமான மணமகள் தேவை. இலங்கை, இந்தியா மற்றும் வெளிநாடுகளிலுள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு: UK 004 474 382 65672
vnithiy2@gmail.com 077 291 6967

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகருக்கு அண்மையில் அல்லது யாழ்.நகரில் இருந்து 10Km தூரத்துக்குள் 3 பேர் அடங்கிய ஆசிரிய குடும்பத்துக்கு வீடு தேவை.
தொடர்புகளுக்கு- 077 220 7732

### கடல் முகப்புடன் கூடிய காணி முல்லைத்தீவில் தேவை
வட்டுவாகல், செல்வபுரம், கொக்கிழாய், சிலாவத்தை, சுண்டிக்குளம் ஆகிய இடங்களில் 5-50 ஏக்கர் காணி தேவை.
தொடர்பு: 072 224 2805

### பணிப்பெண் தேவை
வெள்ளவத்தையில் கௌரவமான சிறிய குடும்பத்துக்கு, சகல வேலைகளிலும் உதவக் கூடிய பணிப்பெண் ஒருவர்தேவை.
தொடர்பு: 077 935 0833 (சி19943) (13,15,17)

### தேவை
இலங்கையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற நிறுவனங்களுக்கு ஆண்/பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. சாறி அணியும் பெண்கள் விரும்பத்தக்கது. சம்பளம் OT யுடன் 35000. சாப்பாடு, தங்குமிடம் இலவசம். தேவைப்படும் பிரதேசங்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை மற்றும் சகல பிரதேசங்களுக்கும் மொழி அவசியமில்லை. வரும் நாளில் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.
தொடர்பு: 076 801 6129
R.S.International Job Service
48A-1/1 Hill Street, Dehiwala.

## ஏனையவை


KU Education
No 1 for:
IELTS AC/GM
A1 Life Skils
Spoken English
தனிப்பட்ட வகுப்பு
16 வருடத்துக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள இங்கிலாந்து பட்டதாரி விரிவுரையாளிடம் கற்கும் வாய்ப்பு, விபரங்கள் :
http://edu.kugroup.info/ielts
Knowledge Universe®
No 626,1/1 K.K.S Rd.Jaffna
021-3208342/0777302882





நாம் உங்களுக்கு உதவ தயார்
•Visit Visas •Rejected Visas
நிராகரிக்கப்பட்ட மற்றும் புதிய விண்ணப்பங்கள்
*Appeals & Rejected Visas *Special Occasions
*Family & Friends Visit *Medical Visits
*Tourist/Business Visits
• Australia • Italy • Switzerland
• Canada • Japan • Sweden
• China • New Zealand • UK
• France • Netherlands • USA
• Germany • Norway
100% உத்தரவாதம்*
THE VISA CENTRE
Migration, Work & Study Solutions
Level One, 21, Maitland Crescent, Colombo 07.
HOTLINES:
0777 633 955 / 0777 633 977 / 0773 444 447
அனைத்து விதமான கட்டணங்களும்
The Visa Centre
தலைமை காரியாலயத்தில் மட்டுமே செலுத்தப்படல் வேண்டும்.
Tel: 5 334433 Fax: 5 352303 Email: info@thevisacentre.com
www.thevisacentre.com


### அறை வாடகைக்கு
பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கு அருகில் இரு பல்கலைக்கழக மாணவிகளுக்கு உகந்த அமைதியானதும் பாதுகாப்பானதுமான வீட்டில் அறை ஒன்று உண்டு.
தொடர்பு: 077 167 8041

### கடைகள் வாடகைக்கு
யாழ்.ஸ்ரான்லி வீதியில் கடைகள் வாடகைக்கு உண்டு. கட்டடத் தொகுதியாகவும், தனித் தனியான கடைகளாகவும் வாடகைக்கு வழங்கப்படும்.
தொடர்பு:
071 443 7336, 077 847 5072


Majestic Cineplex Jaffna
கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



| | | |
|---|---|---|
| மஜெஸ்டிக் | பிளாட்டினம் | 10.30 / 2.30 / 6.30 |
| சில்வர் | பத்து எண்றதுக்குள்ள | 10.15 / 2.15 / 6.15 |
| ப்ரோன்ஸ் | நானும் ROWDY தான் | 10.30 / 2.30 / 6.30 |

விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk


### பிரத்தியேக வகுப்புகள்
வீட்டிற்கு வந்து பின்வரும் வகுப்புக்கள் கற்றுத்தரப்படும்
- Spoken English with Grammar
- IELTS
- கணினி வகுப்புக்கள். (65859) (13.15.17)

தொடர்பு: 072 186 7203

### வேலை வாய்ப்பு
எமது FR கம்பனிக்கு, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கிளைகளுக்கு வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. O/L, A/L தகைமையுள்ளவர்களும் O/L தகைமை இல்லாதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.(ஆண், பெண் இருபாலாரும்)
தொடர்பு :
கிளிநொச்சி: 077 280 3773,077 587 9945
யாழ்ப்பாணம்: 077 208 3140 ,076 843 3804
கொழும்பு : 077 354 8206

### ஒத்து மாறுதல்
இரத்தினபுரி நிவித்திகலை டால தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் கலைப்பட்டதாரி ஆசிரியர் (நாடகம், தமிழ்) ஒருவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள பாடசாலை ஒன்றிற்கு ஒத்துமாறவுள்ளார். விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு : 077 610 1458 த.கஜன்

### விசேட விலைக்கழிவு
யாழ்.நகரின் மூடப்படவுள்ள கடையின் மூன்று புதிய கண்ணாடி சோக்கேஸ்கள் பாதி விலையில் Rs.25,000இற்கு விற்கப்படவுள்ளது. (உண்மைப் பெறுமதி Rs 55,000) மேலும் தளபாடங்கள், பெயர்ப்பலகைகள், Computer பொருள்களும் பாதி விலையில் விற்கப்படும்.
தொடர்பு: 077 310 3205

### Shanu Electrical Systems - Manipay
தரமான Solar panels, Bio disel Generators. என்பன விற்கப்படும் அத்துடன் சகலவிதமான Electrical Control Panels, Electrical Wiring வேலைகளும் செய்து தரப்படும்.
Shanu Electrical Systems - Manipay
076 903 7423,
Shanuelesys@gmail.com

### வீடு வாடகைக்கு உண்டு
இணுவில் மானிப்பாய் வீதி, பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடியில் பெண் பிள்ளைகள் தங்கி இருந்து படிப்பதற்கு சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு :
077 838 5172, 072 3156 787

### தையல் தொழிலாளர்கள் தேவை
யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள எமது தையல் நிலையத்தில் பணியாற்ற தையலில் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை. வெளிமாவட்டத்தில் உள்ளவர்களும் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். (தங்குமிட வசதி உண்டு) தையல் தொழிலில் அனுபவமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:
077 138 7239


TREAT OOO HOTEL
அல்லைப்பிட்டி
Treat OOO Beach Resort
சமையற்கலை வல்லுனர்கள் தமது சேவைகளை தற்போது யாழிலும் ஆரம்பித்துள்ளார்கள்.
பூரி / சப்பாத்தி (03) - 100
மரக்கறி சூப் - 130 /-
சிக்கன் சூப் - 150 /-
மதிய உணவு பார்சல்கள் முன்கூட்டியே ஓடர் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.
* Allaipiddy Beach Resort இல் விசேட வைபவங்கள், பார்டிகள் நடத்தும் வசதியுண்டு.
* Ac / Non Ac rooms Available
தொடர்புகளுக்கு:-
41, KANDY ROAD, CHUNDUKULI, JAFFNA.
T.P: 021 222 0298

# நல்லூரில் இன்று ஆனந்த சாரங்கம்

யாழ்ப்பாணம், நவ. 8

அளவையூர் கலைப் பரம்பரையில் பிறந்தவரும் நல்லூர் சாரங்கம் இசை மன்ற ஆசிரியருமான திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் ஆனந்த சாரங்கம் இசை விழா நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. அதில் கலையார்வலர்கள் கலந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற தவில் வித்துவான் குமாரசுந்தரம் பாலாம்பிகை தம்பதியரின் புதல்விகளில் ஒருவரான இவரது சாரங்கம் இசைமன்றம் இலவசமாக இசை வகுப்புக்களை நடத்தி வருகின்றது. இசைக் கலைமணி, கலாவித்தகர், இசையரசி, இசை ஞான மணி, இசைக்காருணி என்ற பல பட்டங்களைப் பெற்றுள்ள அவர் பல மேடைகளில் இசைவிருந்து வழங்கியுள்ளார். அவர் வருடாந்தம் ஆனந்த சாரங்கம் எனும் இசை விழாவை நடத்தி மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகிறார். இவர் ஆரம்பக் கல்வியை அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை இராமநாதன் கல்லூரியிலும் பயின்று பட்டதாரியாகி ஆசிரியராக வுள்ளார். அவரது கணவனான ரஜீந்திரன் நாதஸ்வர வித்துவானாக விளங்குகிறார். அவர்களது மகன் சாஹித்தியன்வாத்திய இசைகளைக் கையாள்வதில் வல்லமையுடையவர். அவரும் தாயாருடன் இணைந்து இசையைப் போதித்து வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி ப.சிவானந்தன் அவர்களின்
அன்புத் தந்தை
**அமரர் சின்னத்துரை நல்லநாதன்**
(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)
அவர்கள் 07.11.2015 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மசாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்பேண் ஒன்றியம்,
கிளி/அக்கராயன் ம.வி.

(65655)(11.15.16)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி **அன்னலக்ஷ்மி பேரம்பலம்**
(ஓய்வு நிலை ஆசிரியர்-
சங்கானை சிவப்பிரகாச ம.வி)

அன்னை மடியில்
13. 08.1932

ஆண்டவன் அடியில்
03.11.2010

திதி:- துவாதசி
08.11.2015

அம்மம்மா சென்றதோ ஐந்தாண்டுகள்
எத்தனையோ பேரை ஆசானாக்கிய நீங்கள்
எங்களையும் ஆசானாக்க முன்பு சென்றதேனோ?
அம்மம்மா என்றும் உங்கள் நினைவுகளோடு நாங்கள்.....
கலங்கிய உள்ளங்களாக வாழ்கிறோம்
உங்கள் ஆத்மாவின் சாந்திக்காக
எல்லாம்வல்ல இறைவனை
வேண்டுகின்றோம் அம்மம்மா

**பா. சௌமினி, பா. டஸ்மினி**
**பேரப்பிள்ளைகள்**
**(யா/ உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்கள்)**

லக்ஸ்மி வாசா
பிளாக் வீதி ,சங்கானை.

(65847) (12.15.16)

## ஈர விழிகளுடன் ஓராண்டு



**விக்னேஸ்வரன் செஞ்சுடர் (கோபி)**
(பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி பழைய மாணவனும், BCAS கம்பஸ் மாணவனும், சக்தி Fm பகுதி நேர அறிவிப்பாளரும்)

தாயின் மடியில்
25.01.1993

காலனின் காலடியில்
20.10.2014



ஏற்றமிகு உலகினிலே
ஏகபுத்திரனாய் வந்துதித்த – செல்வப்புதல்வனே
பல்கலைக்கழகம் சென்று – நீ பட்டம் பெற்று
வருவாயென காத்து நாம் இருக்க
பட்ட மரமாய் – நீ போனதென்ன


ஆசைக்கு ஒரு பிள்ளையடா
கொள்ளிபோட இருப்பாயென எண்ணிய
எங்களின் கோட்டையை இடித்தது ஏனடா?
மீளாத் துயர் தனிலே எமையெல்லாம்
தவிக்கவிட்டு விரைவதற்கு
என்னதான் அவசரமோ!

உன்னிடம் வந்து நாம் சேரும் வரை
ஆறாது எம் துயரம் உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

**உன் பிரிவால் துடிக்கும்**
**குடும்பத்தினர்.**
**கந்தரோடை, சுன்னாகம்.**

(65765) (14.15.16)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




திருமதி Dr. **ருக்மணி உதயகுமார்**

திதி: வளர்பிறை ஐப்பசி - சஷ்டி

கருத்தாய் தினம் காத்து - எம்மை கருணையுடனே காலமெல்லாம் நடத்தினாய்
கடவுள் தந்த பொக்கிஷமோ நீ - கரம் கூப்பி தொழவேண்டும் உன்னை
காலமெல்லாம் நீ காட்டிய வழியில் நாம் நடந்திட.....
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் அன்னையே அன்பால் எமை அணைத்து - பாசமாய்
அல்லும் பகலும் எம்மை கருவிலிருந்தே அரவணைத்து வளர்த்திட்ட உங்களை
அண்டம் எல்லாம் அழிந்தாலும்! அழியாதம்மா உங்கள் நினைவுகள்....
கடவுளுக்கு நிகராய் நின்று - என்றும் கட்சிதமாய் பணி புரிந்தாய் எங்கும்
கஷ்டங்களோடு ஓடி வந்தோரை - நீங்கள் கவனித்து மன நிம்மதியை கொடுத்தனுப்பினீர்கள்
கடுகதியாய் உங்கள் ஆயுள் முடித்து
கண்ணுறங்கினாலும் நீங்காதம்மா உங்கள் நினைவுகள்....
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் உங்கள் எண்ணங்கள்
ஆழமாய் எம் மனதில் பதிந்தே உள்ளனவே!
ஆயுள் முழுவதும் உமை நினைப்போம் ஆண்டவன் பாதம் நீங்கள் அமர்ந்திட
ஆசையாய் என்றும் கடவுளைத் தொழுதிடுவோம்.....

**அர்ச்சனா கிளினிக்,**
**மயிலணி,சுன்னாகம்.**

கணவர் - உதயகுமார்
மகள்- அர்ச்சனா
**குடும்பத்தினர்.**

(65828) (13.15.17)

# கட்டணம் செலுத்தாத உறுப்பினர்களின் மோ.சைக்கிள்களை மீளப்பெற முடிவு

கொழும்பு, நவ.8


வரிச்சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக்கொண்டு இன்னும் கட்டணம் செலுத்தாமல் இருக்கும் பிரதேசசபை உறுப்பினர்கள் 1298 பேரின் மோட்டார் சைக்கிள்களை கைப்பற்றுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்களுக்கு கடந்த வருடம் 50,000 ரூபாவுக்கே இந்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் 3970 பேர் இந்த மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொண்டுள்ளதுடன் இவற்றில் 1298 உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய 50,000 ரூபாய் பணத்தை இன்னும் செலுத்தாமல் இருப்பதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பணத்தைச் செலுத்துவதற்காக ஒரு மாதகால அவகாசம் வழங்கப்பட்டு அதன் பின்னரும் கட்டணம் செலுத்தப்படாத மோட்டார் சைக்கிள்களை கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (வ)

# சோபித தேரரின் உடல் நிலை கவலைக்கிடம்



கொழும்பு, நவ.8

சிங்கப்பூரிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் கோட்டை நாக விகாரையின் விகாராதிபதி மாதுலுவாவே சோபித தேரரின் உடல் நிலை கவலைக்கிடமாக காணப்படுவதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, சோபித தேரரின் உடல் நிலை மோசமடைந்து வருவதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர் டி சில்வாவும் தனது டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தேரரின் உடல் நிலைமை கவலைக்கிடமாகக் காணப்பட்டாலும், தேரருக்கு உலகிலுள்ள மிகவும் உயர்தர மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (வ)

# பொலிஸ் சித்திரவதைகள் தொடர்பில் முறைப்பாடு

கொழும்பு, நவ.8

பொலிஸாரின் சித்திரவதைகள் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொட்டாதெனியாவ சேயா சிறுமி கொலையுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக கொட்டாதெனிய பொலிஸார் இதற்கான விசேட சித்திரவதைக் கூடமொன்றை நடத்தி வருவதாக இளம் ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

17 வயது பாடசாலை மாணவன் உள்ளிட்ட 12 பேர் பொலிஸ் நிலையத்திற்கு 3 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள சித்திரவதைக் கூடத்தில் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது பொலிஸார் மிகவும் மோசமாக தாக்கியதாகவும், ஆடைகளைக் களைந்து விசாரணை நடத்தியதாகவும், ஆடைகளை களைந்த நிலையில் புகைப்படம் எடுத்ததாகவும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# நீதியமைச்சர் விஜதாச ராஜபக்சவிடம் 500 கோடி ரூபா நட்டஈடு கோரி வழக்கு

## தொடர்வேன் என்கிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, நவ.8

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவிடம் 500 கோடி ரூபா நட்ட ஈடு கோரி வழக்குத் தொடர உள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மினுவன்கொடையில் நேற்று நடைபெற்ற கூட்டமொன் றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவன்கார்ட் மிதக்கும் ஆயுதக் கப்பல் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என அண்மையில் சரத் பொன்சேகா, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை விமர்சனம் செய்திருந்தார்.

இதனால் தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும், இதற்கு நட்ட ஈடாக சரத்பொன்சேகா 50 கோடி ரூபா நட்ட ஈடு வழங்க வேண்டுமெனக் கோரி நிபந்தனைக் கடிதமொன்றை அனுப்ப உள்ளதாக விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் சரத் பொன்சேகா 500 கோடி நட்ட ஈடு கோரியுள்ளார். இது தொடர்பில் சரத் பொன்சேகா மேலும் கூறியுள்ளதாவது:-

50 கோடி அல்ல 100 கோடி ரூபா நட்ட ஈடு கோரினாலும் எமது மாதாந்த ஓய்வூதியத் தொகை 50,000 ரூபா மட்டுமே.எனவே நட்டஈடு வழங்க எம்மிடம் பணமில்லை.

குற்றவாளியானால் பணம் இல்லாத காரணத்தினால் அமைச்சரின் வீட்டில் எமக்கு தங்க நேரிடும்.எமக்கும் அமைச்சரே சாப்பாடு வழங்க நேரிடும் எனவும் சரத் பொன்சேகா கிண்டலாகத் தெரிவித்துள்ளார். (வ)

# இந்தியாவுடன் வர்த்தக உடன்படிக்கை

## கைச்சாத்திடவுள்ளது அரசு

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் அடுத்த ஆண்டு மே மாதம் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பிலான ஒத்துழைப்பு குறித்து உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவுக்கு பயணம் செய்திருந்த போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் இந்த உடன்படிக்கை குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

வர்த்தக நடவடிக்கைகள் மட்டுமன்றி முதலீட்டுத்துறை தொடர்பிலும் இந்த உடன்படிக்கையின் ஊடாக கவனம் செலுத்தப்பட உள்ளதாக இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் எசல வீரக்கோன் தெரிவித்துள்ளார். (வ)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**
டொபர்மன் (டோமன்) 50 நாள் குட்டிகள் Arv, Parvo தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு புத்தகத்துடன் விற்பனைக்கு உண்டு. 077 104 1359

**விற்பனை முகவர் விநியோகஸ்தர் தேவை**
மோட்டார் சைக்கிளுடன் (ஸ்கூட்டி) வருபவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்
தொடர்பு:- 021 223 0849

**மர அரிவு மில் காணியுடன் விற்பனைக்கு**
மிருசுவிலில் உள்ள மர அரிவு ஆலை காணியுடன் சேர்த்து விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 255 7761

**காணி விற்பனைக்கு**
பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்திக்கருகில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 977 3375

**விற்பனையாளர் தேவை**
ஆங்கில அறிவும், கணினி அறிவும் கொண்ட ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்பு:- 213, சேர்.பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
077 044 4496, 021 221 2424

**வீடு வாடகைக்கு**
யாழ்.பல்கலைக்கழகத்துக்கும் கொக்குவில் புகையிரத நிலையத்துக்கும் அண்மையில் 3 அறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சிறு குடும்பமாக இருப்பது விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 919 8285

**விற்பனைக்கு**
[சாம்சங் கலக்சிபோன்], Samsung Galaxy Grand Prime 4G, ஒரு மாதம் பாவித்தது. உத்தரவாதத்துடன் மற்றும் A/C யின் வெளி இணைப்பு இயந்திரங்கள், கலர்பிறிண்டர் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு : 071 462 0806

**தேவை**
வளர்ப்பு மீன்கள், செல்லப்பிராணிகள், விற்பனை செய்யும் கடையொன்றிற்பணிபுரிய ஆண், பெண் இருபாலாரும் தேவை.
தொடர்புகளுக்கு : 021 791 2997

**வேலை வாய்ப்பு**
பிரபல கல்லூரி ஒன்றின் வவுனியா, யாழ்ப்பாணம், கிளைகளுக்கு வெளிகள சந்தைப்படுத்தல் அதிகாரி (பெண்) தேவை
அடிப்படைத் தகைமை A/L சித்தி
மாதாந்தச் சம்பளம் : 30000/=
More Details : 0777-596148, 021-4927113
BIS 94, Nallur Cross Rd, Jaffna.



(Consultant orthodontist)
(Consultant Facio Maxillary Surgeon)
மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006

றோயல் மெடிக்கல் சென்ரர்
தொடர்பு: 077 654 4731

**தேவை**
பாவித்த விரிவுரை மண்டபத் தளபாடங்கள் தேவை. வைத்திருப்பவர்கள் விலை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 007 8887

**வீடு வாடகைக்கு**
வெள்ளவத்தை 42ஆவது லேனில் இல.3இல் உள்ள இணைந்த குளியலறையுடன் (காலி வீதியிலிருந்து 20m தூரத்தில்) கூடிய 2 அறை தொடர்மாடி வீடு நாள்/கிழமை/மாத வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 837 8597

**விற்பனைக்கு உண்டு**
நல்ல பாவனையில் உள்ள BAB XXXX Pluser (சிவப்பு) விற்பனைக்கு உண்டு. Stand Fan விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 711 2102

**Ave Maria Travels & Tours**
KDH 223 Van (சேவை)



தொடர்பு:- 077 716 5230,077 579 2295

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2696 திகதி: 2015-11-07
15 59 65 70 Z 50
ரூ. 33,782,575/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 419
சீட்டிழுப்பு திகதி 2015.11.07
11 27 45 65 X
ரூ. 41,205,300/=

**வேலைவாய்ப்பு**
**வடமராட்சியில்**
IT Lecturer (Degree / HNDIT), English Teacher (Degree / HNDE), Business Promotionist, Receptionist, Kids Teacher வடமராட்சியில் தேவை.
Closing date : 11.11.2015
More details
SMS To:
Name <space>Address to 076 7659415


WIN
1000
Mountain Bikes
Nestlé MILO
Mom, Me & My MILO
போட்டி விதிமுறைகள்:
Nestlé MILO
Chocolate Malt Food Drink
Fuelling the winning spirit
Nestlé
Good Food, Good Life
WP/GT/4448

மருத்துவர் பொ. ஜெசிதரன்
சுகாதார வைத்திய அதிகாரி



# ஆகார அறிவே ஆரோக்கியத்தின் முதல் படி...

இன்றைய வாழ்வில் நாம் செல்வத்துக்கும், செல்வம் தேடுவதற்குமே முன்னுரிமை அளிக்கின்றோம். எமது செயற்பாடுகளும் அது சார்ந்ததாகவே இருக்கின்றன. பொருள் தேடுவதற்காக புலம்பெயர்ந்த கதைகள் பலவற்றையும் எமது வரலாற்றில் படித்திருக்கின்றோம். ஆனாலும் உண்மைச் செல்வம் எதுவென்று கண்டுகொண்டோமா? மடிக்கணினிகள் பல இருப்பதா? மகிழுந்துகள் பல இருப்பதா? மாடி மனைகள் பல இருப்பதா? மடி நிறையப் பணமிருப்பதா? எது தான் செல்வம்? உண்மைச் செல்வம் எதுவென்று மறந்தேவிட்டது. ஆரோக்கிய மனமோ, ஆரோக்கிய உடலோ, ஆரோக்கிய நடத்தையோ உண்மைச் செல்வம் என்றால் அதை ஒத்துக்கொள்பவர்கள் எம்மில் எத்தனை பேர்? உண்மைச் செல்வம் மறை பொருளானதால் நாம் பல ஆரோக்கிய மற்ற உணவுவகைகள், சமையல் முறை கள், நடத்தைக் கோலங்களுக்கு ஆட்பட்டு, அவையே ஆரோக்கியமானவை எனத் தப்பிதமாக நம்பி வாழ்ந்து வருகின்றோம். அதிக பணம் கொடுத்து ஆரோக்கியமற்ற உணவுகளை உட்கொண்டு மகிழ்கின்றோம். முன் யோசனை அற்று மூடத்தனமாக நடந்து, நாமே முன்வந்து பல நோய்களையும் கொள்வனவு செய்கின்றோம். இவற்றிலிருந்து மீள வேண்டுமாயின் உணவு முறைப் போசாக்கு சம்பந்தமான அடிப்படை அறிவை விருத்தி செய்து கொண்டு, அதனை எமது வாழ்வில் பிரயோகிக்க வேண்டும். அவ்வாறான எளிய, நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய இலகு வழிகளை இனிப்பார்ப்போம்.

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு பலதரப்பட்ட உணவுக் கூறுகளையும் கொண்ட கலப்பின உணவுகளையே தேர்வு செய்வதுடன், உணவு சார்ந்த நாளாந்த திட்டமிடலும் அவசியமாகும். ஒரே மாதிரியான உணவுகளையே தினமும் உட்கொள்ளாது, பலவகையான உணவுகளைத் தினமும் சேர்த்துக் கொள்ள வேண்டும். உடல் நிறையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும், சமநிலை உணவுகளை எடுப்பதற்கும் வெவ்வேறு சுவை, மணம், வர்ணம் கொண்ட உணவுகளைத் தெரிவு செய்தல் வேண்டும். இவை உடலை ஆரோக்கியமாகப் பேணி, செயற்பாடுகளுக்கு சக்தியையும் போசாக்கையும் வழங்குகின்றன. தானியங்கள், கிழங்குகள் மற்றும் மாத்தன்மையான பழங்கள் (பலா, ஈரப்பலா) போன்ற காபோவைதரேற்றைக் கொண்ட உணவுக் கூறுகள் நாளாந்த செயற்பாட்டுக்குரிய சக்தியைத் தருகின்றன. பழங்களும் காய்கறிகளும், இலை வகைகளும் நோயிலிருந்து பாதுகாக்கின்றன. மீன், முட்டை, பருப்பு வகைகள், இறைச்சி போன்ற புரத உணவுகள் உடல் வளர்ச்சிக்கும் மற்றும் உடலைப் பேணிப் பாதுகாக்கவும் உதவுகின்றன. பால், பாற்பொருள்கள் உடல் வளர்ச்சிக்கும், எலும்பு, பல்வளர்ச்சிக்கும் தேவை. விதைகளும் எண்ணெய்களும் கொண்டுள்ள கொழுப்புணவுக் கூறுகள் உடலுக்குத் தொழிற்பாட்டுச் சக்தியை வழங்குகின்றன. மேற்சொன்ன ஆறு வகை உணவுக் கூறுகளில் ஒன்றிரண்டை பெரிய அளவில் சேர்த்துக் கொள்வதிலும் பார்க்க, எல்லா வகைக் கூறுகளிலிருந்தும் சிறிதளவேனும் உள்ளடக்குவதே சிறந்ததாகும். இவற்றின் பரிமாறல்களின் அளவானது, ஒருவரின் வயது, பால், உடல் நிறை, உடற்செயற்பாடுகளின் அளவு, வாழ்க்கைத் தரம் என்பவற்றில் தங்கியுள்ளது. நோய்கள் ஏற்படின் மேலதிக கவனம் தேவை. தானியங்கள், பழங்கள், காய்கறிகளை உணவில் அதிகமாக சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் கொழுப்புக்கள் மற்றும் எண்ணெய்களைக் குறைவாக எடுப்பதே சிறந்தது.

தானியங்களினாலான உணவுகளை (அரிசி, குரக்கன், கோதுமை,சாமி) தினமும் மூன்று முறை சாப்பிடுதல் நன்று. கிழங்கு வகைகள் (மரவள்ளி, இராசவள்ளி, கொம்புவள்ளி, சிறுகிழங்கு போன்றவை) மற்றும் மாத்தன்மையான பழங்கள் போன்றவற்றை தானியங்களுக்குப் பதிலாகப் பயன்படுத்த முடியும். இவற்றில் உள்ள நார்ச்சத்துக்களின் அளவு கோதுமையில் உள்ளதிலும் பார்க்க அதிகம். எனவே குளுக்கோசின் அளவு சடுதியாக அதிகரிக்காது. அதாவது, கிளைசீமிக் இன்டெக்ஸ் (Glycemic index) குருதியில் குறைவாகவே இருக்கும் தானியங்களை அதிகம் மினுக்கும்போது அதிகளவு விற்றமின்கள் (குறிப்பாக விற்றமின் B) இழக்கப்படுகின்றது. கோதுமை மா தயாரிப்புக்களைக் குறைவாக உள்ளெடுத்தலே ஆரோக்கியமானது. பாணுடன் பட்டர், ஜாம் போன்றவற்றை உண்பதைத் தவிர்த்தல் சிறப்பு.

தினமும் 240g அளவு மரக்கறி, இலை வகைகளும் 160g அளவான பழவர்க்கங்களும் சேர்த்துக்கொள்ள வேண்டும். கிருமி நாசினி, உரப்பாவனை அதிகமாகவுள்ள இந்தக் காலத்தில் இவற்றைத் தூய்மையாக நஞ்சற்றுப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. ஒப்பீட்டளவில் வாழைப்பூ, ஈரப்பலா, பலாக்காய், தாமரைக்கிழங்கு, சுண்டங் கத்தரிக்காய் என்பவற்றை இன்றைய சந்தைகளில் ஓரளவு தூய்மையாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இவை தொடர்ந்தும் தூய்மையானதாகக் கிடைத்திட விவசாய நண்பர்கள் எமக்கு உதவிட வேண்டும். தூய்மையான காய்கறிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் ஒவ்வொருவரும் வீட்டுத்தோட்டச் செயன்முறையில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். பருப்பு வகைகள், மீன், கருவாடு, முட்டை, இறைச்சி போன்ற புரத உணவுக் கூறுகளையும் போதிய அளவில் உணவில் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். விலங்குப் புரதங்களில் எல்லா வகையான அமினோ அமிலங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். வெவ்வேறு வகையான மீன்கள் (கடல் மீன், எண்ணெய் மீன், கடற்சிப்பி) வெவ்வேறு வகையான ஆரோக்கிய நன்மைகளைக் கொடுக்கும். மீன்களின் தலைப்பாகம் ஆரோக்கியமான எண்ணெய்களைக் (Omega - 3) கொண்டிருப்பதால் சமைக்கும் போது முழு மீனையும் (தலையை வெட்டி அகற்றாது) பயன் படுத்துவதே சிறப்பு. இந்த ஒமேகா 3 (Omega - 3) சிறுவர்கள் கெட்டிக்காரத்தனத்துடனும் புத்திசாலித்தனத்துடனும் செயற்படுவதற்கான நுண்ணறிவுத் திறனை விருத்தி செய்யும் ஆற்றல் கொண்டது. மீன்களிலுள்ள புரதமானது மிகவும் உயர் தன்மையானது. மூளை வளர்ச்சிக்கும் பார்வை விருத்திக்கும் உதவிடும். ஒமேகா 3 கொழுப்பிமிலங்களைப் போதியளவு கொண்டுள்ள சூடை, கீரிமீன், கும்பளா, மக்ரல் போன்றவற்றை குறைந் தது கிழமைக்கு இரு நாள்களாவது எடுத் தல் நன்று. இதய அடைப்பு, ஆத்திரோஸ்கிளறோறிஸ் (Atherosclerosis) மனச்சோர்வு மற்றும் புற்றுநோயை இந்த ஒமேகா 3 கொழுப்பமிலங்கள் தடுக்கும் தன்மை கொண்டவை. யௌவனப் பருவத்தில் தேவைப்படும் அதிக கல்சியத் தேவையை, நெத்தலி, கூனி இறால், கீரை மீன், சூடை மீன் போன்ற மீன்களை முள்ளுடன் உட்கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். இதன் காரணமாக என்புருக்கி (சிறுவர்களில்) மற்றும் (Osteoporosis) ஒஸ்ரியோபொரசிஸ் (பெரியவர்களில்) போன்ற நோய் ஆபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

பூரண புரத உணவாக முட்டை விளங்குகின்றது. இது மனிதனுக்குத் தேவையான எல்லா அத்தியாவசியமான அமினோ அமிலங்களைக் கொண்ட தரமான புரதத்தையும், பல விற்றமின்களையும், கனியுப்புக்களையும் கொண்டுள்ளது. முட்டை மஞ்சள் கருவானது கொழுப்பு, கோலின் (Choline) விற்றமின்கள், இரும்பு, கொலஸ்திரோல், கல்சியம் என்பவற்றைக் கொண்டுள்ளதோடு, வெள்ளைக் கருவானது கிட்டத்தட்ட எல்லாவகையான புரதங்களையும் கொண்டுள்ளது. முட்டையைப் பொரிக்கும் போது அதனுடன் காய்கறிகளைச் சேர்த்துக் கொண்டால் கொலஸ்ரோல் அகத்துறிஞ்சலைக் குறைத்துக் கொள்ள முடியும். பச்சை முட்டைகள் அல்லது அரை அவியல் முட்டைகளிலும் பார்க்க சமைத்த முட்டைகளே இலகுவாக சமிபாடடையும். ஆஸ்திரோஸ்கிளறோறிஸ் நோய் உள்ளவர்கள் கிழமைக்கு 2-3 முழு முட்டைகளையோ அல்லது முட்டை வெள்ளைக் கருவையோ உட்கொள்ள முடியும்.

இறைச்சி வகைகள், அதிக புரதத்தைக் கொண்டிருப்பதுடன் இரும்பு, நாகம், செம்பு போன்ற கனியுப்புக்களையும் கொண்டுள்ளது. குருதியில் அதிக கொலஸ்ரோல் மட்டத்தைக் கொண்டவர்கள் அளவுக்கதிகமாக இறைச்சி உள்ளெடுப்பதைத் தவிர்த்தல் நலம். அதி சிவந்த இறைச்சி வகைகள் (மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி) அதிகளவு நிரம்பிய கொழுப்புக்களைக் (Saturated Fats) கொண்டுள்ளன. இவற்றையும் மற்றும் பதப்படுத்திய இறைச்சியையும் உண்பவர்களுக்கு சிலவகை புற்றுநோய் தாக்க அபாயம் அதிகமாக உள்ளது. கோழி இறைச்சி ஏனைய இறைச்சிகளிலும் பார்க்க, ஒப்பீட்டளவில் குறைந்தளவு நிரம்பிய கொழுப்பமிலங்களைக் கொண்டுள்ளது. எனினும் புரதத்தினளவு ஒரே அளவானதாகவே காணப்படுகின்றது. இயலுமானவரை கண்ணுக்கு தெரிகின்ற கொழுப்புக்களை அகற்றி உண்ணலும் தோல் நீக்கிய கோழி இறைச்சியை உண்ணுவதும் ஆரோக்கியமானது.

பருப்பு வகைகள் புரதச்சத்தையும் கரையக் கூடிய நார்ப் பொருள்களையும் விற்றமின் கனியுப்புக்களையும் கொண்டுள்ளன. பருப்புவகைகளை அதிகளவு உணவில் சேர்த்துக்கொள்ளும்போது நீரிழிவு நோயின் ஆபத்தைக் குறைத்துக் கொள்ள முடியும். முளை கட்டிய பருப்பு வகைகளில் விற்றமின் B மற்றும் விற்றமின் C இன் உள்ளடக்கம் அதிகரிப்பதுடன், உடலினால் இலகுவில் அகத்துறிஞ்சக் கூடிய நிலைக்கு (Bioavailability) அதிலுள்ள இரும்புச் சத்தின் தன்மை மாற்றமடையும். பருப்பு, பட்டாணிக் கடலை, கௌபி, பயறு, சோயா, அவரை மற்றும் விதைகள் (Textured Vegetable Protein) தரமான நல்ல பருப்பு வகைகளின் தெரிவுகளாகும்.

பால் ஒரு நிறைவான உணவாகும். குழந்தைகள் மற்றும் கட்டிளம் பருவத்தினரினதும் எலும்புகளின் விருத்திக்கு பால் மிகவும் முக்கியம். எனவே இவர்களுக்கு செயற்கைப் பானம் வழங்காது பால், பாற்பொருள்களை வழங்குவதே சிறந்தது. கொழுப்பு நீக்கிய பாலிலும் முழு ஆடைப் பாலிலும் ஒரே அளவான கல்சியம் காணப்படுகின்றது. முழு ஆடைப்பால் அதிகளவிலான நிரம்பிய கொழுப்புக்களைக் கொண்டுள்ளது. குறைந்தளவு கொழுப்பைக் கொண்டுள்ள பாலிலுள்ள கொழுப்பானது முழு ஆடைப்பாலிலுள்ள கொழுப்புக்களின் அரைவாசி அளவையே கொண்டுள்ளது.

(தொடரும்)

## ஈ.பி.எவ், ஈ.ரி.எவ். இணைத்து ஓய்வூதிய பணிக்கொடை நிதி

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி இரண்டையும் இணைத்து ஓய்வூதியப் பணிக்கொடை நிதி என மாற்றப்படவுள்ளதாக மிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றில் அறிவித்துள்ளார். இதன்மூலம் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகிய இரண்டும் பாதுகாக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த அரசில் நடந்தது போன்று நிதிகளை அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தேவையான வகையில் வீணடிக்க இடமளிக்கப்பட மாட்டாது எனவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (த-வ)









# இலங்கையின் முதல் சிறிய குருமடமான யாழ் புனித மாட்டீனார் சிறிய குருமடம்



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் – யாழ்.பல்கலைக்கழகம்

**யாழ் மறைமாவட்டத்தில் கடந்த 137 ஆண்டுகளாக குருத்துவ உருவாக்கலின் தொட்டிலாகத் திகழ்ந்து வரும் புனித மாட்டீனார் சிறிய குருமடம் தனது பெருவிழாவை நவம்பர் மாதம் 15ஆம் திகதி கொண்டாடுவதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

இலங்கையின் முதல் சிறிய குருமடம் என்ற பெருமையுடன் கடந்த 137 ஆண்டுகளாக யாழ் பிரதான வீதியில் இருந்து – பெரிய கோவில் நோக்கிச் செல்லும் கதீற்றல் வீதிக்கு எதிர்ப்புறமாக – கம்பீரமாக தலைநிமிர்ந்து நின்று யாழ் மறைமாவட்டத்தின் குருத்துவ உருவாக்கலின் தொட்டிலாகத் திகழ்ந்து நிற்கிறது புனித மாட்டீனார் குருமடம்.

புனித மாட்டீனார் குருமட நூற்றாண்டு விழா மலரில் (1980) இருந்தும் புனித மாட்டீனார் குருமடத்தின் தற்போதைய அதிபர் சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் வழங்கிய தகவலில் இருந்தும் இக்கட்டுரை ஆக்கப்பட்டுள்ளது.

இன்றைய யாழ் மறைமாவட்டம் 1850 ஆம் ஆண்டு அப்போஸ்தலிக்க ஆளுநர் பிரிவாக இருந்த போது முதல் அப்போஸ்தலிக்க ஆளுநராக இருந்த இத்தாலி 'ஒறற்ரோறின்' சபையைச் சேர்ந்த ஆயர் ஒராசியோ பெற்றக்கினி ஆண்டகை (1846-1857) சுதேச குருக்களை உருவாக்க சிறிய குருமடம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணக்கருவை முதலில் கொண்டிருந்தார் என அறிய வருகிறது. இந்த எண்ணக்கருவை மூன்றாவது அப்போஸ்தலிக்க ஆளுநராக ஆட்சி செய்த கிறிஸ்ரோபர் பொன்ஜின் அ.ம.தி (1868-1883) ஆண்டகை 1869 ஆம் ஆண்டு நனவாக்கினார்.

முதலில் ஆயர் இல்லம் என்ற எண்ணத்தோடு கட்டப்பட்ட இக் கட்டடம் புனித சாள்ஸ் பொறோமியோ என்ற புனிதரின் பாதுகாவலில் ஒப்படைக்கப்பட்டது. இங்கு சிறிய குருமட மாணவர்களும் பெரிய குருமட மாணவர்களும் தங்கியிருந்தனர். 1874 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 திகதி அமலமரித்தியாகிகளின் யாழ் இல்லம் புனித சாள்ஸ் பொறோமியோ என்ற புனிதரின் பாதுகாவலில் ஒப்படைக்கப்பட்டது. இதனால் 1874 ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி குருமடமானது தூரின் நகர்ப் புனிதர் புனித மாட்டீனாரின் பாதுகாவலில் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு அமலமரித்தியாகிகளின் யாழ் இல்லமாக புனித சாள்ஸ் பொறோமியோவின் பெயர் சூட்டப்பட்ட கட்டடமே இன்றைய ஆயர் இல்லமாகும்.

1878 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் முயார் தோட்டம் என அழைக்கப்பட்ட 4 ஏக்கர் பரப்பளவு கொண்ட தென்னந்தோட்டக்காணி சிறிய வீட்டுடன் குருமடத்திற்கென வாங்கப்பட்டு அதே ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி முதல் குருமாணவர்கள் அங்கு வசிக்கத் தொடங்கினர்.

ரி.மிசியற் அ.ம.தி அடிகளார் புனித மாட்டீனார் குருமடத்தின் முதல் அதிபரானார். 1883 ஆண்டு 4ஆவது அப்போஸ்தலிக்க ஆளுநராகவும் (1883-1887) பின்னர் யாழ்ப்பாணம் மறைமாவட்டமாகத் தரம் உயர்த்தப்பட்ட பின்னர் யாழ் மறைமாவட்ட ஆயராகவும் (1887-1893) பணியாற்றிய அன்ரு மெலிசன் அ.ம.தி ஆண்டகை புனித மாட்டீனார் சிறிய குருமட சிற்றாலயத்திற்கான அடிக்கல்லை நட்டார்.

அதிபரும் கட்டடக் கலைஞருமாக விளங்கிய யே.பி மெறே அ.ம.தி அடிகளாரே சிற்றாலயத்தின் கட்டடப்பணிகளையும் குருமடத்தின் கட்டடப் பணிகளையும் நிர்வகித்து வந்தார். இன்று புனித மாட்டீனார் குருமடத்தில் கம்பீரமாக இருபுறமும் காட்சிதரும் அழகிய கட்டடம் யே.பி மெறே அ.ம.தி அடிகளாரின் மேற்பார்வையின் கீழ் 1889ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டது.

1907ஆம் ஆண்டு யூல்ஸ் கொலின்ஸ் அ.ம.தி அடிகளார் இலங்கை அமலமரித்தியாகிகளின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டபோது பெரிய குருமடமாணவர்களை கொழும்பு புனித பேணாட் குருமடத்திற்கு இடமாற்றம் செய்தபடியால் யாழ் புனித மாட்டினார் குருமடத்தில் சிறிய குருமட மாணவர்கள் மட்டுமே தங்கியிருந்து பயிற்சி பெறத்தொடங்கினர். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க புனித மாட்டீனார் குருமடக் கட்டடத்தின் ஒரு பகுதியில் புனித பத்திரிசியார் கல்லூரியின் கத்தோலிக்க மாணவர்கள் தங்க வைக்கப்பட்டனர். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் சாள்ஸ் எஸ்.மத்தியூஸ் அ.ம.தி அடிகளார் மாட்டீனார் குருமடத்தின் மேற்பார்வையாளராகவும் புனித பத்திரிசியார் கல்லூரியில் பணியாற்றிய குருக்களில் ஒருவர் அதன் அதிபராகவும் பணியாற்றினர்.

1919ஆம் ஆண்டு ஜே.ஏ.கியோமர் அ.ம.தி அடிகளார் புனித மாட்டீனார் குருமடத்தினதும் கத்தோலிக்க மாணவர்களின் விடுதியினதும் அதிபர் பணியை ஏற்றுக்கொண்ட போது குருமட மாணவர்களும் விடுதி மாணவர்களும் ஒரே நிர்வாகத்தின் கீழ் தங்கியிருப்பது நல்லதல்ல என்று கருதினார். 1924 ஆம் ஆண்டு ஜே.ஏ. கியோமர் அ.ம.தி அடிகளார் யாழ் மறைமாவட்டத்தின் 4ஆவது ஆயராக (1924 - 1950) நியமனம் பெற்றவுடன் அவர் செய்த முதல் வேலை குருமட மாணவர்களும் விடுதி மாணவர்களும் ஒரே நிர்வாகத்தில் தங்கியிருப்பது நல்லதல்ல என்ற தம் எண்ணத்துக்குச் செயல் வடிவம் கொடுத்து நிர்வாக அமைப்பை பிரித்து விட்டதாகும். குருமட மாணவர்களினதும் விடுதி மாணவர்களினதும் நிர்வாகம் பிரிக்கப்பட்டமையால் திரும்பவும் குருமட மாணவர்கள் தனியாக தமது எதிர்கால பணிகளுக்கு ஏற்ற பயிற்சிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

எஸ்.பீற்றர் அ.ம.தி அடிகளார் 1937 ஆம் ஆண்டு குருமடத்தின் அதிபர் பணியை ஏற்று சுதேச துறவறக் குருக்களில் முதல் அதிபராக பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார் என அன்ரன் மத்தாயஸ் அடிகளார் மாட்டீனார் குருமடத்தின் அதிபராக இருந்த காலத்தில் 1980 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மாட்டீனார் குருமடத்தின் நூற்றாண்டு விழா மலரில் எம்.ஜெறோ செல்வநாயகம் அடிகளார் எழுதிய ஆக்கத்தில் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி ஆண்டகை (1950-1972) யாழ் மறைமாவட்டத்தின் 5ஆவது ஆயராகவும் முதல் சுதேச ஆயராகவும் நியமனம் பெற்ற போது புனித மாட்டீனார் குருமடத்தில் விசேட கவனம் செலுத்தினார். குறிப்பாக தாம் ஆயரான போது மறைமாவட்டக் குருக்களை உருவாக்க வேண்டும் என்று தமக் குத் தரப்பட்ட பணியை முழுமையாக நிறைவேற்ற உறுதிபூண்டு கருமமாற்றினார். 1949ஆம் ஆண்டு புனித மாட்டீனார் விடுதி மூடப்பட்டு அங்கு தங்கியிருந்த கத்தோலிக்க மாணவர்கள் அனைவரும் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு இட மாற்றம் செய்யப்பட்டனர்.

சுதேச மறைமாவட்டக் குருக்களில் இருந்து நியமனம் பெற்ற முதல் அதிபராக ரி.ஏ.யே. மதுரநாயகம் அடிகளார் (1953-1956) ஆண்டு காலப்பகுதியில் புனித மாட்டீனார் குருமடத்தின் அதிபராகப் பணியாற்றினார். இவரைத் தொடர்ந்து பணியாற்றிய அதிபர்களை மட்டும் இங்கு நோக்குவோம். ரி.ஏ.யே.மதுரநாயகம் அடிகளாரைத் தொடர்ந்து பிலிப் பொன்னையா அடிகளார் (1956-1961) – எஸ். இ.என். குணசீலன் அடிகளார் (1961-1963) – ஜி.இ.மேரியோசவ் அடிகளார் (1963-1964) ஆகியோர் அதிபர்களாகப் பணியாற்றியுள்ளனர்.

அன்ரன் இராஜநாயகம் அடிகளார் 1964-1966 ஆம் ஆண்டுகள் காலப்பகுதியில் குருமடத்தின் அதிபர் பணியை ஏற்று குருமட உணவறைக் கட்டடத்தையும் அதன்மேல் அமைந்துள்ள நோயாளர் தங்கும் கட்டடத்தையும் அமைத்தார்.

இ.பஸ்தியாம்பிள்ளை அடிகளார் (1966-1970) ஆம் ஆண்டுகள் காலப்பகுதியில் புனித மாட்டீனார் குருமட சிற்றாலய உள் அமைப்பை இரண்டாம்வத்திக்கான் சங்கத்துக்கு ஏற்ப வழிபாட்டுக்கு தக்கவிதமாக மாற்றியமைத்தார். குருக்கள் மக்களைப் பார்த்து திருப்பலி ஒப்புக்கொடுக்கும் முறைக்கேற்ற விதமாக பீட அமைப்பு மாற்றியமைக்கப்பட்டது.

எப்.ஏ.இராஜரட்ணம் அடிகளார் 1970 ஆம் ஆண்டு, முதல் நான்கு மாதங்கள் அதிபர் பணியை ஆற்றியுள்ளார்.

பி.தியோகுப்பிள்ளை ஆண்டகை (1972-1992) யாழ் மறைமாவட்டத்தின் 6ஆவது ஆயராகவும் மறைமாவட்டக் குருக்களில் இருந்து முதலாவது ஆயராகவும் யாழ் மறைமாவட்டத்தை பொறுப்பேற்றபோது புனித மாட்டீனார் சிறிய குருமட மாணவர்களின் பயிற்சியில் விசேட கவனம் செலுத்தினார். ஏ.சேவியர் குருஸ் அடிகளார் (1970-1976) ஆறு ஆண்டுகள் அதிபராகப் பணியாற்றினார். இன்று யாழ் மன்னார் மறைமாவட்டங்களில் பணியாற்றும் அநேக குருக்கள் இவரின் வழிகாட்டலில் தமது ஆரம்ப குருத்துவப் பயிற்சியைப் பெற்றவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜி.இ.மேரியோசவ் அடிகளார் (1976-1979) தமது இரண்டாவது அதிபர் பணிக்காலத்தில் 1979ஆம் ஆண்டு பல்வேறுபட்ட பெரிய திருத்தப் பணிகளை மேற்கொண்டு பழுதடைந்த புனித மாட்டீனார் குருமடத்திற்கு புது மெருகூட்டினார். பழைய முருகைக்கல் கட்டடத்தை கொத்திப்பூசிப் பலப்படுத்தினார்.

அன்ரன் மத்தாயஸ் அடிகளார் (1979-1983) காலப்பகுதியில் பணியாற்றிய போது தியோகு புளொக் என்ற இரண்டு மாடிக் கட்டடம் கட்டியெழுப்பப்பட்டது. குருமட சிற்றாலயத்திற்கும் புதிய மெருகுடன் நவீன வடிவம் கொடுக்கப்பட்டது.

ஜி.விக்ரர் பிலேந்திரன் அடிகளாரின் (1983-1988) பணிக்காலத்தில் தேவரிக்குளம் பகுதியில் சேதமடைந்து விழுந்த மதில் திரும்பவும் கட்டி எழுப்பப்பட்டது.

இ.ஜே. அருமைநாயகம் அடிகளார் (1988-1992) குருமடத்தின் சுற்று மதில்களை கொத்திப் பூசிப் பலப்படுத்தினார். தொடர்ந்து ஜி.விக்ரர் பிலேந்திரன் அடிகளார், (1992) றெஜி இராஜேஸ்வரன் அடிகளார், (1992-1999) ஏ.லோறன்ஸ் அடிகளார், (2000-2004) ரீ.ஜே.கிருபாகரன் அடிகளார் (2004-2009) ஆகியோர் அதிபர்களாகப் பணியாற்றியுள்ளனர்.

சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் (2009 முதல் இன்று வரை) பழைமை வாய்ந்த உடுப்புக்கள் கழுவும் இடம் , குளிக்கும் இடம் என்பவற்றுக்குப் புது வடிவம் கொடுத்தார். 2009ஆம் ஆண்டு புனித மாட்டீனார் குருமடக் கட்டடத்தொகுதி குருமடத்தின் எதிர்கால வளம் கருதி கட்டி எழுப்பப்பட்டமை இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

ஆரம்ப காலம் முதல் யாழ் மறைமாவட்ட குருத்துவ உருவாக்கலின் தொட்டிலாக விளங்கிய புனித மாட்டீனார் குருமடம் 1981ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர் மன்னார் மறைமாவட்டக் குருமாணவர்களுக்குமான பயிற்சியை வழங்கியது. 1982ஆம் ஆண்டு மடுமாதா சிறிய குருமடம் மன்னார் மறைமாவட்டத்தில் நிறுவப்பட்டாலும், 1988ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம்வரை புனித மாட்டீனார் குருமடமே மன்னார் மறைமாவட்டக் குருமாணவர்களுக்குமான பயிற்சியை வழங்கியது. மடுமாதா சிறிய குருமடத்தின் முதல் அதிபராக ஏ.சேவியர் குருஸ் அடிகளார் பணியாற்றினார். 1988ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 மாணவர்களுடன் மடுமாதா சிறிய குருமடம் முழுமையாகச் செயற்படத் தொடங்கிய பின்னர் புனித மாட்டீனார் குருமடம் யாழ் மறைமாவட்டத்துக்கு மட்டும் உரிய சிறிய குருமடமானது.

யாழ் மறைமாவட்டத்தின் குருத்துவ உருவாக்கலில் மிக முக்கிய இடம் வகிக்கும் புனித மாட்டீனார் சிறிய குருமடம் தொடர்ந்தும் தனது பணிகளை காலத்துக்கு ஏற்ற விதமாக வழங்கித் தன் முழுமையான பங்களிப்பை செய்ய இறைவரம் வேண்டுவோம். இங்கு பயிற்சி பெற்று இன்று குருக்களாக யாழ் மன்னார் மறைமாவட்டங்களில் பணியாற்றும் குருக்களைப் பாராட்டி வாழ்த்துவோம். இன்று தேவ அழைத்தல்கள் ஓரளவு குறைந்து வரும்நிலையில் அறுவடையோ மிகுதிவேலையாள்களோ குறைவு. எனவே அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுவோம்.



Haier
Inspired Living

#1 MAJOR APPLIANCE BRAND IN THE WORLD Haier

உன்னதமான Haier வளிச்சீராக்கிகளுக்கு
2 வருட உத்தரவாதத்தை
இலவசமாக வழங்குவது அபான்ஸ் மாத்திரமே

Haier வளிச்சீராக்கிகளை இலங்கையில் விநியோகம் செய்யும் ஒரே முகவர் அபான்ஸ் மாத்திரமே

- வளிச்சீராக்கி உற்பத்தித் துறையில் 35 வருடங்களுக்கு மேற்பட்ட இணையற்ற நம்பிக்கை
- திருத்த சேவையும் பராமரிப்பும் சிறந்த பயிற்சி பெற்ற பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களால் வழங்கப்படும்
- முழுமையான அபான்ஸ் உத்தரவாதம்
- உன்னதமான Haier உதிரிப்பாகங்கள்

60% மின்சார சேமிப்பு



வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு

ஸ்ப்லிட் வளிச்சீராக்கி

| கொள்ளளவு | 9000BTU | 12000BTU | 18000BTU | 24000BTU |
|---|---|---|---|---|
| விலை | ரூ.69,900/- | ரூ.74,900/- | ரூ.94,900/- | ரூ.115,900/- |
| விசேட விலை | ரூ.60,900/- | ரூ.65,900/- | ரூ.84,900/- | ரூ.105,900/- |



வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு

இன்வேட்டர் தொழில்நுட்பத்துடன் கூடிய Haier வளிச்சீராக்கி

இன்வேட்டர் தொழில்நுட்பத்துடன் கூடிய Haier வளிச்சீராக்கியின் கொம்பரஸரானது குறைந்த வேகத்துடன் இயங்கக் கூடியது. சூழலுக்கு ஏற்ற வகையில கொம்பரஸரின் வேகத்தை மாற்றக் கூடியதால் மின்சாரத்தின் பாவனையளவு குறைவதுடன் சப்தமும் குறைவாகவே காணப்படும்.

| கொள்ளளவு | 9000BTU | 12000BTU | 18000BTU | 24000BTU |
|---|---|---|---|---|
| விலை | ரூ.96,900/- | ரூ.106,900/- | ரூ.146,900/- | ரூ.169,900/- |
| விசேட விலை | ரூ.86,900/- | ரூ.96,900/- | ரூ.136,900/- | ரூ.159,900/- |

* நிபந்தனைகளுக்குட்பட்டது. சாதாரண விலையில் கொள்வனவு செய்யும் போது மாத்திரமே இலவச பரிசுகள் வழங்கப்படும்.



வளிச்சீராக்கி ஒன்றை கொள்வனவு செய்யும் போது ரூ.17,900 பெறுமதியான மினி பார் ஒன்று முற்றிலும் இலவசம்



இரண்டு வளிச்சீராக்கிகளை கொள்வனவு செய்யும் போது ரூ.28,990 பெறுமதியான 24" LED தொலைக்காட்சி ஒன்று முற்றிலும் இலவசம்

Abans UNLIMITED

அநுராதபுரம்: 025-2226902, வவுனியா: 024-2226698, யாழ்ப்பாணம்: 021-2220009, கேகாலை: 035-2222081, தம்புள்ள: 066-2283350, குருணாகலை: 037-2234868, மாத்தளை: 066-2228833, திருகோணமலை: 026-2226371, அனுத்கம: 034-5271271, அம்பலங்கொடை: 091-2255980, கதுருவெல: 027-2226726, அவிசாவல: 036-2232343, எபிலிபிட்டிய: 047-2261811, அம்பலாந்தோட்டை: 047-2225112, சிலாபம்: 032-2224894, கண்டி: 081-2220550, கம்பளை: 081-2350304, பதுளை: 055-2225240, ஹொரண: 034-2265115, கடுவெல: 0112-548818, வத்தளை: 0112-945250, மீகமுவ: 031-2227599, கல்முனை: 067-2226637





# ஐந்து ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் தெரிவு

எல்லைய நிர்ணய ஆணைக்குழு, கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு மற்றும் தேசிய கொள்முதல் ஆணைக்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்கள், அரசமைப்பு சபையால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன்படி தெரிவுசெய்யப்பட்ட 5 சுயாதீன ஆணைக்குழுக் களுக்கான உறுப்பினர்களின் பெயர்கள் ஜனாதிபதியின் அனுமதியுடன் நியமனம் வழங்குவதற்காக, அனுப்பிவைக் கப்படவுள்ளதாக சபாநாயகர் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன. அரசமைப்புச் சபையின் நிறைவேற்று சபை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடியபோது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இருந்து விலகிய உறுப்பினருக்குப் பதிலாக வேறொருவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கும் ஜனாதிபதியின் அனுமதி பெறப்படவுள்ளது. (த-வ)












சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கூமாங்குளம் முதியோர் சங்கம் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் முதியோர் தினம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதியோர்களது கலை நிகழ்வுகளும் விளையாட்டுக்களும் இடம்பெற்றன. இதன்போது வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப்பொருள்கள் வழங்கப்பட்டதுடன் முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (ஜ-422)



வவுனியா பிரமண்டு மகா வித்தியாலயத்தில் விஜயதசமி தினத்தன்று ஏடு தொடக்கும் வைபவம் நடைபெற்றது. அதன்போது பாடசாலை அதிபர் சிறுவன் ஒருவருக்கு ஏடு தொடக்குகிறார். (ஜ-402)



போரின் போது முள்ளந்தண்டு பாதிப்புக்கு உள்ளாகி இடுப்புக்கு கீழ் உணர்வு இழந்த நிலையில் வாழும் இளைஞர் ஒருவருக்கு மூன்று லட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்பட்டது. பிரான்சில் உள்ள தமிழ்ச்சோலைப் பள்ளி நிர்வாகத்தினால் வழங்கப்பட்ட நிதியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்டச் செயலாளர் கோபால கிருஸ்ணன் குறித்த இளைஞரிடம் கையளித்தார். (ஜ)



மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயத்தில் உலக சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றது. விருந்தினராகக் கலந்து கொண்ட சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தனது செலவில் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார். (ஜ-9)



யாழ். மாநகர சபைப் பகுதியில் உலக கைகழுவுதல் தின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் பி.யசீதரன் தலைமையில் யாழ். நகரின் ரிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களுக்குக் கைகழுவுதல் தொடர்பான அறிவூட்டலும் மற்றும் பெற்றோர்களுக்கான அறிவுரையும் இடம்பெற்றன. நகர பொது சுகாதாரப் பரிசோதகர் ஆறுமுகதாசன் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டனர். (ற-17)



வவுனியா தெற்கு வலயத்துக்கு உட்பட்ட வவுனியா கற்பகபுரம் அ.த.க. பாடசாலையில் அமைக்கப்பட்ட திறந்தவெளி மேடையை வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், பாடசாலை அதிபர், அபிவிருத்திக் குழுச் செயலாளர், அங்கத்தவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து சிறப்பித்ததையும் காணலாம். (ஜ)



யாழ். கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் நினைவு நாளும் அண்மையில் நடைபெற்றன. பாடசாலையின் அதிபர் நடராஜா கந்தவனச்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக அருணாசலம் அரியதாஸ், கௌரவ விருந்தினர்களாக கனகசபை குகதாசன், திருமதி சிவக்கந்தகுமார் செல்வராணி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஜ)



தென்மராட்சி கல்வி வலயத்தின் எட்டாவது மாணவர் நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்வு உசன் இராமநாதன் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், வேள்ட் விசன் நிறுவன சாவகச்சேரி பிரதேச திட்ட முகாமையாளர் அ.கி. றொசைறோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஜ-9)



உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மட்டுவில் தெற்கு அ.மி. த.க. வித்தியாலய சமூகத்தினர் வித்தியாலய ஆசிரியர்களின் சேவைகளைப் பாராட்டி பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். (ஜ-9)



சுவிஸ்சர்லாந்தில் உள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் நிர்வாகத்தால் போரால் பாதிக்கப்பட்ட உடையார்கட்டைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக பசுமாடு ஒன்று வழங்கப்பட்டது. இதனை வலி.வடக்கு பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் ச.சஜீவன் பயனாளியிடம் கையளித்தார். (ஜ)





வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 23ஆவது கல்லூரி தினம் கல்லூரியின் பீடாதிபதி கு. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா கலந்து கொண்டார். கல்லூரி தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுக்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், சிறப்பு விருந்தினருக்கு சேவை பாராட்டி நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. மாணவ ஆசிரியர்களினால் 'வேரும் மலரும்' எனும் நாடகமும் மேடையேற்றப்பட்டது. (ஐ)





சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையமும், சிவன் முன்பள்ளியும் இணைந்து நடத்திய வாணிவிழா, சனசமூக நிலையத்தின் தலைவர் க.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் மயிலணை வித்தியாசாலையின் முன்னாள் அதிபர் சு.துரைசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)





வவுனியா கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலின் அனுசரணையுடன் இயங்கும் அருளகம் சிறுவர் இல்லம் மற்றும் சிவன் முதியோர் இல்லம் ஆகியவற்றின் சிறுவர் முதியோர் தின விழா எல்லப்பர் மருதங்குளத்தில் அமைந்துள்ள சிவன் முதியோர் இல்லத்தின் உள்ளக கலையரங்கில் இடம்பெற்றது. (ஐ)





நவராத்திரி விழாவை முன்னிட்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. (ஐ)





வட்டுக்கோட்டை கார்த்திகேசு வித்தியாலயத்தின் 120 ஆவது ஆண்டு பரிசளிப்பும், நிறுவுநர் நினைவு நாளும் பாடசாலையின் அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார். (ஐ)





சுன்னாகம் பகுதியில் வெள்ளைப்பிரம்பு விழிப்புணர்வுப் பேரணியொன்று நடைபெற்றது. சுன்னாகம் வலிதெற்கு கூட்டுறவுச் சங்க தலைமைக் கட்டடத்துக்கு முன்பாக மேற்படி வெள்ளைப் பிரம்பு விழிப்புணர்வுப் பேரணி ஆரம்பமாகி, சுன்னாகம் சபாபதிப் பிள்ளை ஒழுங்கையில் அமைந்துள்ள வாழ்வகத்துக்குச் சென்று நிறைவடைந்தது. (ஐ)



யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றம் இலங்கை வர்த்தக மன்றத்துடன் இணைந்து செயற்படுத்திவரும் இளம் முயற்சியாளர்களுக்கான சுழற்சி முறைக் கடன் உதவியை யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவர் கு.விக்னேஸ் வழங்கி வைத்தார். (ஐ)

# வரலாற்றிலேயே அதிக மாணவர்கள் இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்கு

## பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.8
வரலாற்றிலேயே ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு இந்த முறையே அதிக பரீட்சார்த்திகள் தோற்ற வுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.
இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் டப்ளியூ. எம்.ஜே.புஸ்பகுமார குறிப்பிட்டுள்ளதாவது:–
ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு இந்த முறை ஆறு லட்சத்து 64, 537 பேர் தோற்றவுள்ளதோடு, கடந்த வருடம் ஐந்து இலட்சத்து 70,409 பேரே சாதாரண தரப் பரீட்சைகளுக்கு தோற்றியிருந்தனர்.
இதன்படி கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ் வருடம் 87,128 பரீட்சார்த்திகள் அதிகளவில் தோற் றவுள்ளனர். இவர்களில் நான்கு இலட்சத்து 3,442 பேர் பாடசாலை விண்ணப்பதாரிகள். அத்துடன் இரண்டு லட்சத்து 60,895 பேர் தனியார் பரீட்சார்த்தி கள்.
கடந்த வருடம் பாடசாலை மூலமாக மூன்று லட்சத்து 70, 487 பேர் தோற்றியிருந்ததனர்.
இதேவேளை – இம்முறை 4,670 பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளதோடு கடந்த வருடம் 4,279 பரீட்சை மத்திய நிலையங்களே இயங்கியிருந்தாக பரீட்சைகள் ஆணையாளர் கூறியுள்ளார்.
இந்த வருட ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைகள் அடுத்த மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (த–வ)

# ஜனாதிபதியிடம் இடைக்கால அறிக்கை வழுங்கவுள்ளது ஆணைக்குழு

கொழும்பு, நவ.8
தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பில் எதிர்வரும் வாரத்தில் ஜனாதி பதியிடம் இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக பெரியளவிலான மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதி பதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளதாவது:–
ஆணைக்குழுவுக்கு இதுவரை 1100 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றில் 800 முறைப்பாடுகள் விசாரணைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
எது எவ்வாறு இருப்பினும் அவற்றில் 300 முறைப்பாடுகள் தமது உள்ளடக் கங்களுக்கு உட்பட்டவை அல்ல. தற் போது மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் படி இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.
முழுமையான அறிக்கையை ஒரு மாத காலப்பகுதிக்குள் சமர்பிக்க எதிர் பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள் ளார். (வ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஜூன் வரை ஒத்திவைக்க முடிவு

கொழும்பு, நவ.8
எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் வரை ஒத்திவைக்கப்பட கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.
உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் மூலம் சமர்பிக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக எழுந்துள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கிடைக்கும் வரை உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான திகதி குறிப்பிட முடியா துள்ளது.
எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் இது தொடர்பாக ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.
இதேவேளை எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தும் முறைமை தொடர்பாக பல்வேறு தரப்பினர் வேறுபட்ட கருத்துக்களை தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த–வ)


# மணலேற்றிய இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 8
அரியாலையில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து டிராக்டரில் ஏற்றிச் சென்ற இரண்டு பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொதுமக்கள் நடமாட்டம் குறைவாகவிருந்த நேற்று அதி காலை, அரியாலையைச் சேர்ந்த 2 பேர் காலை 6 மணியளவில் அவ்வாறு சட்டவிரோதமாக மணல் ஏற்றிக் கொண்டு சென்றுள்ளனர். அவர்களது செயற்பாடுபற்றிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸாரும் அதற்கேற்ற ஒழுங்கில் அங்கு சென்று அவர்களை மணலுடன் கைது செய்தனர். அவர்களிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண் டுள்ளனர். (த–4)

# சங்கானையில் கொள்ளை சந்தேகத்தில் மூவர் கைது

கொழும்பு, நவ.8
சங்கானை 7 ஆம் கட்டை முருகமூர்த்தி வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த சனிக் கிழமை அதிகாலை 1.30 மணியளவில் வீட்டின் கதவை உடைத்து உள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டிலிருந்த வயோதிபத் தம்பதிகளை ஆயுத முனை யில் அச்சுறுத்தி அங்கிருந்து 7 பவுண் தங்க நகைகளை யும், 10 ஆயிரம் ரூபா பணம் மற்றும் பொருள்கள் என் பவற்றை அபகரித்துள்ள னர்.
இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது. இதனையடுத்து இடம் பெற்ற விசாரணைகளில் சந் தேகத்தின் பேரில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் குறிப்பிட்டனர். (த–வ)

## சின்னத்துரை நல்லநாதன்
### (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிட மாகவும் உடுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை நல்லநாதன் நேற்று (07.11.2015) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் துரை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சுவாமிநாதன்-சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புச் சகோதரனும், செந்தில்நாதன் (ஆசிரியர் கிளி/செல்லியாதீவு அ.த.க. பாடசாலை) பகீரதி (ஆசிரியை கிளி/அக்கராயன் ம.வி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சியாமளா (ஆசிரியை யாழ். மத்தியக் கல்லூரி) சிவானந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் வலி.தெற்கு பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமனும், தவேந்திரன் (மாகாண சுகாதார பணிமனை) தவராசா (உரிமையாளர் தவம் ஸ்ரோர்ஸ்) காலஞ்சென்ற முருகையா ஆகியோரின் மைத்துனரும், சங்கவி, லக்சகன், நிஷாந், ஜனுஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.11.2015) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உடுவில் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
T.P: 077 666 0641

(65877) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா செல்லையா




பெரியபளை, பளையைப் பிறப்பிடமாகவும், இல,38/1 கணேசபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்லையா 07.11.2015 சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் சங்கரப்பிள்ளை(கனடா), காலஞ்சென்ற ஆறுமுகம்(பாலன்) மற்றும் சரஸ்வதி(கிளி) காலஞ் சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியபாமா, தற்பராதேவி, கோபால சிங்கம்(சிவகுமாரன் - ஓய்வு நிலை பணியாளர் - கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் யுகந்தினி(யுகா - கனடா), சிந்துஜா, அனுஸ்யா, பிரான்சில் வசிக்கும் யாழினி, நிசாந்தினி, துஷ்யந்தன், துஷ்யந்தினி மற்றும் இரஜீத்குமார்(கோபி - லண்டன்), சிவபிரியா(பாரதிபுரம்), பிரதீப்குமார்(ஆசிரியர் - கிளி/இந்துக்கல்லூரி), சுரேஸ்குமார், உஷாநந்தினி(பிரான்ஸ்), ரஞ்சித்குமார்(பொறியியலாளர் - கட்டார்), சிவரேவதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சிதம்பரப்பிள்ளை(நோர்வே), காலஞ் சென்ற சுப்பையா மற்றும் தனலட்சுமி(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2015) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
செ.கோபாலசிங்கம் (சி.கு) (மருமகன்)

## கதிர்காமு சந்திரசேகரம்

பிறப்பு: 28.02.1933 இறப்பு: 07.11.2015




கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாக வும் வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு சந்திரசேகரம் நேற்று (07.11.2015) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற செல்வ நாயகியின் அன்புக் கணவரும், துஷ்யந் தனின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மருதங்கேணி) பாசமிகு தந்தையும், புனிதா (ஆசிரியை கிளி/ உருத்திரபுரம், ம.வி) அவர்களின் அன்பு மாமனும், அப்சரா, அக்சயா ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பற்பை வளவு,
வதிரி, கரவெட்டி.

(சி/19871) (10.17)

தகவல்: குடும்பத்தினர்.
077 610 2752

## இராசதுரை ரகுநாதன்



நவாலியைப் பிறப்பிடமாக வும் சுதுமலையை வசிப்பிடமாக வும், தற்போது சுவிஸ்ஸை வசிப் பிடமாகவும் கொண்ட இராச துரை ரகுநாதன் 04.11.2015 புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர் களான இராசதுரை-புனிதவதி தம்பதியரின் அன்பு மகனும், சாந்தியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தில்லை நாதன்-புஸ்பவதி தம்பதியரின் அன்பு மருமகனும், கோடிஸ், யதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2015) திங்கட் கிழமை சுவிஸ் நேரம் 3.00 மணியளவில் சுவிஸ்ஸில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நவாலியூர் சந்திரன்
(மைத்துனர்)

0777 88 4150

(65878) (10.17)

## மணி செல்வராசா



பிறப்பு: 08.10.1931
இறப்பு : 07.11.2015

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை வதிவிடமாக வும் கொண்ட மணி செல்வராசா நேற்று (07.11.2015) சனிக்கிழமை காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்றவர் களான ஆறுமுகம்- பொன்னம்மா தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் சுப்பிரமணியம் சாந்தகுமாரன், சரஸ்வதி, தட்சணாமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், மங்களாதேவி, கலாஜோதி, காலஞ் சென்ற பொன்ராசா மற்றும் மாலினி ஆகியோரின் மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2015.11.08) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 57/18, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பேசி: 0775670041

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றிநவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 08 . 08 . 1947

மறைவு 09 . 10 . 2015

### அமரர் குமரேசு சிவசோதி

(அச்சுவேலி-யாழ்ப்பாணம் வழித்தட சிற்றூர்தி சாரதியும் கிருஷா சிற்றூர்தி உரிமையாளரும்-தட்டிவான் சோதி)

மேய்ப்பன் இன்றிய மந்தைகளானோம் எம் தந்தையே...!
சிந்தை கலங்கித்தவித்திடும் எம்மை இனி
சீர்ப்படுத்துவார் யார் அப்பா?

என்ன புண்ணியம் செய்தோம் இப்பூமியில் உன்னை
எமது தந்தையாகப்பெற...?
என்ன பாவம் செய்தோம் இப்பாரில் உங்களைப்
பறிகொடுத்துப் பரிதவிக்க...?

எங்கள் சுகம் கருதி நீங்கள் சுமைகளைத் தாங்கினீர்களே
இறுதிவரை ...! ஈற்றில் உங்களை எங்கள் தோளில்
சுமக்கவும் எடுத்தோம் உறுதியுரை...!
எம் கடன் அடைக்க அது போதாது என்றெண்ணித் தானோ
நெஞ்சில் சுமக்க வைத்துச் சென்றீர்கள்...?

அன்று பாண்டவர் தம் துயர்துடைக்கப் பாரதத்தில்
கிருஷ்ணன் சாரதியானான்...!
என்றும் உங்கள் கண்மணிகள் எமது துயர்துடைக்க
நீங்கள் சாரதியானீர்கள்...!
வாகனத்தை மட்டும் செலுத்திய சாரதியல்லவே நீங்கள்...!
எங்கள் வாழ்க்கையையும் செலுத்திய சாரதியல்லவா நீங்கள்...!

ஆன்மாவிற்கு அழிவில்லை என்பார் ஆன்றோர்
பரமாத்மாவின் படைப்பின் நியதிக்கு
நாம் மட்டும் விதிவிலக்கா...?
உங்களையும் அவரே தந்தார்....
இன்று அவரே எடுத்தும் கொண்டார்.

எதைக் கொண்டுவந்தாய்...? எதை இழந்தாய்...?
எதற்காக அழுகிறாய்...?
என்பார். எல்லாம் என் படைப்பின் நியதி என்பார்...!
அவர் விளையாட்டுக்கு அளவே இல்லை இவ் அகிலத்தில்...!
அவருக்குதான் தெரியும் ஆரம்பமும் அதன் முடிவும்...!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார்"
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், தொலைபேசி, முகப்புத்தகம் முதலான பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் பல வழிகளிலும் உதவி புரிந்த அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்....!

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (08.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மதியம் 12.00 மணியளவில் எமது இல்லத்திலும் இடம்பெறும். அனைத்து அன்புள்ளங்களையும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனநிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம். தயவு செய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

குருக்கள் ஒழுங்கை,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.
077 5180 271

## நூல் வெளியீட்டு விழா

சாவகச்சேரி, நவ.8

மட்டக்களப்பு மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் அனுசரணையுடன் கலாபூசணம் செ.எதிர்மன்னசிங்கம் எழுதிய 'சிறுவர் பாரம்பரிய விளையாட்டு' என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று பி.ப. 4 மணிக்கு மட்டக்களப்பு மாநகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மகுடம் கலை இலக்கிய வட்ட ஆலோசகர் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கல்வி அமைச்சின் ஓய்வுநிலை மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராசாவும், சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் மா.உதயகுமார், பேராசிரியர் செ.யோகராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை வட்டத்தின் துணைத் தலைவர் 'தேசபந்து' எம். செல்வராசா பெற்றுக் கொள்வார். நயப்புரையை கவிக்கோ வெல்லவூர் கோபால் நிகழ்த்துவார். (ம-9)


## லயன்ஸ் ஆளுநர் வருகை

யாழ்ப்பாணம்,நவ.8

யாழ்.லயன்ஸ் கழகத்திற்கு 306 பி1 மாவட்ட ஆளுநர் வருகை தரவுள்ள நிகழ்வானது இன்று மாலை 6.00 மணிக்கு யாழ்.லயன்ஸ் கழக தலைவர் சதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மாவட்ட தலைவர்களும்,ஏனைய கழக அங்கத்தவர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-ரி-6)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 06 . 1935

மறைவு 25 . 11 . 2008

### நாகமுத்து நாகலிங்கம்

நிஜமாக நீங்கள் மறைந்து
ஏழு ஆண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக்கடந்தாலும்-அப்பா
உங்களை எங்கள் உள்ளத்தில் வைத்து - பூஜிப்போம்

(65876)(10.17)

அராலிதெற்கு, காளிகோயிலடி. குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### இராமலிங்கம் பரராசசேகரம்

(தலைவர், வேலம்பராய் கண்ணகை அம்மன் கோயில்)

வேலம்பராய் மண் அதனில் முன்னை நாளில்
வேர்பதித்த கண்ணகி எம் தாயார் தம்மின்
ஆலயத்தின் அழிவதனைக் கண்டு கண்ணீர் சிந்தி
அதற்கு புத்துயிர் அளிக்க வேண்டி ஊரைக்கூட்டி
காலம் வீணாகாது அதனைக் கட்டித் தந்து
கருணை உள்ளம் கொண்ட பரராச சேகரனை
காலன் வந்தழைத்திட்ட சேதி கேட்டுக்
கலங்குகின்றோம் கலங்குகின்றோம் ஐயா நின்று.
கிராமத்தின் அபிவிருத்தி உத்தியோக பதவி ஏற்றாய்
கடமையினை எந்நாளும் நீ கருத்தில் கொண்டாய்
இரவுப் பகலாய் மக்களுக்காய் உழைத்தாய். ஊரார்
உனை மறக்க முடியாமலே நிலைத்தாய்
சராசரியாய் வாழாது உயர்ந்தாய், கைதடியின்
இராமலிங்கம் பெரியோன் புத்திரனாய் வந்தாய். இப்போது
இறைவன் தாள் சேர்ந்தாயே எம்மை அழ விட்டு

பரிபாலன சபையினர்
வேலம்பராய் கண்ணகை அம்மன்கோயில்

# போரின்போது தவறுகள் நடைபெறுவது வழமை

**திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு**

கொழும்பு, நவ 8

பழைய தவறுகளுக்குத் தண்டனை விதிப்பதால் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்று முன்னாள் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டில் போர் இடம்பெறும்போது அனைத்து விடயங்களும் சட்டத்திற்கு உட்பட்டு நடைபெறமாட்டாது என்றும், எமது நாட்டில் 30 ஆண்டுகள் போர் இடம்பெற்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத்தினருக்கோ, ஆட்சியாளர்களுக்கோ அல்லது போரில் ஈடுபட்டவர்களுக்கோ தண்டனை விதிப்பதால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களம், தமிழ் என மொழிகளால் வேறுபடுவதை விடுத்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

மீண்டும் இனங்களுக்கு இடையே குரோதம் ஏற்படாத வகையில் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பக்கூடிய சூழ்நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.(த–சி)

# இலவச மருத்துவ முகாம்

சாவகச்சேரி, நவ.8

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் உசன் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் மருத்துவ பரிசோதனை முகாமும் குருதிக் கொடை நிகழ்வும் இன்று உசன் இராமநாதன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மருத்துவ பரிசோதனை முகாமில் கண் இரத்த அழுக்கம் நீரழிவு, சித்த மருத்துவம், சிறுவர் கர்ப்பிணிகள் பராமரிப்பு உள்ளிட்ட பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன. அத்துடன் கழகத்தின் மரக்கன்று நாட்டும் நிகழ்வும் மரக்கன்று விநியோகமும் இடம்பெறும்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பு.தினேஸ்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் கிறிஸ்ரி நாணயக்காரவும், சிறப்பு விருந்தினராக லயன் பீற்றர் தேவா அகிலேஸ்வரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந–9)


## Vacancies

**motivation sri lanka**

FREEDOM THROUGH MOBILITY

மோட்டிவேஷன் ஸ்ரீ லங்கா ஐக்கிய இராச்சியத்தினை (uk) அடிப்படையாகக் கொண்ட வலுவிழப்பு தொடர்பான நிபுணத்துவம் கொண்ட சர்வதேச நிறுவனமாகும். எம்மைப்பற்றி மேலதிகமாகத் தெரிந்து கொள்ள **www.motivation.org.uk** என்ற எமது வலைத் தளத்தைப் பார்வையிடுங்கள். மூளை முடக்குவாதம் கொண்ட சிறுவர்களுக்கான 3 வருடத் திட்டமொன்றை மன்னார் மற்றும் முல்லைத்தீவில் அமுல்படுத்துவதற்காக அர்ப்பணிப்புள்ள, திறமை யான தனிநபர்களை எதிர்பார்க்கின்றோம். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியம்.

**1. விசேஷட கல்வி ஆசிரியர்**

விசேஷட கல்வி தொடர்பான கல்வித் தகைமையைக் கொண்டிருப்பதுடன் குறைந்தது 3 வருட தொழில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**2. அணுகும் வசதி உத்தியோகத்தர்**

விண்ணப்பதாரர் சிவில் பொறியியல் துறைசார் கல்வித் தகைமையைக் கொண்டிருப்பதுடன் குறைந்தது 3 வருட அனுபவம் உடையவராக இருப்பதுடன் அணுகும் வசதி மற்றும் அணுகும் வசதி தொடர்பான சட்டங்கள் தொடர்பான அறிவுடையவராயிருத்தல் வேண்டும்.

**3. மக்கள் தொடர்பு மற்றும் நிதிதிரட்டுனர்**

இத்துறைசார் முன் அனுபவமுடையவராயிருத்தல் அவசியம். அத்துடன் இத்துறைசார் முன்னைய செயற்பாடுகளை உறுதிப்படுத்தக் கூடியவராயிருத்தல்.

நீங்கள் இப் பதவிகளுக்குப் பொருத்தமானவராயிருப்பின் உங்களால் பூரணப்படுத்தப்பட்ட சுயவிவரக் கோவையை நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்பாக gamini@motivationlk.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(65791)(11,15,16)



## பணியாளர் தேவை

அர்ச்சனைச் சீட்டு விற்பனை பற்றுச் சீட்டுப் பதிவுகள் மேற் கொள்ளல், கணக்கேட்டில் தாக்கல் செய்தல் மற்றும் சமயா சமய நானாவித வேலைகளைத் தொண்டு அடிப்படையில் செய்து ஒத்துழைப்பு நல்கக் கூடிய பணியாளர் தேவை.

* விண்ணப்பதாரர் கோவிலுக்குக் கிட்டிய தூரத்தில் வதிபவராகவும், சைவ ஆசாரங்களைக் கடைப்பிடிப்பவராகவும், குடும்பப் பொறுப்புக்கள் குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
* ஓய்வூதியம் பெறும் திடகாத்திரமான நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
* தங்கள் விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கோவில் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்,**
**100, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

(65362)(11,15,16)



## பதவி வெற்றிடம்

**இலங்கையில் முன்னனி ஹோட்டல் மற்றும் குடியிருப்பு மனைத் திட்டங்களில் பணியாற்ற இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.**

- ஜிப்சம். அலுமினிய வேலைகளில் ஆர்வமுள்ள உற்சாகமான இளம் வேலையாள்கள் தேவை
- உட்கூரை. சுவர்கள். தரையமைப்பு ஆகியன நவீன தொழில்நுட்ப முறைக்கு அமைய பயிற்சிகள் அளிக்கப்படும்.
- பயிற்சிக் காலத்தில் உணவும் தங்குமிட வசதியும் வழங்கப்படும்.
- பயிற்சிக் கால முடிவில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு வேலையுடன் கூடிய கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
- அனுகூலங்களும் செயற்பாடு அடிப்படையிலான போனசும் வழங்கப்படும்.
- இத் துறை சார் முன் அனுபவம் அவசியமில்லை. 30 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: திரு. றொஷ் 0718100144 அல்லது hr@vke.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

**V.K. Enterprises [Pvt] Ltd,**
No. 86, K. Cyril C. Perera Mawatha, Colombo - 13



## THILEEP CIVIL CONSTRUCTION

**நவீன முறையில் வீடுகள், வர்த்தக நிலையங்கள் கட்டிக் கொடுக்கப்படும்.**

**றெறாசோ, கட் அன்ட் பினிஸ், ரைற்ரானியம் ஆகிய வேலைகள் சிறந்த முறையில் குறித்த காலத்தில் செய்து தரப்படும்.** (64473)(14.15.16)

**தொடர்பு: 077 707 8229, 076 704 0214**



## தனா பியூட்டி பஷன்



| | |
|---|---|
| மணப்பெண் அலங்காரம் | - 25.000 |
| எழுத்து பெண் அலங்காரம் | - 10.000 |
| பூப்புனித பெண் அலங்காரம் | - 15, 000 |
| பேசியல். தோல்வைத்தியம் | - 750 - 7500 வரை |
| கண்புருவம் சீர் செய்தல் | - 100 |
| ஐசிங் கேக் | - 1000 -12500 வரை |
| ரிச் கேக் | - 75 - 100 வரை |

பயிற்சி வகுப்பு ஒரு நாள் 200/-

சகல சேவைகளும் வீட்டுக்கு வந்தும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: கொழும்பு, யாழ்ப்பாணம்.
077 509 8103, 077 731 6453



**Family Rehabilitation Centre**

**Vacancy Advertisement** – Kilinochchi/ Pointpedro/ Colombo

**Project Coordinator** - Kilinochchi
Qualifications & responsibilities:
- A relevant degree/ equivalent qualification
- At least 05years experience in Gender/Health Project Coordination
- Good knowledge on report writing and presentation

Salary around: Rs 60,000/- per month

**Project Officer** - Colombo
Applicant must possess:
- A General Degree/Diploma or equivalent qualification
- At least 03 years experience in Gender/Health Project implementation
- Good knowledge on report writing and presentation

Salary around :Rs 30,000/- per month

**Psychosocial Workers** - Kilinochchi and Pointpedro
Applicants must possess:
- NISD Diploma in counselling or equivalent qualification.
- At least 03 years experience in counselling of Gender Based Violence clients

Salary around:Rs 30,000/- per month

**Field Officers** - Kilinochchi and Pointpedro
Applicants must possess:
- Minimum GCE A/L Education
- At least 03 years experience in Gender/Health project implementation

Salary around:Rs 23,000/- per month

**General requirements for all positions:**
- Computer knowledge and application
- Fluency in local languages and working knowledge in English

Please forward your CV with 02 non related referees within 07 days to: [illegible] or to the following address:

**FAMILY REHABILITATION CENTRE (FRC)**
No.395, Nagathampiran Lane, Ananthapuram, Kilinochchi.



உங்களுக்கு ஆஸ்திரேலியா /நியுஸிலாந்து / பிரித்தானியா / மலேசியா / சிங்கபூர் ஆகிய நாடுகளில் கற்கைநெறிகளை மேற்கொள்ள விரும்புகின்றீர்களா? இதோ அதற்கான சரியானதோர் சந்தர்ப்பம்.

**Edlocate & IIS** ஆலோசகர்களை **IIS City campus**'ல் சந்தித்து உங்களுக்கு தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்

**14** November'15 9 am - 4 pm IIS City Campus

**15** November'15 9 am - 4 pm IIS City Campus

முதுகலை (Post Graduate) மாணவர்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப்பரீட்சையை எதிர்நோக்கவிருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

To make firm appointments call Priyanthy on
**071 777 5222**

*Enrolments for **2016 intakes** are now open



**We offer**
- Assistance with scholarships for high achievers
- Assistance with IELTS
- All counselling (parents welcome) & services from application to visa free of charge

15 excellence
edlocate
Reach Light Beyond Borders
www.edlocate.lk

IIS CITY CAMPUS


**Jaffna:** IIS Study Abroad Centre No 200, Sivan Pannai Road, Jaffna | **T: 021 222 8060**

**Colombo:** 79/5, Horton Place, Colombo 7 | **T:** 077 177 0361

## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் அன்ரனி வாமதேவன்

(முன்னாள் உரிமையாளர் , வாமாஸ் யாழ்ப்பாணம்)




யாழ். கொக்குவில் மதுரவாசாவைப் பிறப்பிடமாகவும் , கொழும்பை வதிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் அன்ரனி வாமதேவன் 05.11.2015 வியாழக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான E.S.S அருணாசலம் -மதுரம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் மனுவல் கனகசுந்தரி எலிசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மகேஸ்வரி அருணாசலம் தம்பதிகளின் பாசமிகு பொறாமகனும் மரியா ஸ்டெல்லா (செல்வதி) அவர்களின் ஆருயிர்க் கணவரும் டேவிட் அமலன்,லொற்றரா, மைக்கல், அருணன் ஆகி யோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான மகாதேவன், சந்திரவதனா, சுந்தரகாந்தா,பாலசௌந்தரி மற்றும் விஜயலட்சுமி(பவா), பரிபூரணம்(ரஞ்சி), பாலசந்திரன், ரங்கநாயகி(கிச்சி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அதிஷ்சா, ஜோசப் சுரேந்திரன், ஜோஆன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் Hannah,Sarah ஆகி யோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (09.11.2015) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மதுரவாசா, 94, பொற்பதிவீதி
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (65864)(12.15.17)

தகவல்
அ. மகேஸ்வரி (சின்னம்மா)- 077 510 9423
அ. பாலச்சந்திரன்- 0016 478 53 2012
லோ.ரங்கநாயகி- (கிச்சி)- 001 905 250 9871



### இராமலிங்கம் பரராசசேகரம்

(யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி முன்னாள் பொறுப்பதிகாரி, பரம்பரைத் தலைவர்- வேலம்பராய் கண்ணகை அம்மன் கோவில் பரிபாலன சபை)

கைதடிமத்தி, நவனியாவத்தை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் பரராசசேகரம் 04.11.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் இராமலிங்கம் (முன்னாள் அதிபர்) - உருத்திரேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சமரசேகரம் மற்றும் சிவானந்தகுமாரி, ஜெயராசசேகரம், தனபாலசேகரம், தனரஞ்சித குமாரி(லண்டன்),ராஜசேகரம்(லண்டன்), புஸ்பராணி, சகிதேவி (லண்டன்), கௌரி(லண்டன்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரியான் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடிமத்தி,
நவனியாவத்தை. (65789) (14.15.16)

தகவல் :
குடும்பத்தினர்.

## பல் சமய நம்பிக்கை சார் சர்வதேச நினைவுகூரல் நாள் அனுஷ்டிப்புக்கான அழைப்பு

### "ஒப்புரவுக்கான நினைவுகூரல்"

*நவம்பர் 11, 2015 மாலை 3.30 மணிக்கு
*தென்னிந்தியத் திருச்சபை ஆதீனப் பேராலயம், வட்டுக்கோட்டை

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தில் இறந்துபோன அனைத்து மக்களின் உறவுகள் மற்றும் நண்பர்களை நினைத்து கவலையோடுஇருக்கின்ற அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

இந்து, முஸ்லிம் , பௌத்த மற்றும் கிறிஸ்தவ மார்க்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் தங்கள் சமூகத்தினரோடு வந்து இந்த அனுஷ்டிப்பில் கலந்து கொள்ள அழைக்கப்படுகின்றீர்கள்.

இந்த அழைப்பு தென்னிந்தியத் திருச்சபை யாழ்.பேராயத்தின்
பேராயர் அதி.வண.கலாநிதி டானியல் எஸ்.தியாகராஜா
மற்றும்
யாழ்ப்பாணக் கல்லூரியின் ஒப்புரவாக்கல் கல்விக்கான சிறப்பு மையத்தின்
தலைவர் வண.சஞ்சீவ வீரரட்ண
அவர்களாலும் விடுக்கப்படுகின்றது.

(c 19861) (14.15.16)

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்க:

| | | |
|---|---|---|
| வண. | அன்டனி சவரிமுத்து | 077 657 1679(In Sinhala) |
| வண. | சதீஸ் டானியல் | 077 352 0782(தமிழில்) |

# வைகோவின் தாயார் காலமானார்

கொழும்பு, நவ.8

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோவின் தாயார் மாரியம்மாள் உடல் நலக்குறைவு காரணமாக பாளையங் கோட்டையில் உள்ள மருத்துவமனையில் உயிரிழந்தார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவின் தாயார் மாரியம்மாள் (வயது 96). இவர் நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள கலிங்கப்பட்டியில் வசித்து வந்தார்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு இவருக்கு வயோதிபம் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டதால் தனியார் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் காலை 9.15 மணியளவில் மாரியம்மாள் சிகிச்சை பலனளிக்காமல் காலமானார்.

இலங்கைத்தமிழர் பிரச்சினையில் ஒருமுறையும், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மதன் பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்டபோதும் மாரியம்மாள் தன்னந்தனியாக உண்ணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தினார்.

சமீபத்தில் மதுவுக்கு எதிராக கலிங்கப்பட்டியில் நடந்த போராட்டத்தின்போதும் மாரியம்மாள் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த–வ)

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலராகவும் யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலராகவும் பணியாற்றிய காலத்தில் சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உறுதுணை யாகவிருந்த

**இ. பரராஜசேகரம்**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தியானது எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இவரது பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் (C 19859) (12.15.16)

## கண்ணீர் அஞ்சலி



எமது தொழிற்சங்கத்தின் ஸ்தாபக தலைவரும் ஓய்வுநிலை யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலருமான

**இ. பரராஜசேகரம்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கு கின்றோம்.

கிராம அபிவிருத்தி அலுவலர்கள்
தொழிற்சங்கம்,
வடமாகாணம்.

(C 19860) (12.15.16)

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு கணக்கியல் துறையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியலும் வர்த்தகமும் மற்றும் H.N.D.A துறையில் அனுபவமும் ஆர்வமும் உடைய இருபாலாரும் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு 17.11.2015 செவ்வாய்க்கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல.5080
மே/பா நியூ உதயன் பப்பிளிக்கேஷன்
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Sivo

யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக
213, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
077 044 4496, 021 221 2424

* 600 TVL SPY Camera (New nanny 170 degree wide angle)
* 1080P Wirelen Spy mini CC TV Camera விற்பனைக்கு உண்டு)





அத்துடன்
* Laptop & Desktop
* Alarming System,
* Digital Camera & Cam Corder

திருத்திக்கொடுக்கப்படும்.

Online Shop Aviable (100% உத்தரவாதத்துடன்)

* Pro fenional digital camera (அதி உயர் தொழில்நுட்பம் கூடிய digital camera)
* Girls Fashion
* Original Watchen (கைக்கடிகாரங்கள்)

தரமான பொருள்கள் 21 நாள்களில் பெற்றுத் தரப்படும். (65815)(11.15.16)



VACANCIES

SALES EXECUTIVE (Male & Female)

We are a company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as

SALES EXECUTIVE

Requirements:
* GCE (A/L) Qualified
* Below 35 years old (School leavers may apply for trainee position)
* Good communication skill in English & Tamil

Benifits
- An attractive salary
- Travelling allowances
- Commissions payments
- Telephone facilities
- Motorbike allowances
- Incentive & Overseas trips for target achievers
- Career development (Management position)

If you believe that you are the right candidate,
Please e-mail or contact immediately
Branch Manager: G. Anthany
Phone No: 077 356 6835, 021 567 1130



Pioneer House (PVT) Ltd.
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerthouse@gmail.com


# உட்கட்டுமான அபிவிருத்திக்கு முன்னுரிமை

யாழ்ப்பாணம், நவ.8

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தேசிய திட்டமிடல்திணைக்களம் – தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்கப் பணியகத்துடன் இணைந்த வகையில் உட்கட்டுமான அபிவிருத்தி – வாழ்வாதார அபிவிருத்திக்கு அடுத்துவரும் மூன்றாண்டுகளில் முன்னுரிமை கொடுக்கப்படவுள்ளது. 2016 இல் இருந்து மூன்று ஆண்டுகளுக்குள் அபிவிருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் மூன்றாண்டுகளில் செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டுக்கான விசேட பாதீட்டு மதிப்பீட்டில் சமர்ப்பிப்பதற்கு மாவட்ட செயலாளர் ஊடாகவிவரங்களைக் கோரியுள்ளது.

சகல திணைக்களங்களும் தமக்கு மூன்றாண்டுகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்களின் விவரங்களை அரச அதிபர் ஊடாகசமர்ப்பிக்கும் பட்சத்தில் இந்த அபிவிருத்திகளை தேசிய திட்டமிடல் திணைக்களம் முன்னெடுக்கவுள்ளது.

இந்தத் திட்டங்கள் யாவும் பின்தங்கிய பிரதேசங்களில் கிராம அபிவிருத்திகளை மையப் படுத்தியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற–50)

# மரம் கடத்திய மூவருக்கு விளக்கமறியல்

வவுனியா, நவ.8



வவுனியா – நொச்சிக்குளம் பகுதியில் மரக்கடத்தலில் ஈடுபட்ட பொலிஸார் இருவர் உட்பட மூவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் வவுனியா மாவட்ட நீதிவான்.

5 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகளை துண்டுகளாக்கி கடத்திச் செல்ல முற்பட்ட வேளையிலேயே குறித்த பொலிஸாரும் நபர் ஒருவருமாக மூவர் ஓமந்தை இறம்பைக்குளம் வனவள பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது வழக்கை விசாரணை செய்த வவுனியா மாவட்டநீதி மன்ற நீதிபதி மூவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டார்.

இவர்களிடம் இருந்து 5 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரைப் பலகைகள், இக்கடத்தலுக்குப் பயன்படுத்திய கப் ரக வாகனம், இரு மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை வனவள பாதுகாப்பு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

(ற–24-4)


யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்று நடைபெற்ற இளைஞர் நாடாளுமன்ற தேர்தலின் போது...

# இளைஞர் நாடாளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணத்தில் 10 பேர் தெரிவு

யாழப்பாணம், நவ.8

நாடு முழுவதும் நேற்று நடைபெற்ற மூன்றாவது இளைஞர் நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் யாழ்ப்பாணத்தில் 10 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

334 வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்கெடுப்பு நடைபெற்றது. நாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட இளைஞர் அமைப்புக்களைச் சேர்ந்த ஐந்து லட்சம் பேர் இந்த தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றனர்.

160 பேரைத் தெரிவு செய்வதற்கான இத்தேர்தலில் 65% வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர்.

இதில் வடக்கு மாகாணத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 10 உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டனர்.

இதன்படி தொகுதிகள் அடிப்படையில் யாழப்பாணம் - அனஸ்ரின் அஜித் டார்வின், நல்லூர்- கிருபானந்தன் நிசாந்தன், மானிப்பாய் -முரளிதரன் பிரசன்னா, வட்டுக்கோட்டை வாமதேவன் தயாளன், காங்கேசன்துறை - பூபாலு நிதர்சன், கோப்பாய்- சிவராசா சயூடன், உடுப்பிட்டி- உதயகுமார் வினோத், பருத்தித்துறை - சல்ரோன் ஜோன்ஸ் நெல்சன் றெஜினோல்ட், சாவகச்சேரி- கனலிங்கம் பிரதீபன் மற்றும் ஊர்காவற்றுறை - அல்போன்ஸ் தயறோஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் 13628 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். எனினும் 2349 பேரே வாக்களித்தனர். இதில் 14 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன என தேசிய இளைஞர் சேவைகள்மன்ற உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ)

# ஜனாதிபதியின் நியூயோர்க் பயணம்; செலவாக 90 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## நாடாளுமன்றம் அனுமதி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ. நா பொதுச்சபை கூட்டத்தொடரில் பங்கேற்றமைக்கான செலவாக 90 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று அரசு கோரிக்கை விடுத்தது.

இந்தக்கோரிக்கையை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அமைச்சர் கயந்த கருணாதிலக்க விடுத்தார்.

இதனைத்தவிர அரச நிறுவனங்களுக்கான வாகனக் கொள்வனவுக்காக 1.3பில்லியன் ரூபாவும் ஜனாதிபதி விசாரணைப்பிரிவுக்கு 18 மில்லியன் ரூபாவும் தேவை என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இவற்றுக்கு நாடாளுமன்றம் அனுமதியை வழங்கியது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வெளிநாட்டுப் பயணங்களின் போது ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் அளவை விட இந்தத் தொகை பல மடங்கு குறைவு எனப் பொருளியல் விமர் சகர்கள் தெரிவித்னர்.

## வடக்கு அமைச்சரவையு

வடக்கின் அபிவிருத்தி தொடர்பிலும், அரசியல் விவகாரங்கள் தொடர்பிலும் பேசப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## 11 ஆம் திகதி

முன்னெடுக்கப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டத்தின்போது வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய செயற்படவில்லை என்றும், தம்மை உடனடியாகப் பொதுமன்னிப்பில் விடுதலை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தே அவர்கள் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தை இன்று முதல் முன்னெடுக்கவுள்ளனர்.

இந்த நிலையில் தமது போராட்டத்துக்கு ஆதரவாகத் தமிழ் மக்களும் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள தமிழ் அரசியல் கைதிகள், இதற்காகத் தீபாவளிக்கு மறுநாள் 11 ஆம் திகதி வடக்கு மாகாணம் முழுவதிலும் கடையடைப்பு அனுஷ்டிக் கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத் துள்ளனர். இந்தக் கடையடைப்புக்கான அழைப் பை வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் விடுக்க வேண்டும் எனவும் தமிழ் அரசியல் கைதிகள் தமது உறவினர்கள் ஊடாகத் தெரிவித்துள்ளனர். (த-5)

## இலங்கையில்

யாவிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

சூடான நீர் மற்றும் வலுவான காற்று இணைந்து குறைந்தளவான தாழமுக்கம் அல்லது குறைந்தளவான புயலின் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே இலங்கை மற்றும் தென்கிழக்கு இந்தியாவில் வசிப்பவர்கள் புயல் அபாயத்தை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

அத்துடன் தென்கிழக்கு இந்தியா மற்றும் இலங்கையில் அதிக மழை வீழ்ச்சி இந்த வாரம் இருக்கும். குறிப்பாக நாளையும் நாளை மறுதினமும் அதிக மழைவீழ்ச்சி காணப்படும்.

மேலும் இலங்கையின் வடக்கு மாகாணத்திலும் சென்னையின் வடபகுதியிலும் இந்த வார முற்பகுதியில் வெள்ள அபாயம் உள்ளதால் மக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும் என வானியலாராய்ச்சியாளர் ரொப் ரிச்சர்ட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் சிதம்பரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் சராசரியாக 125 தொடக்கம் 250 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி காணப்படுமென் பதுடன் அதிகளவாக 300 மில்லிமீற்றராகும். என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ)

## 17 ஆம் திகதி

தொடர்பில் கட்சிகளின் யோசனைகளை முன்வைக்குமாறு கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## கூட்டு

எதிர்க்கட்சி என இதற்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மக்கள் நலன் பேணும் எதிர்க்கட்சியின் தலைமைப் பதவிக்கு தினேஸ் குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளதுடன், இதன் பிரதம அமைப்பாளராக டலஸ் அழகப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் அழைப்பாளராகப் பிரசன்ன ரணதுங்கவும், நிதி மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கு பொறுப்பாளராக மஹிந்தானந்த அளுத்கமகேயும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது நாடாளுமன்றில் இயங்கி வரும் எதிர்க்கட்சி, அரசினால் நியமிக்கப்பட்ட எதிர்க்கட் சியாகும் என புதிய எதிர்க்கட்சிகளின் கூட்டு குற்றம் சுமத்தியுள்ளது. பிரிட்டன் உள்ளிட்ட வெளிநாடுகளைப் போன்ற இலங்கையிலும் நிழல் அமைச்சரவை ஒன்றும் உருவாக்கப்பட உள்ளது.

ஒவ்வொரு அமைச்சில் இடம்பெற்றும் ஊழல் மோசடிகள் தவறுகளை சுட்டிக்காட்டவும் அதனை நடைமுறைப்படுத்தவும் நிழல் அமைச்சரவை உருவாக்கப்பட உள்ளது என கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (த-வ)

## வடக்கு முதலமைச்சர்

லளிக்கையில், ஐ.நா. சபை ஏமாற்றிவிட்டது என்ற சாரப்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருந்தார். குறிப்பாக ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.

இது தொடர்பில் ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் தனது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தியுள்ளது. வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானத்துக்குத் தனது விளக்கத்தை, ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் அனுப்பி வைத்துள்ளது. குறித்த விளக்கம், கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மாகாண சபையின் 37 ஆவது அமர்வில் வைத்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உண்மைக்குப் புறம்பானதாகவும் - தப்பபிப்பிராயத்தை தோற்றுவிப்பதாகவும் - திரிபுபடுத்தப்பட்டதாகவும் முதலமைச்சரின் குறித்த விளக்கம் அமைந்திருந்ததனால் அதற்கு விளக்கம் கொடுப்பதாக ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இணைந்த தேவை மதிப்பீட்டுச் செயற்திட்டம் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்பதாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் முதல் கட்ட ஆய்வுகள் - மீதான ஆய்வின் பிரதி முதலமைச்சருக்கு 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வழங்கப்பட்டது.

முதலமைச்சர், இணைந்த தேவை மதிப்பீட்டின் இயக்கக் குழுவில் இராணுவத்தினரின் தலையீடு இருந்தது எனத் தெரிவித்தது முற்றிலும் தவறாகும். மேலும், இணைந்த தேவை மதிப்பீடு தொடர்பில் மேற்கொள்ளப்படும் படிமுறைகள் மற்றும் அவற்றின் பெறுபேறுகளும் குறித்து விளக்கமளிக்க ஐ.நா., முதலமைச்சரிடமும் அவரது அமைச்சர்கள் குழுவிடமும் விடுத்த பல கோரிக்கைகளுக்கு இதுவரையில் வழங்கப்படவில்லை.

முதலமைச்சர் கூறியதைப் போல இணைந்த தேவை மதிப்பீட்டின் வெளிப்பாடுகளுக்கும் அதற்கான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான நிதியத்தின் மூலமான உத்தேச ஆதரவுக்கும் எதுவித நேரடித் தொடர்பும் இல்லை. மேலும் முதலமைச்சர் தெரிவித்த கருத்தின்படி மேலும் விரிவானதொரு பல்துறை சமூக - பொருளாதார மதிப்பீட்டை இணைந்த தேவை மதிப்பீடு தடுக்காது.

அடுத்து விசேட ஆலோசகர் நியமனம் தொடர்பில் சில விடயங்களை ஐ.நா. விளக்கியுள்ளது. குறித்த பதவிக்குரியவர் நியமனத்தில் ஐ.நா.வின் நியமம் விலக்களிக்க முடியாதது. தனித்து இயங்கும் அடிப்படையில் விசேட ஆலோசகராக ஏற்கனவே தேர்ந்து எடுக்கப்பட்ட ஒருவருக்கான நிதியுதவியை வழங்க முடியாது என்று ஐ.நா. முதலமைச்சருக்குப் பலமுறை அறிவித்துள்ளது.

ஆலோசகர் நியமனம் அரசியல் சார்ந்ததாக இருக்க முடியாது. மேலும் முதலமைச்சரால் ஊக்குவிக்கப்பட்ட குறிப்பிட்ட அபேட்சகர் தனது நியமனத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேலதிக ஆதரவை திரட்ட முயன்றிருக்கின்றார். இது ஐ.நா.வின் நியமனப் படிமுறைகளுக்கு ஏற்புடையதல்ல.

சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிதியம் தொடர்பில் முதலமைச்சருக்கும் அவரது அமைச்சரவைக்கும் விளக்கமளிப்பதற்காகக் கடந்த ஏப்ரல் மாதம், ஐ.நா.வின் சிரேஷ்ட அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போது சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தித் தருவதற்கு ஐ.நா. சம்மதித்திருந்தது. எனினும் இவ்விடயத்தைப் பின்பற்றுவதற்காக முதலமைச்சரின் காரியாலயத்துடன் ஐ.நா. பலமுறை முயற்சித்தபோதும் முதலமைச்சரால் அந்தக் கலந்துரையாடல் விடயம் உறுதிப்படுத்தப்படவில்லை - என்று குறித்த விளக்கத்தில் ஐ.நா. குறிப்பிட்டுள்ளது. (த-5-101)

## இருநாட்டு

சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தடுப்பில் உள்ள 119 இந்திய மீனவர்களில் 113 பேரை மட்டும் விடுவிப்பதற்கான அனுமதி நேற்று நீரியல் வளத் திணைக்கள பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட 78 மீனவர்களையும் விடுவிப்பதற்கான அனு மதி அளிக்கப்பட்டுள்ளபோதும். மன்னார் மாவட் டத்தில் கைதுசெய்யப்பட்ட 41 இந்திய மீனவர் களில் 35 பேரை விடுவிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு எஞ்சிய 6 மீனவர்களை விடுவிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்ட மீனவர்கள் தொடர்பில் கடற்படையினரின் படகைச் சேதப்படுத்தியதாகப் பிறிதொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமையே அவர்கள் விடுவிக்கப் படாமைக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. (த-4-101)

## மகிந்த

பேசவுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது:-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றபடுகொலைகளை விசாரணை செய்வதற்கு விசேட நீதிமன்றம் ஒன்றை அமைக்குமாறு, ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த சம்பவங்கள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் மிக தாமதமாக இடம்பெறுவதன் காரணமாகப் பிறிதொரு நீதிமன்றம் தாபிக்கப்படவேண்டுமென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


மகிந்த ராஜபக்ச ஆட்சியின்போது இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட தகவல்கள் மற்றும் சாட்சியங்கள் இருந்தும், இன்னும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருப்பதால் மக்கள் மத்தியில் புதிய அரசு தொடர்பில் வெறுப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பிரதமரிடம் குறிப்பிட்டுள்ளனர்.

இதனைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க ஜனாதிபதியுடன் பேசுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இடம்பெற்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், வர்த்தகர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்த ஆரம்ப விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. குறித்த விசாரணைகள் விரைவில் நிறைவடைந்து சட்டமா அதிபரிடம் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படவுள்ளன.

எனவே அவற்றுடன் இணைத்து அனைத்துப் படுகொலைகள் தொடர்பிலும் விசேட நீதிமன்றத்தை நிறுவுவது பொருத்தமானதாகும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார் எனக் கூறப் படுகின்றது. (த-வ)

# வெற்றியின் விளிம்பில் ஆஸ்திரேலியா
## இன்னிங்ஸ் தோல்வியில் இருந்து தப்பியது நியூசி.



ஆஸ்திரேலியா நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று வில்லியம்சனின் அபார சதத்தினால் நியூசிலாந்து பொலோ ஒன்னைத் தவிர்த்ததுடன் 317 ஓட்டங்களைப் பெற்றது. 239 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலியா நாள் முடிவில் 264-4 என்ற நிலையில் உள்ளது.

ஆஸ்திரேலியா நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் ஆஸியின் பிரிஸ்பெயின் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முன்னணி வீரர்களின் சிறப்பான துடுப்பாட்டத்தால் 556-4 என்ற நிலையில் இருந்தபொழுது ஆட்டத்தை இடைநிறுத்தினார் சிமித். அதிகபட்சமாக கவாயா 174 ஓட்டங்களையும், வோர்ணர் 163 ஓட்டங்களையும், வோக்ஸ் இறுதி வரை ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக சவுத்தி, நீஸ்கம், போல்ட், வில்லியம்சன் நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

மின்னல் வேகத்தில் வரும் ஆஸியின் வேகப்பந்துவீச்சுக்கு எதிரான சவாலுக்காக களமிறங்கினர் கப்ரில் மற்றும் லாதம். 56 ஓட்டங்களாக இருந்த வேளையில் ஆட்டமிழந்தார் கப்ரில். இணைந்தார் வில்லியம்சன். ஆஸியை வெற்றி பெறுவது கடினமாக இருந்தாலும் சமன் செய்யக்கூடிய வகையில் சென்று கொண்டிருந்தார்கள். 3 ஓட்டங்களால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் லாதம். றெய்லர், மக்கலம், நீஸ்கம் மூவரும் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழக்க, நியூசிலாந்து 157-5. இலங்கைக்கு சந்திமல், இந்தியாவுக்கு கோக்லி என்றால் நியூசிலாந்துக்கு வில்லியம்சன்தான். ஆஸியின் வீரர்கள் பழக்கப்பட்ட ஆடு களங்களில் ஆடியதைப்போல் சிறிதும் பதட்டமில்லாது ஆடினார். ஸ்ராக் வீசிய பவுன்சர் ஒன்றை தலைக்கு மேலாக பின்புறமாக பவுண்டரிக்கு அனுப்பினார். தொடர்ச்சியாக இரண்டு பந்துகள் அவ்வாறு வீசப்பட்டன அவற்றின் முடிவும் அவ்வாறே அமைந்தது. சதம் கடந்து தனியொரு மனிதனாக நின்று நியூசிலாந்தின் இன்னிங்ஸ்தோல்வியை தவிர்க்கச் செய்தார். ஆனால் இணைப்பாட்டத்துக்கு எவரும் உதவவில்லை 140 ஓட்டங்களுடன் வில்லியம்சன் ஆட்டமிழக்க நியூசிலாந்தின் இன்னிங்ஸ் 317 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஸ்ராக் 4 இலக்குகளையும், ஜோன்சன் 3 இலக்குகளையும், கசில்வூட், லையன், மார்ஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

239 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலியாவுக்கு மீண்டும் ஆரம்பம் கச்சிதமாக அமைந்தது. வெள்ளை உடையில் ரி-20 ஆட்டம் நடந்து கொண்டிருந்தது. சிக்சர்கள் பவுண்டரிகளாக நொறுக்கித் தள்ளினார் வோர்ணர். வோர்ணரின் பாணியில் தனது பங்கையும் ஆரம்பித்தார் பேர்ண்ஸ். ஆளுக்கொரு சதம் கடக்க இலக்குச் சரிவில்லாமல் 200 ஓட்டங்களை எட்டியது ஆஸி. 200 ஓட்டங்களைக் கடந்த சிறிது நேரத்தில் இருவரதும் இன்னிங்ஸிம் கிறைக்கால் முடிவுக்கு வந்தது. சிமித் வந்த வேகத்தில் ஆட்டமிழந்தார். நாள் முடிவில் ஆஸி. 264-4. (ம)

## விக்னேஸ்வரா அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், நவ. 8

புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் ஆனந்தாவிளையாட்டுக்கழகத்தின் புதிய மைதானத் திறப்பு விழாவை முன்னிட்டு நடத்தப் பட்டுவரும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் குறித்த மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்று சனிக் கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் கோம்பாவில் விக்கி னேஸ்வராஅணியைஎதிர்த்து மன்னா கண்டல் வளர்மதி அணி மோதிக் கொண்டது. இதில் கோம்பாவில் விக்கினேஸ்வரா அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

## ஆனந்தா வி. கழக தொடரின் அரையிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 8

புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம், ஆனந்தாவிளையாட்டுக்கழகத்தின் புதிய மைதா னத் திறப்பு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை நடைபெறவுள்ளன.

இதன்படி காலை 8மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் உடுப்புக்குளம் அலையோசை அணியை எதிர்த்து செல்வபுரம் சந்திரன் அணி மோதவுள்ளது. காலை 9 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் புதுகுடியிருப்பு சுப்பர்றாங் அணியை எதிர்த்து கோம்பாவில் விக்னேஸ்வரா அணி மோதவுள்ளது. (ம-23)

## முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடர்
## வடமராட்சியில் இருந்து மாகாணத்துக்கு தெரிவானோர்

கரணவாய், நவ. 8

முதலமைச்சர் கிண்ணத்துக்கான வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட கரம் தொடர்கள் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றன. குறித்த தொடரில் பங்குபற்றி மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு:

**ஆண்கள் பிரிவு**

6வயது ஆண்கள் பிரிவில் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில் இருந்து த.சாயிப்பிரியனும், உடுப்பிட்டி அ.மி. கல்லூரியில் இருந்து சி.அட்சயன் மற்றும் ஜெ-கோவக்சனும், மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் இருந்து த.பிரணவனும் வதிரி திரு இருதயக் கல்லூரியில் இருந்து மு.தினோஜ் ஜெறியும் தெரிவானார்கள்.

8 வயது ஆண்கள் பிரிவில் பி.பகலவன், யூ.பிருத்திகன் ஆகியோர் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இருந்தும், பா.ரஜீவன் துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் இருந்தும் ந.அபிநயன், த.தக்சயன் ஆகியோர் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியில் இருந்தும் தெரிவானார்கள்.

10 வயது ஆண்கள் பிரிவில் ஜெ.ஆற்றவன், சி.நிதுஸ், செ.அபிசேக், தி.சந்தோஸ் ஆகியோர் நெல்லியடி மெ.மி. த.க. பாடசாலையில் இருந்தும், கே.அபிமன்யு உடுப்பிட்டி அ.மி. கல்லூரியில் இருந்தும் தெரிவானார்கள்.

12வயது ஆண்கள் பிரிவில் சி.மதுராங்கன், வி.சாகித்தியன், ஜெ.விஸ்ணுராஜ், ரி.தேவசுதன், எம்.ரமணன் ஆகியோர் காட்லிக் கல்லூரியில் இருந்து தெரிவானார்கள்.

14 வயது ஆண்கள் பிரிவில் இ.தனுசன், ம.ருக்சன், க.கிருசிகன் ஆகிய மூவரும் காட்லிக் கல்லூரியில் இருந்தும், சு.சுமன், ப.சிவபாலசிறி ஆகிய இருவரும் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியில் இருந்தும் தெரிவானார்கள்.

16 வயது ஆண்கள் பிரிவில் இ.உதயதர்சன், பு.நிலக்சன், ரி,ச.கோபிதன், க.சஜாணன், ரி.அபினேஸ் ஆகிய ஐவரும் காட்லிக் கல்லூரியில் இருந்து தெரிவானார்கள்.

18 வயது ஆண்கள் பிரிவில் ரி.அஜித்ராஜ், ஆர்.லோஜிதன் ஆகிய இருவரும் காட்லிக் கல்லூரியில் இருந்து தெரிவானார்கள்.

18 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் எஸ். நிர்மலராஜன், க.மகிந்தனன், இ.மதுசன். கி.அனந்தசயன், சோ.சஞ்சயன் ஆகிய ஐவரும் காட்லிக் கல்லூரியில் இருந்து தெரிவானார்கள்.

**பெண்கள் பிரிவு**

6 வயது பெண்கள் பிரிவில் பி.திவ்ய பிரபா, பொ.சுமிட்சனா, அ.தர்சனா ஆகியோர் வட இந்துமகளிர் கல்லூரியில் இருந்தும், தி.அக்சரா நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில் இருந்தும், சு.அனுஸ்கா உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இருந்தும் தெரிவானார்கள்.

8 வயது பெண்கள் பிரிவில் பி.நதுசா உடுப்பிட்டி அ.மி. கல்லூரியில் இருந்தும். உ.கனிகா நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில் இருந்தும், ச.ஆரணி மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இருந்தும், செ.செந்துஜி உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இருந்தும், க.மகிழினி கரணவாய் மணியகாரன்தோட்டம் பாடசாலையில் இருந்தும் தெரிவானார்கள்.

10 வயது பெண்கள் பிரிவில் நி.சாகித்தியா, ஜெ.லவீனா ஆகியோர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இருந்தும், ந.நிவேதா தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இருந்தும் ப.ஆரணி நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில் இருந்தும், ர.சாணுகா மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் இருந்தும் தெரிவானார்கள்.

12 வயது பெண்கள் பிரிவில் பா.செம்பூவினி நெல்லியடி மத்திய கல்லூரியில் இருந்தும், உ.கம்சா வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இருந்தும் ஏ.சம்பிகா உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இருந்தும், மு.வைஸ்ணவி, ஜே.கானழகி ஆகிய இருவரும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இருந் தும் தெரிவானார்கள்.


14 வயது பெண்கள் பிரிவில் பீ.ஜோதினி, ஜெ.சர்மினி, க.விஸ்ணுஜி, இ.சாகித்தியா, பு.அர்ச்சயா ஆகிய ஐவரும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இருந்து தெரிவானார்கள்.

16வயது பெண்கள் பிரிவில் குமாதுங்கி, ஆ.ஆதித்தியா ஆகிய இருவரும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இருந்தும், கே.யதுசா, எஸ்.சுமிதா ஆகிய இருவரும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இருந்தும் எஸ்.நிரந்தரிகா, வல்வை மகளிர் கல்லூரியில் இருந்தும் தெரிவானார்கள்.

18 வயது பெண்கள் பிரிவில் ஆர்.திலேந்தினி, லோ.லாவண்யா, கு.மாதுமை, கே.நீர்த்திகா ஆகியோர் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் இருந்து தெரிவானார்கள்.

18 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் வே.நிதர்சனா, நி.மாதுளா, நா.சுபாங்கி ஆகியோர் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை யில் இருந்து தெரிவானார்கள். (ம-108)

## அண்டர்சன் முன்னேற்றம்



பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் சிறப்பாக செயற்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச டெஸ்ட் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார் இங்கிலாந்து அணி வீரர் அண்டர்சன்.

சமீபத்தில் பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்றது. பாகிஸ்தான் 2-0 எனத் தொடரைக் கைப்பற்றியது. சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான இந்த ஆடுகளங்களில் இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் தன்னுடைய திறமையால் 13 இலக்குகளைக் கைப்பற்றினார். இதன்மூலம் அவர் டெஸ்ட் தரவரிசையில் 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். ஸ்டெயின் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். (ம)

# சொந்த மண் வெற்றி பெருமிதம் தருகிறது கோக்லி



இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் கிடைத்த வெற்றி சொந்த மண்ணில் கிடைத்த வெற்றி என்ற வகையில் மிகவும் பெருமிதமாக உள்ளது என்று தெரிவித்துள்ளார் இந்திய அணித் தலைவர் கோக்லி.

டோனிக்குப் பிறகு இந்திய டெஸ்ட் அணிக்கு தலைவராக பொறுப்பேற்றுள்ள விராட் கோக்லிக்கு மொகாலி டெஸ்ட்தான் சொந்த நாட்டில் விளையாடிய முதல் டெஸ்ட். தன்னுடைய முதல் டெஸ்டிலேயே வெற்றி பெற்றது குறித்து விராட் கோக்லி தெரிவித்ததாவது:- 'தலைமைப் பொறுப்பில் சொந்த நாட்டில் பெற்ற முதல் வெற்றி எனக்கு மிகவும் சிறப்பு வாய்ந்த நிகழ்வாகும். இந்திய அணி இளம் வீரர்களை கொண்டது. நாங்கள் அணியாக ஒன்றிணைந்து சிறப்பாக செயற்பட்டோம். கடைசி ஒன்றரை மாதங்களுக்கு மேலாக நாங்கள் எப்படி விளையாடினோமோ, இதைத்தான் இங்கே வெளிப்படுத்தினோம். எங்கள் அணிக்கு சிறப்பான முடிவு கிடைத்துள்ளது. எங்களுக்கு ஆடுகளம் கடினமாக இருந்ததால், அவர்களுக்கும் ஆடுகளம் கடினமாகத்தான் இருக்கும் என்று நினைத்தோம். எமது பந்துவீச்சாளர்கள் கடினமான நெருக்கடியை எதிரணிக்கு ஏற்படுத்தினார்கள். இது பந்து வீச்சாளர்களுடைய விளையாட்டு. இந்த நிலையில் மனதளவில் வலிமை தேவை. விஜய் மற்றும் புஜாரா ஆகியோர் மிகவும் உறுதி வாய்ந்த வீரர்கள். ரஞ்சி கிண்ணத்தில் அதிக இலக்குகளை வீழ்த்தி அணிக்கு திரும்பி வந்து சிறப்பாக செயற்பட்ட ஜடேயாவால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார்.

(ம)

# இந்தியாவின் சுழலில் சுருண்டது தெ.ஆபிரிக்கா மூன்றே நாள்களில் முடிந்தது முதல் டெஸ்ட்




இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றைய தினத்தில், இரண்டாவது இன்னிங்ஸிற்காக இந்தியா 200 ஓட்டங்களைப் பெற்றது. 218 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 109 ஓட்டங்களில் சுருண்டு 108 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

மொகாலி ஆடுகளம் இலகுவில் உடையும் தன்மையுடையது. இதனால் முழுவதும் பந்துவீச்சுக்கு சாதகமாக இருக்கும். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார் இந்திய அணித்தலைவர் கோக்லி. 201 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது இந்தியாவின் இன்னிங்ஸ். அதிகபட்சமாக முரளி விஜய் 75 ஓட்டங்களையும், ஜடேயா 38 ஓட்டங்களையும் புஜாரா 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக எல்கர் 4 இலக்குகளையும் தகீர், பிளன்டர் இருவரும் தலா 2 இலக்குகளையும் கார்மர், ரபடா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இலகுவில் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்காவை இந்தியாவின் சுழல் பந்துவீச்சு திக்குமுக்காட வைத்தது. தென்னாபிரிக்காவின் இன்னிங்ஸ் 184 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பாக அஸ்வின் 5 இலக்குகளையும் ஜடேயா 3 இலக்குகளையும் மிஸ்ரா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸிலும் இந்தியாவின் தொடக்கம் சிறப்பாக அமையவில்லை. 95-2 என்ற நிலையில் இருந்து மூன்றாம் நாளுக்காக களமிறங்கினார்கள் புஜாரா, கோக்லி. ஆடுகளம் மேலும் உடைந்து பந்தை அறம்புறமாக திருப்பிக் கொண்டிருந்தது. இருவரதும் நிதானம் நீண்ட நேரம் எடுபடவில்லை. 77 ஓட்டங்களுடன் புஜாராவும் 29 ஓட்டங்களுடன் கோக்லியும் ஆட்டமிழக்க பின்வரிசை வீரர்கள் எவரும் ஒற்றையிலக்கத்தை தாண்டவில்லை. 200 ஓட்டங்களுடன் இந்தியாவின் இரண்டாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை இந்தியாவுக்கு கைகொடுக்க இலக்காக 218 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. தூசுக்களால் நிரம்பிய இந்தத் தன்மையுடைய ஆடுகளங்களை ஓரளவேனும் சமாளிக்க வேண்டுமாயின் பந்தை எழும்பவிட்டு சிறிது பின்னோக்கி வந்து ஆடவேண்டும். இந்தச் சவாலை சமாளிக்க முடியாமல் தோற்றுப் போனார் பிளன்டர். பிளஸிஸ், அம்லா, வில்லியர்ஸ், விலாஸ், கார்மர் என அத்தனைபேரும் ஒற்றையிலக்கத்துடன் அதே தவறை திரும்பத் திரும்பச் செய்தனர். ஏனெனில் தென்னாபிரிக்காவில் இத்தகைய ஆடுகளம் ஒன்றுகூட இல்லை. சிறிது போராட்டம் காட்டினார் ஸ்ரியான். இருப்பினும் அஸ்வின் பந்தை அடித்து விளையாட முற்பட்டமை அவர் விட்ட தவறு. முடிவில் 109 ஓட்டங்களில் சுருண்டது தென்னாபிரிக்கா. துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என சகலதுறைகளிலும் சிறப் பாகச் செயற்பட்ட ஜடேயா ஆட்ட நாயகனானார்.

(ம)

# ரகிமின் சதத்தின் உதவியுடன் பங்களாதேஷ் அசத்தல் வெற்றி



சிம்பாப்வே - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 145 ஓட்டங்களால் வெற்றிபெற்று 3 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய பங்களாதேஸின் ஆரம்ப வீரர்களாக இக்பாலுடன் டாஸ். டக்குடன் வெளியேறினார் டாஸ். மகமதுல்லாவை போல்ட் ஆக்கினார் பனியங்கரா. இக்பாலுடன் ரகிம் இணைய மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 100 ஓட்டங்களை எட்டியது பங்களாதேஷ். 10 ஓட்டங்களால் அரைச் சதத்தை தவறவிட்டார் இக்பால். தனித்து நின்று வித்தை காட்டினார் ரகிம். ரகுமான் ரகிமுடன் இணைந்து இணைப்பாட்டத்தை வலுப்படுத்த சிம்பாப்வேயின் பிடியில் இருந்து படிப்படியாக விலகியது பங்களாதேஷ். தொடர்ந்தும் நிலைத்து நின்று சதம் விளாசினார் ரகிம். பின்வரிசை வீரர்கள் கிடைத்த சிறிய வாய்ப்புக்களையும் சிக்சர்கள், பவுண்டரிகள் என கச்சிதமாகப் பயன்படுத்த முடிவில் பங்களாதேஷ் 273-9.

அதிகபட்சமாக ரகிம் 107 ஓட்டங்களையும் ரகுமான் 57 ஓட்டங்களையும் இக்பால் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பாக ரசா, முசரபானி இருவரும் தலா இரு இலக்குகளையும் பனியங்காரா, ஜோங்வி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

எட்டக்கூடிய இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வேக்கு அடித்தளம் சிறப்பாக அமையவில்லை. பதின்மத்தை எட்டவில்லை சிப்கபா. ஒருமுனையில் ஜோங்வி நிலைத்துநிற்க எர்வின், வில்லியம்ஸ் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். தற்பொழுது சிம்பாப்வே 65-4. தலைமை இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாட வந்த சிக்கும்புரா அணியை வெற்றியை நோக்கித் திருப்புவதில் முனைப்புக்காட்டினார். ஜொங்வி, சிக்கும்புரா இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டதுதான் தாமதம் பின் வரிசையில் அனைவரும் அணியைக் கைவிட முடிவில் சிம்பாப்வே 128 ஓட்டங்களில் சுருண்டு 145 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. அதிகபட்சமாக சிக்கும்புரா 41 ஓட்டங்களையும் ஜோங்வி 39 ஓட்டங்களையும் கிரீமர் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக சக்ப் அல் கசன் 5 இலக்குகளையும் மோர்தசா 2 இலக்குகளையும் அல் அமின் கொசைன், நசீர் கொசைன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ரகிம் ஆட்டநாயகனானார்.

(ம)

# மரண அறிவித்தல்

பிறப்பு
11
.
02
.
1943



இறப்பு
06
.
11
.
2015

## சுப்பிரமணியம் தேவராசா

யாழ்ப்பாணம். கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் 8 ஆம் வட்டாரம். மண்டைதீவை சொந்த இடமாகவும் தற்பொழுது புத்தூர் வாதரவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தேவராசா 06.11.2015 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்ற சிற்றம்பலம் மற்றும் சின்னம்மா தம்பதியரின் மருமகனும். காலஞ்சென்ற சிவதேவியின் அன்புக் கணவரும். தேவமேனன் (டென்மார்க்). கிருஷ்ணமாலா (சுவிஸ்). கிருஷ்ணவாணி (வாதரவத்தை).தேவசீலன் (சுவிஸ்). தேவபாலன் (கனடா).தேவகபிலன் (லண்டன்). கிருஷ்ணப்பிரியா (சாந்தசோலை.வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும். அனற்றா (டென்மார்க்).காலஞ்சென்ற சிவலிங்கம் (சுவிஸ்) மற்றும் சபாநாதன் (முகாமைத்துவ உதவியாளர்.வலிகாமம் தெற்கு பிரதேசசபை.சுன்னாகம்). தனரூபி (சுவிஸ்). சிந்துஜா (கனடா). கௌதமி (உரும்பிராய்). சசிகரன் (சாந்தசோலை. வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனும். கபிலா. டானியல். ஜெசிக்கா,தனுராஜ்,காபிஸ்ராஜ். பிருந்தாவன்.லுஹானா.சோபிதன். ஷகானா.தர்சனா. தர்வின். தேனுசன்.தேஸ்வின்.திவியன்.ஜெஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2015) திங்கட்கிழமை அவரது வசிப்பிடமான வாதரவத்தையில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக மண்டைத்வு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிருஷ்ணவாணி - மகள் 077 935 5671
தேவசீலன் - மகன் 0041 7663 16341
சபாநாதன் - மருமகன் 077 066 8312

தகவல்:
குடும்பத்தினர்.

ZOA
RELIEF | HOPE | RECOVERY

ZOA is a field-based rehabilitation organisation supporting people affected by conflict or natural disaster in Sri Lanka since 1995.

பாடசாலை மாணவர்களுக்கான மேசை மற்றும் கதிரைகளுக்கான கூறுவிலை கோரல்
(SEALED QUOTATIONS)

| No | Items with description | Quantity |
|---|---|---|
| 1 | Students Steel Desk Table – Type – I | 75 |
| 2 | Students Steel Desk Table – Type – II | 75 |
| 3 | Students Steel Chair – Type – I | 75 |
| 4 | Students Steel Chair – Type – II | 75 |

பொருள்களின் பரிமாணம் மற்றும் மேலதிக விவரங்களுக்கு 0773 647133 அல்லது nelson@zoasrilanka.org மூலம் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் மூடிய கூறுவிலையை (SEALED QUOTATIONS) பின்வரும் முகவரிக்கு 14/11/2015 மாலை 5.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்

நிர்வாக இணைப்பாளர்
ZOA 471, திருநகர்
கிளிநொச்சி.




சச்சின் பிளாஸ்டர்ஸ், வோர்னே வாரியர்ஸ் அணிகளின் அறிவிப்பைத் தொடர்ந்து சச்சின் வாரியர்ஸ் அணியின் தலைவர் சச்சின் ரசிகர்களுடன் எடுத்துக்கொண்ட செல்பி. (ம)


LONDON METROPOLITAN COLLEGE
புதிய பிரிவுகள் ஆரம்பம்

IELTS
Duration : 60 hours (Week | Weekends)
* Student Visa / * Skill Migration

IELTS
LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week | Weekends)
UKBAஇன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது


APPLIED SPOKEN ENGLISH
(With Grammar)
Duration : 48 hours (Week | Weekends)

COMPUTER COURSES
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net,C#
- Internet | Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing

No.136, Palali Road, Parameswara Junction, Jaffna
Tel : 021 7538395 Mobile: 0774765990 | 071 4541099


# பெடரர் அதிர்ச்சித் தோல்வி

பரிஸில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இஸ்னரிடம் வீழ்ந்து காலிறுதிக்கு தகுதி பெறாமல் வெளியேறியுள்ளார் பெடரர்.



காலிறுதிக்கு தகுதிபெறும் ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், அமெரிக்காவின் ஜோன் இஸ்னரை எதிர்கொண்டார். இதில் பெடரர் எளிதில் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இஸ்னெர் அவருக்கு அதிர்ச்சித் தோல்வியளித்தார். முதல் செற்றில் பெடரருக்கு இஸ்னெர் கடும் சவால் விடுத்தார். இதனால் இருவரும் மாறிமாறி புள்ளிகள் பெற்றனர். ஆகவே, இது இழுபறியாக நீடித்தது. இறுதியில் இஸ்னெர் 7-6 என்ற கணக்கில் கைப்பற்றினார். ஆனால், இரண்டாவது செற்றை பெடரர் சிறப்பாக விளையாடி 6-3 என்ற கணக்கில் கைப்பற்றினார். வெற்றியை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் இருவரும் ஆக்ரோசமாக விளையாடினார்கள். இறுதியில் இஸ்னெர் 7-6 என்ற கணக்கில் பெடரரை வீழ்த்தி வெற்றிபெற்றார். (ம)


காணி விற்பனைக்கு
மருதனார்மடப் பகுதியில் "4" பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
(65656) (13.15.16) தொ.பே. 077 328 8795



தேவை
யாழ்.நகர் மத்தியில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு H.N.D.A தகைமையுடையவர்கள் தேவைப்படுகின்றனர். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: 076 791 1219



DMI COMPUTER EDUCATION
Diploma in Auto CAD
2D & 3DModeling
புதிய பிரிவுகள் ஆரம்பம்- சனி, ஞாயிறு 9.30
DMI COMPUTER EDUCATION
113, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். Tel:. 021 222 4403
129/2, M. M. V. வீதி, நெல்லியடி. Tel:. 021 226 2470



முகாமையாளர் தேவை

உதயன் பத்திரிகை நிறுவனத்தின் கிளிநொச்சியில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு முகாமையாளர் தேவை

- கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த துடிப்புடன் செயலாற்றக்கூடிய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தங்குமிட வசதியும் உண்டு.
- ஆங்கிலம், சிங்களம் பேச, எழுதத் தெரிந்திருத்தல் நன்று.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
விள. இல 2334 C/O உதயன்
நியூ உதயன் பப்ளிகேசன்ஸ்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
jaffnavacancy@gmail.com



நீங்களும் இரண்டு வருடத்தில் முகாமைத்துவ கணக்காளராகுவதுடன் மாதாந்தம் 150000/= மேல் சம்பாதியுங்கள்
CMA
தமிழ் / ஆங்கில மொழி மூலம்
மாதாந்தக் கட்டணம் : 3000/= மட்டுமே
MBA
CMA
A/L
விண்ணப்பத்திற்கும், பதிவுகளுக்கும்
077-3830671
இலங்கை உறுதிப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம்
29/24, Visakha Rd, Colombo-04.
Accredited Centre & Implement Partnar
BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachcharinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4949590


## காயத்தால் வூட் வெளியே



இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான வூட், காயம்காரணமாக பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

இந்த இரண்டு அணிகளுக்குமான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. இந்நிலையில் நான்கு ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் புதன்கிழமை தொடங்குகிறது. இதற்காக இங்கிலாந்து அணியில் இருந்து வூட் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக பிளங்கெட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம)


மங்களா காட்சியறை
2 நாள்கள் மட்டும்
தீபாவளி மலிவு விற்பனை
Mangala
தளபாடங்களுக்கு
Lether Soba 45000 31900
LCD TV Stand 14500 9200
முதிரை கட்டில் 11900 6900
Dresing Table m = 9000 6900, L = 12500 9900, XL 15000 10990
Steel Cupboard 6x3 = 14500 8900, 6x4 = 16800 9900, 6x5 = 19500 14900
Computer Table M = 4200 3200, L = 5500 3500
Iron Board 1500 1000
Kitchen Rack 2500 1900, 2000 1500
536, K.K.S. வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 8367, 0777 286 0 69


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 8.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பிதழ் 08.11.2015

# அமைச்சர்களுக்கு எதிராகப் போர்க்கொடி

## வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தூக்குகின்றனர்



# அமைச்சர்களுக்கு எதிராகப் போர்க்கொடி

## வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தூக்குகின்றனர்

பிரேம்

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களுக்கு எதிராக ஆளும் கட்சி உறுப்பினர்கள் மத்தியிலேயே கடும் எதிர்ப்புக் கிளம்பி உள்ளது. தனியாகக் கூட்டம்போட்டு, அமைச்சர்களை மாற்ற வேண்டும் என்று விவாதிக்கும் அள வுக்கு இந்த விரிசல் முற்றிப்போயுள்ளது.

வடக்கு மாகாண சபையின் கூட்டத்தொடர் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. விவாதங்களின்போது, முதலமைச்சர் அணிக்கும் எதிர் அணிக்கும் இடையிலான ஊடலை, மோதலை, உரசலை அன்றும் தாராளமாக உணர முடிந்தது. அவையெல்லாம் முடிந்த கையோடு உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லோரும் ஒன்றாக ஓய்வறையில் அமர்ந்திருந்து தேநீர் சிற்றுண்டி அருந்தினார்கள். ஒருவரோடு ஒருவர் அளவளாவிக் கொண்டார்கள்.

எல்லாம் முடிந்த கையோடு உறுப்பினர்கள் கூட்டமும் அந்த அறையிலேயே நடந்தது. உறுப்பினர் அ.பரஞ்சோதி கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஆளும் கட்சியைச் சேர்ந்த கஜதீபன் தவிர ஏனைய உறுப்பினர்கள் 20 பேர் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். புதிதாகத் திருமணமானவரான கஜதீபன், மதிய போசன நேரத்துடனேயே வெளியேறி இருந்தார் என்பதால் அவரால் கூட்டத்தில் பங்கேற்க முடிந்திருக்கவில்லை. அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம், இ.ஆர்னோல்ட் ஆகியோர் சபை அமர்வுக்கே வருகை தரவில்லை என்பதால் இந்தக் கூட்டத்திற்கும் அவர்களின் வருகை பதிவு செய்யப்படவில்லை.

மாலை 4.20 மணியளவில் உறுப்பினர்கள் கூட்டம் ஆரம்பமானது. அமைச்சர்கள் ஐங்கரநேசனும் குருகுலராசாவும், மலர்க் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதற்காக நல்லூரில் உள்ள கிட்டுப் பூங்காவுக்கு விரைந்துவிட்டனர். அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அவரது அறையில் இருந்தார். உள்ளே தங்களுக்கு எதிராகவும் கலந்துரையாடுகிறார்கள் என்பது தெரியாமலேயே அமைச்சர் ப.சத்தியலிங்கமும் பா.டெனிஸ்வரனும் கட்டடத்துக்கு வெளியே வாகனத் தரிப்பிடத்தில் நின்று அளவளாவிக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே கூட்டத்திற்குத் தலைமை தாங்குவது யார் என்ற கேள்வி எழுந்தது. கூட்டத்தை ஏற்பாடு செய்த உறுப்பினர் பரஞ்சோதியே தலைமை தாங்கலாம் என்றார்கள். ஆனால் அவர் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. பின்னர் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. குறிப்பு எடுக்கும் பொறுப்பு சபையின் ஆளுங்கட்சி முஸ்லிம் உறுப்பினரான ஐ.அஸ்மினிடம் ஒப்படைக்கப்பட்டது.

### அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள்

அமைச்சர்களுக்கு எதிராக உறுப்பினர்கள் ஒவ்வொரு வரும் குற்றச்சாட்டுக்களை அடுக்கினர்.

வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டபோது ஒவ்வொரு அமைச்சின் கீழ் வரும் ஒவ்வொரு துறைகளுக்கும் மக்கள் இணைப்பாளர்களாக உறுப்பினர்கள் ஒவ்வொருவர் நியமிக்கப்பட்டனர். இதன் ஊடாக அமைச்சர் என்று ஒருவர் இருந்தாலும் அமைச்சுப் பணிகளில் எல்லா உறுப்பினர்களின் பங்களிப்பும் பெறப்பட்டு பொறுப்புகள் பகிரப்படுகின்றன அதிகாரப் பகிர்வு செய்யப்படுகிறது என்கிற தோற்றப்பாடு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டது.

ஆனால், எந்தவொரு அமைச்சரும் இன்று வரையில் தமது அமைச்சுகளுக்குக் கீழ் வரும் துறைகளுக்குப் பொறுப்பான உறுப்பினருடன் அது பற்றிக் கலந்துரையாடவோ பொறுப்புக்கள் எதனையும் ஒப்படைக்கவோ இல்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

குறைந்தபட்சம் ,அந்தந்தத் துறை சார்ந்த முடிவுகளை எடுக்கும்போதுகூட ஒதுக்கப்பட்ட உறுப்பினருடன் கலந்துரையாடுவதோ ஆலோசனை கேட்பதோகூட இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர்களால் தாங்கள் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்கிற ஆதங்கம் உறுப்பினர்களின் குரல்களில் ஏராளத்துக்கு ஒலித்தன.

மாவட்டங்களுக்கு இடையில் அமைச்சர்கள் வேறுபாடு காட்டிப் பாரபட்சமாக நடக்கிறார்கள் என்பது மற்றொரு குற்றச்சாட்டாக இருந்தது.

மாகாண அமைச்சு சார்பில் ஒரு மாவட்டத்தில் நிகழ்ச்சி நடக்கும்போது குறைந்தபட்சம் அந்த மாவட்டத்தில் உள்ள ஆளுங்கட்சி உறுப்பினருக்குக்கூட அழைப்பு அனுப்பப்படுவதோ அது பற்றித் தெரியப்படுத்தப்படுவதோ இல்லை என்கிற குறை அனேகமாக எல்லா உறுப்பினர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும்போது உறுப்பினர்களின் ஆலோசனைகள் கேட்கப்படுவதில்லை என்கிற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. கடந்த காலங்களில் கட்சி என்ற ரீதியில் இவ்வாறான நிதி நிலை அறிக்கைகளுக்கு ஆதரவு வழங்கியது போன்றல்லாமல் எதிர்காலத்தில் அப்படிச் செய்யக்கூடாது என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டது. உறுப்பினர்களின் ஆலோசனைகளை நிதி நிலை அறிக்கையில் சேர்த்துக் கொள்ளாவிட்டால் அதனை எதிர்க்கவேண்டும் என்றுகூட சில உறுப்பினர்கள் ஆவேசப்பட்டார்கள்.

கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்களின் ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனைகள் இன்றி கல்வி அமைச்சர் தான் தோன்றித்தனமாகச் செயற்படுகிறார் என்ற குற்றச்சாட்டும் காரசாரமாக முன்வைக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் வாதங்கள் பிரதிவாதங்களுக்கு இடையே அமைச்சர்கள் ஒருவரும் சரியில்லை எனவே அவர்களை மாற்றவேண்டும் என்ற வலியுறுத்தல்களும் எழுந்தன. எனினும் அதனை உறுப்பினர்களின் ஏகோபித்த தீர்மானமாக வளர்த்தெடுக்க முடிந்திருக்கவில்லை.

அமைச்சர்களின் குறைபாடுகள் குறித்து முதலில் முதலமைச்சருக்கு ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்துக் கலந்துரையாடுவது என்றும் அதன் பின்னரும் அவர்களின் நடவடிக்கைகளில் திருத்தங்கள் இல்லையென்றால், அமைச்சர்களை மாற்றுவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்குவது என்றும் உறுப்பினர்கள் இணங்கிக் கொண்டார்கள்.

இதுபோக, இல்லாத வாகனத்துக்கு அமைச்சர்கள் வாடகை பெறுவது குறித்தும் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. மக்கள் சந்திப்புக்களை நடத்துவதால், தமது வாகன எரிபொருள் நிதி ஒதுக்கீடு போதாது என்று தெரிவித்தே இல்லாத வாகனத்துக்கும் சேர்த்து அமைச்சர்கள் வாடகை பெறுகிறார்கள், நாங்களும்தான் மக்கள் சந்திப்புக்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் நாளாந்தம் போகிறோம், அதற்கு யார் எரிபொருள் தருவார்கள், நிதி தருவார்கள்? என்றும் உறுப்பினர்கள் பலர் வெப்பியாரப்பட்டார்கள்.

இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றைத் தயாரித்து அதனை முதலமைச்சருக்கு வழங்குவது என்றும் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் இணங்கிக்கொண்டார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்த இரகசியக் கூட்டம் குறித்து ஊடகங்களுக்குத் தகவல் தருவதில்லை என்றும் உறுப்பினர்களுக்குள் ஓர் இணக்கம் எட்டப்பட்டது. “எங்களுக்குள் ஒற்றுமை பேணப்படுவது அவசியம்” என்று அவர்கள் வலியுறுத்திக்கொண்டார்கள்.

கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் ஊடகங்களில் வெளிவந்தால் இனிமேல் இதுபோன்ற கூட்டங்களை நடத்துவதேயில்லை என்றும் அவர்கள் முடிவெடுத்தார்கள்.

கடைசியில் பாரங்களை இறக்கி வைத்ததில் இலேசான மனதுபோல கலகலப்பாகச் சிரித்தபடியே அனைத்து உறுப்பினர்களும் வெளியேறிச் சென்றார்கள்.



# தீபங்களின் ஒளி எங்கும் பரவட்டும்

-செ.உமாசுதன்

## தீமைகள் அகன்று தமிழினம் விடிய புதுவழி பிறக்கட்டும்

பண்டிகைகள் ஏன்?, எதற்காக ? கொண்டாடப் படுகின்றன அல்லது கடைப்பிடிக்கப்படுகின்றன என்ற கேள்விகள் எங்கள் எல்லோருடைய மனங்களிலும் தோன்றத்தான் செய்கின்றன. நாம் அனைவரும் எங்களுடைய சரீரத்தின் அகத்தையும் புறத்தையும் புதிய எண்ணங்களால் புதுமைப்படுத்திக் கொள்ளவும், புதிய சிந்தனைகளின் புத்துணர்ச்சியால் புதுமலர்ச்சியைப் பெற்று அதன் வழி புதிய பாதைகளை அமைத்துக் கொள்ளவுமே இந்தப் பண்டிகைகளின் தோற்றம் என்பது தமிழர் பாரம்பரியத்தின் வழி தென்பட்டது.

துன்பமும் இன்பமும் நிறைந்த காலச்சக்கரத்தின் வழியே ஆண்டு தோறும் தமிழர்கள் மன மகிழ்வோடு கொண்டாடி.தங்கள் துன்பங்களை மறந்து அந்த நாளில் இன்பமாய் கூடி ஒன்றுபடும் பண்டிகைகள் பல துன்பங்களில் இருந்தான ஓர் சிறிய மீட்சியாக வந்து போகின்றன. அந்த வகையிலே தமிழர் தம் பாரம்பரிய திருநாளான தீபாவளி பண்டிகை சிறப்பிற்குரியது.அந்தப் பண்டிகையில் சொல்லப்படுகின்ற பொதிந்து கிடக்கின்ற தத்துவங்கள் என்றும் மேலானவை.அவற்றை நாம் அறிவதும் தெளிவதும் அவசியம்.

தீபம் என்றால் விளக்கு ஆவளி என்றால் வரிசை. தீபாவளி என்றால், தீபங்களின் வரிசை என்று அர்த்தப்படுகின்றது. ஆரம்ப காலங்களில், தீபாவளியன்று கார்த்திகை மாதத்திலே வருகின்ற தீபத் திருநாளைப்போன்று வரிசை யாக விளக்கினை ஏற்றி வழிபட்டார்கள் எம் முன்னோர். அந்த வழக்கம் காலப்போக்கில் மாற்றம் பெற்றுவிட்டது. இருந்தபோதும் நாம் அந்த வழக்கங்களை மறக்கலாகாது. அதனைக் கடைப்பிடித்தல் என்பது தான் சிறந்தது. தீபாவளித் திருநாளன்று கார்த்திகை தீபத்திருநாளைப் போன்று வரிசையாகத் தீபங்களை ஏற்றி வைத்து வழிபடுவது உத்தமம்.



தீபம் என்றால் விளக்கு ஆவளி என்றால் வரிசை. தீபாவளி என்றால், தீபங்களின் வரிசை என்று அர்த்தப்படுகின்றது. ஆரம்ப காலங்களில், தீபாவளியன்று கார்த்திகை மாதத் திலே வருகின்ற தீபத் திரு நாளைப்போன்று வரிசை யாக விளக்கினை ஏற்றி வழிபட்டார்கள் எம் முன்னோர். அந்த வழக்கம் காலப்போக் கில் மாற்றம் பெற்றுவிட்டது.இருந்த போதும் நாம் அந்த வழக்கங்களை மறக்கலாகாது. அதனைக் கடைப்பிடித் தல் என்பது தான் சிறந்தது. தீபாவளித் திருநாளன்று கார்த்திகை தீபத்திருநாளைப் போன்று வரிசையாகத் தீபங்களை ஏற்றி வைத்து வழிபடுவது உத்தமம்.

இந்துக்களாகிய நாம் அனைவரும் 'அறிவாகிய விளக்கை ஏற்றி, பரம்பொருளை அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.குறிப்பாக, அறியாமை அழிந்து இறையருளால் துன்பங்கள் நீங்கி நாம் இன்பமாய் வாழவும் ஆய கலைகளின் சிறப்பை உணரவும் அதன் செழுமையை நிறைவாய் பெறவும் பரம்பொருளின் உணர்தல் என்பது மன ஒருமைப்பாட்டின் திறனால் சாத்தியப்பட எப்போதும் முயற்சிக்க வேண்டும். மானிடப் பிறப்பின் மாபெரும் சிறப்பே அறிவுதான். இத்தகைய சிறப்பான அகத்தின் அறிவொளியைப் புறத்தில் வழிபடுதலே ஒளி வழிபாட்டின் உள்ளார்ந்த தத்துவம்.

இவைதவிர,பகவான் ஸ்ரீகிருஷ்ணர் நரகாசுரனை வதம் செய்யும்போது,தான் அமரத்துவம் அடைகின்ற இந்த நாளை அனைவரும் கொண்டாடவேண்டும் என்ற கோரிக்கை நரகாசுரனால் ஸ்ரீகிருஷ்ணரிடம் முன்வைக்கப்பட்டதாகவும் புராணங்கள் கூறுகின்றன. ஆதனால் தான் பட்டாசு வெடித்துத் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுகிறோம் என்ற கருத்துள்ள கதையாடலும் முன்னோரால் சொல்லப்படுகின்றது.அதேபோன்று பேராசை,கோபம், ஆசை, பகுத்தறிவின்மை, கர்வம் மற்றும் பொறாமை என்கின்ற தீய குணங்கள் அசுர குணங்களுக்கு நிகரானவையாகக் கருதப்படுகின்றன. நாம் பட்டாசைக் கொளுத்தி எறிகின்ற போது அவை வெடித்து பொசுங்கி அழிவது போல இந்தத் தீய குணங்கள் அனைத்தும் நீங்கி நாம் நற்குணங்களுடன் திகழவேண்டும் என்கிற தத்துவமும் இதில் உள்ளடங்கியிருக்கிறது.

இந்த நிலையிலே புதிய ஆடைகளை அணிதல் என்பது எங்களிடம் இருக்கின்ற குறைகளை தூர விலக்கி நற்குணங்களைப் பெற்றுக்கொள்ள திடசங்கற்பம் பூணுதல் என்பதனை சுட்டி நிற்கின்றது. திருவள்ளுவர் குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல் என்கிறார்; அதாவது நம்மை நாமே ஆய்வு செய்தல் அல்லது எடை போட்டுக் கொள்ளுதல் என்பது முக்கியத்துவப்படுகின்றது. அதனைச் செய்தல் என்பது எப்போதும் சிறந்த விடயம். ஒருவன் வாழ்விலே வெற்றி எனும் இலக்கினை அடைய எப்பொழுதும் உற்சாகமாக இருத்தல் வேண்டும். சோர்வடையக்கூடாது. பய உணர்வை எங்களின் மனதிலிருந்து தூர விலக்க வேண்டும். வாழ்க்கையிலே வெற்றி எனும் கனியை விரைவாய் பெற உறக்கம், சோர்வு, பயம், கோபம், சோம்பல், காலந் தாழ்த்திச் செயல்படுதல் என்கின்ற ஆறு வகையான தீய குணங்களைத் விலக்கி நற்குணங்களை எம்முள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அவரவர்க்குரிய சமயச் சின்னங்களை அணிவதும் புத்தாடைகளை அன்றைய தினம் அணிவதும் தீபாவளித்திருநாளின் சிறப்பம்சம். இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் நாம் புதிய சிந்தனையோடு புதிய மனிதர்களாக பிறப்பெடுத்துள்ளதான ஓர் திடசங்கற்பத்தினை காட்டி நிற்கின்றன.

இவைதவிர இறைவனையும் பெரியோர்களையும் வணங்குகிறோம். குறிப்பாக, அதிகாலையிலே எழுந்து நீராடிச் செய்ய வேண்டிய நல்லறப் பணிகளையும். ஒப்புயர்வற்ற பரம்பொருளையும் சிந்தனையில் நிறுத்தி தாய் தந்தையைத் தவறாமல் வணங்க வேண்டும் என்பதே எம் முன்னோர்கள், சான்றோர்கள் கண்டுகொண்ட வாழ்வியல் கோட்பாடு. பெரியோர்களைப் பணிந்து வணங்குதல் என்பது எங்களின் ஆணவத்தை, அகங்காரத்தை நீக்கி எமை செழுமைப்படுத்தும் செம்மைப்படுத்தும் செயல் நிலை என்பதனையும் மறந்துவிடலாகாது.இவை எப்போதும் எமக்கு மகிழ்ச்சியை தரும் சிறப்பான செயல் வடிவங்கள்.

இந்த நன்னாளிலே இனிப்பான தின் பண்டங்களை இறைவனுக்கு நைவேத்தியம் செய்கிறோம்.அதனை அனைவருக்கும் வழங்குகிறோம். உண்மையிலேயே எல்லோரும் துன்பங்களை மறந்து மகிழ்வாக இருக்க வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையின் வெளிப்பாடுகள்தான் இவை. இந்த உலகத்திலே நாம் அனைவரும் அழுவதற்காகப் பிறக்கவில்லை. எல்லோரும் இன்பமாக வாழ்வதற்காகவே பிறந்திருக்கிறோம். இன்பத்தை நாம் உணர்வது மாத்திரமன்றி பிறருக்கும் அந்த இன்பத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது தான் இதன் தாற்பரியம். மனித மாண்பியத்தில் அன்பின் நிலைத்திருப்பை இந்த உலகத்திற்கு எடுத்துக் கூறுகின்ற தமிழர் தம் பாரம்பரிய பண்டிகைகளில் ஒன்றாக தீபாவளித் திருநாள் கொண்டாடப்படுகிறது.இதுதான் தீபாவளித் திருநாளின் சூட்சுமம்.

ஆகவே,எதைச்செய்கின்றபோதும் அதன் தத்துவத்தையும் சிறப்பையும் அறிந்து கொள்ளுங்கள். சிந்தனைகளின் மேலீட்டால் புரிந்து கொள்ளுங்கள். எப்போதும் செயலை உணர்ந்து செய்யுங்கள். இல்லையெனில் அர்த்தமில்லை. வருங்காலத் தலைமுறையினர் இதனை அர்த்தமற்றது என்று ஒதுக்கிவிடலாம். எங்களின் இனத்துவ அடையாளங்களும் வரலாறுகளும் திட்டமிட்டு திசைமாற்றப்படுகின்றதுன. திசைமாற்றப்பட்டவை எல்லையிடப்படுகின்றன. எங்களின் அடையாளங்களையே நாங்கள் வியப்பாய்ப் பார்க்கிறோம். எங்கள் வரலாறுகளும் அடையாளங்களும் மாற்றானிடம் மண்டியிட்டுப் போனதால்,தமிழரின் வரலாற்றிலே, அவர்களின் வழித்தடத்திங்கள் எப்போதும் இருண்டு தான் கிடக்கிறது. இது வரலாறு எமக்குத் தந்த பாடம்.சாபம்.இருந்தபொழுதும் இந்தத் திருநாளிலாவது எம் மக்களின் முகத்தினில் சிரிப்பினை கண்டோம். தீப ஒளியால் விழித்துக்கொண்டோம். பல சந்தர்ப்பங்களில் எமை சுதாகரித்துக் கொண்டோம்.இருந்தும் இன்னல்கள் இருளாய் எமை இறுகப் பற்றிக் கொண்டுவிட்டது.இந்த சந்தர்ப்பத்திலே மீண்டும் ஓர் ஒளி, தீப ஒளியாக தமிழ் மக்களின் வாழ்வில் புதிய விடியல் எனும் நம்பிக்கை வழியைத் தரும் தீபாவளியாக இன்று பூத்திருக்கிறது.இந்த இனிய பூத்தல் புதிய ஒளியாய் தமிழினம் விடிய வழியை வருகின்ற ஆண்டிலாவது கனிவாய் தரவேண்டும்.

எங்கள் குழந்தைகளுக்கு வரலாறுகளை இனிப்பான கனிவாய் இந்த நன்னாளில் துடிப்போடு சொல்லி மகிழுங்கள்.பழைய நினைதலால் அவர்களை புதிதாய் பட்டை தீட்டுங்கள்.பழையன கழிதல் என்பது மீள நினைத்தலில் தவறுதான்.இருந்தும் அவை அழிவிலிருந்தான விடுதலை என்பதால் உண்மையிலே இது இந்த புதிய தீப ஒளி நாளிலே பழையதை அழிக்கும் புதிய ஒளி தான். இந்த நன்னாளில் எல்லோரும் இன்புற்றிருங்கள். தீபாவளித் திருநாளை மனம் தித்திக்கக் கொண்டாடுங்கள். தீபங்களின் ஒளி எங்கும் பரவட்டும்.

தீமைகள் அகன்று தமிழினம் விடிய புதுவழி பிறக்கட்டும்.

அதிரன்

# ரஷ்ய விமானத்தை தீவிரவாதிகள் சுட்டனரா?



கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்த போது விமானம் 30,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்ததாக எகிப்திய மூத்த விமான போக்குவரத்து அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எகிப்தின் சினாய் மலைப்பகுதியில் விழுந்து நொறுங்கிய ரஷ்ய விமானம் குறித்து இப்போது பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றபோதும் ரஷ்யா இதற்குக் காரணம் என்ன என்பதை உறுதியாகக் கூறமுடியாமல் உள்ளது. ரஷ்ய விமானத்தைத் தாங்கள்தான் சுட்டு வீழ்த்தியதாக ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

விமானத்தில் 214 ரஷ்யப் பயணிகளும், 3 உக்ரைன் பயணிகளும், 7 விமான ஊழியர்களும் பயணித்தனர். தெற்கு சினாயில் ஹர்ம்–எல் யேக்கிலிருந்து ரஷ்யாவின் சென். பீற்றர்ஸ்பேர்க் செல்வதற்காக புறப்பட்ட இந்த விமானம், புறப்பட்ட 23 ஆவது நிமிடத்தில் கட்டுப்பாட்டு அறையின் தொடர்பை இழந்தது. ராடரிலிருந்தும் மறைந்தது.

### சிதறிக் கிடந்த பாகங்கள்

இதனையடுத்து சினாய் மலைப்பகுதியில் விமானம் மோதிச் சிதறியது தெரியவந்தது. விமானத்தின் பாகங்களும், மனித உடல்களும் 5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்கு சிதறிக் கிடந்தன என்று எகிப்திய பாதுகாப்பு மற்றும் மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்துக்கு விமானியின் தவறும் காரணம் இல்லை; விமான தொழில்நுட்பக் கோளாறும் காரணம் இல்லை என விமான நிறுவனம் கூறியது. ஆனால் இதை ரஷ்யப் புலனாய்வு அதிகாரிகள் மறுக்கின்றனர். "விமான நிறுவனம் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வருகிறது. இப்போதைக்கு எந்த முடிவுக்கும்வரமுடியாது. சிலவிமானப் போக்குவரத்து நிபுணர்கள், விமானத்தில் ஏற்கனவே வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறுகின்றனர்.

இது பற்றிக் கருத்துக்கூறிய அமெரிக்கதேசிய புலனாய்வுஇயக்குநர் ஜேம்ஸ் கிளாப்பர்கூறும் போது, விமானத்தை பயங்கரவாதிகள் சுட்டு வீழ்த்தியிருக்க வாய்ப்புக் குறைவு. இருப்பினும் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் வேலையாகவும் இருக்கலாம் என்று கூறிக் குழப்பி உள்ளார்.

### மர்மம் நீடிக்கிறது

ரஷ்ய அதிபர் புடினின் செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் கூறும்போது, எதையுமே மறுக்க முடியாது. என்ன வேண்டுமானாலும் நடந்திருக்கலாம்–என்கிறார். இப்படி ஆளாளுக்கு ஒன்றைக் கூற, விபத்துக்கு காரணம் மட்டும் மர்மமாகவே இருக்கிறது.

கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்த போது விமானம் 30,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்ததாக எகிப்திய மூத்த விமானப் போக்குவரத்து அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விமானத்தை வீழ்த்தியதாக ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. இந்த தீவிரவாத குழு வெளியிட்டுள்ள அறிக்கை அதன் டுவிட்டர் ஆதரவாளர்களால் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

### வெடிகுண்டினால் தகர்க்கப்பட்டதா?

ரஷ்ய விமானத்தைத் தீவிரவாதிகள் வெடிகுண்டு மூலம் வெடிக்க செய்திருக்கலாம் என்று அமெரிக்கா அதிபர் ஒபாமா மற்றும் இங்கிலாந்துப் பிரதமர் டேவிட் கமரூன் ஆகிய இருவரும் அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க அதிபர்ஒபாமாவானொலிஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், ரஷ்ய விமானத்தை வெடிகுண்டு மூலம் தீவிரவாதிகள் வெடிக்கச் செய்து வீழ்த்தி இருப்பதற்கான வாய்ப்பு அதிகம்என தெரிவித்துள்ளார். அதேபோல் இங்கிலாந்துப் பிரதமர் டேவிட் கமரூன் செய்தியாளர்களிடம் பேசும்போது வெடிகுண்டு மூலம் விமானம் தகர்க்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளின் தொலைத்தொடர்புப் பேச்சுகளை அமெரிக்க மற்றும் பிரிட்டன்உளவுத்துறைகள்இடைமறித்துக் கேட்டதன் அடிப்படையில் ஒபாமா மற்றும் கமரூன் ஆகிய இருவரும்மேற் கூறிய கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

### ஐ.எஸ் வெளியிட்ட வீடியோக் காட்சி

இதேவேளை, ரஷ்ய விமானத்தின் 2ஆவது கறுப்புப் பெட்டி சேதமடைந்துவிட்டது என எகிப்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விமானத்தை நாங்கள் தான் சுட்டு வீழ்த்தினோம் என ஐ.எஸ் தீவிரவாதிகள் வீடியோ ஒன்றை வெளியிட்டனர். ஆனால், இவை போலியான வீடியோ என்றும் இதில் சிறிதளவும் உண்மையில்லை என ரஷ்ய விமானப்படையின் முன்னாள் கொமாண்டர் ஸ்டீவ் சட்விக் ஓபே மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப் பெட்டியை எகிப்து அதிகாரிகள் தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றனர். விமானிகளின் அறை ஒலிப்பதிவுகளை கொண்ட 2 ஆவது கறுப்புப் பெட்டி பாதி சேதமடைந்திருப்பதால், அதில் உள்ள பதிவுகளை பெறவும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால் விமானம் எப்படி நொறுங்கி விழுந்தது என்பது குறித்து பலவகையாக ஊகங்களும், கருத்துக்களும் வந்தவண்ணமுள்ளன. இது தொடர்பிலான விசாரணைகள் எப்படிச் செல்லும், எதை மையப்படுத்தக் கூடும் என்பது குறித்துச் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

### இயந்திரக் கோளாறா?

இதில் முதலாவது, விமானத்தில் இயந்திரக் கோளாறு இருந்ததா என்பது. எகிப்தின் பிரதமரோ இந்தப் பேரழிவுக்கு தொழில்நுட்பக் கோளாறே முக்கிய காரணமாக இருக்கலாம் எனக் கூறுகிறார். ஆனால் அது சரியா தவறா என்பதை விமான விபத்து வல்லுநர்களே முடிவு செய்ய வேண்டும்.

ஆனால் எகிப்தில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஹொசாம் கமாலோ, அந்த விமானத்தில் எந்தப்பிரச்சினையும் இருந்ததற்கான அறிகுறிகள் ஏதுமில்லை என்கிறார். தொழில்நுட்பக் காரணங்களால் விமானம் அவசரமாகத்தரையிறங்க அனுமதி கேட்டது என, முன்னர் வந்த கருத்துகளுக்கு இது முரணாகவுள்ளது.

இதனிடையே அந்த விமானத்தின் துணை விமானி செர்ஜேய் த்ருகசெவின் மனைவி, விமானத்தின் உறுதிப்பாடு குறித்து பல கேள்விகள் உள்ளன என்றும், ஹர்ம் எல் யெக்கை விட்டு விமானம் புறப்படுமுன்னர் கணவன் தன்னிடம் இது குறித்துத் தொலை பேசியில் குறை கூறியதாகத் தெரிவித்துள்ளார்.

### விமானத்தில் தவறில்லை

விமான நிறுவனமான , மெட்ரோஜெட், 18 வயதாகும் அந்த விமானம் பறப்பதற்கு முழுத் தகுதியுடனேயே இருந்தது என்று கூறுவதுடன் வெளிக்காரணிகளே விமானம் நொறுங்கி விழக் காரணம் என அந்த நிறுவனம் வலியுறுத்தி வருகிறது.

விமானத்தை ஓட்டிய விமானி என்று அறியப்படும் வலேரி நெமோவ், 12,000 மணிகளுக்கு மேலாகப் பறந்த அனுபவம் கொண்டவர் என்று அந்த விமான நிறுவனம் கூறுகிறது. தமது பணியாளர்கள் மீது எவ்விதமான தவறும் இல்லை என மெட்ரோஜெட் அடித்துக் கூறுகிறது.

விமானத்தின் ஒலிக்குறிப்புகள் அடங்கிய கறுப்புப் பெட்டிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதிலிருக்கும் தகவல்கள் தெளிவான வானிலையில் பறந்த விமானத்தின் கடைசி நிமிடங்களில் என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ள உதவும்.

### ஏவுகணையால் தாக்கப்பட்டதா?

இந்த விமானத்தை தாங்களே வீழ்த்தியதாக ஐ எஸ் அமைப்பின் ஜிகாதிகள் கூறியுள்ளதை பாதுகாப்புவல்லுநர்கள் சினத்துடன் மறுத்துள்ளனர். அந்த விமானம் நடுவானில் பிளவுண்டு நொறுங்கி விழுந்தது என ரஷ்யாவின் மூத்த விமானத்துறை வல்லுநர் விக்டர் சோரோசென்கோ கூறுகிறார். ஆனால், இன்ன காரணத்தினாலேயே விபத்து ஏற்பட்டது என்பதை இப்போது கூற முடியாது எனவும் அவர் எச்சரிக்கிறார்.

சினாய் பகுதியில் செயல்படும், ஐ எஸ் அமைப்பின் கூட்டாளி அமைப்புகள் முக்கியமாக மோதிவருவது எகிப்து அரசுடன் தான் என்ற நிலையில், இந்த விமானத்தை வீழ்த்துவதால் சர்வதேச அளவில் பெரிய எதிர்வினையைச் சந்திக்க நேரிடும் என்பதை அறிந்துள்ள அந்த அமைப்புகள், இதை ஏவுகணையால் வீழ்த்த முன்வருவார்களா எனும் கேள்வியை வல்லுநர்கள் எழுப்புகிறார்கள்.

ரஷ்யா சிரியாவில் உள்ள ஐ.எஸ் அமைப்புடன் போரிட்டுக்கொண்டிருக்கும் நிலையிலும், எகிப்தின் பலவீனமான பொருளாதாரம் சுற்றுலாப் பயணிகள் வருவதை நம்பியே இருக்கும் நிலையிலும், இரு நாடுகளுமே, இந்த மெட்ரோஜெட் விமான விபத்துக்கு தீவிரவாதம் காரணமாக இருக்குமோ என்பதில் பதட்டத்துடனேயே உள்ளன.

உண்மையாகவே இது தீவிரவாதிகளால் தான் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்குமானால் எதிர்காலத்தில் விமானப் பயணங்களின் பாதுகாப்பு என்பது கேள்விக்குரியதாகவே இருக்கும்.



# கடமைகளைச் செய்

# உரிமைகள் தேடிவரும்




சேரலாதன்

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மாகாண சபையின் அமர்வின்போது கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்தனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. தமக்குரிய கொடுப்பனவுகள் தொடர்பாகவே அவர்கள் அங்கு கேட்டுக்கொண்டதும் தெரியவருகின்றது.

பல்வேறு பகீரதப் பிரயத்தனங்களின் பின்னரே வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்றது. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாகியதுதான் இந்த மாகாணசபை. இருந்தாலும் 25 வருடங்களின் பின்னர்தான் வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டது. இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது தமிழர் தரப்பில் வலுவானதொரு நிலையில் இருந்த விடுதலைப் புலிகள் அதனை முற்றாகவே நிராகரித்தனர். மாகாணசபை அமைக்கப்படுவதால் தமிழர்களின் உரிமைகள் எவையும் கிடைத்து விட மாட்டாது என்பது அவர்களது திடமான எண்ணமாக அப்போது காணப்பட்டது. ஆனால் பிறிதொருசாரார் இதனை ஏற்றுக் கொண்டனர்.

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணசபையும் உதயமாகியது. ஆனால் பல காரணங்களால் அந்த மாகாண சபையால் நிலைத்து நிற்க முடியவில்லை. காலப்போக்கில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெவ்வேறு மாகாண சபைகளை அமைக்க வேண்டியதொரு நிலை உருவாகியது. கிழக்கு மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தல் இடம்பெற்று பிள்ளையான் என அழைக்கப்படும் அரசுடன் இணைந்துகொண்ட முன்னாள் புலி பதவியிலும் அமர்ந்து கொண்டார். ஆனால் வடக்கு மாகாணத்தில் மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இடம்பெறாது இழுத்தடிக்கப்பட்டு வந்தது. வடபகுதியில் போர் இடம்பெற்று வந்தமை இதற்கொரு சாட்டாகக் கூறப்பட்டு வந்தது.

போர் ஓய்ந்த பின்னர் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் இடம்பெறுவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து வடபகுதி திருவிழாக் கோலம் பூண்டது. பல்வேறு அரசியல் கட்சிகளும் இந்தத் தேர்தலை ஆவலுடன் எதிர்கொண்டன. அரசு வெற்றி பெற்றே தீரவேண்டும் என்ற முனைப்புடன் சகல சக்திகளையும் பிரயோகித்தது.

அரசுக்கு எதிரானவர்களை மிரட்டி வைக்கும் காரியங்களும் குறைவில்லாது இடம்பெற்றன. கூட்டமைப்பினர் மக்கள் முன்பாக அவர்கள் நம்பக்கூடிய வகையான வாக்குறுதிகளை வழங்குவதற்குத் தயங்கவில்லை. எமக்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிடைத்தால் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என சூளுரைக்கவும் அவர்கள் தவறவில்லை.

மக்களும் மாகாணசபை அமைக்கப்படுவதால் தமக்கு விடிவு காலம் ஏற்படுமென நம்பினார்கள். அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் உயிரைப் பணயம் வைத்து தமது வாக்குகளைச் செலுத்திக் கூட்டமைப்பினரை அமோக வெற்றிபெறச் செய்தனர். வரலாறு காணாத பெரு வெற்றியைக் கூட்டமைப்பு பதிவு செய்து கொண்டது. ஆனால் பின்னர் நடந்தவைதான் கசப்பான விடயங்களாக மாறிவிட்டன. தாங்கள் எதிர்பார்த்த விடயங்கள் மாகாண சபையில் நிறைவேற்றி வைக்கப்படுமென்ற நம்பிக்கையுடன் காத்திருந்த மக்கள் இன்றுவரை காத்திருக்கவே செய்கின்றனர்.

ஒரு குட்டி நாடாளுமன்றம் போன்று செயற்பட வேண்டிய மாகாணசபை ஒரு முன்னாள் கிராமசபை ஆற்றிய பணிகளைக்கூட நிறைவேற்றி வைக்கமுடியாத நிலையில் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றது. இந்த இலட்சணத்தில் நாடாளுமன்றத் தேர்தலின்போது நான் எந்தக் கட்சிக்கும் ஆதரவு நல்க மாட்டேன் என முதலமைச்சர் ஞானோபதேசம் புரிய அதுவே பெரிய வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பிவிட்டது. கூட்டமைப்பின் ஆதரவுடன் பதவிக்கு வந்த ஒருவர் இப்படிக் கூறலாமாவென ஒரு சாராரும்; அவரது படிப்பென்ன, தகுதியென்ன, வகித்த பதவியென்ன அவர் எதைக் கூறினாலும் அதற்கு அர்த்தம் இல்லாமல் போகாது என வேறொரு சாராரும் வரிந்து கட்டிக்கொண்டு மல்லுக்கட்ட மக்கள் குழம்பித்தான் போனார்கள். இந்தக் களேபரத்தில் மக்கள் மாகாணசபையை மறந்தே போய்விட்டார்கள்.

தற்போது மாகாணசபை உறுப்பினர்கள் தமது கொடுப்பனவுகள் தொடர்பாக விடுத்த கோரிக்கைகள் பத்திரிகைகளில் வெளிவர மக்களும் மாகாணசபை என ஒன்று இருக்கின்றதை நினைவுபடுத்த ஆரம்பித்து விட்டனர். "முதலில் நீ உனது கடமைகளை ஒழுங்காகச் செய் – உனது உரிமைகள் தானாகவே தேடிவரும்" என்றார் மேல் நாட்டு அறிஞர் ஒருவர். அதைத் தற்போது நினைவுபடுத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை உள்ளூராட்சி மன்றங்களும், மாகணசபையும் மட்டுமே தமிழர்களால் ஆளப்படுகின்றன. இவற்றின் மூலமாகவே மக்களின் தேவைகளை ஓரளவு நிறைவேற்றி வைக்க முடியும். ஆனால் இதுகூட முழுமையாகச் சாத்தியப்படாத நிலைதான் இங்கு காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்களில் ஆளும் கட்சியினரே ஒருவரையொருவர் அடித்து வீழ்த்துவதில் முனைப்புக் காட்டினர். பிரதேச சபைகளின் செயலாளர்கள் சிலர் தலைவருடன் முரண் பட்டு நின்றதால் சபைகளின் செயற்பாடுகள் சீர்குலைந்தன. அதனைச் சீர் செய்வதற்குப் போதிய நடவடிக்கைகள் இரு தரப்புகளிலும் கடைசி வரை மேற்கொள்ளப்படவே இல்லை.

உள்ளூராட்சி மன்றங்களின் நிலைதான் இப்படியென்றால் மாகாணசபை இதற்கு ஒருபடி மேலேபோய் நிற்கின்றது. அங்கும் உறுப்பினர்கள் அணிபிரிந்து செயற்படுவதாகத் தகவல் கிட்டியுள்ளது. மக்கள் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியவர்கள் தமது சிந்தனைகளை வேறு தேவையற்ற விடயங்களில் ஈடுபடுத்துவதால் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்கள்தான்.

தற்போது மாகாணசபை மீதான நம்பிக்கை மக்களிடையே குறைந்து வருவதைக் காண முடிகின்றது. தமது முதன்மையான அன்றாடப் பிரச்சினைகளுக்கு மாகாணசபை தீர்ப்பைத் தரவில்லை என்பது மக்களின் பிரதான ஆதங்கமாக உள்ளது. குறிப்பாக சுன்னாகம் நிலத்தடி நீரில் ஓயில் கலக்க விடப்பட்டமை, முல்லைத்தீவில் சட்டவிரோத காடழிப்பு, வேறு பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களின் ஊடுருவல், மழை நீரைத் தேக்கி வைப்பதற்குரிய நடவடிக்கை, உள்ளக வீதிப்புனரமைப்புக்கள், பாடசாலைகளின் அபிவிருத்தி, விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு, இரணைமடு நீர் விநியோகத்திட்டம்.......... இவ்வாறு பல விடயங்களில் மாகாணசபை மெத்தனமாகச் செயற்படுவதாக மக்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

இப்படி மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளை எல்லாம் ஆறப்போட்டுவிட்ட மாகாண சபையினர் தங்களுக்கான கொடுப்பனவுகள் வசதிகள் மட்டும் திறம்பட வேண்டும் என்று கோருவது எந்த வகையில் நியாயம் என்று தெரியவில்லை. இவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்ய வந்தார்களா அல்லது அரசியல் பிழைப்பு நடத்த வந்தார்களா என்கிற சந்தேகம் நியாயமாகவே எழுகிறது.

இந்த மண்ணில் இவர்களைவிடப் பாதிக்கப்பட்ட, போரால் அனைத்தையும் இழந்த மக்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு மாகாண சபையால் இதுவரையில் துரும்பளவு உதவிகள் அல்லது வசதிகள் கூட வழங்கப்படவில்லை. மாத வருமானம் 10,000 ரூபா கூடப் பெற முடியாத பல குடும்பங்கள் வறுமையில் வாடிக்கிடக்கின்றன இந்த மண்ணில். ஆனாலும் மாதம் மொத்தமாக 50,000 ரூபாவுக்கு மேலான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் மாகாண சபை உறுப்பினர்கள் தமக்கு மேலும் வசதிகளும் கொடுப்பனவுகளும் கோருவது இவர்கள் உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள்தானா? மக்களின் துன்பங்களை உணர்ந்தவர்கள்தானா? என்றே எண்ண வைக்கிறது.

இந்த மக்களுக்கு உண்மையாக அவர்கள் அரசியல் சேவகம் செய்வார்களானால், இவர்களுக்கான கொடுப்பனவுகளுக்கும் வசதிகளுக்கும் அவர்கள் கொழும்பு அரசை எதிர்பார்த்திருக்க வேண்டியதில்லை. மக்களே அவற்றை அவர்களுக்கு அள்ளிக் கொடுப்பார்கள். இதனை எண்ணித் துணிந்து மாகாண சபை உறுப்பினர்கள் கருமமாற்ற வேண்டும்.

தற்போது மாகாணசபை உறுப்பினர்கள் தமது கொடுப்பனவுகள் தொடர்பாக விடுத்த கோரிக்கைகள் பத்திரிகைகளில் வெளிவர மக்களும் மாகாண சபை என ஒன்று இருக்கின்றதை நினைவுபடுத்த ஆரம்பித்து விட்டனர். "முதலில் நீ உனது கடமைகளை ஒழுங்காகச் செய் – உனது உரிமைகள் தானாகவே தேடிவரும்"




# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும் 8

# ஆசிரியர் தலையங்கமும் பத்தி எழுத்தும்

ரம்யன்

**ஒரு** பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் என்பது அந்தப் பத்திரிகையின் கொள்கைக் கோட்பாடுகளுக்கு அமைவாக எழுதப்படுவது. அதன் ஆசிரியரே அதற்குப் பொறுப்பானவராக இருப்பார் என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

சில சமயங்களில் ஆசிரியரின் கருத்து பத்திரிகையின் பொதுவான கொள்கைக்கு முரண்படுமானால் அந்த ஆசிரியர் அந்தப் பத்திரிகையில் தொடர்ந்து பணிபுரிவது இயலாமல் போகும். ஒன்றில் அந்த நிறுவனத்திலிருந்து அவர் விலகிவிடுவார் அல்லது நிறுவனம் அவரைப் பொறுப்பிலிருந்து நீக்கிவிடும். பெரும்பாலும் கொள்கை தொடர்பான சிக்கலான பிரச்சினைகள் ஏற்படும்போது அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் (ஆசிரியர்கள்) மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் (நிர்வாகிகள் உரிமையாளர்கள்) ஒன்றுகூடி அந்தப் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து ஒரு நிலைப்பாட்டை எடுத்து, அதன் பிரகாரம் ஆசிரியர் தலையங்கங்களைப் பிரதிபலிக்கச் செய்வதற்கு முடிவெடுப்பார்கள். பொதுவில் இதில் சிக்கல் எதுவும் ஏற்படுவதில்லை. ஆனால், பொதுவான நிலைப்பாட்டுக்கு உடன்பட மறுக்கும் அல்லது முரண்படும் ஆசிரியர் அந்தப் பத்திரிகையில் தொடர்ந்து பணிபுரிவது சாத்தியமில்லை.

இதைவிட கோட்பாடுகள், பத்திரிகையின் முக்கிய பணிகளில் உள்ளவர்களுக்கே குறிப்பாகச் செய்தி ஆசிரியர், ஆசிரியர், பிரதம ஆசிரியர் மற்றும் உயர்நிலை ஆலோசகர்கள் போன்றவர்களுக்கே பொருந்தும். ஆனால், கீழ் நிலையில் செய்தி சேகரிப்பாளர்கள், உதவி ஆசிரியர்கள் போன்றவர்களுக்குப் பொருந்தாது. அவர்கள் பத்திரிகையின் கொள்கைக் கோட்பாடுகளுக்கு உட்படுபவர்களாய் இருப்பதில்லை. பத்திரிகைக்குரிய செய்திகளை சேகரித்து வழங்குவது செய்தியாளர்களின் பொறுப்பு. அவைகளை நெறிப்படுத்தியும், திருத்தியும் தவிர்க்க வேண்டியவைகளைத் தவிர்த்தும் கவர்ச்சியான தலைப்புகளிட்டும் பிரசுரிக்கச் செய்வது உதவி ஆசிரியர்களின் பொறுப்பு. அவர்களுக்குரிய ஆலோசனை வழிகாட்டல்களை பிரதம உதவி ஆசிரியர் மற்றும் செய்தி ஆசிரியர் போன்றோர் வழங்குவர்.

இருந்தாலும், செய்தி சேகரிப்பவர்களும் நிருபர்களும் தாம் பணிபுரியும் பத்திரிகையின் கொள்கை மற்றும் அவைகளின் போக்கை அவதானித்து வைத்துக் கொள்வார்களானால் அதற்கேற்ப தமது செய்திகளைத் தேடுவது மற்றும் எழுதுவதில் சிறப்பாகவும் இலகுவாகவும் செயற்பட முடியும்.

இது பெரும்பாலும் பல பத்திரிகைகளுக்கு ஒரே சமயத்தில் செய்தி மற்றும் ஆக்கங்களை வழங்குபவர்களான சுதந்திரப் பத்திரிகையாளர்களுக்கே அதிக பயனுள்ளதாய் இருக்கும். ஏனென்றால் ஒரே செய்தியை அதன் வழங்குமுறையில் வெவ்வேறு முறைகளை கையாளும் பத்திரிகைகள் உண்டு. இதற்குஎடுத்துக்காட்டாக ஒரு செய்தியை நாம் குறிப்பிடுவதுண்டு. அதாவது:

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழ் ஆராய்ச்சி மா நாட்டின் போது தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் வாழ்கின்ற குறவர்களின் மொழி பற்றிய அறிஞர் ஒருவரின் கட்டுரை வாசிக்கப்பட்டு, அதன் மீது விவாதம் நடைபெற்றது. கொழும்பு பத்திரிகைகள் இரண்டுக்கு செய்தி அனுப்பியவரான, அப்போது யாழ்ப்பாணத்தில் பிரபலமாக விளங்கிய செய்தியாளர் இரண்டு பத்திரிகைகளுக்கும் அவ்வந்தப் பத்திரிகைகளின் போக்கு வழங்குமுறைகளுக்கு ஏற்ப அந்தச் செய்தியைத் தயாரித்து அனுப்பியிருந்தார்.

ஒரு பத்திரிகையில் மாநாட்டில் நடந்த விவாதங்கள் விரிவாக அதற்குரிய முறையில் எழுதப்பட்டிருந்த செய்தி, மற்றப் பத்திரிகையில் அந்த விவாதத்தில் வெளியான விசித்திரமான அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டிருந்தது. முதல் பத்திரிகை வீரகேசரி. மற்றப் பத்திரிகை மித்திரன். தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் குறவர் மொழி பற்றியும் ஆராய்ச்சி என்பதாக மித்திரனில் அதற்குத் தலைப்பு இடப்பட்டிருந்தது. அதனை எழுதியிருந்த




பத்திரிகையாளர் அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெயர் பெற்றவராக விளங்கியவரான செல்லத்துரையாவார். அந்தப் பத்திரிகையாளரின் திறமைக்கும் அனுபவத்துக்கும்கூட அந்தச் செய்தி வழங்கப்பட்டிருந்த முறைகள் எடுத்துக்காட்டாக இருந்தன.

ஆசிரியர் தலையங்கம் எவ்வாறு எழுதப்படுகிறது என்பது ஓர் அர்த்தமுள்ள கேள்விதான். குறிப்பாக எழுதும் ஆசிரியரின் அனுபவம் மற்றும் திறமை, கையாளும் மொழி நடை போன்றவை முக்கியம் பெறுகின்றன. ஆசிரியர் தலையங்கத்துக்காகவே சில வாசகர்கள் குறிப்பிட்ட சில பத்திரிகைகளை வாங்குவதுண்டு. ஒரு காலத்தில் (அப்பொழுது ஆங்கிலம் மட்டுமே அரசகரும மொழியாகவிருந்தது. ஆங்கிலத்திலேயே பெரும்பாலான பாடங்களும் பயிற்றுவிக்கப்பட்டன.) ஆங்கிலபாடம் போதிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களை ஆங்கிலப் பத்திரிகைகளை வாங்கிப் படிக்குமாறு குறிப்பாக அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர் கருத்துக்களை வாசிக்குமாறும் பணிப்பார்கள். அவைகளில் வரும் கருத்துக்கள், கையாளப்பட்டு இருக்கும் மொழி நடை மற்றும் பல விடயங்கள் வாசகர்களுக்குப் பயனுள்ளவையாக இருந்ததுண்டு.

### வித்தியாசம் வேண்டும்

சில பத்திரிகைகளில் இந்தக் காலத்தில் தலையங்கத்துக்கும் பத்தி எழுத்துக்கும் வித்தியாசம் காண்பது கடினமாக இருக்கின்றது. பொதுவில் சில பத்திரிகைகளில் ஆசிரியர் தலையங்கமும் பத்தியும் ஆசிரியராலேயே எழுதப்படுவதுண்டு. ஆனால், இரண்டுக்கும் பலவகையில் வேறுபாடு உண்டு. விடயம் ஒன்றாகவிருக்கலாம். ஆனால், அதன் வழங்குமுறையில் நிறையவே வித்தியாசம் தொனிக்கவேண்டும்.

இதனை அந்தக் காலத்தில் கே.பி.ஹரன் மிகச் சிறப்பாகக் கையாண்டிருந்தார். வீரகேசரியில் அவர் இருந்தபோது ஊர்க்குருவி என்றொரு பத்தி வரும். அதன் மொழிநடை மற்றும் அதில் இடம் பெறும் நகைச்சுவை சிலேடைகள் யாவும் உருசிகரமாகவிருக்கும். அதே சமயம் அவர் எழுதும் ஆசிரியர் தலையங்கம் ஆழமான கருத்துக்கள், வாசிப்பவரை சிந்திக்க வைக்கும் மொழியாற்றல் நிறைந்ததாகக் காணப்படும். ஊர்க்குருவி எழுதுபவர்தான் ஆசிரியர் தலையங்கமும் எழுதுகிறாரா என்று கேட்கத் தோன்றும். அது அவருக்கு கைவரப் பெற்றிருந்த திறமை.

பிற்காலத்தில் யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் நிர்வாக ஆசிரியராகப் பொறுப்பேற்றிருந்த காலத்திலும் ஆசிரியர் தலையங்கத்துடன் ஐயாறன் எழுதுவது என்ற பத்தியையும் எ ழு தி வந்தார். அப்போதும் அதே விதமாக இரண்டுவித மொழி நடைகளை அவரால் வெளிப்படுத்த முடிந்தது. இவ்வளவுக்கும் அவர் எழுதிய தலையங்கங்களின் சொல்லாட்சியானது மிக மிக எளிமையானது. எவரையும் புண்படுத்தாமல் தாம் எண்ணிய கருத்தை ஆணித்தரமாக அதேசமயம் எளிமையாக எழுத்தில் வடிப்பதென்பது எளிதான விடயமல்ல.

ஈழநாடு பத்திரிகையில் ஆசிரியராக இருந்த எஸ்.எம்.கோபாலரத்தினமும் அதே வகையில் ஆசிரியர் தலையங்கத்தையும் ஊர்சுற்றி என்ற பத்தியையும் எழுதி வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று சில தமிழ்ப் பத்திரிகைகளில் ஆசிரியர் தலையங்கம் எது, பத்தி எழுத்து எது என்பதே தெரியாமல் இருக்கிறது. பத்தியில் எழுத வேண்டிய மொழிநடை மற்றும் உத்திகளை ஆசிரியர் தலையங்கத்திலும் தலையங்கத்துக்குரியதை பத்தியிலும் எழுதுகிறார்கள். இவைகளின் வேறுபாட்டை வாசகர்களாலும் புரிந்து கொள்ள முடியாதிருக்கிறது. இந்தக் குளறுபடிகளைத் தமிழ் பத்திரிகைகளில் மட்டும்தான் காணமுடிகிறது.

எழுதுவதற்குப் பேனையும் பேப்பரும் கிடைத்துவிட்டால் தாம் எழுதுவதையெல்லாம் மக்கள் வாசித்தாக வேண்டும் என்று எழுதுகிறவர்களின் போக்கு இது. ஆசிரியர் தலையங்கம் சிலசமயம் எதிர்கால வரலாற்று ஆவணங்களாகக்கூடப் பயன்படுத்தப்பட முடியும். இந்தக் காலத்தில் எழுதப்படுபவைகள் பின்னொரு காலத்தில் ஆய்வுகளுக்குள்ளாகும் வாய்ப்புண்டு. அதனால் தலையங்கங்களை எழுதும் ஆசிரியர்கள் பொறுப்புடன் நடப்பதுடன் அதனை அவதானமாகவும் கையாள வேண்டும். எழுத்தில் எதையும் வடித்து விடலாம் என்பதல்ல. எதை எங்கே எவ்வாறு புகுத்துவதென்பது முக்கியம். இதைப் பத்திரிகை ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டும்.

ஆங்கிலப் பத்திரிகைகளில் இந்த நிலை கிடையாது. ஆசிரியர் தலையங்கம் என்பதை ஏதோ அரசியல் காழ்ப்புடன் எழுதப்படும் விடயமாக அவர்கள் மேற்கொள்வது குறைவு. எதுவானாலும் ஆசிரியர் தலையங்கத்தில் தாம் காணும் கனவுகள், கற்பனைக் கதைகளையெல்லாம் தொடர்களாக அவர்கள் எழுதுவதில்லை. பத்திகளே அவ்வாறு நகைச்சுவை, விகடம், அங்கதம் என்று சுவைபட எழுதப்படுகின்றது. ஆங்கிலப் பத்திரிகைகளை வாசிப்பவர்களுக்கு மட்டுமே இது புரியும். தலையங்கமானது பத்திரிகையில் வருகின்ற ஏனைய கட்டுரைகள், பத்திகள் மற்றும் இன்னோரன்ன விடயங்களுக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும்படி எழுதுவதென்பது சுலபமன்று. நிச்சயமாக நிறையவும் இதற்குப் பயிற்சி வேண்டும்.

ஈழநாடு பத்திரிகையின் பிற்கால பொறுப் பாசிரியராக இருந்தவரான என்.சபாரத்தினம் (முன்னாள் இந்துக் கல்லூரி அதிபர்) இதில் சிறப்புடன் விளங்கியமை நினைவு கூரத்தக்கது. அவரது தலையங்கங்களை அறிஞர்கள் பலர் விரும்பி வாசித்தமையும் குறிப்பிடத்தக்கது.





# காட்சிப் பிழை!

மனுஷ்யபுத்திரன்

திருமணங்களில் ஒளிப்படம் எடுக்கும் தொழில் வல்லுநர்களிடம், மணமக்கள் சிலர், தாங்கள் முதலிரவில் படுக்கையறையில் இருக்கும் அந்தரங்க காட்சிகளையோ அல்லது மண நாளில் தங்களை அரைகுறை ஆடையுடனோ ஒளிப்படம் எடுத்துத் தரும்படி கேட்பதாக, ஒரு செய்தியைச் சமீபத்தில் படித்தேன்.

இந்த செய்தியைப் படித்து நான் அதிர்ச்சியோ ஆச்சரியமோ அடையவில்லை. ஏனென்றால், இந்த நாட்டில், கற்பனையே செய்ய முடியாத, எந்த வியங்கள் வேண்டுமானாலும் நடக்கலாம். ஒட்டுமொத்த சமூகமுமே, மிகப்பெரிய பைத்திய நிலைக்கு சென்று கொண்டிருக்கிறதோ என்ற அச்சத்தை இதுபோன்ற செய்திகள் வெளிப்படுத்துகின்றன. மணமக்கள் அப்படி தங்களிடம் கேட்டபோது தாங்கள் அதிர்ச்சி அடைந்தனர் எனவும், அதைச் செய்ய மறுத்து விட்டார்கள் என்றும், அந்த ஒளிப்படக்காரர்கள் தெரிவிக்கின்றனர். 'டிஜிட்டல்' தொழில்நுட்பம் பரவலான பின், தன்னைத் தானே படம் எடுத்துக் கொள்வது என்ற மோகம், சமூகம் முழுக்க மிக ஆழமாக ஊடுருவி விட்டது. முன்பெல்லாம், கமரா வைத்திருப்பது ஒரு கலை உணர்வு, அழகுணர்ச்சியின் வெளிப்பாடாக இருந்தது.

கமரா வைத்திருப்பவர், இயற்கைக் காட்சிகளையோ, வாழ்வின் அபூர்வ தருணங்களையோ தேடித்தேடிச் சென்று படம் எடுப்பர். 'பிரிண்ட்' போடுவதில் ஆரம்பித்து, அதைக் கலையாக மாற்றுவதில் கவனம், தேர்வு, அணுகுமுறை எல்லாமே இருந்தது. ஆனால், 'டிஜிட்டல்' கமராக்களும், அலைபேசி கமராக்களும் எல்லாருடைய கைகளுக்கும் எளிதில் கிடைத்த பின், இந்த உலகில் எல்லாருமே ஒளிப்படக்காரர்களாகி விட்டனர்.

ஒளிப்படம் எடுப்பதில் இருக்கக்கூடிய, புறவயமான அழகியல் பார்வை எதுவும் தேவைப்படாமல், பார்க்கிற எல்லாவற்றையும் படம் எடுப்பது அல்லது இடைவிடாமல், தன்னைத் தானே படம் எடுப்பது என்ற நோய், மிகக் கடுமையாக உலகளாவிய பிரச்சினையாக இன்று மாறிவிட்டது. சாலையில் ஒரு கொடூரமான விபத்து நடந்தால்கூட அல்லது ஒரு மனிதன் இன்னொரு மனிதனை கொலை செய்து கொண்டிருந்தால்கூட, அதை உடனடியாக ஒளிப்படம் எடுக்க வேண்டுமென்பதைத் தவிர, அதைப் பற்றிய எந்தப் பதைபதைப்பும் இல்லாத ஒரு சமூகமாக நாம் மாறிவிட்டோம். தன்னைத்தானே இடைவிடாமல் ஒளிப்படம் எடுப்பதும், அவற்றைச் சமூக வலைத்தளங்களில் பதிவு செய்வதும், அன்றாட வாழ்க்கையின் மிக முக்கியமான பகுதியாகவே மாறிவிட்டது.

'செல்பி' எனப்படும், தன்னைத்தானே ஒளிப்படம் எடுத்துக்கொள்ளும் முறை, அலைபேசிக் கமரா வருவதற்கு முன்பே இருந்திருக்கிறது. 'டைமர்' பொருத்தப்பட்ட கமராக்களை ஓடச்செய்துவிட்டு, அதன் முன்னால் நின்று புகைப்படம் எடுத்துக்கொள்வது, நீண்டகாலமாக இருந்ததுதான். ஆனால், அது அப்போது ஒரு மனநோய் அல்ல.

ஒளிப்படம் என்பது, வாழ்வின் அரிதான சந்தர்ப்பமாக இருந்திருக்கிறது. ஆனால் இன்று, இடைவிடாமல் எடுக்கப்படும், 'செல்பி'க்கள், சுயமோகத்தின் உச்சக்கட்டம்! தன்னைத் தவிர வேறு எதன் மீதும் எந்தக் கவனமும் இல்லாத, ஒரு பரிதாப நிலையை இது உருவாக்கிவிட்டது. 'செல்பி' எடுத்துக்கொள்ளும் போது மாடியிலிருந்தோ, பாலங்களிலிருந்தோ விழுந்து இறப்பவர் பற்றிய செய்திகள் வருகின்றன. ஒருவர் ரயிலின் முன் 'செல்பி' எடுக்கப் போய், அது மோதி இறந்த செய்திகூட வந்தது.

இப்போது, 'செல்பி' எடுப்பதற்கு கைகளின் நீளம் போதாது என, அதற்கான நீண்ட குச்சிகளும் விற்பனைக்கு வந்துவிட்டன. அதனுடன், பொது இடங்களில் அலைபவர்களைப் பார்த்தால், பரிதாபமாக இருக்கிறது. இப்படி தினமும், நூற்றுக்கணக்கில் எடுக்கும் ஒளிப்படங்களை, யாருக்கும் திரும்பப் பார்ப்பதற்குக்கூட அவகாசம் இருக்கிறதா எனத் தெரியவில்லை. அந்த அளவுக்குத் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும்,



வாழ்வதை விட, அதைப் பதிவு செய்வதில்தான் கவனமாக இருக்கிறார்கள். இது, பொது உளவியலாக மாறி வருகிறது.

இதனுடைய ஆபத்தான உச்சக்கட்ட விளைவுதான், அந்தரங்கமான தருணங்களைப் படம் பிடிப்பது. தன்னைத்தானே கண்ணாடியில் அந்தரங்கமாகப் பார்த்துக் கொள்வது என்பது, மனித மனதில் எப்போதும் இருக்கக்கூடிய ஓர் ஆசைதான். ஆனால், தன்னையோ தன்னுடைய அந்தரங்கமான உறவின் தருணங்களையோ படம் பிடிப்பது, ஒரு விதத்தில் தற்கொலைக்குச் சமமானது. நிர்வாணத்தையோ அல்லது அந்தரங்கமான உறவுகளையோ திருட்டுத்தனமாகப் படம் பிடிப்பவர்கள் இருக்கின்றனர்.

ஆனால், சிலர் தாங்களே தங்களை அப்படி விரும்பி படம் எடுத்துக் கொள்வது என்ன வகையான மனச்சிக்கல்? ஓர் அந்தரங்கமான தருணத்தை, தன் மனதில் தேக்கி வைத்துக் கொள்ள முடியாத கற்பனை வறட்சி கொண்ட ஒரு சமூகம், எல்லாவற்றையும் காட்சியாகப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறதா? இதன் விளைவுகள் பயங்கரமானவை. தங்கள் அந்தரங்க உறவுகளையோ, தோற்றங்களையோ விளையாட்டாகவும், பாலியல் இன்பத்திற்காகவும் சுயமாகப் படம் எடுத்துக் கொண்டவர்கள், பின் மோசமான சிக்கல்களைச் சந்தித்துள்ளனர். இது இலங்கையில் தமிழர் தரப்பிலும் நடந்துள்ளது.

ஒரு நல்ல உறவின்போது எடுத்துக்கொண்ட ஒளிப்படங்கள் அல்லது வீடியோக் காட்சிகள் பின், அந்த உறவுகள் கசந்து விடுகிறபோது, ஒருவர் இன்னொருவரை மிரட்டுவதற்கோ பல்வேறு வகைகளில் அடிமைப்படுத்துவதற்கோ பயன்பட்டிருக்கிறது. இதன் காரணமாகப் பல கொலைகளும், தற்கொலைகளும் கூட நடந்திருக்கின்றன. விளையாட்டாக அலைபேசிக் கமராக்களில் எடுக்கப்பட்ட அந்தப் படங்கள், தவறுதலாக வேறு நபர்களுடைய கைக்குச் சென்று, அவை சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி, சரி செய்யவே முடியாத பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. 'டிஜிட்டல்' தொழில்நுட்பத்தில் பதிவு செய்யப்படுகிற எதையும் பாதுகாப்பது மிகவும் கடினமானது. அது சுலபமாக இன்னொருவரால் கைப்பற்றப்படக்கூடியது. ஆனால், இந்த அபாயங்கள் எல்லாம் தெரிந்தால்கூட, அதைப் பற்றிய எந்த உணர்வும் இல்லாமல், இந்த ஆபத்தான சாவு விளையாட்டில் பலரும் இறங்குகின்றனர். அதற்கு விலையாக, தங்கள் வாழ்வையே கொடுக்கின்றனர்.

இதன் அடுத்தகட்ட மனநோயின் வெளிப்பாடுதான், ஓர் ஒளிப்படக்காரரை வைத்து, தங்களை அந்தரங்கமாகப் படம் எடுத்துக் கொள்ளக்கூடிய துணிச்சல்!

கமரா வைத்திருப்பவர், இயற்கைக் காட்சிகளையோ, வாழ்வின் அபூர்வ தருணங்களையோ தேடித்தேடிச் சென்று படம் எடுப்பர்.

வாழ்க்கை மற்றும் அனுபவம் என்பது, கமராக்களில் பதிவு செய்யக்கூடிய வெற்றுக் காட்சிகள் அல்ல. அது நம் சிந்தனையாக ஆளுமையாக மாற வேண்டும். அதிலிருந்து நாம் பெறுகிற படிப்பினைகள், நம்மைப் புதிய அனுபவங்களுக்கு இட்டுச் செல்ல வேண்டும். நாம் எடுத்துக் கொள்ளக்கூடிய, ஆயிரக்கணக்கான ஒளிப்படங்களில் இருப்பது நம் மேலோட்டமான போலித் தோற்றங்கள் மட்டுமே. அந்தத் தோற்றங்களை இவ்வளவு ஆவேசமாக உற்பத்தி செய்து கொண்டே போவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

நாம் வாழ்க்கையை நேரடியாக வாழ்வதற்கும், அதன் அனுபவங்களை நம் மனதின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்வதற்கும் பதில், எல்லாவற்றையும் காட்சிகளாகப் பதிவு செய்துவிட்டு, அவற்றை அத்தோடு மறந்துவிடுகிறோம். இந்தக் காட்சிக் கலாசாரம், சுயவழிபாட்டு கலாசாரம் என்பது, நமக்குச் சிறந்த அடையாளங்களைத் தருவதற்குப் பதில், நம்மை எந்த அடையாளங்களும் இல்லாதவர்களாக மாற்றி விடுகிறது என்பதுதான் உண்மை.

(கட்டுரையாளர் தமிழகத்தின் பிரபலமான முதன்மை எழுத்தாளர்களில் ஒருவர்)

# பொலிஸாருக்கு இது போதாத காலம்!

ஸூடோ ஸ்வாமி



கார்த்திகை 23ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை கடைப்பிடிக் கப்படவுள்ள தேசிய சட்ட வாரத்தை ஒட்டியதாக நீதி அமைச்சு மற்றும் சட்ட உதவி ஆணைக்குழுவுடன் இணைந்து பிஏஸ்எல் (BASL) எனப்படும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

மக்களால் சட்டஅதிகாரமளிக்கப்பட்ட, நேரிய சட்டத்தை மதிக்கும் சமூகத்தை கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்ட பல செயற்றிட்டங்கள் இதன் கீழ் நடைமுறைக் கிடப்படவுள்ளன. அதன் ஒரு கட்டமாக, சிறுவர் துன்புறுத்தல்கள், பால்நிலை வன்முறை மற்றும் குடும்ப வன்முறை தொடர்பில் பொலிஸாருக்கு விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மையில் வாட்பிளேஸில் உள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (டிப்ளோமா (HNDA) மாணவர்கள் மீது பொலிஸார் பயன்படுத்திய வலு மற்றும் வன்முறை தொடர்பிலான எதிரொலிப்புக்கள் இன்னும் அடங்காத நிலையில், பொலிஸாரின் அறிவு உள்ளடக்கத்தினை சாணைபிடிக்கும் ஒரு முயற்சியாகவே இத்தகைய அறிவூட்டல் செயற்றிட்டத்தை முன்னெடுக்க சட்டத்தரணிகள் சங்கம் திட்டமிட்டிருக்கிறது.

ஆர்ப்பாட்டங்களை அடக்கும்போது அடிதடி பயன்படுத்தப்படுவது மாத்திரமன்றி பொலிஸாரின் கட்டுப்பாட்டில் – விளக்கமறியலில் – விளக்கம் அறிதலுக்கான மறியல் காலப்பகுதியில் சந்தேகநபர்கள் மீது கட்டவிழ்க்கப்படுகின்ற குரூர வன்முறை தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கான சுட்டு விரல்களும் அண்மைக் காலத்தில் காவல்துறையினரை நோக்கி நீட்டப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக சேயா சௌதமி விவகாரத்தில் சுற்றவாளிகளை குற்றவாளிகளாக்க நடத்திய நாடக விவகாரத்தில் சிக்கலை எதிர்கொண்டுள்ளது பொலிஸ் தரப்பு.




### இழப்பீடு கோரும் உயர்தர மாணவன்!

கம்பஹா பண்டாரநாயக்கா வித்தியாலயத்தைச் சேர்ந்த உயர்தர மாணவனான வெலகெதர சுரஞ்சன் பிரதீப் செனவிரட்ன, சேயா சௌதெமி வழக்கில் பிழையான முறையில் கைது செய்யப்பட்டமை மற்றும் துன்புறுத்தப்பட்டமை தொடர்பில் அடிப்படை உரிமை மீறல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாகக் கொட்டகதெனிய காவல்துறை பொறுப்பதிகாரி, நீர்கொழும்பு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுத்துறை பரிசோதகர் மற்றும் அதன் பணிப்பாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். பிரதிவாதிகளிடமிருந்து 10 மில்லியன் ரூபாவை நஷ்டஈடாக கோரியுள்ள மாணவன், வழக்காளியுடன் மேற்சொன்ன பிரதிவாதிகள் நடந்துகொண்ட விதம் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்றை நடத்த பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடக் கோரும்படி மன்றினைக் கேட்டிருக்கிறார்.

### கொண்டையாவுக்கு நிகழ்ந்த கொடூரம்!

சேயா சௌதெமி விவகாரத்துடன் தொடர்புடைய மற்றொரு நபரான கொண்டையா என்று அறியப்படும் டுனேஷ் பிரியசாந்தவும் விளக்கமறியல் காலத்தில் சந்தேகநபர்கள் எதிர்கொள்ளும் வில்லங்கங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து பொலிஸ் தரப்பினரின் பரிமாணத்தை போட்டுடைத்திருக்கிறார். தனது விளக்கமறியல் காலத்தின்போது பொலித்தீன் வகை பை ஒன்றினால் தனது தலையை மூடி கொன்கிரட் சுவர் வழியே தான் இழுத்துச் செல்லப்பட்டார் எனவும் பொல்லுகளால் தாக்கப்பட்டார் எனவும் அவர் விவரித்திருக்கிறார். தன்னால் வழங்கப்படாத வாக்குமூலம் ஒன்றில் தன்னுடைய கையொப்பத்தினைப் பெறுவதற்காக குற்றப் புலனாய்வுத் தரப்பினரிடம் சிக்கி வதைபட்டார் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

### புதையல் தோண்ட உடந்தையாயிருந்த அதிகாரி

வவுனியா குடாகச்சகொடி குளத்துக்கு அண்மித்த பகுதியில் புதையல் தோண்டியவர்களுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டின் பேரில் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் யு.கே. திஸ்ஸநாயக்காவும் மற்றொரு அதிகாரியும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கடந்த ஆனி மாதமளவில் குறித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பணியாற்றிய வேளையிலேயே இந்தக் குற்றச்செயல் இடம்பெற்றிருந்தது. தற்போது அந்த இருவரும் சட்டத்தின் தீர்ப்பிற்காகக் காத்திருக்கின்றனர்.

### இயங்கத்தொடங்கியுள்ள தேசிய பொலிஸ் ஆணைக்குழு!

இலங்கை அரசமைப்பின் 19ஆம் திருத்தத்துக்கு அமைவானதாக உருவாக்கப்பட்டுள்ள சுயாதீன தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கடந்த ஐப்பசி 14ஆம் திகதி முதல் இயங்கத் தொடங்கியுள்ளது. மனித உரிமையை நிலைநாட்டும் முகமாகவும் பொதுமக்களுக்குப் பொறுப்புகூறும் முகமாகவும் மற்றும் பொலிஸாருக்கு எதிரான பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்று விசாரணை செய்வதனையும் தனது செயற்பணிக் கூற்றாகக்கொண்டு செயற்படத்தொடங்கியுள்ள தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட ஏழு அங்கத்தவர்களும் அரசமைப்புச் சபையின் விதப்புரைக்கு அமைவாக ஜனாதிபதி மைத்திரி பாலவினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் தலைவராக மூத்த பேராசிரியர் சிறி ஹெட்டிகேயும் ஏனைய அங்கத்தவர்களாக பி.எச். மானதுங்க, சாவித்திரி விஜேசேகர, வை.எல்.எம்.ஸவாஹிர, அன்ரன் ஜெயநாதன், திலக் கொல்லுரே மற்றும் பங் டீ சில்வா ஆகியோர் நியமனம் பெற்றுள்ளனர்.

### குவியும் முறைப்பாடுகள்!

செயற்படத் தொடங்கி முதல் பத்து நாள்களை கடப்பதற்கு முன்பே தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு 120 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கிறார் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச கூரே. கிடைத்த முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன எனவும் அவர் கூறினார். பொலிஸார் மீது முறைப்பாடுகள் இருக்குமிடத்து அவற்றை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் உள்ள தமது ஆணைக்குழுவின் அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தும்படி அவர் கோரியிருக்கிறார்.

மக்களின் நண்பனாகவும் சட்டத்தின் காவலர்களாகவும் விளங்கவேண்டிய பொலிஸார் அதிலிருந்து விலகி, பயிரை மேயும் பல சம்பவங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இது, சட்டத்தின் மற்றும் நீதியின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையைத் தகர்ப்பதுடன், சமயங்களில் சட்டத்தைக் கையிலெடுக்கும் நிலவரத்தையும் தோற்றுவித்து விடுகிறது. நல்லாட்சிக்கான அரசு அத்தகைய சந்தர்ப்பங்களுக்கு வழிவகுக்கும் காரணிகளைக் கண்டறிந்து களையும் என்று நம்புவோமாக!

**வன்முறை தொடர்பிலான எதிரொலிப்புக்கள் இன்னும் அடங்காத நிலையில், பொலிஸாரின் அறிவு உள்ளடக்கத்தை சாணைபிடிக்கும் ஒரு முயற்சியாகவே இத்தகைய அறிவூட்டல் செயற்றிட்டத்தை முன்னெடுக்க சட்டத்தரணிகள் சங்கம் திட்டமிட்டிருக்கிறது.**



# நெருப்பை விழுங்கியவள்! 9

தொடர்கதை

எனக்கு அவள் பேச்சில் நம்பிக்கையிருந்தது. அவள் என்னை ஆழ நேசிக்கிறாள் என்ற அர்த்தமும் புரிந்தது. ஆனால், அப்படி என்ன புதிர் போடுகிறாள்என்டதுமட்டும்பிடிபடவில்லை தலையசைத்தேன்.

“ஓ.கே. நாளைக்கே நீ என்னோட வாறாய். கொஞ்சம் தூரப் பயணம். போய்வர முன்னைப் பின்னை கொஞ்சம் நேரமாகலாம்..... பிந்தலாம், முந்தலாம், பொழுதுபட ஆறு மணிக்குள்ள வந்திடுவன் எண்டு வீட்டில சொல்லிப்போட்டு வா. நான் கூட்டிவந்து விடுவன், பயப்படாதை. பாய்.!”

சித்திரா விடை பெற்றாள்.

எனக்கு மண்டைக்குள் எதுவோ செய்தது. அவள்தான் சொல்லிறாளே, இந்தச் சம்பந்தமே தேவையில்லை என்று. பிறகு எதற்காக ஒரு சுற்று? ஒரு தனித் தீர்மானம்?

சரி, வருவது வரட்டும். எதற்கும் நாளை ஒரு நாள்தானே. நாளைக்கு இரவே அம்மாவிடம் தீர்மானமாய் ஒரு முடிவைச் சொல்லி விடலாமே..... இப்படியான பிரச்சினைகளை வைச்சுப் பிசைந்து கொண்டிருக்கிறதைவிட, முடிவு கண்டு விடுவதுதான் சிறப்பென மூளையின் ஒரு பகுதியில் அதிர்வொன்று தோன்றியது.

இப்போது நிதானமாக நடந்தாள் அனித்தா.

வீட்டுக்கு வந்தபோது, அம்மா வழமை போலவே தயாரான தேநீரோடு காத்திருந்தாள்.

அதனை வாங்கி ஒரே தடவையில் உறிஞ்சிவிட்டு நிமிர்ந்தபோது அம்மா சொன்னாள்.

“இண்டைக்கும் மாமா வந்து போறானடி பிள்ளை...”

எனக்கு எரிச்சலாயிருந்தது.

இப்பவே வேண்டாமென்று அடித்தாற்போல் சொன்னாலென்ன என்று மனது பரபரத்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

“அம்மா, பொறுத்ததுதான் பொறுத்தாய்? இன்னொரு ரெண்டு நாள் கூடவே பொறுத்துக்கொள்ளேன், நாளை இரவோ, மறுநாளோ இழுத்தடிக்காமல் இதுக்கொரு முடிவு சொல்லுறன்.”

அம்மாவின் முகம் லேசாய் மலர்ந்தது.

அந்த மகிழ்ச்சியின் உள்ளே ஒழிந்திருப்பது என்னவென்று புரியவில்லை. இணங்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பாய் இருக்கலாம். அது தவிடு பொடியாய்ப் போனால் மனம் பேதலிப்பாளே!



அந்த மலர்ச்சியை என் பதில் நிலைநிறுத்துவது சாத்தியமில்லை என்றே மனதுக்குள் தோன்றியது.

“மேலைக் கழுவிக்கொண்டு வந்து சாப்பிடு. காலையிலும் ஒண்டுமில்லை...” அம்மா பரிவுடன்தான் கூப்பிடுகிறாள். ஆனால், இன்னும் எதுவோ என்னிடமிருந்து நிறையவே எதிர்பார்க்கிறாள் போலும்.

பாவம், அம்மாதான் என்ன செய்வாள்? தன் பிள்ளை தனிச்சுப் போகக்கூடாதே என்ற பரிதவிப்பு அவளுக்கு.

குளித்து, உடைமாற்றி, சாப்பிட்டு, சிரித்து, கொஞ்சம் மனம் திறந்து கதைத்து அம்மாவைக் குளிர்வித்துவிட்டு, அப்பாவோடு அளவளாவி, கிளினிக் போன விவரமெல்லாம் கேட்டு, இனி எந்த நேரத்திலும் எதற்கும் டென்சனாகக்கூடாது என்று முன்கூட்டியே உபதேசித்து, நாளை தான் கூறப்போகும் பதிலால் சிலவேளை அவர் அதிர்ச்சிக்குள்ளாக நேருமோ என்று கொஞ்சம் பயந்து, அதற்கு அத்திபாரமாக சில பகிடிக் கதைகள் சொல்லி இருவரையும் சிரிக்கவைத்து, வாழ்க்கையில் என்ன நிலை வந்தாலும் எப்பொழுதும் எவரும் அதுபற்றி அலட்டிக் கொண்டிராமல் பதற்றமோ பரபரப்போ இன்றி, மேலே நடக்கப்போவது பற்றித்தான் நல்லபடி சிந்தனை செய்யவேண்டுமேயன்றி மனச்சோர்வடையக்கூடாது என்று வலுவான ஓர் உபதேசம் செய்து, தானே ஒரு குருவாய் கீதோபதேசம் செய்த கண்ணனாய் தன்னைக் கற்பிதம் செய்துகொண்டு அந்த வீட்டை வழி நடத்தும் குடும்பத் தலைவியான ஒரு பாங்கை உருவகித்துக் கொண்டு, அம்மாவுக்கு அடுத்த நாள் சமையலுக்கு ஒத்தாசை புரிந்து, எல்லாவற்றிலும் திருப்தி கண்டுவிட்டதான ஒரு மனநிறைவுடன் அன்றுதான், கொஞ்சம் மன மகிழ்வோடு கண்ணயர்ந்தாள் அனித்தா.

விடிந்து, அம்மாவிடம் விடைபெற்று பஸ் ஸ்ராண்டுக்கு வந்தபோது, அவளுக்காகக் காத்திருந்தாள் சித்திரா.

“இப்பவாவது சொல்லேண்டி, எங்கள் பயணம் எது வரையென்று....”

அனித்தாவுக்கு அவசரம். அவள் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

“சொன்னால் போச்சு... கொண்டக்டருக்குச் சொல்லப்போறதை இப்ப உனக்கே சொல்லப்போறதால என்ன குறையப்போகுது?”

அப்பொழுதும் பீடிகை போட்டாளே தவிர பதில் சொல்வதாய்க் காணோம்.

“அவவின்ரை அவசரத்தைப் பாரன்...”

விரல்களில் சொடுக்கெடுத்தாளே தவிர வாய் திறப்பதாய்க் காணோம்.

மீண்டும் உளவியல் புத்தியால் தன்னை அளக்கிறாளோ என்று நினைத்தபோது, தன்னை அறியாமலே இவளுக்குச் சிரிப்பாய் வந்தது.

“அதென்னடி, உனக்குள்ள ஒரு சிரிப்பு?”

“அதையுந்தான் உன்ர லொஜிக்கல் ரலன்ரை வைச்சுக் கண்டுபிடிக்கிறது....”

அவளுக்குச் சூடாக ஒரு பதில் கொடுத்ததில் இவளுக்கு கொஞ்சம் சந்தோசமாகக்கூட இருந்தது. முகத்தை உம் என்று வைச்சுக் கொண்டாள் அனித்தா.

“இருந்தாலும், உனக்கு இவ்வளவு கோபம் கூடாது அனி! சரி, போறது போகத்தானே போறம். அதுக்கு முன்னம் இதைக்கேள். உன்னைப் போலவே எனக்கு இன்னொரு உயிர்த்தோழி இருக்கிறாள்... அவள் வீட்டுக்கு உன்னோட ஒரு விசிட். அவ்வளவுதான். உனக்கும் ஒரு சேஞ்சாய் இருக்குமெல்லே... நீ நேற்றுக்கேட்ட விசயத்துக்கும் ஒரு நல்ல பதில் கிடைக்கும். இப்போதைக்கு இது போதுமா?”

சித்திரா பேசி முடிக்கவும், பஸ் வந்து சேரவும் சரியாயிருந்தது.

(நெருப்பு உமிழும்...)

# கன்னி கழிக்கவோ

மூலபாரதி

தமிழுக்கு இன்னும்
கன்னி கழியவில்லை!
தமிழை அன்னை
என்கிறார்கள்!

தாய் நாடென்றும்
மொழி என்றும்
சேயாகத் துடிப்போர்
சேலைகட்டி விட்டார்

என்றைக்கும் பாவாடை
தாவணியில் உலாவரும்;
கன்னித் தமிழினை
கன்னி கழிக்கவோ?

இன்னுமின்னும் பலகோடி
இவ்வுலகம் வாழ்ந்தாலும்;
கன்னி என்கின்ற
கடாட்சம் மாறிடுமோ?

தமிழை எந்தக் கவிஞனும்
தட்டித் தட்டிப் பார்த்தாலும்;

அமிழ்தினும் குறையாமல்
அறுசுவை ஊட்டுவாள்
ஆனாலும் எவராலும்
கன்னி கழியவில்லை!
தேனாகக் கவிதைகளில்
தேடிவந்து ஊட்டுவாள்!



# பறக்கும் ரொட்டி

முன்னொரு காலத்தில் ஜப்பானியக் கிராமம் ஒன்றில் முதியவர் ஒருவர் தனது மனைவியுடன் வாழ்ந்து வந்தார். ஒரு நாள், அவர் தனது மனைவியிடம் தனக்கு அரிசிமா ரொட்டி சுட்டுத் தரும்படி கேட்டார். அவருடைய விருப்பத்துக்கு ஏற்ப அவரது மனைவியும் அரிசிமா ரொட்டி சுடுவதில் தீவிரமாக ஈடுபட்டாள். முதியவரும் தனது மனைவிக்குச் சிறு உதவிகள் செய்து கொடுத்தபடி அடுப்புக்குப் பக்கத்திலே அமர்ந்திருந்தார். சட்டியில் வெந்து கொண்டிருந்த ரொட்டி ஒன்றை எடுத்து பக்கத்திலிருந்த கோப்பையில் வைத்தார் முதியவர். அடுத்த கணம்..! அந்த ரொட்டி கீழே துள்ளிப் பாய்ந்து வெளியே உருண்டு பறக்க ஆரம்பித்தது. 'ஐயோ!' என்று அலறியபடி பாய்ந்த முதியவர். அந்த ரொட்டியைப் பிடிக்க முயற்சித்தார். ஆனால் அது மிக வேகமாக வீதியில் பறக்க ஆரம்பித்தது. நில்! நில்!.. என்று சத்தமிட்டபடி அந்த முதியவர் அதன் பின்னால் ஓட ஆரம்பித்தார். "நான் ஓஜிஷோசாமாவின் குகை ஆலயத்துக்குப் போகின்றேன்... அங்கு நீங்களும் வாருங்கள்.." என்று கூறியபடி பறந்தோடியது அந்த விசித்திர ரொட்டி குகைக் கோயிலுக்குள் காணப்பட்ட ஓஜிஷோசாமாவின் பிரமாண்டமான சிலையின் முன்னால் மண்டியிட்டு வணங்கினார் முதியவர்." எனது மதிப்புக்குரிய ஓஜிஷோசாமா! திடீரென நான் இங்கு வந்ததற்காக மன்னித்து விடு எனது ரொட்டியைத் துரத்திக் கொண்டே இங்கு வந்து சேர்ந்தேன்" இவ்வாறு கூறியபடி சிலைக்குப் பக்கத்தில் கிடந்த அரிசிமா ரொட்டியை எடுத்து இரண்டு துண்டுகளாக்கினார் முதியவர். அழுக்குப் படிந்த ரொட்டித் துண்டைத்தான் வைத்துக் கொண்டு அழுக்குப் படியாத பாதி ரொட்டியைச் சிலைக்குக் கொடுத்தார்."எனது அன்புக்குரிய ஓஜிஷோசாமாவே எனது சிறிய காணிக்கையைத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்" என்று பணிவுடன் கூறினார் முதியவர்.

ரொட்டித் துண்டைப் பெற்றுக்கொண்ட ஓஜிஷோசாமா சிலை, "முதியவரே உடனே எனது மடியில் ஏறி அமர்ந்து கொள்ளுங்கள்" என்று தணிந்த குரலிலே கூறியது. அதிர்ச்சியடைந்த முதியவர், செய்வதறியாது திகைத்து நின்றார். பின்பு மெதுவாக ஏறி அந்தச் சிலையின் மடியில் அமர்ந்து கொண்டார். "முதியவரே உடனடியாக எனது தலையில் ஏறி அமர்ந்து கொள்ளுங்கள்... தாமதிக்க வேண்டாம்.. உடனே ஏறி அமருங்கள்" என்று உத்தரவிட்டது ஓஜிஷோசாமாசிலை. மந்திரத்தால் கட்டுப்பட்டவனைப் போல சிலையின் தலையில் ஏறி அமர்ந்து கொண்டார் முதியவர். ஓஜிஷோசாமா ஓர் அழகிய விசிறியை முதியவரிடம் கொடுத்து விட்டு "முதியவரே நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். இன்னும் சிறிது நேரத்தில் சில முரடர்கள் மது போதையுடன் இங்கு வந்து எனது முன்னிலையில் சூதாடுவார்கள். உடனே கையில் உள்ள விசிறியைத் தலையில் அடித்தபடி சேவலைப் போல கூவ வேண்டும்" என்றது. அப்போது சில முரடர்கள் மதுபோதையில் ஆடி அசைந்தபடி அங்கு வந்து அமர்ந்து கொண்டனர். சட்டைப் பைகளில் இருந்த தங்க நாணயங்களை எடுத்துத் தங்களுக்குப் பக்கத்தில் பரப்பிக் கொண்டு கும்மாளமடித்தபடி சூதாடினர். நேரம் நகர்ந்து கொண்டேயிருந்தது. முதியவர் தனது கையிலிருந்த விசிறியைத் தலையில் பலமாக அடித்தபடி கொக்கறக்...கோ...! என்று சேவலைப் போல தொண்டை கிழியக் கூவினார். அடுத்த கணம்..! "ஐயையோ சேவல் கூவி விட்டது... பொழுது விடியப்போகிறது. வாருங்கள் ஓடித் தப்புவோம்" என்று கூறியபடி முண்டியடித்துக் கொண்டு அனைத்து முரடர்களும் ஓடினர். அவர்கள் சூதாடிய இடத்தில் தங்க நாணயங்கள் சிதறிக் கிடந்தன. "முதியவரே கீழே இறங்கித் தங்க நாணயங்களை அள்ளிக் கெண்டு வீடு போய்ச் சேருங்கள்" என்று கூறியது ஓஜிஷோசாமா சிலை.

தங்க நாணயங்களை எல்லாம் ஒரு பையில் அள்ளிக் கொண்ட முதியவர். ஓஜிஷோசாமா சிலைக்குச் சிரம் தாழ்த்தி நன்றி தெரிவித்து விட்டு தனது வீட்டுக்கு விரைந்தார். வழிமேல் விழிவைத்து கணவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவரது மனைவி அவரைக் கண்டதும் ஓடிச்சென்று அவருடைய கையைப் பற்றிக் கொண்டு கண்ணீர் சிந்தினாள். "பறக்கும் ரொட்டிக்குப் பின்னால் ஓடிய நீங்கள் இதுவரை என்ன செய்தீர்கள், உங்களைக் காணாமல் நான் பயந்து விட்டேன்" என்று விம்மினாள். நடந்த விடயத்தை விளக்கிக் கூறி தங்க நாணயங்களைக் கீழே குவித்து விட்டார் முதியவர். தங்க நாணயங்களைக் கண்டதும் பெருமகிழ்ச்சி அடைந்தாள் அவள். இருவரும் தங்க நாணயங்களை எண்ணிக் கணக் கிடுவதில் ஈடுபட்டிருந்த போது, அடுத்த வீட்டுப் பாட்டி திடீரென அங்கு வந்தாள். குவிக்கப்பட்டிருந்த தங்க நாணயங்களைக் கண்டதும் அந்தப் பாட்டி ஆச்சரியத்துடன் வைத்த கண் வாங்காது தங்க நாணயங்களையே பார்த்தபடி நின்றாள். "உண்மையைச் சொல்லுங்கள் ... இவ்வளவு தங்க நாணயங்களை எங்கிருந்து பெற்றீர்கள், செல்வந்தர்களாவதற்கு என்ன செய்தீர்கள்?" என்று ஆவலுடன் கேட்டாள் அந்தப் பொறாமைக்காரப் பாட்டி. கள்ளங் கபடமற்ற முதியவர் நடந்தவற்றையெல்லாம் விவரமாகக் கூறினார். பொறாமைக்காரப் பாட்டி அவசர அவசரமாகத் தனது வீட்டுக்குச் சென்று இந்த விடயத்தை தனது கணவரிடம் கூறி, நாளை குகைக் கோயிலுக்குள் செல்லும்படி கூறினாள். அடுத்த நாள் ரொட்டி ஒன்றைச் சுட்டுக் கொடுத்து, ஓஜிஷோசாமாவின் குகைக் கோயிலுக்கு அனுப்பிவைத்தாள் பொறாமைக் காரப் பாட்டி. குகைக் கோயிலை அடைந்த தாடிக்கார முதியவர் முக்கால் பங்கு ரொட்டியைத் தின்று விட்டு கால்பங்கு ரொட்டியைச் சிலைக்கு முன்னால் வைத்தார். பின்பு கையிலிருந்த விசிறியை எடுத்துக் கொண்டு சிலையின் தலையில் ஏறி அமர்ந்து கொண்டார். முரடர் கூட்டம் உள்ளே வந்து சூதாட ஆரம்பித்ததும் விசிறியை அடித்தபடி கொக்கறக்கோ... என்று சத்தமிட்டார். என்ன அதற்கிடையில் பொழுது விடிந்து விட்டதா? முணுமுணுத்தபடி சிலையைப் பார்த்த முரடர்கள், தாடிக்கார முதியரை குரங்குப் பிடியாகப் பிடித்து அடித்துத் துரத்தினர். அலறி அடித்துக் கொண்டு ஓடிய தாடிக்கார முதியவரைக் கண்டு திகைத்து நின்றாள் அவருடைய மனைவி. பெண்ணே எல்லாம் உனது பொறாமைக் குணத்தால் வந்த வினை தான் மற்றவர்கள் செய்வதைப் பார்த்துக் கொப்பி அடிப்பது ஆபத்தானது என்று கூறியபடி வேதனைப் பெருமூச்சு விட்டார் தாடிக்கார முதியவர்.

# கல்வித் தெய்வம்



கல்வித் தெய்வம் சரஸ்வதியாம்
பல வித்தைகள் நமக்கு தந்திடுவார்
வீணையைக் கையினில் ஏந்தி
வாணி எனும் பெயர் பெற்றார்
நாவினிலே நர்த்தனமிட்டு
நாமகள் என்ற நாமம் கொண்டார்.
கலைகள் யாவுக்கும் தலைவியாகி
சகலகலா வல்லி என பேர் கொண்டார்
ஒரு கையில் ஏடு தாங்கியே
கல்வியின் மகிமையை நமக்கு போதித்தார்
வெள்ளையுடை விரும்பி அணிந்தே
தூய்மையின் மகிமை நமக்கு போதித்தார்
வெண் தாமரை மீதமர்ந்து
பாடசாலை படிப்பின் பெருமை சொன்னார்
மாலைதனை கரமதில் கொண்டவரை
காலை மாலை அனுதினமும் போற்றிடுவோம்
நான்முக நாயகியை நாளும் பொழுதும் தொழுவோமே

வாகினி கிருபாகரன்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



ச.அருணா,
அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.



ச.புருஷோத்தமன்,
தரம் 2 ஏ
முத்துஐயன்கட்டு ம.வி



சு. ஸ்ரீகுருபிரசாத்,
தரம் 9டி,
யாழ். இந்துக் கல்லூரி.



பி.அங்குஜன்,
தரம் 1,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.



# பொம்மை

பொம்மை பொம்மை பொம்மை பார்
புதிய புதிய பொம்மை பார்
தலையை ஆட்டும் பொம்மை பார்
தாளம் போடும் பொம்மை பார்
கையை வீசும் பொம்மை பார்
கண்ணை சிமிட்டும் பொம்மை பார்
பார்த்து சிரிக்கும் பொம்மை பார்
பட்டுப் போன்ற பொம்மை பார்
எனக்கு கிடைத்த பொம்மை போல்
எதுவும் இல்லை உலகிலே

பு.சந்தோஷ்,
தரம்-2,
மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை.

# இந்த வாரம்

## 08.11.2015 முதல் 15.11.2015 வரை

## உங்களுக்கு எப்படி?



### மேடம்

குரு, ராகுவினால் நன்மை உண்டு. பணிகள் எளிதில் நிறைவேறும். எதிர்பார்த்த செயல் ஒன்றில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும். உடன் பிறந்தவர்களைக் குறை சொல்ல வேண்டாம். வாகனம் இயக்கும் போது மிதவேகம் பின்பற்றவும், புத்திரர்கள் பாசம் கொள்வர். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். மனைவியின் உடல்நலத்துக்குச் செலவு வரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் குடும்ப நலம் காத்திடுவர். மாணவர்களுக்கு ஞாபகத்திறன் வளரும். தட்சிணாமூர்த்தி வழிபாடு, நன்மை தரும்.



### இடபம்

சுக்கிரன், சூரியன், புதன், கேது அனுகூல அமர்வில் உள்ளனர். நண்பர்களின் உதவி கிடைக்கும். பணிகள் வேகமாக நடக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். புதிய சொத்து வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர்களின் எதிர்கால நலனுக்குத் தேவையானதைச் செய்வீர்கள். உடல் நிலை நன்றாக இருக்கும். வாழ்க்கைத் துணையுடன் கருத்து ஒற்றுமை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். கொடுக்கல், வாங்கல் சீராகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் சந்தோச வாழ்வு பெறுவர். மாணவர்கள் நன்றாகப் படித்து பாராட்டு, பரிசு பெறுவர். லட்சுமி நரசிம்மரை வழிபடுவது, மேலும் பயன் தரும்.



### மிதுனம்

செவ்வாய், சுக்கிரன், சனி பகவான் நற்பலன்கள் வழங்குவர். மனதில் தைரியம் வளரும். முருகப்பெருமானின் அருள்பலம் துணை நிற்கும். புத்திரர்கள் நன்மை, தீமை எதுவென உணர்ந்து கொள்வர். எதிர்ப்பாளர்கள் ஒதுங்கிப் போவார்கள். மனைவி வழி சார்ந்த உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். புதியவர்களின் ஆதரவினால் தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதல்படி நடப்பர். பெண்கள் வீட்டுச் செலவுக்கு போதுமான பணம் பெறுவர். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் கொள்வர். முருகன் வழிபாடு வெற்றியளிக்கும்.



### சிங்கம்

சுக்கிரன், சூரியன் நீசம் பெற்ற நிலையிலும் அனுகூலம்தருகின்ற இட அமர்வில் உள்ளனர். ஆடம்பரச் செலவைத் தவிர்க்கவும். இடம், சூழல் உணர்ந்து பேச வேண்டும். உடன் பிறந்தவர்கள் ஓரளவு உதவுவர். புத்திரர்கள், அறிவு, செயல்திறனில் மேம்படுவர். எதிரிகள் செய்த கெடுசெயல் நன்மை தருவதாக மாறும். மனைவி, உங்கள் கௌரவம் பெருக வழி சொல்வார். தொழில், வியாபாரத்தில் பணவரவு ஓரளவுக்கு இருக்கும். பணியாளர்கள் கடமையை உணர்ந்து செயல்பட்டு நிர்வாகத்தின் மதிப்பைப் பெறுவர். மாணவர்கள் நன்றாகப் படிப்பர். பெருமாள் வழிபாடு, தொழிலில் வளர்ச்சி தரும்.



### கடகம்

புதன், சுக்கிரன், குரு, ராகு தாராள நன்மை தருவர். பேசும்வார்த்தைகள் வசீகரமாகும். தடையாக இருந்த சூழல் மாறும். சமூகத்தில் கூடுதல் அந்தஸ்துக் கிடைக்கும். வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். வாழ்க்கைத் துணையுடன் விருந்து, விழாவில் கலந்து கொள் வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வீர்கள். பணியாளர்களுக்கு நல்ல சலுகை, அதிக பணவரவு கிடைக்கும். பெண் கள், உறவினர்குடும்ப சுப நிகழ்ச்சிகளுக்கு பணம் கொடுத்து உதவுவர். மாணவர்கள் புதிய பயிற்சியில் இணைய வாய்ப் புண்டு. ஆஞ்சநேயர் வழிபாடு, நன்மை தரும்.



### கன்னி

சுக்கிரன், சனி, சந்திரனால் நன்மை உண்டு. முகத்தில்சந்தோப் பொலிவு ஏற்படும். பயணங்களால் நன்மை ஏற்படும். புத்திரர்களின் சந்தேகங்களை நல்ல கருத்துக்களால்நிவர்த்தி செய்வீர்கள். உடல்நலம் சீராகும். வாழ்க்கைத்துணை, உங்களுக்கு பெரும் ஒத்துழைப்புத் தருவார். தொழில், வியாபாரத்தில் சில மாற்றங்கள் உருவாகும். பணியாளர்கள்தாழ்வு மனப்பாங்கை அகற்றவும். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் நண்பர்களின் உதவியை பெறுவர். வைரவர் வழிபாட்டால், நன்மை ஏற்படும்.



### துலாம்

சுக்கிரன், கேது மற்றும் குரு மங்கல சேர்க்கை அதிர்ஷ்ட பலன்களைத்தரும். மனதில் சந்தோசம், முகத்துக்கு வசீகரத்தைத் தரும். பேச்சில் நிதானம் இருக்கும், உடன் பிறந்தவர்கள் உதவுவர். புத்திரர்களின் அறிவு, செயல்திறன் மேம்படும். மனைவி வழி சார்ந்த உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சாதனை நிகழ்த்துவர், பெண்கள் வீட்டு அலங்காரப்பொருள் வாங்குவர். மாணவர்கள் அதிக புள்ளிகள் பெற்று தேர்ச்சி பெறுவர். சிவன் வழிபாடு, தொழிலில் சிறப்புத் தரும்.



### விருச்சிகம்

ராகு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டு. சோம்பலைத் தவிர்ப்பதால் பணிகள் நிறைவேறும். வெளியூர் பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் வழியில் சுபநிகழ்வு உண்டாகும். உடல்நலம் பேணுவதில் அக்கறை வளரும். மனைவி உங்களின் நல்ல எண்ணங்கள் வெற்றி பெற உதவுவார். தொழில், வியாபாரத்தில் மூலதனத் தேவை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும். பெண்கள், செலவில் சிக்கனம் பின்பற்றி சேமிப்பர். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் குறையலாம். வெளியிடங்களில் சுற்றுவதைக் குறைக்கவும். அம்மன் வழிபாடு, மகிழ்ச்சி தரும்.



### தனுசு

குரு, சூரியன், புதனால் நன்மை கிடைக்கும். முக்கியமான பணிகள் நிறைவேறும். அரசு சார்ந்த உதவி கிடைக்கும். பூர்வீகச் சொத்தில் வளர்ச்சியால் பணவரவு கூடும். புத்திரர்களின் மனதில் நம்பிக்கை வளரும். உடல்நலத்துக்கு சிகிச்சை தேவைப்படலாம். மனைவியின் செயலைக் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் வியத்தகு வளர்ச்சி பெறும். பணியாளர்கள் அதிக வருமானத்தால் நிறைவாகச் சேமிப்பர். பெண்கள், தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள் நன்றாகப் படிப்பர். விநாயகர் வழிபாடு, வினை தீர்க்கும்.



### மகரம்

பெரும்பான்மைக் கிரகங்கள் அனுகூலமாக உள்ளன. செயல்களில் அதிக நன்மை கிடைக்கும். பூர்வீகப் புண்ணிய பலன் துணை நிற்கும். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். புத்திரர்கள் உங்கள் எண்ணங்களைப் புரிந்து நடந்து கொள்வர். கடன்களைச் செலுத்துவீர்கள். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதி கரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் நண்பர்களுக்கு உதவுவர். மகாலட்சுமி வழிபாடு செல்வ வளம் தரும்.



### கும்பம்

குரு, சுக்கிரன், சந்திரன் நன்மை தருவர். எண்ணமும், செயலும் சிறப்பாகும். குடும்பத்துக்கான செலவு அதிகரிக்கும். பயணங்கள் எளிதாகும். புத்திரர்கள் உடல் வலிமை பெறச் சத்தான உணவு தருவீர்கள். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டுவர். மனைவியிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு சரியாகும். தொழில், வியாபாரம் செழிக்க, உரிய கவனம் கொள்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், புத்தாடை, அணிகலன் வாங்குவர். மாணவர்கள் தெளிந்த சிந்தனையுடன் படிப்பர். சாஸ்தா வழிபாடு இடர் நீக்கும்.



### மீனம்

செவ்வாய், புதன், சந்திரன் நன்மை தருவர். மனதில் எதிர்மறையான சிந்தனை விலகும். லட்சிய உறுதியுடன் பணிபுரிவீர்கள். சகோதர வழியில் மங்கல நிகழ்வு ஏற்படும். வாகனப் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர்கள் அன்புடன் நடந்து கொள்வர். கடன் தொந்தரவு குறையும். மனைவியின் மனதில் நம்பிக்கை வளரும் விதத்தில் செயல் திட்டங்களை அமைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். பணியாளர்களுக்கு வேலைப்பளுவும், சலுகைகளும் கூடும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்கவேண்டாம். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். ராமபிரான் வழிபாடு நன்மையைத் தரும்.

# பளபளப்பான சருமத்துக்குத் தேன்

தேனுடன் கொண்டைக் கடலை மாவைச் சேர்த்துக் கலந்து, முகத்தில் பூசி 20 நிமிடங்கள் கழித்துக் கழுவினால் முகம் பளபளக்கும். தேவையற்ற முடியை அகற்ற தேன், சர்க்கரை, எலுமிச்சைச் சாறு கலந்து, சூடு செய்த பின், சருமத்தில் பஞ்சைவைத்து தடவி, முடிகளை நீக்கலாம். வெயிலினால் கறுத்த சருமம் பளபளப்பு பெற ஒலிவ் எண்ணெயுடன் தேன் கலந்து, முகத்தில் தடவலாம்.



# மாம்பழ பேஸ் பேக்

நாற்பது வயதை நெருங்கினாலே சிலருக்கு கழுத்தில் சுருக்கம் விழ ஆரம்பிக்கும். இதற்குப் பாதாம் பருப்பும் கசகசாவும் சம அளவில் சேர்த்து அரைத்த மாம்பழ விழுது ஒரு கரண்டி, பட்டர் ஒரு கரண்டி; சேர்த்துக் கலந்து, அந்தப் பேஸ்ட்டை கழுத்துப் பகுதியில் மேலிருந்து கீழாகப்பூசி காய்ந்ததும் கழுவவும். இதை ஒரு மாதம் தொடர்ந்து செய்தால் கழுத்துச் சுருக்கம் நீங்கி கழுத்து சங்கு போல மின்னும்! தினமும் குளிப்பதற்கு முன் ஒரு கரண்டி வேப்பம்பூ விழுது, அரைக்கரண்டி மாம்பழச் சதை, அரைக் கரண்டி நல்லெண்ணெய் கலந்து முகத்தில் பூசுங்கள். பருக்கள் மறைந்து முகம் பிரகாசிக்கும். இதிலுள்ள நல்லெண்ணெய் தோலின் பளபளப்பைக் கூட்டி, கூடுதல் மிருதுவாகும். மாம்பழச் சதையுடன் அதே அளவு உலர் திராட்சையைச் சேர்த்து அரைத்து அதை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விடுங்கள். உதடுகள் உலர்ந்து போகும் போதெல்லாம் இந்த ஐஸ்கட்டியை ஒரு துணியில் சுற்றி உதட்டின் மேல் தடவுங்கள். தோடை மற்றும் மாம்பழச் சாறை சம அளவு எடுத்து குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். புருவங்களில் விளக்கெண்ணெய் அல்லது நல்லெண்ணெயை ஒரு துளி தடவி இந்த ஐஸ்கட்டியை ஒரு மெல்லிய துணியில் சுற்றி கண் மற்றும் புருவத்தில் ஒற்றி எடுங்கள்.

# பருக்கள் வராமல் தடுக்க

**முகத்தைக் கழுவவும் :**
பலரும் குளிர்ந்த நீரில் தான் முகத்தைக் கழுவுவோம். ஆனால் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவினால், சருமத்தில் எண்ணெய்ப் பசையின் சுரப்பு அதிகரித்து, அதனால் பருக்கள் வரும் என்று தெரியுமா? எனவே தினமும் 3-4 முறை வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவ வேண்டும்.

**கசப்பான உணவுகள் அவசியம் :**
ஆயுள்வேத மருத்துவமானது, உணவில் கசப்பான உணவுப் பொருள்களை அதிகம் சேர்க்கச் சொல்லும். ஏனெனில் கசப்பான உணவுப் பொருள்கள் குருதியைச் சுத்தம் செய்வதோடு, சருமத்தில் எண்ணெய்ச் சுரப்பையும் கட்டுப்படுத்தும். எனவே கசப்பான உணவுப் பொருள்களான பாகற்காயை வாரம் ஒருமுறை உணவில் சேர்ப்பதோடு, தினமும் சிறிது வேப்பிலையை உட்கொள்வது, பருக்கள் வருவதைத் தடுத்துவிடுவதோடு, உடல் ஆரோக்கியத்தையும் மேம் படுத்தும்.

**துளசி பேஸ்ட் :**
நீங்கள் பருக்களால் கஷ்டப்பட்டால், துளசி இலையை அரைத்து பேஸ்ட் செய்து, பருக்களின் மீது வைத்து உலர வைத்து கழுவ வேண்டும். இப்படி வாரம் மூன்று முறை செய்து வந்தால் நல்ல பயன் கிடைக்கும்.

**யோகா :**
யோகா உடல் ஆரோக்கியத்தை மட்டும் மேம்படுத்துவதோடு, பல சருமப் பிரச்சினைகளையும் குணப்படுத்த உதவும். அதற்கு வாயில் காற்றை நிரப்பிச் சிறிது நேரம் கழித்து மெதுவாக காற்றை வெளிவிட வேண்டும். இப்படி தினமும் 10-12 நிமிடம் செய்து வந்தால், நல்ல மாற்றத்தை நீங்களே உணர்வீர்கள்.

**மஞ்சள் சிகிச்சை:**
பருக்களைப் போக்க ஆயுள்வேதம் என்று வரும் போது, அதில் நிச்சயம் மஞ்சளும் இடம் பெறும். அதற்கு மஞ்சள் மற்றும் இஞ்சியை சரிசமமாக எடுத்துக் கொண்டு அரைத்து பேஸ்ட் செய்து, இரவில் படுக்கும் போது பாதிக்கப்பட்ட இடத்தில் தடவ வேண்டும். இப்படி ஒரு 3 நாள்கள் தொடர்ந்து செய்து வந்தால், விரைவில் குணமாகும்.

**தக்காளி ஜூஸ் :**
தக்காளியை அரைத்து சாறு எடுத்து, அந்த சாற்றைத் தினமும் இரவில் படுக்கும் முன் முகத்தில் தடவிக் கொண்டு தூங்கச் செல்ல வேண்டும். இப்படி அன்றாடம் பின்பற்றி வந்தால், முகம் பருக்களின்றி பொலிவோடு இருக்கும்.

**சந்தன பேஸ்ட் :**
சந்தனப் பொடியை வேப்பிலை தண்ணீர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி உலர வைத்து கழுவ வேண்டும். இப்படி செய்தால், சருமத்தில் உள்ள எந்த சகல பிரச்சினைகளும் நீங்கி, சருமம் பிரகாசமாகவும், சுத்தமாகவும் இருக்கும்.



# தேங்காய் பால் பணியாரம்

**தேவையான பொருள்கள்:**

பச்சை அரிசி - அரை கப்
உளுந்து -அரை கப்
தேங்காய் - ஒன்று
பால் - ஒரு ரம்ளர்
ஏலக்காய், சீனி -
தேவையான அளவு

**செய்முறை :**
முதலில் பச்சை அரிசியை நன்கு சுத்தம் செய்து, அதை நன்கு மாவாக அரைத்துக் கொள்ளவும். உளுந்து மற்றும் அரிசியை ஒன்றாகச் சேர்த்து ஒரு மணி நேரம் ஊற வைத்து, வடை மாப் பதத்துக்கு அரைக் கவும். (தண்ணீர் அதிகம் சேர்க்காமல்) தேங்காய்ப் பால் எடுத்து வைத்து கொள்ளவும். அதனுடன் பால், ஏலக்காய் தூள், ருசிகேற்ப சீனி சேர்த்து வைக்கவும். அரைத்து வைத்திருக்கும் மாவில், ஒரு சிட்டிகை சமையல் சோடா கலந்து சிறு சிறு உருண்டைகளாக கொதிக்கும் எண்ணெயில் போடவும். நல்ல பொன்னிறமாக வறுத்து, தனியாக எடுத்து வைக்கவும். பரிமாறும் பொழுது தேவையான அளவு பணியாரத்தை எடுத்து, அதில் தேங்காய் பால் சேர்த்துப் பரிமாறவும்.





Sudharshan @_SSudha · Oct 28
பொம்மைகள் கையில் கிடைத்தவுடனேயே தங்களை அவற்றோடு தனிமைப்படுத்திக்கொண்டு, ஒருவிதமான தாய்மையை வெளிப்படுத்தும் பெண்குழந்தைகள் அழகு

கரிகாலன்
ஓடிக்கொண்டிருக்கும் ஆறில் துடுப்பிடாமல் ஒற்றைப்படகு பயணிப்பது போல, அதன் போக்கில் வாழ்க்கையை வாழ்வதும் நிறைவாக தான் இருக்கு!

St.Vishnu விஷ்ணு @Vishnu06Jaffna
மதிக்காத இடத்துல
பிணமா கூட இருக்க கூடாது.....

Reshzan Thayaparan @Reshzankan
நடிகர்களில் ஒருவரோடு ஒருவரை ஒப்பிடுவது கேவலமான சினிமா ரசனை மரபு

Vathees Varunan™ @vathees · Oct 25
மௌனம் ஒரு பலம்வாய்ந்த ஆயுதம்!

மௌவல்
சில முகங்கள் அழகென்று சொல்லமுடியாது. ஆனால் பார்த்துட்டே இருக்கலாம் அந்நாள் முடியும்வரை, அடுத்த முகம் பதியும்வரை, பார்ப்பதற்கு ஏதோ இருக்கும்.

Gopinaran Perinpam
"ஔவையருகில் ஒரு நிமிடம் -
கம்பன்
கட்டுத்தறியாய் சில நிமிடம் - பாரதி
பாட்டுக்களில் யுகம் முழுதும் -
நின்று
சுவைத்திடுவோம் தமிழமுதம்"

நாம் கடைசியாய் நடந்து சென்ற
கரையோரத்தில்
இன்று
நீயில்லா கோபத்தில்
அலை அழித்துச் செல்கிறது
என் பாதம்பட்ட சுவடுகளை...



இங்க அட்மிட் ஆனால் அவ்வளவு சீக்கிரத்தில் வீட்டுக்கு அனுப்ப மாட்டாங்க போலிருக்கே..? எதை வச்சு அப்படிச் சொல்லுறீங்க...?
நல்ல நாள் பார்த்து வார்டுல வந்து பால் காய்ச்சிக்குங்கன்னு டாக்டர் சொல்றாரே.

குற்றப் பத்திரிகையை படிச்சிட்டு தலைவர் என்ன சொல்றார்...?
கொஞ்சம் ஓவராத்தான் விளையாடிட்டேன் போலன்னு பீல் பண்றார்.




கோர்ட்டில் கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்கள் நோட்சில் இருப்பதாகக் கூறி பள்ளிக்கூட நோட்ஸ்களை எங்கள் தலைவரின் தலையில் கட்டி ஏமாற்றிய கயவர்களை வன்மையாகக் கண்டிக்கிறேன்.





தீபாவளிக்கு துணி வாங்கற வரைக்கும்
எங்கள் போராட்டம் தொடரும்...

ஓவியக் கண்காட்சியில் சர்தார்ஜி கேட்கிறார்
பார்க்க படுகேவலமாக இருக்கும் இதை தான் மாடர்ன் ஆர்ட் என்கிறீர்களா?
பதில் வருகிறது
சாரி சார்! அது ஓவியம் அல்ல கண்ணாடி








## இனிமே எல்லாம் அப்படித்தான்

1.பெரிய துணிக்கடை அதிபரா இருந்தாலும், அவருக்குப் பிறக்கிற குழந்தை என்னமோ அம்மணமாதான் இருக்கும்.

2. அதிக மார்க் வாங்கி மாநிலத்திலேயே முதல் மாணவனா வந்தாலும், ஆம்லெட் சாப்பிடணும்னு ஆசைப்பட்டால் முட்டை வாங்கித்தான் ஆகணும்....

3. என்னதான் இட்லி மல்லிகைப்பூ மாதிரி இருந்தாலும் அதை தலையில் வச்சிக்க முடியாது...

4. ஒரு பெண் எவ்வளவு சிவப்பாக இருந்தாலும், அவங்க நிழல் கருப்பாகத்தான் இருக்கும்.

5. பொங்கலுக்கு மட்டும் தான் அரசு விடுமுறை. ஆனால் இட்லி தோசைக்கு எல்லாம் விடுமுறை விடுவதில்லையே ஏன்....?

6. என்னதான் நீ மாடா உழைச்சாலும் உனக்கு கொம்பு முளைக்காது.

7. குச்சி மிட்டாய்ல குச்சி இருக்கும். பல்லி மிட்டாய்ல பல்லி இருக்காதுப்பா....

8. என்னதான் அரசியல்வாதிங்க கட்சி தாவினாலும்.... அவங்களுக்கு வால் முளைக்காது.....

9. பிளேன் என்னதான் உயர உயர பறந்தாலும்.... பெட்ரோல் போட கீழே

10. என்னதான் ஒருத்தருக்குத் தலை கனம் இருந்தாலும்.... அது எத்தனை கிலோனு எடைபோட்டு பார்க்க முடியாது....

11. கோழிக்கு கோடி கணக்குல தீனி வாங்கி போட்டாலும் அது முட்டைதான் போடும்... நூற்றுக்கு நூறு எல்லாம் போடாது...

12. வாழ்க்கைக்கும் வழுக்கைக்கும் ஒரு வித்தியாசம்.... ஒன்னுமே இல்லாத வாழ்க்கை போர் அடிக்கும்.... ஒன்னுமே இல்லாத வழுக்கை கிளார் அடிக்கும்.

13. என்னதான் நெருப்புக் கோழியா இருந்தாலும்.... அதனால் அவிச்ச முட்டை போட முடியாது.

14. ஒரு சிற்பி உளியால கல்லுல அடிச்சா அது கலை. உளியால நாம சிற்பியை அடிச்சா அது கொலை.

15. சும்மா இருக்கிறவன், சும்மா இல்லாம, சும்மா இருக்கிறவங்கள, சும்மா சும்மா கிண்டல் பண்ணா.... சும்மா இருக்கிறவங்க, சும்மா சும்மா கிண்டல் பண்றவங்கள சும்மா விடமாட்டாங்கன்னு சும்மா சொல்றேன்.....

சிறுகதை

# பாடுபடு

நெடுந்தீவு மகேஷ்

இறுக்கந்தறை, பள்ளம்பிட்டி, கொறுவாவளவு, முதலியார்வளவு இத்தனையும் அங்கிருந்த காணிகளின் பெயர்கள்தாம். அவை எல்லாமே இன்று கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. பனைமரங்களும் வடலிகளும் பூவரசும் ஈச்சஞ்செடிகளும் பற்றைகளும் குறிஞ்சாக் கொடிகளும் நிறைந்து அந்தக் காணிகள் காடுகளாகிக் கிடக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் எல்லைகளாகிக் கிடந்த கல்வேலிகள் யாவுமே சிதைந்து அழிந்து போயின.

வேலிகளுக்கு அத்திபாரமாக இடப்பட்டிருந்த சரளைக் கற்கள் அந்தக் காணிகளின் வேலி எல்லைகளில் பரவிக் கிடந்தன. ஒருகாலத்தில் வயல் நிலங்களாகத் திகழ்ந்த காணிகள், மொண்டி, வரகு, சாமை முதலிய சிறுதானியங்கள் விளைந்த செழிப்பான நிலங்கள் இன்று கவனிப்பாரற்றுக் காடாகிப்போக அங்கு வாழ்ந்திருந்தோர் பலரும் ஏதேதோ காரணங்களைக் கூறிக்கொண்டு இந்த நிலம் விட்டுக் குடிபெயர்ந்து போயினர். இன்று இந்தப் பரந்த நிலப்பரப்பிற்கு உரிமைகொண்டாட எவரும் முன்வரவில்லை. அவை பயன்தராக் காணிகளாயின.

இந்தக் கிராமத்தில் எஞ்சி நின்ற பரம்பரையினரின் கண் பார்வையில் எந்தவித கண்காணிப்புமின்றி அந்த நிலப்பரப்பு விரிந்து கிடந்தது.

பனைமரங்களும் வடலிகளும் பழம் பெருமையைப் பறைசாற்றும் பெரிய புளிய மரமும் சோமரின் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தந்தன.

சோமருக்கு அந்த இறுக்கந்தறைக் காணியிலே மரபுவழி உரிமை உண்டு. இன்று அவரது அறுபத்தாறு வயோதிபத்தில் இளமைக்கால இறுக்கந்தறையும் அந்தக் காணிக்குள் பெற்றோர் அமைத்திருந்த ஒரு சிறிய ஓலைக்குடிசையும் அதைச் சூழ வளர்ந்திருந்த தென்னைகளும் அவற்றின் உச்சியில் காய்த்துக்குலுங்கிய தேங்காய்க் குலைகளும் அவரது நினைவரங்கில் திரைப்படங்களாயின. இன்று அவற்றைக் காணாத கண்களில் ஏக்கம் நிறைய, பட்டமரங்களாக ஆங்காங்கே காய்ந்தும் கருகியும் உடைந்தும் உருக்குலைந்தும் நின்றிருந்த தென்னைகளின்மீது வீழ்ந்த பார்வையிலே முகிழ்த்த சோகம்.

பரந்து படர்ந்த. அந்தப் பெரிய புளியமரம் காய்த்துக் குலுங்கியது. பனைமரத்தைச் சூழ்ந்த வடலிகளால் பசுமை விரியப் பார்த்த கண்களில் நிறைந்த குளிர்மை. இறுக்கந்தறையைப் பார்த்துச் சோமசுந்தரத்தார் ஒரு முறை மெய்மறந்து நின்றார். எவ்வளவு செழிப்பாக உயர்ந்திருந்த கிராமம்! கோடையில் வறண்டாலும் மாரியில் மண் கிழித்து எழுந்து நிற்கும் பசுஞ்செடிகள்.

வீணாலை, தும்பை, முசுட்டை எனச் சுவை கூட்டும் தாவர உணவு வகைகள்! கிழங்குகளும் இலைகுழைகளும் கீரைவகைகளும் என எண்ணிறந்த மருத்துவச் செடிகள் விளையும் நிலம்.

சோமசுந்தரத்தார் உள்ளம் பரவசித்தார். அவரது வயதும் முதிர்ச்சியும் அறிவும் அனுபவமும் அந்தக் காடாய்ப்போன காணிகளின் சிறப்பான எதிர்காலத்துச் சிந்திக்கத் தூண்டின. இறுக்கந்தறை, பள்ளம்பிட்டி, கொறுவாவளவு, முதலியார்வளவு ஆகிய எல்லாக் காணிகளையும் சோமர் ஒன்றிணைத்தார்

> "காடாய்க் கிடந்த நிலத்தைத் திருத்தி களனி யாக்கி வரகு விளைவித்து வெற்றி கண்டசோமரின் விளைச்சலுக்கு இன்று பலரும் உரிமை கோரிக் கொண்டு உறுதிக் கட்டுகளோடு கூடி நிற்கும் கூட்டத்தை அவர் கண்டார். எதனையும் கருத்தில் கொள்ளா மல் சிறிதும் ஓயாமல் சோமர் வயல் வேலையில் மூழ்கி இருந்தார்.

ஒரே எல்லைக்குள் காணிகளை உள்ளடக்கி வேலி அமைத்தார். வேலியிடப்பட்ட அந்தப் பரந்த நிலப்பரப்பினுள் நான்கு காணிகளும் உள்ளடங்கின.

மனத்திரையில் விரிந்த எண்ணங்களால் அக்காணிகளை உள்ளடக்கி வடிவமைத்த வரைபடங்கள் வயல் நிலமாய் உருப்பெற்றன.

கல்வேலிக்குள் கட்டுண்ட நிலத்தில் அங்காங்கே முளைத்துச் செழித்த புல் பூண்டுகளும் சிறு செடிகளும் பற்றைகளும் படர் கொடிகளும் வெட்டி எறியப்பட்டன.

காடாய்க் கிடந்த நிலம் இப்பொழுது குடியிருப்புக்கேற்ற ஒரு குடிசையோடு சிறந்த வெளி நிலமானது. காடழித்துச் சுத்திகரிக்கப்பட்ட அந்த நிலத்தில் விளைந்த, விளையும் பயிர் விதைகளைத் தேடி அவர் ஓய்வின்றி நடந்தார். அந்த நிலத்திலே செழிக்கும் வலிமை கொண்ட வரகு விதைக்காய் அவர் ஓடி அலைந்தார்.

கிராமத்தின் மேற்குத் திசையிலிருந்து கிழக்குத் திசை வரையும் விதை வரகைத் தேடிச் சலித்தார். முயற்சியிற் குன்றாத சோமருக்கு எங்கோ ஒரு மூலைக் குடிசையில் சேமித்து வைக்கப்பட்ட ஒரு மூடை விதை வரகு கிடைத்தபோது மகிழ்ந்து போனார். நிலத்தை ஏர் பூட்டி மாடுகட்டி உழுதார். பண்படுத்தினார். அதற்கென வந்துழைத்த கூலியாள்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கினார்.

அவரது செலவுக்குத் தக்கதாய் இறுக்கந்தறையும் பள்ளம்பிட்டியும் கொறுவாவளவும் முதலியார் வளவும் அழகுமிகுந்த விளை நிலங்களாயின.

உடல் உழைப்பும் ஊக்கமும் கொண்டு உழுது விதைத்த வரகு விதைகள் நிலம் பிளந்து பயிர்களாய் நிமிர்ந்தன.

உரமிட்டுக் 'களைபிடுங்கி' கிருமிநாசினி விசிறிக் காத்திருந்து பார்த்த பயிர்களின் செழிப்பில் சோமரின் உள்ளம் பூரித்தது. ஓய்வுபெற்றும் ஓரிடத்தில் ஓய்ந்து கிடக்காமல் உழைத்ததால் விளைந்த வரகுப் பயிரின் கதிர்வரவால் களிப்படைந்தார்.

பயிர்கள் அனைத்திலும் செழித்துத் தொங்கிய கதிர்கள் அலைந்துவரும் காற்றினால் ஆனந்தக் கூத்தாடின. எத்தனை ஆண்டுகள்!

இத்தனை ஆண்டுகளும் கவனிப்பாரற்றுக் கிடந்த அந்த நிலம் உழைப்பின் மகத்துவத்தால் விளைந்து பொலிந்த வரகு வயல் சோமசுந்தரத்தாரின் மனதுக்கு மகிழ்வைத் தந்தது. பலராலும் பயனில்லை என்று கைவிடப்பட்ட காணிகள். அவற்றிலே சோமசுந்தரத்தார் விளைவித்து அறுத்துக் குவித்த வரகுப் போர் அவரை ஊர் புகழும் விவசாயி ஆக்கியது.

அந்தக் கிராமம் விழித்துக்கொண்டது.

தரிசு நிலங்களாகக் கிடந்த காணிகளை வயல் நிலங்காக மாற்றுவதில் அந்தக் கிராமத்தை விட்டு நீங்காமல் அதனையே வாழ்விடமாகக் கொண்டிருந்தோர் சோமரின் வழியில் முயன்றனர். ஊரைவிட்டுப் போய் அந்தக் கிராமத்தை மறந்தவர்களின் காணிகளும் செழிப்புற்றன.

உழைப்பின் மகத்துவம் உணரப்பட்டது. உழைக்கும் கரங்கள் உயர்ந்தன. கல்லைப் பிளந்தும் நீர்பெருக்கி வாழும் வலிமை கொண்ட கிராமத்தவர் தமது ஊரின் உயர்ச்சிக்காய் இரவுபகலாய் உழைத்தனர். ஆங்காங்கே கவனிப்பாரற்றுக் கிடந்த நிலங்கள் முள்ளும் பற்றைகளும் கள்ளிச் செடிகளும் காஞ்சோண்டிக் கொடிகளுமாய்க் காடாகிப்போன அந்த நிலங்களை வீறுடன் எழுந்த இளைஞர்களும் பெண்களும் விளைநிலங்களாக்கினர். முயற்சியும் உழைப்பும் கிராமத்தின் வளம் பெருக வகை செய்தன.

சோமசுந்தரத்தாரின் முயற்சியும் எழுச்சியும் அந்தக் கிராமத்து மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டின. கிராமம் செழித்தது.

சோமசுந்தரத்தாரின் அயராத உழைப்பின் மகத்துவம் ஊரைக் கடந்தும் அயற்கிராமங்களுக்கும் பரவியது. அவரது முயற்சிக்குப் பாராட்டும் அவரிட்ட முதலுக்குப் பெருகிய இலாபமும் கிடைத்தன.

ஊரைவிட்டுப் போனோர் காதுகளில் அவை பெரும்பறையாய் அறைந்தன. அந்த மண்ணைவிட்டுப்போனோர் மனங்கள் திகைத்தன.

சோமசுந்தரத்தாரின் வரகு விளைச்சலின் மகிமை ஊரூராய் ஊர்ந்தும் பறந்தும் அவரது புகழ் விரியப் பேரொலியாகிக் குதூகலித்தது.

இறுக்கந்தறை, பள்ளம்பிட்டி, கொறுவாவளவு, முதலியார்வளவு எல்லாமே யாருடைய காணிகள்? காய்ந்து வறண்ட நிலங்களென அவற்றைக் கைவிட்டுச் சென்றவர்கள், குடும்பம் குடும்பமாக குடிபெயர்ந்து போனவர்கள், அவர்களால் ஆகாதென்று விலகி, ஊரையே கைகழுவிப் போனவர்களின் காணிகளே இவை!

இன்று சோமசுந்தரத்தாரின் முயற்சியால் அவரின் மூலதனத்தால் உழைப்பால் விளை நிலமாக விளங்குகிறது அந்தத் தரிசு நிலம். கொறுவாவளவுக்காய் அது எங்கட காணி என்று உரத்துக் கூறியபடி சுப்பர் கணபதி அந்தப் பழைய கிழிந்த காணி உறுதியைத் தேடி எடுத்து கொண்டு எங்கிருந்தோ வந்திருக்கிறார்.

பள்ளம்பிட்டிக் காணிக்கு உரிமை கோரியபடி இருபத்தெட்டு வருசத்திற்கு முன்னர் ஊரை விட்டுப் போன குஞ்சர் பசுபதி கொடுக்குக் கட்டிக்கொண்டு சோமசுந்தரத்தாருடன் மல்லுக்கு நிற்கிறார்.

விசுவர வேலனார் வில்லங்கபுரத்தில் வீடுகட்டி வாழ்ந்த வித்தைக்காரன் மகள் சுந்தரியையும் இழுத்துக் கொண்டு வந்து முதலியார் வளவுக்குள் எங்களுக்கும் பங்குண்டு என்கிறார்.

சோமர் வயலில் விளைந்த வரகை வெட்டும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

காடாய்க் கிடந்த நிலத்தைத் திருத்தி களனியாக்கி வரகு விளைவித்து வெற்றி கண்ட சோமரின் விளைச்சலுக்கு இன்று பலரும் உரிமை கோரிக் கொண்டு உறுதிக் கட்டுகளோடு கூடி நிற்கும் கூட்டத்தை அவர் கண்டார். எதனையும் கருத்தில் கொள்ளாமல் சிறிதும் ஓயாமல் சோமர் வயல் வேலையில் மூழ்கி இருந்தார்.

நிலம் உழைப்பவனுக்கே சொந்தம். இது அவர் கற்றுக்கொண்ட பாடம்! அந்த வயலில் விளைந்த வரகை அறுத்துக் குவிக்கும் வேலையில் அவரின் கவனம் முழுமையாய் மூழ்கிக் கிடந்தது.

போரடிக்க எருதுகளைக் கொண்டு வாங்கோ! என்ற அழைப்புக் குரலோடு அந்தக் கல்வேலியில் போடப்பட்டிருந்த ஏறுகடப்பையின் மேலால் எட்டிப் பார்க்கும் அவர்களைப் பார்த்தார்.

எந்த முயற்சியும் இல்லாமல் காணியின் உறுதிக்கட்டை கையிலே வைத்திருந்தால் காணிகள் விளைந்திடுமா? உழைப்பு, முயற்சி, மூலதனம் அனைத்திலும் இந்தச் சோமரின் உரிமை இமயமாய் உயர்ந்திருக்க, காடாய்க் கிடந்த காணிகளின் உறுதிக் கட்டுகள் என்னத்தைச் சாதித்துவிடப் போகின்றன.

"இந்த மண்ணில் எதுவுமே இல்லையென்று எண்ணிக் கொண்டே ஊரைவிட்டுப்போன நீங்கள்! என்றை உழைப்பைக் காண வந்திருக்கிறீங்கள். எந்த மண்ணிலும் பாடுபட்டால் பயனுண்டு" என்று சொல்லிக் கொண்டே சோமர் கம்பீரமாய் நடந்தார்.





சிக்கலான பிரச்சினைகளிலும் கூட பொறுமையுடன் நிதானமாக, அனுகிதிடமான மனநிலையுடன் பிரச்சினைக்கான காரணத்தை இனம்காண வேண்டும். தன் னம்பிக்கையுடன்பிரச்சினைக்கான காரணத்தைக் கண்டறிவதே தீர்வுக்கு ஒரேவழி. பாரபட்சமற்ற நடுவுநிலைமையோடு பிரச்சினைக்கான சுமுகமான தீர்வைப் பெறுவதன்மூலம் மன அமைதியும் ஏனையோரின் ஆசிகளும் கிடைக்கும். குழப்பங்கள் சோதனைகள் எனவரும்போது சோர்ந்து போகாது உறுதியாக நிற்கவேண்டும்.

# உன்னை உணர்வாயா பெண்ணே....

■ உடுவிலூர் கலா

பூவினும் மெல்லியது பெண்மை. ஒவ்வொரு தனிமனிதனது வாழ்விலும் இரண்டறக் கலந்து மனித வாழ்வை மெருகூட்டுவது பெண்மை. மனுக் குலத்தை உயிர்ப்படையச் செய்வது பெண்மை. பெண்ணின் சேவை கிடைக்காத சமுதாயமும் இல்லை. பெண்ணின் சுகத்தை விரும்பாத ஆணும் இல்லை. தனிமனிதனுக்கு மட்டுமல்ல, சமுதாயத்துக்கும் உயிர்நாடியாக விளங்குபவள் பெண். பெண்ணில்லாத வீட்டில் பேய்கள் குடியேறும். இவ்வாறு மென்மையும் மேன்மையும் ஒருங்கே அமையப் பெற்ற பெண்மை பலசோதனைகளையும், வேதனைகளையும் தாங்கியே தமது சேவையை, அன்பை மனித னுக்கும் சமுதாயத்துக்கும் வழங்குகின்றது. பெண்ணின் சுகத்தையும், சேவைகளையும் பெற்று உயிர்ப் படைகின்ற ஆணும் சமுதாயமும் பெண்ணை இரண்டாம் பட்சமாகவும் மறுதலிக்கப்பட்ட இனமாகவும் பார்ப்பது வேதனையானது. ஒருவேளை உணவுக்குப் போராடும் பெண் முதல் பஞ்சணையில் புரண்டு எழும் கோடீஸ்வரிகள் வரை ஏதோ ஒரு வகையில் வேதனைகளை கொண்டவர்களாகவே வாழ்கின்றனர். வாழ்க்கை என்பது இடையறாத போராட்டமாகும். இந்தப் போராட்டத்தில் பலவித பிரச்சினைகளை எதிர் கொள்ளும் ஒரு ஜீவனாகவே பெண் உள்ளாள். உறவுகளாலும், சமுதாயத்தாலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதைவிடப், பெண்கள் தங்களாலேயே தங்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர். பிரச்சினைகளால் உளத்தாக்கத்துக்கு ஆளாகும் பெண்கள் தன்னம்பிக்கையை இழக்கின்றனர். இதன் விளைவாக மனநோய், விவாகரத்து, தற்கொலை என விரக்தியடைந்து போகின்றனர். பிரச்சினைகளை பெரும் சுமையாக எண்ணுமிடத்து மனம் கனமடை கிறது. பெண்கள் வாழ்வில் பிரச்சினைகள் சகஜமானது. அதனைக் கையாள்கிற விதத்திலேயே நிரந்தரமான கண்ணீரும் கிடைக்கிறது. நிம்மதியும் கிடைக்கிறது. பிரச்சினைகள் சிக்கலான ஒன்றல்ல. எந்தப் பெண்ணோடும் கூடப்பிறந்ததுமல்ல. பிரச்சினைகளைச் சமாளிக்கிற துணிச்சலையும், எதிர்கொள்கிற சமயோசிதத்தையும் பெண்கள் தமக்குள் உருவாக்க வேண்டும். சிக்கலான பிரச்சினைகளிலும் கூட பொறுமையுடன் நிதானமாக, அணுகிதிடமான மனநிலையுடன் பிரச்சினைக் கான காரணத்தை இனம்காண வேண்டும். தன் னம்பிக்கையுடன் பிரச்சினைக்கான காரணத்தைக் கண்டறிவதே தீர்வுக்கு ஒரேவழி. பாரபட்சமற்ற நடுவுநிலைமையோடு பிரச்சினைக்கான சுமுகமான தீர்வைப் பெறுவதன்மூலம் மனஅமைதியும் ஏனையோரின் ஆசிகளும் கிடைக்கும். குழப்பங்கள் சோதனைகள் எனவரும்போது சோர்ந்து போகாது உறுதியாக நிற்கவேண்டும். பிரச்சினைகளை எதிர் கொள்ளும்போதே பெண்களுடைய ஆற்றல்கள், திறமைகள் என்பன வெளிப்படுகின்றன. வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகள் முன்னேற்றத்துக்கான படிக்கல் என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்து கொண்டால், தாழ்வு மனப்பான்மை தலைதூக்காது. உறுதியான மனநிலை கொண்ட பெண்களால் எத் தகைய பிரச்சினைகளையும் எதிர்கொள்ள முடியும். திடமான மனநிலை கொண்ட பெண்களே வாழ்வின் வெற்றியாளர்கள். பிரச்சினைகள் வரும்போது சூறாவளியின் கண்ணில்நின்று அவற்றை எதிர்கொள்ளும் பலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பிரச்சினைகள் இல்லாத பெண்களே இல்லை. எல்லாப் பெண்களுமே பிரச்சினைகளில் இருந்து முழுமையாக வெளிவருவதில்லை. பிரச்சினைக்கு முக்காடு போட்டு உள்ளும் புறமுமாக வாழ்ந்து வேதனையான வாழ்வு வாழும் பெண்களே அதிகம். பிரச்சினைகளை துச்சமாக எண்ணுகிற பெண்களே சமுதாயத்தில் நிதானமாக நடக்கின்றனர். வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை என்ற பாடல்வரிகள் உறுதியாக நின்று போராடவே சொல்கின்றன. அதனைப் பெண்கள் சரித்திரம் படைத்தார்கள். அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் ஏராளம். ஆனாலும் தொடர்ந்தார்கள். ஆக, அடுப்பூதிக் கண் கசக்கிய பெண்கள் இன்று அறிவியலின் கண்களில்தூசுகளைதட்டுகிறார்கள். பெண்களின் திறமைகள், கல்வியாலும், தன்னம்பிக்கையாலும் மேம்படவேண்டுமே தவிர, பிரச்சினைகளைக் கண்டு சோர்வடைவதால் அல்ல. பிரச்சினைகளுக்கு மகுடம் சூட்டுவதை விட்டு, சமாளிக்கும் உறுதிநிலையோடு, துணிந்து நின்று வாழ்ந்தால் வளமான வாழ்வு பெண்களின் கைகளில்தான். வாழ்வில் பிரச்சினைகள் வரும், போகும். ஆனால் பிரச்சினைகளே வாழ்வு என மனதுக்குள் வாழும் நிலையைவிட்டு, வெளியே வர பெண்ணே நீ தயாரா?

## பெண்ணே நீ இன்று

▌இணையவள்

பேதையாக பிறந்த நீ
மேதையாகவுமாயிருக்கிறாய்
போதையாகவுமாயிருக்கிறாய்
இல்லாளாய் இருந்த நீ
வில்லாளாகவும் தேறியிருக்கிறாய்
கள்ளாளாகவும் மாறியிருக்கிறாய்
வாசலுக்கு வரமுடியாமல் இருந்த நீ
வானத்தையும் ஏறி விட்டாய்
மானத்தையும் மீறி விட்டாய்
பிள்ளை பெறும் இயந்திரமான நீ
மண்ணைக் கொள்ளும் மந்திரங்கள்
கற்றாய் கண்ணைக் கொல்லும்
தந்திரங்கள் பெற்றாய்

தலையணையாய் இருந்த நீ
தடைகள் வெல்லும் படையிலும் சிறந்தாய்
தசைகள் விற்கும் கடையிலும் திறந்தாய்
பிறந்தவுடன் கொல்லப்பட்ட நீ
சிறந்து திருவாகவும் சாற்றப்படுகிறாய்
மறந்து மருவாகவும் மாற்றப்படுகிறாய்
கல்வி மறுக்கப்பட்ட நீ
துறைகள் தோறும் பொலிவாகிறாய்
திரைகள் நாறும் மலிவாகிறாய்
தீட்டாய் கருதப்பட்ட நீ
உன் பொறுமையால்
போற்றப்படுகிறாய்
உன் சிறுமையால் தூற்றப்படுகிறாய்
பெண்ணே நீ இனி
சுயம் சூடி வாழ்ந்தால்
எல்லாவற்றிலும் பாதிபோல் வாழ்வாய்
நயம் நாடி வாழ்ந்தால்
பொல்லாவற்றால் ஆதிபோல் வீழ்வாய்



# நேரவிரயம்

## ஓம் சாந்தி ஓம்



திருச்சி மாநகரில் உள்ள ஒரு கார் விற்பனை மையத்தில் வேலை செய்கிறார் வாசு (ஸ்ரீகாந்த்). தற்செயலாகச் சந்திக்கும் சாந்தி (நீலம்) என்னும் பெண் மீது கண்டதும் காதல் கொள்கிறார். சாந்திக்கும் வாசுவைப் பிடித்துவிடுவதால் அவர் வேலை செய்யும் இடத்திலேயே வேலைக்குச் சேர்கிறார்.

ஒரு முதியவர், ஒரு இளம்பெண், ஒரு சிறுவன், நடுத்தர வயதுப் பெண்மணி மற்றும் ஒரு ஆண் ஆகிய ஐந்து பேர் வாசுவைப் பின்தொடர்ந்து வருகிறார்கள். வாசுவின் அலுவலகம், வீடு என அவர் போகும் இடமெல்லாம் பின்தொடர்ந்து வரும் அவர்களுக்கு என்ன வேண்டும் என்று விசாரிக்கிறார். தங்களது ஆசைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்கள்.

உதவ முன்வரும் வாசுவுக்கு ஒரு கட்டத்தில் அவர்கள் தன் கண்களுக்கு மட்டுமே புலப்படும் ஆவிகள் என்பது தெரியவருகிறது. வாசுவின் நடவடிக்கைகளைப் பார்த்து அவருக்கு மனநிலை சரியில்லை என்று நினைக்கிறார் சாந்தி. ஆவிகளின் பிரச்சினைகளும் காதலர்களின் சிக்கலும் தீர்ந்தனவா என்பதுதான் கதை.

ஆவி மனிதன் நன்னம்பிக்கைக் கூட்டணியை ஏற்கெனவே தமிழ்த் திரையில் நாம் பார்த்துவிட்டோம்.



இந்தப் படத்தில் குடும்பம்,உறவுகள், காதல், நம்பிக்கை துரோகம், போலி மருந்து போன்ற சமூகப் பிரச்சினை என ஆவிகளின் பிரச்சினையைச் சித்தரித்துக் கதையை நகர்த்துகிறார் இயக்குநர் டி.சூர்யபிரபாகர்.பல சம்பவங்களின் தொகுப் பாக இருக்கும் படத்தில் தொடர்ந்து பயணிக்கும் காதல் பிரச்சினை மட்டுமே இதை ஒரே படமாக உணரவைக்கிறது. பிரச்சினைகளைத் தீர்க்கும் விதத்தில் ரசிக்கும் படி எதுவும் இல்லை.

சம்பவங்கள் விறுவிறுப்பாகவும் சித்தரிக்கப்படவில்லை.

எல்லாமே நாடகத்தனமாக இருக்கின்றன. மந்தமாக நகருகின்றன. கதைக் களமும் புதிதல்ல. வட்டிக்கு விடும் தாதாவைச் சமாளிக்கும் இடம் மட்டும் புன்னகையை வரவழைக்கிறது.

காதலைச் சித்தரிக்கும் விதத்தில் சிறிதும் கற்பனை வளம் தெரியவில்லை. படத்தில் யாருக்கும் எந்தப் பின்னணியும் காட்டப்படவில்லை. எந்தப் பாத்திரமும் முறையாகச் சித்தரிக்கப்படவில்லை. எனவே எந்தப் பாத்திரமும் மனதில் நிற்கவில்லை.

ஸ்ரீகாந்த் தனது வேலையை ஒழுங்காகச் செய்திருக்கிறார். அறிமுகக் கதாநாயகி நீலம் நடிக்க முயற்சித்திருக்கிறார். நான் கடவுள் ராஜேந்திரன் வழக்கமான தனது நகைச்சுவை வில்லத்தனத்துடன் நடனமாடியும் கவர்கிறார். ஆவிகளின் கதாபாத்திரங்களை ஏற்ற ஒவ்வொருவரும் பொருத்தமான நட்சத்திரத் தேர்வுகள்.

கே.எம். பாஸ்கரனின் ஒளிப்பதிவு படத்தை ரசிக்க வைக்கிறது. பேருந்து விபத்துக்குள்ளாகும் காட்சியை ஒளிப்பதிவாளரும் கிராஃபிக்ஸ் குழுவும் துல்லியமாகப் படைத்திருக்கிறார்கள். திருச்சியையும் அதன் சுற்று வட்டாரங்களையும் மிக அழகாகக் காட்டியிருக்கிறார் ஒளிப்பதிவாளர்.

படத்தின் முதல் பாதி முழுவதும் இரைச்சலான பின்னணி இசையை ஒலிக்கவிடும் விஜய் எபிநேசர் இரண்டாம் பாதியில் மிக இசைவான பின்னணியை வாசித்திருக்கிறார். படத்தில் பல பாடல்கள் இருந்தும் எதுவும் கவரவில்லை. சம்பவங்களின் தொகுப்பாக இருக்கும் படத்தில் மைய இழையை உருவாக்காமல் போனது பெரிய குறை. சம்பவங்கள் அழுத்தமாக இல்லாததும் படத்தோடு பார்வையாளர்களை ஒன்றவிடாமல் தடுக்கிறது. மொத்தத்தில்படம் ஒரு டைம் வேஸ்ட்.

# பென் சனியர்

அபீர்ராஜன்

கோழி மேய்த்தாலும்
கோர்ண மேந்து வேலை
மாதம் முடிந்தால்
சுளையாய்ச் சம்பளம்

பியோன் என்றாலும்
பென்சனியர் தானே
பேசிமுடிப் போமென்று
பெருமையாய்ப் பேசிடுவார்
கிராமத்து வாசனைகள்!

பட்டம் பதவிகள்
வீட்டோடு கார்
சீதனம் சீர்வரிசை
பணத்தோடு பணம் சேர்க்க
பட்டினத்தார் முயல்வார்!

மக்களின் படிப்பு,
உத்தியோகம் திருமணமும்
பென்சனுக்கு முன்னென்றால்
பேர்புகழ் சேர்த்திடவும்
மணிவிழாக்கள் மற்றும்
மாலை மரியாதைகள்,

சேவை நலன் பாராட்டு
சிலநாள் கொண்டாட்டங்கள்
முடிந்தால் முன்போலல்ல,
முதன்மையே குறைந்துவிடும்.

பென்சன் என்றாலே
சிலர் வாழ்வில் கொண்டாட்டம்
பலர் வாழ்வில் திண்டாட்டம்
பணமுள்ளோர் பிழைத்துக் கொள்வர்
இல்லார் இடர்படுவர்
அதிரடி பட்ஜெட்தான்
குறை நிரப்புப் பிரேரணைகள்
துண்டுவிழும் தொகையதிகம்
வேலை செய்தால்தான்
வெட்டுப்புள்ளிக் கணமிக்கலாம்
எல்லோர்க்கும் முடியுமா இது?

ஓய்வென்று இருந்தோலோ
ஒன்றுமே நடக்காது
தேடிவரும் நோய்கள்
தெம்பு குறைந்துவிடும்

பெரிசுக்குத் தெரியாதென்று
சிறுசுகளும் கூடச்
சீண்டி விடுவார்கள்

பேச்சுக்கு வலிமை குன்றும்
பென்சனியர் என்றழைப்பர்
மூச்சிருக்கும் வரையில்
முயன்றுதான் தீரவேண்டும்
ஓய்விலும் முயல்வாரே
வாழ்விலும் மகிழ்வார்
மூத்தோர் நம் சொத்துக்கள்!
முதுசொமாய்க் காத்திடுங்கள்!!





# இன்று பர்மாவின் ஜனநாயகப் பாய்ச்சல்!

கொங்கொங்கிலிருந்து
மு. இராமனாதன்

ரங்கூன் நகரெங்கும் தோரணங்களாய் ஆடுகின்றன சிவப்புக்கொடிகள். அவற்றில் போராடும் பொன்னிற மயிலொன்றின் சித்திரமும் இருக்கிறது. எதிர்க்கட்சியான தேசிய ஜனநாயக லீக்கின் கொடிகள் அவை. கூடவே, கட்சித் தலைவி ஆங்சான் சூச்சியின் படங்களும் காற்றில் அசைகின்றன.

இராணுவத்தின் ஆசியுடன் இயங்கும் ஆளுங்கட்சியின் பச்சை நிறக் கொடிகளும் இடையிடையே ஆடத்தான் செய்கின்றன. மியன்மார் என்று இராணுவத் தளபதிகளால் பெயர் மாற்றப்பட்ட பர்மாவில் இன்று வாக்களிப்பு நடக்கிறது.

இப்படியொரு பரப்புரை மியன்மாரில் நடக்கும் என்று ஐந்தாண்டுகளுக்கு முன்பு யாரும் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள். அப்போது இராணுவத்தின் இரும்புப் பிடியில் இருந்தது மியன்மார்.

இப்போதும் சூழலை நிறைத்துக் கேள்விகள்: இந்தத் தேர்தல் முறையாக நடக்குமா? இராணுவத்தின் ஆதிக்கம் குறையுமா? ஜனநாயகம் மலருமா? ஆங் சான் சூச்சியால் அதிபராக முடியுமா?

### அரசியலும் இராணுவமும்

பர்மாவின் அரசியல் வரலாறு மிகுதியும் இராணுவத்தின் கரங்களால்தான் எழுதப்பட்டிருக்கிறது. இலங்கையைப் போன்றே 1948இல் நாடு ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றது. அதற்கு முன்பாக அமைக்கப்பட்ட இடைக்கால அரசுக்குத் தலைமை தாங்கியவர் ஆங்சான். சூச்சியின் தந்தை.

ஆங் சான், பர்மிய விடுதலைப் படை என்கிற இராணுவ அமைப்பைக் கலைத்துவிட்டு அரசியல் கட்சி ஆரம்பித்தார். ஆனால், நாடு விடுதலை அடையுமுன்பே அவரது அரசியல் எதிரிகளால் கொல்லப்பட்டார். அவரது சகாக்கள் ஆட்சியிலும் இராணுவத்திலும் தலைமை ஏற்றனர். 1958இல் நாடாளுமன்றம் கேட்டுக்கொண்டதன் பேரில் ஓர் இடைக்கால ஆட்சி நடத்திய இராணுவம், 1962இல் தானே நேரடியாக ஆட்சியைக் கைப்பற்றியது. இது 2011 வரை நீடித்தது.

இராணுவ ஆட்சிக்கு எதிராக 1988இல் மாணவர்கள் போராடினார்கள். அப்போது ஆங் சான் சூச்சி நோய் வாய்ப்பட்டிருந்த தன் தாயாரைப் பார்ப்பதற்காக ரங்கூன் வந்திருந்தார். ஒக்ஸ்போர்டில் பேராசிரியராகப் பணியாற்றிய ஆங்கிலேயக் கணவரையும் இரண்டு மகன்களையும் லண்டனில் விட்டுவிட்டு வந்திருந்தார் சூச்சி. போராட்டம் அவரையும் ஈர்த்தது. தேசிய ஜனநாயக லீக்கைத் (என்.எல்.டி) தொடங்கினார். இராணுவம் போராட்டத்தை ஒடுக்கிவிட்டது. 1989இல் சூச்சியையும் வீட்டுக் காவலில் வைத்தது.

அடுத்த 21 ஆண்டுகளில் 15 ஆண்டுகள் அவர் வீட்டுக் காவலில்தான் இருந்தார். 1990இல் இராணுவம் தேர்தல் நடத்தியது. 492 இடங்களில் 392ஐக் கைப்பற்றியது தேசிய ஜனநாயக லீக். ஆனால், இராணுவம் பதவி விலக மறுத்துவிட்டது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு 2010இல் நடந்த தேர்தலை ஜனநாயக லீக் புறக்கணித்தது. இராணுவத்தின் ஆதரவுள்ள யு.எஸ்.டி.பி. வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. முன்னாள் இராணுவத் தளபதி தெயின் செயின் அதிபரானார். தொடர்ந்து அவர் நடைமுறைப்படுத்திய அரசியல் - பொருளாதாரச் சீர்திருத்தங்கள் யாரும் எதிர்பார்க்காதவை. பதவியேற்ற சில மாதங்களிலேயே சூச்சியை விடுவித்தார். 2012இல் நடந்த இடைத் தேர்தலில் ஜனநாயக லீக் போட்டியிட்டது. 45 இடங்களில் 43இல் வெற்றி பெற்றது. சூச்சி எதிர்க் கட்சித் தலைவரானார்.

இப்போது மீண்டும் பொதுத்தேர்தல் வந்திருக்கிறது. 1990, 2012 தேர்தல் முடிவுகளை வைத்துப் பார்த்தால், ஜனநாயக லீக்கின் பொன்னிற மயில் தன் சிறகை விரித்தாடப்போகிறது என்று தோன்றக்கூடும். மியன்மாரின் அரசியலுக்கு இன்னும் சில பக்கங்கள் உண்டு.

### பெரும்பான்மையும் சிறுபான்மையும்

2008இல் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசமைப்பின்படி, நாடாளுமன்றத்தில் 25% இடங்கள் இராணுவத்துக்கு ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள 75% இடங்களுக்குத்தான் தேர்தல் நடக்கிறது. மியன்மார் பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு. பாமா எனப்படும் பெரும்பான்மை பர்மிய சமூகத்தினர் ஐராவதி நதி பாயும் வளமான மையப் பகுதிகளிலும் தென் பகுதிகளிலும் வசிக்கின்றனர். 2012 இடைத்தேர்தல் மிகுதியும் இந்தப் பகுதிகளில்தான் நடந்தது. இங்கேயுள்ள 291 இடங்களில் ஜனநாயக லீக்குக்குக் கணிசமான ஆதரவு இருக்கிறது. மொத்தமுள்ள இடங்களில் இது 44% ஆகும்.

சிறுபான்மையினர் எல்லைப்புற மாநிலங்களில் வசிக்கின்றனர். இங்கேயுள்ள 207 இடங்கள் (31%) ஆட்சியமைப்பவர் யார் என்கிற முடிவுகளை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும். மியன்மாரில் 135 சிறுபான்மை தேசிய இனத்தவர் உள்ளனர். இதில் ஷான், கரீன், ரக்கைன், சின், கச்சின் ஆகியோர் பிரதானமானவர்கள். இவர்களில் பல ஆயுதக் குழுக்கள் பிரிவினை கோருகின்றன.

சூச்சி சிறுபான்மையினரின் வாக்குகளைச் சேகரிப்பதிலும் மும்முரமாக உள்ளார். ரக்கைன் மாநிலத்தில் உள்ள முஸ்லிம்கள் மத்தியில் சூச்சியின் பரப்புரைக்கு நல்ல வரவேற்பு இருந்ததாக எழுதுகிறார், அவருடன் பயணித்த ரொயிடர்ஸ் செய்திச் சேவையின் செய்தியாளர்.

இத்தனைக்கும் அவமதிப்புக்கும் புறக்கணிப்புக்கும் உள்ளாகும் ரோஹின்ஜா எனும் முஸ்லிம் பிரிவினர், இந்த மா நிலத்தைச் சேர்ந்தவர்கள்தாம்.

இவர்கள் மியன்மாரின் குடிமக்களாக அங்கீகரிக்கப்படவில்லை. இவர்கள் அகதிகளாகப் படகுகளில் தப்பி ஓடுவதும் அண்டை நாடுகள் ஏற்க மறுப்பதும் தொடர்ந்து வருகின்றன. இந்தப் பிரச்சினையில் சூச்சி மௌனம் காத்து வருகிறார்.

எனினும், சிறுபான்மையினர் மத்தியிலும் சூச்சிக்குச் செல்வாக்கு இருப்பதாகவே மேற்குலக ஊடகங்கள் எழுதுகின்றன. பல சிறுபான்மைக் கட்சிகளும் களத்தில் உள்ளன. இவர்கள் கணிசமான இடங்களைப் பெறலாம்; தங்களுக்குள் வாக்குகளைப் பிரித்துக்கொண்டு ஜனநாயக லீக்குக்கு வழிவிடவும் செய்யலாம்.

சில சிறுபான்மை இனத்தவருக்கு இணையான மக்கள்தொகை பர்மியத் தமிழர்களுக்கும் இருக்கிறது (சுமார் 2%). சிறிய விவசாயிகளாகவும் வர்த்தகர்களாகவும் நாட்டின் பல பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கு அரசியலில் ஆர்வம் இல்லை. ஆனால், இளைய தலைமுறையினர் மாறிவரும் அரசியல் சூழலுக்குத் தங்களைத் தகவமைத்துக்கொள்வதில் விருப்பம் உடையவர்களாக இருக்கின்றனர்.

### அரசியல் சட்டத் தடைகள்


சூச்சிதான் ஜனநாயக லீக்கின் நட்சத்திரம். அவர் வெற்றி நோக்கி கட்சியை வழி நடத்தலாம். ஆனால், அவரால் அதிபராக முடியாது. சூச்சியின் இரண்டு பிள்ளைகளும் பிரிட்டிஷ் குடிமக்கள். புதிய அரசமைப்பின் 59 எஃப் பிரிவின்படி, அதிபராக இருப்பவரின் பிள்ளைகள் அந்நிய நாடொன்றுக்கு விசுவாசமாக இருக்கக் கூடாது. இந்தப் பிரிவை விலக்குவதற்கு சூச்சி மேற்கொண்ட முயற்சிகளுக்கு அரசு செவிசாய்க்கவில்லை. இப்போது சூச்சியும் தனது வழிமுறையை மாற்றிக்கொண்டார். ஜனநாயக லீக் வெற்றி பெற்றால் தன்னால் அதிபராக முடியாவிட்டாலும், அரசின் தலைவராகத் தான்தான் இருப்பார் என்று சமீபத்தில் சொல்லியிருக்கிறார்.

மேலும், ஜனாதிபதித் தேர்வும் நேரடியானதல்ல; தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரையும், இராணுவத்தின் நியமன உறுப்பினர்கள் ஒருவரையும் முன்மொழிய வேண்டும். இதில் வெற்றி பெற்றவர் அதிபராகவும், மற்ற இருவரும் துணை அதிபர்களாகவும் பதவியேற்கவேண்டும். இதைத் தவிர பாதுகாப்பு, உள்துறை, நிதி போன்ற துறைகளுக்கான அமைச்சர்களை இராணுவமே நியமிக்கும். பொதுத் தேர்தல் நவம்பரில் நடந்தாலும், ஜனாதிபதித் தேர்தல் மார்ச் 2016இல்தான் நடக்கும். அதற்குள் திரைக்கு முன்னும் பின்னும் பல காட்சிகள் அரங்கேறலாம்.

### சிறிய அடிகள்

பர்மிய அரசியல் வரலாறு நெடுகிலும் இராணுவத்தின் செல்வாக்கும் ஆதிக்கமும் இருந்துவருகிறது. 2011இல் பதவியேற்ற சிவில் அரசு சில சீர்திருத்தங்களை முன்னெடுத்திருக்கிறது. இந்தத் தேர்தல் அவற்றுள் ஒன்று. இதில் ஜனநாயக லீக் வெற்றிபெற்றாலும் இராணுவத்தின் உதவியின்றி ஆட்சி நடத்த முடியாது. எனினும், மியான்மாரின் ஜனநாயகப் பாதையில் இது ஒரு முக்கியமான அடிவைப்பாக இருக்கும். போகும் வழி வெகு் தூரத்திலுண்டு!





என்.ராமதுரை

# அண்டவெளியில் மனிதனைத் தேடும் மனிதன்!

மனிதன் பல ஆண்டுகாலமாகக் காதைத் தீட்டிக்கொண்டு அலைகிறான். விண்வெளியிலிருந்து ஏதாவது குரல் கேட்கிறதா என்று தேடுகிறான். இந்தத் தேடலின் ஒரு பகுதியாகத்தான் சீனா இப்போது உலகிலேயே மிகப்பெரிய ரேடியோ டெலஸ் கோப் ஒன்றை நிறுவிவருகிறது. இது அடுத்த ஆண்டில் செயலுக்கு வந்துவிடும். அதன் நோக்கம், அண்டவெளியில் எங்கேனும் மனிதனைப் போன்றவர்கள் இருக்கிறார்களா என்று அறிவதே. இதற்கு உதவியாக சமீபத்தில் ரஷ்ய கோடீஸ்வரர் யூரி மில்னர் 10 கோடி டொலர் நன்கொடையை அறிவித்திருக்கிறார். மனிதர்களைப் போன்றவர்கள் வேறு ஏதேனும் கிரகத்தில் இருக்கிறார்களா? நிச்சயம் இருக்க வேண்டும் என்றே பல அறிவியலாளர்களும் கருதுகின்றனர். ஆனால், அப்படியான வேற்று உலகவாசிகளைக் கண்டுபிடிப்பது எளிதல்ல. இதற்குக் காரணம் உண்டு. நாம் கற்பனைப் பயணமாக அண்டவெளிக்குச் சென்றால், இதை எளிதில் புரிந்துகொள்ளலாம்.

### ஆபத்தான அண்டவெளி

நீங்களும் நானும் ஒரு விண்கலத்தில் ஏறி, பூமியிலிருந்து ஏதோ ஒரு திசையில் புறப்படுகிறோம். போய்க்கொண்டே இருக்கிறோம். பூமி நமது பார்வையிலிருந்து மறைகிறது. ஏறத்தாழ 8,000 கோடி கி.மீ. தொலைவுக்குச் சென்ற பிறகு, திரும்பிப் பார்க்கிறோம். சுற்றிலும் ஒரே கும்மிருட்டு. எவ்வளவு மாதங்கள் ஆனாலும் அதே கும்மிருட்டுதான். விண்கலத்துக்கு வெளியே கடும் குளிர். அத்துடன் ஆபத்தான கதிர்கள். அதுதான் அண்டவெளி.

அங்கிருந்து பார்த்தால் சூரியன் தெரியவில்லை. மிகத் தொலைவு வந்துவிட்ட காரணத்தால் சூரியன் ஒரு சிறிய நட்சத்திரமாகத்தான் தெரியும்போலும். சிலவேளைகளில் தெரியாமலும்போகலாம். குறிப்பிட்ட திசையில் பார்க்கிறோம். நம்மிடம் உள்ள கருவிகளைக் கொண்டு ஆராய்ந்தால் அந்த நட்சத்திரம் சூரியனாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. சூரியனைச் சுற்றுகிற பூமி உட்பட ஒன்பது கிரகங்களில் எதுவும் கண்ணுக்குப் புலப்படவில்லை.

நாம் பூமியிலிருந்து வந்திருக்கிறோம் என்பதைச் சற்றே மறந்துவிட்டு சுற்றிலும் உள்ள எண்ணற்ற நட்சத்திரங்களை நோட்டமிடுகிறோம். நட்சத்திரமாகக் காட்சி அளிக்கிற சூரியன் இருக்கிற திசையில் கையை நீட்டி அதோ அந்த நட்சத்திரத்தைச் சுற்றுகிற ஒரு கிரகத்தில், அதாவது பூமியில் உயிரினங்கள் உள்ளன என்று அங்கிருந்தபடி உறுதியாகச் சொல்ல முடியுமா? நிச்சயம் முடியாது.

இதிலிருந்து சில விடயங்கள் புலனாகின்றன. சூரியனும் ஒரு நட்சத்திரமே என்பதை உணர்கிறோம். மிகத் தொலைவுக்குச் சென்றுவிட்டால், பூமி இருக்கிற இடத்தையே கண்டுபிடிக்க முடியாது என்பதுபோலவே பூமியில் இருந்து பார்த்தால் எங்கோ இருக்கிற வேறு பூமிகளை எளிதில் கண்டறிய இயலாது என்பதையும் புரிந்துகொள்கிறோம். சூரியனுக்கு ஒரு பூமி இருப்பதைப் போலவே வேறு பல நட்சத்திரங்களுக்கும் பூமி மாதிரி கிரகங்கள் இருக்கலாம் என்பது புரிகிறது. அவ்விதம் எங்கோ இருக்கிற பூமிகளிலும் உயிரினங்கள் இருக்கலாம்.

### இயற்கைக்குப் பாரபட்சம் இல்லை

இயற்கையானது அண்டவெளியில் ஒரு மூலையில் இருக்கிற பூமியை மட்டும் விசேசமாகத் தேர்ந்தெடுத்து, மனிதன் உட்பட உயிரினங்களை உண்டாக்கியுள்ளதாகக் கருத முடியாது. இயற்கைக்கு அவ்விதமான பாரபட்சம் இருக்க முடியாது.

பூமியை எடுத்துக்கொண்டால், உயிரினங்கள் நிலப் பகுதியில் இருக்கின்றன. தரைக்கு அடியிலும் இருக்கின்றன, கடல்களிலும் இருக்கின்றன, சுட்டெரிக்கும் பாலை வனங்களிலும் உள்ளன. பனிக்கட்டியால் மூடப்பட்டு கடும் குளிர் வீசுகின்ற அண்டார்டிகாவின் பாதாள ஏரிகளிலும் இருக்கின்றன. கண்ணுக்கே தெரியாத நுண்ணுயிர்களில் தொடங்கி இராட்சதத் திமிங்கிலங்கள் வரையிலான இந்தப் பல்வகையான உயிரினங்களை யாரும் ஒரே நாளில் உண்டாக்கிவிடவில்லை. கடந்த பல நூறு கோடி ஆண்டுகளில் பரிணாம வளர்ச்சி மூலம் இவை உண்டாகின.

பூமியில் உள்ள சூழ்நிலைகள் வேறு எங்கேனும் உள்ள ஒரு கிரகத்தில் இருக்குமானால், அங்கும் இதேபோன்று பலவகையான உயிரினங்கள் இருக்க முடியும். ஆனால், அவற்றை நம்மால் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. நமக்குத் தெரியவில்லை என்பதால், பூமி தவிர வேறு எங்கும் உயிரின வகைகள் கிடையாது என்று அடித்துக் கூறுவது அறிவுடைமை ஆகாது.

நாம் இதுவரை வெளியே போய் எங்கும் பார்க்கவில்லை. அதனால் நமக்குத் தெரியவில்லை. நாம் பூமியின் கைதிகளாக வாழ்ந்துவந்துள்ளோம். விண்வெளியுகம் பிறந்ததற்குப் பிறகுதான் நமக்குக் கால் முளைத்தது. மனிதன் சந்திரனுக்குப் போய்விட்டு வந்திருக்கிறான். ஆனாலும், நாம் பூமியின் பிடியிலிருந்து விடுபட்டு வெளியே சென்றதாகக் கூறமுடியாது. ஏனெனில், சந்திரனும் பூமியின் பிடிக்குள்தான் இருக்கிறது. ஆகவேதான் அது பூமியைச் சுற்றி வருகிறது. வருகிற நாள்களில் செவ்வாய்க்குச் செல்கிறவர்கள்தான் பூமியிலிருந்து விடுபட்டுச் செல்கிற முதல் நபர்களாக இருப்பர்.

### நாஸாவிலிருந்து புளூட்டோவுக்கு

பூமிக்கு அப்பால் உள்ள கிரகங்களுக்கு மனிதன் சென்றது கிடையாது என்றாலும் மனிதன் அனுப்பிய பல ஆளில்லா விண்கலங்கள் சென்று ஆராய்ந்துள்ளன. புளூட்டோ ஒன்றுதான் மீதியாக இருந்தது. நாஸா அனுப்பிய நியூ ஹொரைசன்ஸ் என்னும் ஆளில்லா விண்கலம் ஒன்பது ஆண்டுப் பயணத்துக்குப் பிறகு, இப்போது புளூட்டோவை ஆராய்ந்து தகவல்களையும் படங்களையும் அனுப்பியுள்ளது. பூமியிலிருந்து புளூட்டோ உள்ள தூரம் சுமார் 500 கோடி கி.மீ. கிட்டத்தட்ட சூரிய மண்டலத்தின் எல்லை.

சூரிய மண்டலத்துக்கும் அப்பால் மிக விரிவான அண்டவெளி உள்ளது. அந்த அண்டவெளியில் சூரியன் மாதிரி கோடானு கோடி நட்சத்திரங்கள் உள்ளன. இவற்றில் பலவற்றுக்கும் கிரகங்கள் உள்ளன என்பது ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரவில் நாம் காணும் நட்சத்திரங்களிலிருந்து ஒளி மட்டுமல்லாமல், பல வகையான கதிர்களும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ரேடியோ அலைகளும் அவற்றில் அடங்கும். இயற்கையாகத் தோன்றும் அந்த ரேடியோ அலைகள் காலம் காலமாகப் பூமிக்கு வந்துகொண்டிருக்கின்றன. அவற்றை நம் கண்களால் காண முடியாது.

இயற்கையாகத் தோன்றும் ரேடியோ அலைகளைப் போலவே செயற்கையாக ரேடியோ அலைகளை உண்டாக்க மனிதன் கற்றுக்கொண்டுள்ளான். ஒலியை அவ்வித ரேடியோ அலைகளாக மாற்றவும் மறுபடி அந்த அலைகளை ஒலியாக மாற்றவும் மனிதன் கற்றுக்கொண்டபோது வானொலிப்பெட்டி தோன்றியது.

நட்சத்திரங்களிலிருந்து வருகின்ற ரேடியோ அலைகளைப் பெற்று ஆராய்வதற்காக பெரிய பெரிய அன்டெனாக்களைக் கொண்ட ரேடியோ டெலஸ் கோப்புகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. ஏதோ ஒரு நட்சத்திரத்தின் அருகே இருக்கின்ற கிரகத்தில் வாழக்கூடிய புத்திசாலி மனிதர்கள் ரேடியோ அலைகள் வடிவில் செய்திகளை அனுப்பினால் அவற்றையும் அந்த டெலஸ் கோப்புகள் மூலம் பெற முடியும். நட்சத்திரங்களிலிருந்து வருகிற ரேடியோ அலைகளுக்கும் வேற்றுக்கிரகப் புத்திசாலி மனிதர்கள் அனுப்பும் ரேடியோ அலைகளுக்கும் இடையே வித்தியாசம் உண்டு. ஆகவேதான், அண்டவெளியிலிருந்து வித்தியாசமான சிக்னல்கள் வருகின்றனவா என்று விஞ்ஞானிகள் தொடர்ந்து தேடிவருகிறார்கள்.



# தமிழர்களின் படுகொலைகளும் முஸ்லிம்களின் வெளியேற்றமும்

சந்திரசேகர ஆசாத்

வடபகுதியை விட்டு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில் அந்த வெளியேற்றம் தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் வெவ்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே அந்த வெளியேற்றம் தொடர்பாக அடிக்கடி விரோதமான கருத்துக்களை வெளியிட்டு தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் முரண்பாடுகளை வளர்ப்பதில் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் தீவிர அக்கறை காட்டி வந்தனர். அது மட்டுமன்றி முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தடையாக இருக்கின்றனர் எனவும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வந்தனர்.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே சிறு சிறு பிரச்சினைகள் எழும் போதெல்லாம் அவற்றைப் பூதாகரமாக்கி இரு சாராருக்கும் இடையே மோதல்களையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தவும் இவர்கள் தயங்குவதில்லை.

அதேசமயம் தேசிய சமாதான சபை என்ற அமைப்பைச் சேர்ந்த முஸ்லிம் தலைவர்கள் வடமாகாணசபை வடக்கில் முஸ்லிம்களை மீள்குடியேற்றம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியுள்ளது. மீள்குடியேற்றம் காணி, வீடமைப்பு போன்ற விவகாரங்களில் மாகாண சபைக்கு அதிகாரம் இல்லையென்பதும் மத்திய அரசே அவற்றை மேற்கொள்ள முடியும் என்ற போதிலும்கூட மாகாண சபையிடம் இப்படி ஒரு கோரிக்கையை முன்வைப்பது அர்த்தமற்றதாகும்.

அப்படியிருந்தும் இப்படி ஒரு கோரிக்கையை மாகாணசபையிடம் முன்வைப்பது வடமாகாண சபை, முஸ்லிம்களைப் புறமொதுக்குகிறது என்ற பரப்புரையை மேற்கொள்ளும் நோக்கம் கொண்டது என்றே சந்தேகிக்க வேண்டியுள்ளது.

மத்திய அரசில் அமைச்சரவை மதிப்பைக் கொண்ட பல முஸ்லிம் அமைச்சர்கள் அதிகாரத்துடன் உள்ளபோதும் இப்படியான கோரிக்கையை அவர்களிடம் முன்வைக்காது அதிகாரமற்ற வடமாகாண சபையிடம் முன்வைப்பது நிச்சயமாக நல்ல நோக்கத்துடன் கூடியதாக இருக்க முடியாது.

### பிரித்தாளும் சூழ்ச்சி

ஆட்சியிலுள்ள அதிகார பீடத்தினர் எப்போதுமே தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையிலும் சிறுபான்மை சமூகங்கள் என்ற வரையிலும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபடுவதை விரும்புவதில்லை. முஸ்லிம் தலைமைகள் சிலவும் தங்கள் சுயதேவைகளின் அடிப்படையில் பேரினவாத சக்திகளின் பிளவுபடுத்தும், அடக்கியாளும் நோக்கத்துக்குத் துணைபோகின்றன.

இந்த நிலையிலேயே 25 ஆண்டுகள் நிறைவைச் சிலர் பயன்படுத்த முனைவதை அவதானிக்க முடிகிறது.

இன்னொருபுறம் சில தமிழ்த் தரப்பினர் வெளியிட்ட கருத்துக்களும்கூட ஆரோக்கியமானவையாகத் தென்படவில்லை.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் வடபகுதியை விட்டு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது ஓர் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை எனவும், இதைத் தடுத்து நிறுத்தத் தவறியமையால் முழுத்தமிழ் மக்களுமே முஸ்லிம்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

இந்தக் கருத்தானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளையில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் முஸ்லிம்களின் வெளியேற்றத்துக்கு தமிழ் மக்கள் எந்தவித பொறுப்பும் இல்லையெனவும் அதற்கு அன்றைய ஆட்சியாளர்களின் பிரித்தாளும் கொள்கையே காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

> தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே சிறு சிறு பிரச்சினைகள் எழும் போதெல்லாம் அவற்றைப் பூதாகரமாக்கி இரு சாராருக்கும் இடையே மோதல்களையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தவும் இவர்கள் தயங்குவதில்லை.

இருவருமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். தமிழரசுக்கட்சியைச் சேர்ந்தவர்கள். இருப்பினும் இருவருமே இப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு எது என்ற கேள்வி எழுகிறது.

அந்தக்கால கட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் சிறப்பு அதிரடிப்படையினரும் முஸ்லிம் ஊர்காவற்படையினரும் இணைந்து தமிழ்மக்கள் மீதான தொடர்படுகொலைகளை கிழக்கு மாகாணத்தில் நடத்தியபோது அரியநேத்திரன் அங்கேயே வாழ்ந்தவர். அதிலும் ஓர் ஊடகவியலாளராகப் பணியாற்றியவர். எனவே அவரது கருத்தை இலகுவாக அலட்சியம் செய்துவிடமுடியாது.

### நடந்த கொடுமைகள்

1990இல் பிரேமதாச அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் போர் ஆரம்பித்த வேளையில் விடுதலைப் புலிகள் கிழக்கின் பல பிரதேசங்களை விட்டுப் பின்வாங்க வேண்டிய நிலை எழுந்தது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளை வேட்டையாடுவது என்ற பேரில் சிறப்பு அதிரடிப் படையினரும், முஸ்லிம் ஊர்காவற் படையினரும் இணைந்து பல சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டனர்.

இந்தச் சிறப்பு அதிரடிப் படையினர் ஜே.வி.பி. போராட்டத்தை ஒடுக்க பிரிட்டனால் உருவாக்கப்பட்ட கினிமினி படைப்பிரிவால் பயிற்சியளிக்கப்பட்டவர்கள். அதே வேளை முஸ்லிம் ஊர்காவற்படைக்கு இஸ்ரேலிய மொசாட் படைப் பிரிவினர் பயிற்சியை வழங்கியிருந்தனர். முஸ்லிம்களை தங்கள் ஜென்ம விரோதிகளாகக் கருதும் இஸ்ரேல், முஸ்லிம் ஊர்காவற் படைக்கும் பயிற்சியளிக்குமானால் அது நிச்சயமாக முஸ்லிம்களின் நலன்களுக்காக இருக்காது என்பது சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை.

சிறப்பு அதிரடிப்படையினரும் ஊர்காவற் படையினரும் இணைந்து நான்கு ஐந்து கிராமங்களைச் சுற்றி வளைத்து அவர்களை ஓர் இடத்தில் கொண்டு வந்து ஒரே நேரத்தில் பல நூறு தமிழர்களைச் சுட்டும், வெட்டியும், உயிருடன் எரித்தும் கொலை செய்தனர். வந்தாறுமூலை, சத்துருக்கொண்டான், புதுக்குடியிருப்பு, கொக்கட்டிச்சோலை, வீரமுனை, உடும்பன்குளம் எனப்பல்வேறு பகுதிகளிலும் பல ஆயிரம் தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர்.

நூறு பொதுமக்களைக் கொன்றால் அதில் குறைந்தபட்சம் ஒரு போராளியாவது கொல்லப்படுவான் என்பது இஸ்ரேலிய சியோனிய சிந்தாந்தம். அதன் அடிப்படையில் இஸ்ரேலிய மொசாட்டிடம் பயிற்சி பெற்ற முஸ்லிம் ஊர் காவல் படையினர் சிறப்பு அதிரடிப்படையினருடன் இணைந்து தமிழ் மக்களைக் கொன்று குவித்தனர்.

இது தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்தாளும் சிங்கள அரசின் திட்டமிட்ட நடவடிக்கை என்பதை முஸ்லிம் அரசியல்வாதிகளும் அன்று புரிந்து கொள்ளவில்லை.

### புலிகளுக்கு வேறு வழியில்லை

இப்படியாக கிழக்கில் இடம்பெற்ற தொடர் படுகொலைகள் வடபகுதி தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தின. தமது உறவுகளுக்கு ஏற்பட்டும் அவல நிலை காரணமாகக் கொதிப்படைந்த தமிழ் மக்களால் வடக்கில் தமிழ் – முஸ்லிம் கலவரங்கள் வெடிக்கக் கூடிய ஓர் அபாய நிலை தோன்றியது.

அப்படி ஒரு நிலமை ஏற்படுமானால் ஏராளமான முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்படும் நிலை உருவாகும். கலவரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர விடுதலைப் புலிகள் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ள வேண்டி வரும். அதில் ஏராளமான தமிழர்கள் இறக்க வேண்டியநிலை ஏற்பட்டிருக்கும். எனவே வடக்கை விட்டுப் பாதுகாப்பாக முஸ்லிம்களை வெளியேற்றுவதைவிட விடுதலைப் புலிகளுக்கு அப்போது வேறு வழி இருக்கவில்லை.





சத்துருக்கொண்டான், வந்தாறுமூலை, புதுக்குடியிருப்பு, கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் ஓகஸ்ட் மாத இறுதியிலும் செப்ரெம்பர் மாத ஆரம்பத்திலுமே தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் நடத்தப்பட்டன. அதனால் தமிழ் மக்களிடம் ஏற்பட்ட கொந்தளிப்பைக் கட்டுப்படுத்தி வைத்திருந்த விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் படுகொலைகள் கிழக்கில் இடம்பெற்று நிலைமை மோசமாகவே ஒக்ரோபர் மாதக் கடைசி நாள்களிலேயே வடக்கை விட்டு முஸ்லிம்களை வெளியேற்றினர். கிழக்கில் முஸ்லிம் ஊர்காவற்படையால் தமிழர்களின் குருதி ஆறாக ஓட விடப்பட்டபோதும், வடக்கில் முஸ்லிம்களின் வெளியேற்றத்தின்போது ஒரு துளி குருதிகூடச் சிந்தப்படாமல் அவர்கள் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர் என்பதை எவரும் மறுத்துவிடமுடியாது.

### சொல்வது சுலபம்

வடக்கை விட்டு முஸ்லிம்களை வெளியேற்றியது அவர்களின் பாதுகாப்புக்கே என்ற கூற்று, மகிந்த ராஜபக்ச போரை நடத்தியது தமிழ் மக்களை விடுதலைப்புலிகளிடம் இருந்து காப்பாற்றவே எனக்கூறியதுபோல உள்ளது எனக் குறிப்பிடும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், அது ஓர் இனச் சுத்திகரிப்பே என மீண்டும் அடித்துக் கூறியுள்ளார். பிரச்சினைகள் இடம்பெற்றபோது வடக்கிலோ, கிழக்கிலோ இருக்காத நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்றவர்களுக்கு அதனைச் சொல்வது இலகுவானதாக இருக்கக்கூடும். ஆனால், பாதிக்கப்பட்டவர்களுக்கு அது அத்தனை சுலபமல்ல. சுமந்திரன் நினைப்பதுபோல இத்தகைய கதைகள் மீண்டும் மீண்டும் கதையாடப்படுவது தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நல்லிணக்கத்தை அல்ல கசப்பையே வளர்க்கும். இதனைத் தமிழர் எவராலும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

எறிகணைகளாலும் விமானக் குண்டுவீச்சுக்களாலும் தமிழ் மக்களைக் கொன்று குவித்த மகிந்தவின் போரையும் ஒரு துளி குருதியோ வன்முறையோ இன்றி இடம்பெற்ற முஸ்லிம்களின் வெளியேற்றத்தையும் ஒரே தராசில் சமப்படுத்த முடியாது.

முஸ்லிம்களை வெளியேற்றிய விடுதலைப் புலிகள். கிழக்கில் தமிழர்களைக் கொன்று வெறியாட்டம் போட்டது முஸ்லிம் ஊர்காவற் படை. இன்று இரு தரப்பினருமே களத்தில் இல்லை.

### பிரித்தாள இடம்விடக்கூடாது

அப்போது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கைக்காக ஒட்டுமொத்த தமிழ் மக்களும் மன்னிப்புக் கேட்க வேண்டுமானால், முஸ்லிம் ஊர்காவற்படையினரின் படுகொலைகளுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களும் மன்னிப்புக் கேட்கவேண்டுமென அவர்கள் கோருவார்களா? ஊழல், மோசடி, அதிகார முறைகேடுகள், பதவி ஆசை என்பன மூலம் அரசியல் நடத்தும் சில முஸ்லிம் தலைமைகள் தங்கள் தலைமையைத் தொடர்ந்தும் முஸ்லிம் மக்களிடம் தக்க வைக்கவும், ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்தத் தமிழ் – முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கவும் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பான உண்மைகளை மறைத்து தமிழர் எதிர்ப்புக் கருத்துக்களை விதைத்து வருகின்றனர். அவர்களின் பின்னால் இழுபட்டு தமிழ் அரசியல்வாதிகளும் அதனையே செய்யக்கூடாது.

அப்படிச் செய்யும் இந்த இரு தரப்பினருமே சிங்களப் பேரினவாத சக்திகளின் பிரித்தாளும் கொள்கைக்குச் சேவகம் செய்கின்றனர் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. எனவே இவர்கள் தொடர்பாகத் தமிழ் முஸ்லிம் மக்கள் மிகவும் விழிப்பாக இருப்பது அவசியமாகும்.

# சிரிக்க சிந்திக்க சில வரிகள்

ஒரு நாட்டின் வளர்ச்சியை அளவிடும்போது, அந்த நாட்டின் நெடுஞ்சாலை, தொழிற்சாலை, பாடசாலை என்பவற்றைத்தான் முதலில் பார்க்கிறோம். அந்த நாட்டின் சிறைச்சாலைகள் எமது கண்ணில் படுவதில்லை.

சிறைச்சாலை என்று கூறுவதிலும் பார்க்க சிறைக்கூடம் என்பதே பொருத்தம் என நினைக்கின்றேன். அண்மையில் யாழ்ப் பாணத்தில் புதிய, பெரிய சிறைக்கூடம் ஒன்று திறக்கப்பட்டது செய்தி வாயிலாக அறிந்தோம். வடமாகாணத்தில் ஏற்கனவே இயங்கி வந்த சிமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை போன்ற தொழில் வாய்ப்பை அளிக்கும் சாலைகளை அரசியல்வாதிகள் மறந் தாலும் மக்கள் மறக்கவில்லை.

சிறைக்கூடங்களில் நெருக்கடி கூடிக்கொண்டு போவதால், புதிய சாலை தேவைப்படுகிறது கண்கூடு. இந்த நிலை வளர்முக நாடுகளில் மட் டும் ஏற்படுவது மட்டுமல்ல. வல்லரசான அமெ ரிக்காவிலும் இதே நிலைதான் என்பதை பத்தி ரிகைகள் சுட்டிக்காட்டுகின்றன.

சிறைக்கைதிகளுக்காக 80 பில்லியன் டொலர்கள் செலவு எனவும் சிறையில் 22 லட்சம் மக்கள் அடைக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகிறது. இதே நிலைதான் ஏனைய நாடுகளிலும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். சிறைக்கூடங்களில் அடைக்கப் பட்டவர்கள் எல்லோரும் உண்மையான குற்றவாளிகள் அல்லர் என்பதும் ஒரு கசப்பான உண்மை.

அண்மையில் நீதிமன்றம் ஒன்றில் நடந்த வழக்கில் நீதிபதி இறுதியில் குற்றஞ் சாட்டப்பட்டவரைப் பார்த்து நீர் குற்றவாளியா இல்லை சுற்ற வாளியா? எனக் கேட்க அவர் நான் குற்றவாளியும் இல்லை சுற்ற வாளியும் இல்லை என்னை ஒருவன் ஊத்தவாளி என்று திட்டி விட்டான் அதற்காக லேசாக அவனைக் கத்தியால். வெட்டிவிட்டேன் அவ்வளவுதான் ஐயா. என்னை மன்னித்து விடுங்கள் என்றான்.

இதைவிட சிறைச்சாலையில் நடந்த சம்பவம் ஒன்றும் சுவாரஸியமானது. அங்கு பல நாள்களாகத் தங்கியிருக்கும் ஒரு கைதியைப் பார்த்து "நானும் பல நாள்களாகப் பார்க்கிறேன் இங்கு உள்ள கைதிகளை அவர்களது உறவினர்கள், நண்பர்கள் எனப் பலர் வந்து பார்த்துப் போகின்றனர். நீ மட்டும் தனிமையில் அடைபட்டுக் கிடக்கிறியே! உனக்கு உள்ளூர் உறவினர் யாருமில்லையா?" என அதிகாரி கேட்க அவர் சொன்ன பதில், "அதற்கு அவசியமில்லை சேர் அவர்களும் இங்குதான் சுகமாக உள்ளனர்."

கலாபூசணம்
மு.மாசிலாமணி



# புதியன செய்து புதுயுகம் காண இளையவரே எழுவீர்

எழுச்சியின் திறவுகோலாய் இளையவரே எழுவீர்
எண்ணத்தின் நாற்றங்காலாய் இளையவரே எழுவீர்
விழிப் புறும் தமிழர் தாயகத்தின் விடியல்களாய்
விடி வெள்ளித் தூதுவராய் இளையவரே எழுவீர்
இழிவான கொடுமைத் தனங்களையெல்லாம்
ஈழமெங்கும் கொளுத்தி எரித்திட இளையவரே எழுவீர்
மகிழ்வான இளமையின் மகத்துவங்களைப் போற்றி.
மாநிலமெங்கும் மாண்புகள் உரைத்திட எழுவீர்

புதியன செய்தே புதுயுகம் காண எழுவீர்
புவனம் மாற புதுமைகள் விளைத்திட எழுவீர்
அதிசயம் மிக்க அகிலத்தின் காவலராய் எழுவீர்
அடிமைத்தனத்தை வன்புணர்வை அகற்றிட எழுவீர்
புதிரான புதிதான செயல்களைப் படைத்து
பொன்னுலகச் சிற்பிகளாய் புதியவராய் எழுவீர்
எதிர்கால விடியல்களாய் எழுவீர் எழுவீர்
எம் தேசத்துப் புதுவரிகளாய் இணைந்தெழுவீர்

- மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

## சொற்சிலம்பம் - போட்டி இல: 394

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | ■ | 10 | | | |
| 11 | | | 12 | | | ■ | |
| | ■ | 13 | | | ■ | 14 | ■ |
| ■ | 15 | | | | 16 | | 17 |
| 18 | | ■ | 19 | | | ■ | |
| 20 | | | | ■ | 21 | | |

அனுப்புபவர் பெயர்:........................................................
பூரணமான தபால் விலாசம்: ........................................................
........................................................
கையொப்பம்:........................................................

**இடமிருந்து வலம்**

1. நாடாளுமன்ற அரசுத் தலைவர்
4. அரைவாசி
6. வேகம்
7. ஒரு பூமரம். நச்சுத் தன்மை கொண்டது
8. பெண்கள்
10. வயல் எல்லையில் அமைப்பது
11. வறுமை
13. தரகருக்கு வழங்கப்படுவது
15. அறிவு தரும் துறை
16. விருந்தினன்
18. எரிந்த விறகில் எஞ்சுவது
19. கூற்றுவன்
20. பிரயாணம்
21. தோள் முன்கைப் பகுதி

**மேலிருந்து கீழ்**

1. சிறப்பானது
2. அழித்தல்
3. அறிவு
4. பாதையில் இரண்டு தாழ்வான பகுதிகளை இணைப்பது
5. இந்திய மாநிலங்களின் ஒன்று
7. கத்தியைத் தீட்டுவது இதனால்
9. அணி
10. ஒரு தானியம்
12. திரை கடலோடியும் இதனைத் தேடு என்பது முதுமொழி
14. மிகப் பழமையானது
15. கருமையான
16. இதற்கும் உண்டோ அடைக்கும் தாழ்
17. உறுதியான தன்மை
20. நெஞ்சில் சனி பிடிப்பதை இது பிடித்ததென்பர்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 392 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)அருந்ததி (5)சதி (7)மசி (8)கடப்பாடு
(09)கனம் (10)நாம் (11)வசனம் (13)சய
(14)திகில் (15)பருகல் (16)புலவர் (17) மதவாதி
(20)துல்லியம் (21)பரி

**மேலிருந்து கீழ்**
(1)அமராவதி (2)ருசி (3)தகனம் (4)திடம் (5)சபாநாயகர்
(6)திடும் (9)கனல் (12)சகித்தல்
(13)சருவம் (15)பல (16) புதிய (17)மது (18)வாலி (19)ஏரி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.394
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (18.11.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 392 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
றோ.அ.றிசான்,
றெனோ வில்லா, சில்லாலை,
பண்டத்தரிப்பு

**2 ஆம் பரிசு**
ஜே.அருபா பிரபாகரன்,
இல.71, பெரியகமம்,
மன்னார்.

**3 ஆம் பரிசு**
தி.யதுஷனன்,
இல.46, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
த.கருணாமூர்த்தி,
கலட்டி வளவு, தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

**5 ஆம் பரிசு**
மா.நிர்மலாதேவி,
தாளையடி வடக்கு,
தாளையடி.

**பாராட்டுப் பெறுவோர்**

இ.மயூரி,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
வசாவிளான்.

திருமதி சி.பராசக்தி,
சிவன்கோவில் தெற்கு வீதி,
சாவகச்சேரி.

திருமதி ல.சஜீவன்
ஏழாலை மேற்கு, தம்புவத்தை,
ஏழாலை.

சொற்சிலம்பம் போட்டி இல.394 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 22.11.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 392 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

# சரி எனப்பட்டதை எழுதுவது எனது சுதந்திரம் அதை ஏற்பதும் விடுவதும் உனது சுதந்திரம்



கே.எஸ். சிவஞானராஜா
கொக்குவில்

ஒரு நாடு கிராமங்களிலேயே தங்கியுள்ளது. கிராமங்கள் இல்லையெனின் நகரங்களால் வாழமுடிவதில்லை. ஒரு மனிதனுக்குத் தேவையான ஆரோக்கிய, கலாசார, பண்பாட்டு - விழுமியங்களையும், ஆன்மிகத் தேடல்களையும், மானிட மகிமைகளையும் கிராமங்களிலேயே அனுபவிக்க வேண்டியவர்களாக நாம் வளர்ந்துவிட்டோம்.

மாறாகப் பெரும்பாலானவர்களான கிராமத்தவர்களும் நகரங்களை நோக்கி நகரத் தொடங்கிவிட்டார்கள். இனி என்ன அவ்வளவுதான். நகரத்தவர்களிலும் பெரும்பாலானவர்கள் இறக்குமதிக் கலாசாரங்களிலேயும் இறக்குமதி உணவு, தானிய, சௌபாக்கிய, சௌகரிய தேடல்களிலும் வாழ்க்கையை ரம்மியமாக்கியிருக்கிறார்கள். இனி இறங்குவது என்பது 1995ஐ நினைவுபடுத்தினால் போதும்.

### அக்கரைப்பச்சை

இக்கரையில் வாழ்பவர்களுக்கு அக்கரை பச்சையாகவே தெரிகிறது. அக்கரையில் வாழ்பவர்களுக்கோ இக்கரை பச்சையாகவும் பசுமையாகவும் தெரிகிறது. கிராமங்கள் இப்பொழுதும் கல்வியிலும் சரி, விளையாட்டுக்களிலும் சரி, கலை பண்பாடுகளிலும் சரி உன்னத நிலையைப் பேறாக்கிக் கொண்டிருக்கின்றன. நகரத்திலே எல்லாம் உண்டு என்பதற்காகவே வருத்தங்களை வாழ்க்கையாக்கிவிட்டோம். தற்போது யாழ்ப்பாணம் மருந்துகளின் சாம்ராஜ்ஜியமாக மாறிவிட்டது. இன்னுமொரு விதமாகச் சொல்வதானால் நோய்களின் வதிவிடமாகவும் மாறிவிட்டது. கண்டதையும் தின்னும் பண்டகசாலைகளாக வயிறும் வாழ்வும் அமைந்தே விட்டது. நடைபுடைபாவனையிலும் நாம் வென்று விட்டோம்.

பணம் இருந்தால் யானைகள், குதிரைகள், காட்டு மிருகங்களோடு, பாம்புகள், முதலைகள் கூட இங்கு வந்து மாநாடுகளை அலங்கரிக்கும். நகரங்களோடு எல்லாமே முடிந்து விடுகிறது. ஒன்று கூடுதலும், உன்னதமான உபசரிப்புக்களோடும் விளம்பரங்களோடும் விழாக்கள் இனிதே முடிந்து விடுகிறது. அற்புதம் (Fantastic) ஆனால் ஒரு மாநாட்டினால் ஒரு கிராமத்தின் அடித்தளத்தில் ஏதாவது மாற்றம் ஏற்படுமாயின் அது போற்றுதற்கும் வணங்குவதற்கும் உரியதாகும். அதற்கு என்ன செய்தால் எப்படி வெல்லலாம் என்பதை சமதர்மமாக ஆலோசனைகளை வரவேற்கப் பழகவும் தெரியவும் வேண்டும். பகிரவும் தெரியவேண்டும். கிராமங்களிலே உள்ள தெய்வங்களும், கோயில்களும் வெறுங் கற்களாகவோ, கட்டடங்களாகவோ, மூர்த்திகரமற்றதாகவோ அல்லது அற்புதங்களற்றதாகவோ தெளிவாகச் சொல்வதானால் ஒதுக்கப்பட்ட சொத்துக்களாகவோ எடைபோட முடியாது. மாறாக நாயன்மார் செய்தது போன்று கோயில் கோயிலாகத் தரிசனம் செய்யவேண்டும். சமயம் என்பதன் மகத்துவமே சமத்துவம்தான். நான் பெரிது நீ பெரிது என்பதல்ல.

நாவலப்பிட்டி முத்தையா வலி. வடக்கிலுள்ள ஆலயங்களைச் சின்னன், பெரிது, உயர்வு, தாழ்வு என்று பாராது, சுமார் (234) இரு நூற்றி முப்பத்து நான்கு ஆலயங்களுக்குச் சென்று தரிசித்து அந்தந்த மக்களையும் சந்தித்து அளவளாவி சைவசமயத்தைப் பங்கீடு செய்து பலப்படுத்தி சமதர்மத்தை வளர்த்துப் பேறாக்கினார். இவரைப்போல இதுவரை யாருமே சமயம் வளர்த்ததில்லை.

காரும் இல்லை, வானும் இல்லை, பஸ்ஸும் இல்லை, மோட்டார் சைக்கிளுமில்லை, பல்லக்குமில்லை, பிக்கப்பும் இல்லை. கால்நடையாகவே அடியார் கூட்டத்தோடு தானுமாக சைவசமயம் காப்பாற்றப்பட்டது. எந்தவித ஏமாற்றமும் இடம்பெறவில்லை. இதனால் கிராமங்களில் அற்புதங்கள் விளைந்தன. இப்பொழுது நடுத்தர வர்க்க சமூகத்தவர்களை மையாகக் கொண்டு, பட்டதும் படாததுமாக நாமே நம்மை முதன்மையாக்கி உன்னதமான மையத்தை நோக்கிப் பிரவாகிப்பதென்பது முடியாத காரியமாகும். எளிமையின் முகூர்த்தமே சமயம் ஆகும்.

### வண்டிலா மாடா?

வண்டிலுக்கு மாடா? மாட்டுக்கு வண்டிலா? வண்டிலுக்குத்தான் மாடு. வண்டில் இருக்குமிடத்துக்குத்தான் மாட்டைக் கொண்டுபோக வேண்டுமேயொழிய மாடு இருக்கிற இடத்துக்கு வண்டிலைக் கொண்டுபோக முடியாது. நாமோ மாட்டுக்கு வண்டிலாகிவிட்டோம்.

மக்கள் இருக்குமிடத்துக்குச் சமயம் கொண்டு செல்லப்பட வேண்டும். நோய் இருக்குமிடத்துக்கு மருந்துகளைக் கொண்டு செல்லலாமே ஒழிய வைத்தியசாலைகளைக் கொண்டுபோகமுடியாது. கிறிஸ்தவத்தில் சில மதங்களைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று சுகநலம் விசாரித்து ஜெபம் செய்கிறார்கள். உளவியல் சிகிச்சையளிக்கிறார்கள். ஆறுதலளிக்கிறார்கள். பரிகாரம் செய்கிறார்கள். அதனால் அவர்கள் வெல்கிறார்கள். நாம் என்ன செய்கிறோம் என்றால், அங்கலாய்க்கிறோம். எல்லாத்துக்குள்ளும் மூக்கை நுழைத்து ஒன்றுமே உருப்படியில்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தொட்டுத் தொட்டு, மற்றவர்கள் செய்யவேண்டியதை நாமும் செய்து நாம் செய்யவேண்டியதை மற்றவர்களும் செய்வதற்கு அனுமதியளித்து நாம் (எல்லோருமல்ல) வென்றுவிட்டோம் என்று சொல்லிக்கொள்வது நியாயந்தானா?

### நோக்கு

சைவ சமயம் எப்போதுமே சிவமயமானது. சிவனை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயமே சைவ சமயம். தோடுடைய செவியன் பாடப்பட்ட காலத்திலிருந்து சிவனே முதன்மை பெற்று எம்மையெல்லாம் சந்ததி சந்ததியாக வாழ்வித்து வரங்களும் அற்புதங்களுமாக - வாழ்வாங்கு - வாழச் செய்த பெருமை சைவத்துக்கு உண்டு. காலப்போக்கில் பரிவாரத் தெய்வங்கள் எல்லாம் தனித்தனிக் கோயிலாக மாறி அவை முக்கியத்துவம் பெற்று, வீட்டுக்கொன்று, வீதிக்கொன்று, குறிச்சிக்கொன்று, ஊருக்கொன்று பலபல - பலப்பலவாகப் பெருகிவிட்டன. அல்லாமலும் குலத்துக்கு ஒன்று, கோபித்துக்கொண்டு ஒன்று, குழப்பிவிட ஒன்று, இடம் பெயர்ந்து ஒன்று, ஒதுக்கப்பட்டதால் ஒன்று, கனவு கண்டதால் ஒன்று, நேர்த்திக்காக ஒன்று, நிலையுயர்ந்ததால் ஒன்று, உபயத்துக்கு ஒன்று, ஊர்புகழ ஒன்று, வருமானத்துக்கு ஒன்று, வயிறு வளர்க்க ஒன்று என்று எப்படியும் கட்டலாமா? ஒரு கட்டுப்பாடு என்பது இல்லாமல் போய்விட்டது.

நல்லதொரு தலைமைத்துவம் இல்லாவிடின் வீடும் சரி நாடும் சரி. சிலரோ அடிமைகள் மீது சவாரிகள் செய்து, அடிமைகளைக் கொண்டே செலவழிக்கப் பண்ணி ஆயுட்காலம் வரை ஏகமனதாக்கி கதிரைக்குப் பவுத்திரமாகி நீத்தனை எல்லைப்படுத்தி விடுவர். எதற்கும் ஆம் என்று சொல்பவர்களாக மனிதர்கள் நியாயப்படுத்தப்படுகிறார்களா? என்பது உணரப்படவேண்டியுள்ளது.

ஒன்று, இவ்வாறானவர்களுக்கு தலைமைத்துவப் பின்னணியின் அச்சமுண்டு. அடுத்தது மனிதத்தன்மையின் உச்சம் பொறுமையாவதால் ஏழ்மையான ஆன்மிசமிச்சம் தொண்டாகி நிம்மதியடைவதுண்டு. அச்சமும் பொறுமையும் இருப்பதானலே பலர் அடிமைகளாகி விடுகின்றனர். இதுவே பலருக்கு வாய்ப்பாகி விடுகின்றது. கதிரைகள் மாற்றப் படவேண்டும்.

### தலைமைத்துவம்

எந்தவொரு விவசாய நிலமோ, எந்தவொரு தானியமோ எந்தவொரு மருந்தோ தொடர்ந்தும் பாவனையில் வைத்திருப்போமாக இருந்தால், அவை வெற்றி பெறுவதில்லை. மாறாக ஏதோவொரு விதத்தில் வாலாய மாற்றம் செய்வதே மேலானதாகும். அதேபோல் ஆன்மிக நிர்வாகக் கட்டமைப்பிலும் அரசியல் கட்டமைப்பிலும் காலத்துக்குக் காலம் மாற்றம் போற்றத்தக்கதாகவும் ஏற்றந்தருவதாகவும் அமைதல் வேண்டும்.

மாற்றம் நிகழாவிடின் ஒரு சில தலைமைகள் எதேச்சாதிகாரமாக செயற்பட ஆரம்பித்துவிடுவர். இன்னொரு விதமாகச் சொல்வதானால் தட்டிக்கேட்க ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டம் (அதிவேக நிலை - Greatest S...) அதாவது கொடுமை (Cruelty) என்றுதான் சொல்ல வேண்டும்.

நல்லதோர் நிறுவனமொன்று ஆட்சி மாற்றங்கள் தரா..., தகுதியாக, தராதரமாக இடம்பெறாததனால் ஒரு குறிப்பிட்ட காலம் இருண்ட காலமாகிவிட்டது. தராதரம் உ... ஒருவர் நியமிக்கப்பட இருந்தவேளை அவரது வீட்டுக்குச் சென்று அவரது மூளை சலவை செய்யப்பட்டது. மூளைச் சலவை செய்வதற்கும் சீடர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அவருக்காக எதையும் செய்வார்கள். அவர் எனக்கு ஒரு முறை சொன்னது ஞாபகம்! அவர் சொன்ன ஒரு வார்த்தை "எனக்கு கராட்டி (குறாட்டி) தெரியும்". அப்போதே என் மனது சொல்லிக் கொண்ட விடயம் யாதெனில் இவர் ஒரு சர்வாதிகாரியாகத்தான் இருப்பார் என்பதே. அது மெத்தச் சரியாகத்தான் இருக்கிறது.

தெய்வங்களே பயந்து போய்விடும். இதற்குப்பிராயச்சித்தம் செய்வதற்குக் காலம் பதில் சொல்லாமலா போய்விடும். நீங்கள் அத்தனை பேரும் உத்தமர்தானா - சொல்லுங்கள் என்ற பாடலைச் சிவாஜி கணேசன் பாடுவதாக நடிக்கும் பலர் தாமாகவே திருந்தியே விடுவார்கள். அந்தப் பாடலில் ஒரு பந்தி கண்ணதாசனின் தீர்க்க தரிசனத்தைக் கோடிடுகிறது. நான் சொல்லவில்லை.

அழகாகத் தோன்றும் கருநாகம் கண்டேன்
அநியாயம் செய்பவர்க்கு
மரியாதை கண்டேன்
சதிகாரக் கூட்டமொன்று
சபையேறக் கண்டேன்
தவறென்று என்னைச் சொல்லும்
பரிதாபம் கண்டேன்

விழா என்னும் பெயரில் நாள் கணக்கில் பாடசாலைகளில் பகட்டு நிகழ்வுகள். இப்போது இவ்வாறான நிகழ்வுகள் பெரும்பாலும் நடைபெறுவதில்லை. அவ்வாறான நிகழ்வுகள் நடைபெற்ற காலங்கள் இருந்தது என்பது உண்மையே. விலாசம் எழுப்பச் செய்தவர்கள் நல்லவேளை பென்சனில் போய் விட்டார்கள். ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட ஐம்பது விழாக்கள் நடைபெறும். அந்த நாள்களை எண்ணிப் பார்க்கின்றேன். விழாக்கள் விடுமுறை, சனி, ஞாயிறு, திருவிழா என்று கூட்டிக்கழித்துப் பார்த்தால் 153 நாள்தான் எட்டுப் பாடங்களும் ஒழுங்காக நடைபெறுவதாக இருக்கும். இதிலேயும் போட்டிகள், ப... றங்கள், சுகவீனங்கள், கல்யாண வீடு, சாவு ... சுற்றுலா என இருபது நாள்களும் போனால் மிஞ்சப்போவது 133 நாள்களேயாகும்.

இந்தப் பயனுள்ள பொன்னான நாள்களே ஒரு மாணவனைப் பேறான ஒரு பிரஜையாக்கி விடுகிறது. வெற்றி பெற்ற மாணவனுக்குப் பின்னால் நிற்பதை விடுத்து தோல்வியடைந்தவர்களை எவ்வாறு முன்னகர்த்த... என்று சிந்திப்பவனே தலைமைகளின் சிறந்தவனாகக் கருதப்படுகின்றான்.

புலமைப்பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்குக் கீழ் எடு... பிள்ளைகளும் எங்களுடைய பிள்ளைகள் எ... உணர்வையே ஆண்டவன் எதிர்பார்க்கின்றான். ... அதற்கு ஒத்துப்போகிறோமா? இந்த உணர்வு மேலே... கினால்தான், இந்த நாட்டில் தோமஸ் அல்வா எடிசன் போன்றவர்கள் பலர் உருவாகுவார்கள். மெல்ல மெல்ல மெல்ல இவர்கள் சாதனை படைப்பார்கள்!

# பொறுப்புக்கூறல் இல்லாமல் நல்லிணக்கம் சாத்தியமில்லை



## உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஜே. இம்மானுவேல் கருத்து

**மின்னஞ்சல் செவ்வி: அருண் ஆரோக்கியநாதர்**

உண்மையான நல்லிணக்கத்தை அடைவதற்குப் பொறுப்புக்கூறலும், உண்மையும், நீதியும் தவிர்க்க முடியாத படிகளாகும். பொறுப்புக்கூறல் இன்றி ஒருவரால் நல்லிணக்கத்தை நோக்கி நடைபோட முடியாது. போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி தேவை.

இவ்வாறு உலகத்தமிழர் பேரவையின்தலைவர் அருட்தந்தை எஸ்.ஜே.இம்மானுவேல் தெரிவிக்கின்றார். பழைய சம்பவங்களை மூடி மறைத்து அல்லது நடந்த துயரங்களின் உண்மைக்கு முகம்கொடுக்கப் பயந்து நடப்பவர்கள் தப்பித்துக்கொள்ள முயல்பவர்களாகவே நோக்கப்படுவர் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

மின்னஞ்சல் மூலமாக வழங்கிய செவ்வியிலேயே அவர் தெரிவித்ததாவது:

**"நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?"**

"2014இல் வந்த எனது 80ஆவது பிறந்தநாளுடன் ஜேர்மனியிலுள்ள மியூயென்ஸ்டர் மேற்றாசனத்தில் எனது தேவாலயப் பணிகளிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டேன். 1983 முதல் இரு வருடங்கள் மியூயென்ஸ்டர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்தேன். 1997 தொடக்கம் நேரடியாகவும் வெளியில் இருந்துகொண்டும் ஹோக்ன்பேர்கில் பத்து வருடங்கள் போதகராகவும் பின்னர் கடந்த எட்டு வருடங்களாக பிரித்தானியாவிலுள்ள தேவாலயம் ஒன்றில் உதவியாளராகவும் இருந்து வருகின்றேன்.

தேவாலயப் பணிகளுக்கு மேலதிகமாக நான் பல்வேறு ஊடகங்கள் மூலம் தொடர்புகொண்டு பொதுவாக இலங்கையில் குறிப்பாக, தமிழ் மக்களுக்கு என்ன நடக்கிறது என்பதை ஆராய்ந்து வருகிறேன். சர்வதேச மட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பில் நடந்துவரும் அரசியல் அபிவிருத்திகளை அவதானித்து வருகிறேன். உலகத் தமிழ்ப் பேரவையின் தலைவர் என்ற முறையில் இலங்கையிலுள்ள தமிழர்களின் நிலைமை தொடர்பில் உலகம் முழுவதும் பரந்துள்ள புலம்பெயர்ந்த தமிழர்களின் நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் அவதானித்து வருகிறேன்.

இலங்கைத் தேர்தலின் பின் அரசில் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து உலகப் பேரவையின் சார்பில் நாங்கள் இலங்கை அரசுக்கு ஆதரவு திரட்டி வருகிறோம். புதிய ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும் எங்களை ஒரு சந்திப்புக்கு அழைத்து நான் நாட்டில் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு உதவவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். என்னால் எப்போது வரமுடியுமென அவர்கள் வினாவியபோது எனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள பொய்களும், போலிக்குற்றச்சாட்டுகளும், தடைகளும் களையப்பட்ட பின்னரே எனது பயணத்தைப் பற்றித் தீர்மானிக்க முடியுமெனவும் உண்மை, நீதி, நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு எனது பங்களிப்பு உண்மையிலேயே முக்கியம் வாய்ந்தது எனக் கருதப்பட்டால் மட்டுமே என்னால் இலங்கைக்கு வரமுடியுமெனவும் கூறியிருக்கிறேன்.

தற்சமயம் இலங்கை அரசு ஜெனிவாத் தீர்மானத்தின் சவால்களையும் உள்நாட்டிலுள்ள தமிழ்க் கைதிகளது கோரிக்கைகளையும் சந்திக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. நான் அரசின் முயற்சிகளையும், சிங்கள அரசியல் தலைமைகளது நிலைப்பாடுகளையும் உன்னிப்பாக அவதானித்து வருகிறேன். அதன்பிரகாரம் எனது உதவிகளை தொலைபேசி மூலமாகவோ எழுத்து மூலமாகவோ தேவைப்படும்போது தருவேன்."

**"நீங்கள் இலங்கையை விட்டு எப்போது சென்றீர்கள்? ஏன்?"**

"1967 தொடக்கம் 1996 வரை நான் பங்குத்தந்தையாக, பேராசிரியராக, அதிபராக மற்றும் குருமுதல்வராக என கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் பல்வேறு பதவிகளை வகித்திருக்கிறேன்.

ஒக்ரோபர் 1995இல் 5 லட்சம் மக்கள் யாழ். குடாநாட்டிலிருந்து வெளியேறிய அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவத்தில் அவர்களுடன் நானும் இருந்தேன். 1996ஆம் ஆண்டில் ஐக்கிய இராஜ்ஜியத்துக்கு 6மாத விடுப்பில் வந்தேன். எனினும், கொழும்பு ஊடகங்கள் நான் ஒரு விடுதலைப் புலிகள் ஆதரவாளன் எனப் பொய்க்குற்றஞ்சாட்டித் தங்களது பரப்புரைகளைத் தொடர்ந்தன.

1986 வரை கண்டியில் சிங்கள, தமிழ், கிறிஸ்தவ பாதிரியார்களுக்கு கற்பிக்கும் பேராசிரியாகப் பணிபுரிந்தேன். 1986 முதல் நான் துயரப்பட்ட மக்களின் நேரடிச் சாட்சியாகி பாதிக்கப்பட்டவன் என்ற முறையிலும் சாட்சியாளன் என்ற முறையிலும் அவர்களுக்காகக் குரல்கொடுத்தேன். யாழ். புனித ஜேம்ஸ் தேவாலயம், நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம், நாகர் கோவில் பாடசாலை போன்றவற்றின்மீது குண்டுத் தாக்குதல்கள் நடந்தபோது நான் ஒரு குருமுதல்வராக அவர்கள் சார்பில் குரல்கொடுத்தேன். மற்றவர்கள் அச்சத்தால் மௌனிகளாக இருந்தார்கள். ஆனால், எனது இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் நான் ஒரு புலி ஆதரவாளன் எனவும் அரசுக்கு எதிரானவன் எனவும் திரித்துக்கூறப்பட்டன.

எந்தவொரு தமிழ்த் தேவாலயத் தலைமையும் அச்சமயத்தில் என்னைக் காப்பாற்ற வரவில்லை. அதன்பின் சிங்கள ஆயரான (இப்போது கர்தினால்) மல்கம் ரஞ்சித், ஆயர்கள் மாநாட்டு செயலாளர் என்ற ரீதியில் எனது கருத்துகள் தேவாலயத்தின் கருத்துகள் அல்ல என்று ஒரு பத்திரிகை அறிக்கையை வெளியிட்டார். அதன் மூலம் நான் தேவாலயத்திலிருந்து தள்ளிவைக்கப்பட்டேன். தேவாலயம் ஒருபுறமும் அரசும் ஒருபுறமும் என்மீது இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசியதால் நான் வெளிநாட்டிலேயே தொடர்ந்து தங்க முடிவுசெய்தேன்"

**"உங்களது அமைப்பு தமிழர் பிரச்சினைக்காக முன்வைக்கும் தீர்வு என்ன?"**

"முள்ளிவாய்க்கால் அசம்பாவிதத்தின் பின் பல நாடுகளின் வலையமைப்புடன் உருவானதே உலகத் தமிழ்ப் பேரவை. இலங்கையிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகளுடன் இணைந்து இனமுரண்பாட்டுக்கான தீர்வொன்றைப் பெற முயல்கிறோம். எல்லாத் தமிழ் அமைப்புகளையும் ஒரு பொதுவான இலக்கை நோக்கி நகர்த்துவதற்காகவும், இலங்கையிலுள்ள முற்போக்கு சிங்கள சக்திகளுடன் தொடர்பாடல்களை முன்னெடுக்கவும், தமிழர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதியையும் பொறுப்புக் கூறலையும் உறுதிப்படுத்துவதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கான மனிதாபிமானத் தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் என நான்கு முனைத் திட்டங்களை வகுத்து உலகத் தமிழ்ப் பேரவை செயற்பட்டு வருகின்றது.

தற்போது புதிய அரசு மேலும் சிறந்ததொரு எதிர்காலத்துக்கான சமிக்ஞைகளைக் காட்டிவருவதுடன் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் போன்றவற்றை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாலும் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து நம்பிக்கையுடனும் அதேசமயம் எச்சரிக்கையுடனும் இன முரண்பாட்டுக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ளவும், அதன் மூலம் நல்லிணக்கத்தை எட்டவும் முயற்சி செய்துவருகிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருமுறை அறிவித்ததைப்போல ஐக்கிய இலங்கைக்குள் சகல மக்களும் சமமாக நடத்தப்படுகின்றதும் தமிழர்கள் தாங்களே தங்களை ஆண்டுகொள்வதற்கான அதிகாரம் வழங்கப்படுவதுமான தீர்வு ஒன்றே எங்களது எதிர்பார்ப்பு."

**"இந்த இலக்கை எட்டுவதற்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் எவ்வாறு உதவ முடியும்?"**

"உலகெங்கும் பரந்துவாழும் தமிழ் மக்கள் இதில் நிறைய பங்களிப்புகளை வழங்கமுடியும். முதலில் தாய்நாட்டில் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் தங்களது உறவுகளுக்கு பொருளாதார ரீதியிலும் ஏனைய வழிகளிலும் அவர்களால் உதவமுடியும். ஏராளமானவர்கள் பேசுவதும், விமர்சிப்பதும் மற்றவர்களின் சொகுசுகளைப் பற்றிக் குற்றகூறுவதுமாகக் காலத்தைக் கழிக்கிறார்களே தவிர, எவ்வித உதவியையும் செய்வதில்லை. தாய் நாட்டிலுள்ள, பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது எமது கடமையாகும். அதன் மூலமே நாம் அந்த மக்களுக்கான உண்மையான ஆதரவாளர்கள் என்பதைக் காட்டமுடியும். இரண்டாவதாக சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கு அமைவாகத் தத்தமது நாடுகளிலுள்ள அமைப்புகள் மூலம் சம்பந்தப்பட்ட அரசுகள் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கான நீதி, நியாயம், பொறுப்புக்கூறல் போன்ற கடமைகளைச் சரியாகச் செய்யவேண்டுமென அவர்கள் நிர்ப்பந்தம் செய்யவேண்டும். இலங்கைத் தமிழர்கள் தங்களது உரிமைகளுக்குப் போராடி வருவதால் புலம்பெயர் அமைப்புகள் அவர்களது முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் முகவர்களாக செயற்படமுடியும்."

**"இலங்கையில் நியாயமானதொரு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் காணப்படும் பிரதான தடைகள் யாவை?"**

"கடந்த 60 வருடங்களாக நடந்துவரும் இனமுரண்பாட்டுக்கு நேர்மையான வழியில் உண்மையைக் கண்டறிவதே நல்லிணக்கத்துக்கான சரியான வழியாகும். சட்டத்தை தைரியமாக எதிர்கொண்டு குற்றமிழைத்தவர்களை இனங்கண்டு பழிவாங்கும் தண்டனைகளை விலக்கி அத்த[illegible]ய குற்றச்செயல்கள் மீண்டும் நிகழாமல் பார்த்துக்கொண்டு போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட ரீதியாகச் சரியான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதே முதன்மையானதும் முக்கியமானதுமான கடமையாகும்.

அரசியல்வாதிகள் தங்களது சுயநலத்துக்காக பரப்பிவரும் பொய்ப் பரப்புரைகளும் தப்பபிப்பிராயங்களுமே நல்லிணக்கத்துக்கு பெரும் இடையூறுகளாக இருக்கின்றன. வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழ் மக்கள் தெற்கிலுள்ள பெரும்பான்மையினருக்கு ஓர் அச்சுறுத்தல் இல்லை. எனினும், தமிழ் நாட்டிலுள்ள ஆறு கோடி தமிழர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழர்களுடன் சேர்ந்து இலங்கையிலுள்ள சிங்கள பௌத்தர்களை முன்னேற விடமாட்டார்கள் என்ற தவறான அபிப்பிராயம் நிலவிவருகின்றது. இதன்காரணமாக சிங்களப் பெரும்பான்மையினரும் அவர்களது அரசுகளும் தமிழர்களை அச்சுறுத்தி அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக்கி அவர்களது மொழி, கல்வி, தொழில்வாய்ப்பு மற்றும் ஆளுமை போன்ற விடயங்களில் படிப்படியாக பாகுபாடு காட்டி வந்துள்ளன.

சுருக்கமாகக் கூறப்போனால் தமிழ் மக்கள் பெரும்பான்மையினரின் முக்கிய எதிரிகளாகக் கருதப்படுகிறார்கள். தமிழர்கள் எவ்வாறு நீதிக்குப் புறம்பான வழிகளில் பாகுபடுத்தப்பட்டார்கள், அவர்கள் அரசின் பயங்கரவாதத்துக்கு எதிராக ஆயுதங்களை ஏந்தவேண்டியதற்கான காரணங்கள் என்ன என்பதை சிங்கள அரசியல்வாதிகளும் ஏனைய தலைமைகளும் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறவேண்டும்.

புதிய அரசின்கீழ் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் நேர்மையானதும் சகலருக்கும் பொதுவானதுமான வழியில் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு பல்வேறு சமூகங்களுக்கிடையிலும், இனங்களுக்கிடையிலும் நல்லுறவையும், சமாதானத்தையும் கட்டியெழுப்ப இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்."

(23ஆம் பக்கம் பார்க்க)

- எம்.ஐ.முபாறக் -

# மன்னித்து மறு வாழ்வு கொடுங்கள்!



போர் முடிந்ததும் எல்லாமே முடிந்துவிடும் – எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்றே எல்லோரும் நினைத்தனர். ஆனால், தமிழர் தரப்பில் போர் முடிந்த பின்பும் பிரச்சினைகள் தொடர்வது மாத்திரமன்றி மேலதிக பிரச்சினைகளும் வந்து சேர்ந்து கொண்டன.

போர் முடிந்த பின் காணாமல்போதல், இடம்பெயர்வு மற்றும் காணிகள் பறிப்பு எனப் பல பிரச்சினைகள் புதிதாக உருவெடுத்தன. அப்போது நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த மகிந்த அரசு தமிழர்களின் பிரச்சினைகளை அதிகரிக்கச்செய்ததேதவிர அவற்றைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

தமிழர்களின் காணிகள் பறிபோகின; தமிழர்கள் காணாமல் போயினர்; இடம்பெயர்வு எனப் பல பிரச்சினைகளுக்கு அவர்கள் முகங்கொடுத்தனர். அந்தப் பிரச்சினைகளை அப்போதைய அரசின் ஊடாகத் தீர்ப்பதற்காகப் பல ஜனநாயகப் போராட்டங்களை அவர்கள் நடத்தினர். சர்வதேசத்திடமும் முறையிட்டனர்.

அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு உலக நாடுகள் மகிந்த அரசுக்கு அழுத்தம் கொடுத்தன. எந்தவொரு வேண்டுகோளுக்கும் மகிந்த அரசு செவி சாய்க்கவில்லை. மக்களின் ஜனநாயகப் போராட்டங்களையும் மதிக்கவில்லை.

தமது பிரச்சினைகள் தீர வேண்டுமென்றால் மகிந்த அரசை மாற்றுவதுதான் ஒரே வழியென உணர்ந்த தமிழர்கள் அதற்கான சந்தர்ப்பத்துக்காகக் காத்துக்கொண்டிருந்தனர். ஜனாதிபதித் தேர்தல் வடிவில் அந்த வாய்ப்பும் வந்தது. அதை நன்றாகப் பயன்படுத்திய தமிழர்கள் ஆட்சி மாற்றத்துக்குப் பெரும் பங்காற்றினர். புதிய அரசின் ஊடாகத் தமது பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க முடியும் என அவர்கள் நம்பினர்.

சில காணிகள் விடுவிப்பு, ஆளுநர்கள் மாற்றம் எனத் தமிழர்கள் வேண்டி நின்ற சில உதவிகளை இந்த அரசு செய்தது. இதனால் இந்த அரசு மீது தமிழர்களுக்கு ஒருவித நம்பிக்கை ஏற்பட்டது.

அந்த நம்பிக்கையின் அடிப்படையில், நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் தங்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கித் தங்களை விடுதலை செய்யுமாறு அரசைக் கோரினர். உண்வு தவிர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர். அவர்களுக்கு ஆதரவாக சிறைகளுக்கு வெளியிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

எந்தவித விசாரணைகளும் இன்றி வருடக்கணக்கில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இந்த அரசியல் கைதிகள் இந்த ஆட்சியிலாவது விடுவிக்கப்படவேண்டும் என விரும்புவது நியாயமானதே என்பதால், இந்த விடயத்தில் ஜனாதிபதியைத் தலையிடுமாறு அந்தக் கைதிகள் கோரினர்.

அந்த அடிப்படையில் தலையிட்ட ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன இவர்களை விடுதலை செய்வது தொடர்பில் நவம்பர் 7ஆம் திகதிக்குள் தீர்மானம் ஒன்று அறிவிக்கப்படும் என்று உறுதியளித்தார். அந்த வாக்குறுதியை நம்பி கைதிகள் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தனர்.

இதனைத்தொடர்ந்து பிரதமர் ரணில்விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருக்கிடையில் 5ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இது தொடர்பான சந்திப்பொன்று இடம்பெற்றது.

முதற்கட்டமாக 62 கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்றும், அவர்களுள் 32 பேர் நாளை 9 ஆம் திகதி திங்கட்கிழமை விடுவிக்கப்படுவர் என்றும், மிகுதியானோர் இரண்டாம் கட்டமாக விடுதலை செய்யப்படுவர் என்றும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் பிரதமர் ரணில் கூறினார். ஆனால், அரசியல் கைதிகள் அரசின் இந்த முடிவை ஏற்கவில்லை. 18 வருடங்களுக்கும் மேலாகப் பல கைதிகள் சிறைகளில் வாடுகின்ற நிலையில், அண்மையில் கைது செய்யப்பட்டு, அதாவது போர் முடிந்த பின்னர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளையே இப்போது விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் அந்தத் தீர்மானத்தை எதிர்த்து கைதிகள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை இன்றிலிருந்து ஆரம்பிக்கவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

அதுபோக, பிணையில் விடுதலை செய்யப்படுவதையும் அவர்கள் விரும்பவில்லை. பொது மன்னிப்பையே அவர்கள் கோருகின்றனர்.

கைதிகளின் கோரிக்கைகளில் நியாயம் இல்லாமல் இல்லை. அவர்கள் கைதுசெய்யப்பட்டபோதே விசாரணைகள் தொடங்கப்பட்டிருந்தால் குற்றம் செய்யாதவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பார்கள். குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட்டு தண்டனைக்காலமும் இப்போது முடிந்திருக்கும்.

இனிமேல் விசாரணைகளைத் தொடங்கி அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டால் அவர்கள் இன்னும் பல வருடங்கள் சிறையில் வாட வேண்டி வரும்.

அப்படியானால் இதுவரை அவர்கள் அனுபவித்து வந்த தண்டனையை எந்தக் கணக்கில் சேர்ப்பது. ஒருவேளை, அந்தக் கைதிகள் அனைவரும் புலிகளாக – குற்றவாளிகளாக இருந்தாலும் கூட, இதுவரை அவர்கள் அனுபவித்த சிறைத் தண்டனையை அவர்கள் செய்த குற்றங்களுக்கான தண்டனையாகக் கருதி அவர்களை விடுதலை செய்ய முடியும். ஆனால் இந்த முடிவை, ஜனாதிபதி அல்லது சட்டமா அதிபர்தான் மேற்கொள்ள முடியும்.

12 ஆயிரத்திற்கு மேற்பட்ட புலிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டமை சரி என்றால், இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்வதும் சரிதானே. அவர்கள் மாத்திரம் தண்டிக்கப்படுவது ஏன்? அவர்கள் மீண்டும் புலிகள் இயக்கத்தை உருவாக்கிவிடுவார்கள் என்று இந்த அரசு அஞ்சுகிறதா? அப்படி அவர்கள் தண்டிக்கப்படுவது சரி என்றால், புலிகளை வழி நடத்திய கருணா, பிள்ளையான் மற்றும் கே.பி. போன்றவர்கள் அல்லவா முதலில் தண்டிக்கப்பட வேண்டும்?

அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து அழகு பார்த்துவிட்டு அப்பாவி இளைஞர்களை மாத்திரம் தண்டிப்பது எந்த வகையில் நியாயம்?

இந்த அரசியல் கைதிகள் அனைவரும் புலிகள் என்றே வைத்துக்கொள்வோம். அவர்களால் வெளிவந்து என்ன செய்ய முடியும்? புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட புலிகளைப்போல் இவர்களும் சமூகமயப்படுத்தப்படவேண்டும். அதுவே தார்மீகம்.

அந்தக் கைதிகளை விடுதலை செய்வதால் இந்த நாட்டுக்கோ, அரசுக்கோ எந்தவித நட்டமும் ஏற்படப்போவதில்லை. போர் முடிந்த பின்னரும் யாரைப் பார்த்து அஞ்சுகிறது இந்த அரசு? இனப் பிரச்சினைக்கான தீர்வைத் தரும் நெஞ்சுரமும் நேர்மைத் திறனும் இந்த அரசுக்கு இருந்தால் பின்னர் ஏன் இந்த அரசு அரசியல் கைதிகளைப் பார்த்து அஞ்சுகிறது? தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்று கிடைத்தால் இவர்கள் ஏன் மீண்டும் புலிகள் இயக்கத்தை ஆரம்பிக்கப்போகிறார்கள்?

அரசியலை ஒரு பக்கம் ஒதுக்கிவைத்துவிட்டு மனிதம் என்ற அடிப்படையில் இதைப் பாருங்கள். மன்னித்து அவர்களுக்கு மறு வாழ்வு கொடுங்கள்.

---

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# பொறுப்புக்கூறல் இல்லாமல் நல்லிணக்கம் சாத்தியமில்லை

**"இலங்கைக்கான உங்களது பயணத்தின் மூலம் நீங்கள் சாதிக்க விரும்புவது என்ன?"**

"எனது பயணத்தில் பெரிதான எதிர்பார்ப்போ இலட்சியமோ என்னிடமில்லை. நான் இங்கிருந்துகொண்டு ஊடகங்கள் மூலம் செய்ய முயல்வதை அங்கு நேரடியாகவே தீவிரமாக செய்ய முடியுமென நினைக்கிறேன். நான் வயது முதிர்ந்த கத்தோலிக்கப் பாதிரியார் என்ற முறையில் பல தேவாலய தலைமைகளுக்கும் எனது முன்னாள் மாணவர்களுக்கும் நன்கு பரிச்சயம் உள்ள வன். எனது கடந்தகால அனுபவங் களைக் கொண்டு அனைத்துத் தரப்பினரையும் நல்லிணக்கத்தை நோக்கி முன்னேற வலியுறுத்த முடியும்.

தமிழர்கள் உண்மையைக் கண்டறியவும் நீதி, பொறுப்புக்கூறல் போன்றவற்றை பழி வாங்கும்நோக்கமில்லாமல் முன்னெடுத்துச் செல்லவும் அதன் மூலம் நல்லிணக்கத்தை நோக்கி அடியெடுத்து வைக்கவும் முயல வேண்டும்.

நீண்டகாலமாக வேரூன்றி நிற்கும் இன முரண்பாட்டைப் பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ளவும் விசுவாசத்துடன் நீதியின் வழியில் பொறுப்புக்கூறலை தைரியமாக முன்னெடுத்துச் செல்லவும் சிங்கள சமுதாயம் செயற்படவேண்டும். இத்தகைய படிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நாம் அனைவரும் உறுதியானதொரு அத்திபாரத்தின் மீது நின்று அமைதியான நிலைப்பாட்டின் கீழ் பல்லின, பல்மத, ஒற்றுமை கொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்."

**"தற்போதைய அரசு பற்றிய உங்களது மதிப்பீடு என்ன?"**

"அரசையும், அரசியல்வாதிகளையும் பற்றி நாம் பேசும்போது அவர்கள் அனைவருமே உண்மை, நீதி, சமாதானம் போன்றவற்றில் உண்மையான அக்கறைகொண்டவர்களாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாது. சுயநலமும், கட்சி அரசியலும் கொடிகட்டிப் பறந்துகொண்டிருக்கின்றன. முன்னைய அரசுகளுடன் ஒப்பிடும்போது தற்போதைய அரசு, கடந்த காலத்தில் ஒன்றுக்கொன்று விரோதமாக இருந்த இரு கட்சிகளின் கூட்டிணைவில் உருவாக்கியதாகும். இதனால் மிதவாதத் தன்மைகொண்ட நிலையில் உண்மையைக் கண்டறிவதற்கு ஓரளவு சந்தர்ப்பம் உள்ளது.

மகிந்தவின் அரசுடன் ஒப்பிடும்போது இந்த அரசுக்கு, சிங்களமயப்படுத்துவதன் மூலமோ பௌத்தமயப்படுத்தல் மூலமோ தமிழர்களை வேருடன் களைய வேண்டுமென்ற நோக்கம் கிடையாது. தமிழர்களாகிய நாமும் சுயநலம் அல்லது கட்சி அரசியலில் இருந்து விடுபட்டவர்கள் அல்லர். எனினும், பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு (முக்கியமான கூட்டிணைப்பு) அரசுடன் ஒத்துழைத்துச் செல்வது சரியான பாதையாகத் தெரிகிறது. புதிய அரசு மகிந்த அரசினதும் சிங்களத் தீவிரவாதிகளினதும் சவால்களுக்கு முகம் கொடுக்கத் தயாராக உள்ளார்கள். எனவே, அவர்கள் தென்பகுதியின் சவால்களுக்கு முகம்கொடுக்கவும் எமது தேவைகளை வென்றெடுப்பதற்கும் எம்மாலான முழு ஒத்துழைப்பை வழங்கவேண்டிய அவசியம் இருக்கிறது."

**"தெற்கில் உள்ளவர்கள் பழைய காயத்தைக் கிண்டுவதில் எந்தப் பயனும் இல்லை என்று கூறும்போது பொறுப் புக்கூறல் மிகமுக்கியமானது என நீங்கள் ஏன் நம்புகிறீர்கள்?"**

"நல்லிணக்கத்துக்குப் பொறுப்புக்கூறலும், உண்மையும், நீதியும் தவிர்க்க முடியாத படிகள். பொறுப்புக்கூறல் இன்றி ஒருவரால் நல்லிணக்கத்தை நோக்கி நடைபோட முடியாது. போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி தேவை. பழைய சம்பவங்களை மூடிமறைத்து அல்லது நடந்த துயரங்களின் உண்மைக்கு முகம்கொடுக்கப் பயந்து நடப்பவர்கள் தப்பித்துக்கொள்ள முயல்பவர்களாகவே தெரிகிறார்கள். பாப்பரசர் பிரான்சிஸ் தனது இலங்கைப் பயணத்தின்போது பொறுப்புக் கூறல் என்பது பழைய காயங்களைக் கிண்டி வலியை ஏற்படுத்துவது அல்ல, அது நீதியின் பிரகாரம் செய்ய வேண்டியவற்றை தைரியமாகச் செய்வதே எனத் தெரிவித்திருக்கிறார்."

**"உலகத் தமிழர் பேரவையின் மீதான தடையை அரசு எப்போது நீக்குமென நினைக்கிறீர்கள்? அது ஒரு சில வாரங்களுக்குள் நடக்குமானால் உங்கள் இலங்கைப் பயணம் எப்போது நடக்கும்?"**

"மகிந்த அரசால் புலம்பெயர்ந்தவர்களின் மீது களங்கத்தை ஏற்படுத்துவதற்கும் அவர் கள் இலங்கை அரசின் விரோதிகள் எனச் சித்திரிப்பதற்குமாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டது. இது நடப்பதற்கு நீண்டகாலத்துக்கு முன்பே புலம்பெயர் தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறிவிட்டார்கள். எனக்கு இப்போது 81 வயதாகிவிட்டது. எனது வாழ்க்கையும் பணிகளும் இலங்கையின் முன்னைய அரசுகள் எல்லாவற்றாலும் அரசியல்வாதிகளாலும் களங்கப்படுத் தப்பட்டுவிட்டன. இந்த நிலைமையில் முன்னேற்றம் காணப்படும்போதும் நல்லிணக்கத்துக்கு என்னால் எனது பங்களிப்பை செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு வரும்போது நான் இலங்கைக்குத் திரும்பக்கூடும்."

**"போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்களது அமைப்பு ஏதாவது வழியில் உதவி செய்துள்ளதா?"**

"நான் மேலே விவரித்தவாறு உலகத் தமிழ்ப் பேரவை அந்தந்த நாட்டிலுள்ள தேசிய அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து முயற்சிகளை மேற்கொள்ளும் ஓர் அமைப்பாகும். நான் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்ட பலருக்கும் வவுனியாவிலுள்ள பம்பைமடு பிரதேசத்திலுள்ள பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் உதவி வருகிறேன். எமது அமைப்புகள் நிதி திரட்டி இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்துவருகின்றன."

**"ஆயுதப் போராட்டம் தோல்வியடைந்ததில் இருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் எவை?"**

"ஆயுதப் போராட்டம் உருவானதற்கான காரணங்கள்

1. தமிழர்களின் ஜனநாயக சாத்வீகப் போராட்டத்தைதனது படைகளைக்கொண்டு அரசு அடக்க முயற்சித்தமையும் படைகளின் தன்னிச்சையான தான்தோன்றித்தனமான செயற்பாடுகளும்
2. தமிழ் இளைஞர்களின் கல்வி, வேலை வாய்ப்பு போன்றவை மறுக்கப்பட்டும் மொழி ரீதியாக பாகுபடுத்தப்பட்டும் அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகிப் போனமை.
3. இளைஞர்கள் மீதான குழுத்தாக்குதல்கள், குண்டுத் தாக்குதல்கள் போன்ற இம்சைகளால் அவர்கள் எதிர்த்துப் போராடி தங்களது நிலங்களையும், மக்களையும் காப்பதற்காக ஆயுதம் ஏந்தவேண்டிய நிர்ப்பந்தம்.

எனவே, ஆயுதப் போராட்டத்தின் தோல்வியைப் பற்றி நாங்கள் பேசமுடியாது.

அந்தப் போராட்டம் இலங்கை அரசால் மேலும் இருபது நாடுகளையும் சேர்த்துக் கொண்டு அடக்குமுறைகள் மூலமும் மனிதாபிமானமற்ற முறையிலும் கொடூரமான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டது. அரசுகளும் சர்வதேச சமூகங்களும் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தைப் பற்றி விமர்சித்தனவேதவிர, அதற்கான மூலகாரணத்தை அறிந்துகொள்ள முயற்சிக்கவில்லை.

கடந்தகால உண்மைகளின் அடிப்படையில் சென்றாலே நாம் எதிர்காலத்தில் இருண்ட மூலைகளை விடுத்து ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கமுடியும்."

**"ஆட்சிமாறுவதற்கு முன் தமிழ்ப் பேரவையைச் சேர்ந்த சுரேன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தால் அவர் சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்படுவார் என்று கூறியிருக்கிறார். அந்த எண்ணம் இன்னும் இருக்கிறதா?"**

"சுரேன் மற்றவர்களிடம் மேற்கொண்ட கலந்துரையாடல்களின்போது சொன்னவை பற்றி நான் கருத்துக்கூற விரும்பவில்லை. எதிர்கால சாத்தியங்கள் பற்றி மற்றவர்கள் தெரிவிக்கும் கருத்துகளுக்கு எதிர்க்கருத்துக்கூற அவருக்குச் சுதந்திரம் உண்டு."

# இந்தியா தென்னாபிரிக்கத் தொடரில் படைக்கப்படப்போகும் சாதனைகள்



இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களில் தென்னாபிரிக்கா கிண்ணங்களைக் கைப்பற்றிவிட்ட நிலையில் டெஸ்ட் தொடரைச் கொக்லியின் தலைமையிலான இந்திய அணி கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா தென்னாபிரிக்கா டெஸ்ட் தொடர் மீதான பெருவாரியான எதிர்பார்ப்புக்கான மற்றொரு காரணம் இந்த ஒரு தொடரிலேயே கிட்டத்தட்ட 9 சாதனைகள் படைக்கப்படப்போகின்றன என்பதுதான். குறித்த சாதனைகளை தொகுப்பாக தருவதே இந்தக் கட்டுரை.

**டிவில்லியர்ஸ் 8 ஆயிரம் ஓட்டங்கள்:-**

ரி-20 ஒருநாள் ஆட்டங்களில் இந்திய அணியை மிரட்டியெடுத்த வில்லியர்ஸ் டெஸ்ட் ஆட்டங்களிலும் அதிரடி காட்டினால் அவர் 8 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டுவார். தற்போது 99 டெஸ்ட் ஆட்டங் களில் (நடைபெற்றுவரும் மொகாலி டெஸ்ட் உட்பட) பங்கேற்றுள்ள வில்லியர்ஸ் 7 ஆயிரத்து 669 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

**அம்லா 7 ஆயிரம் ஓட்டங்கள்:-**

தென்னாபிரிக்க அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான அம்லா 142 டெஸ்ட் ஆட்டங்களில் பங்கேற்று 6 ஆயிரத்து 813 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதனால் இவரும் 7 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்ட வாய்ப்பு இருக்கிறது.

**கோக்லி 3 ஆயிரம் ஓட்டங்கள்:-**

இந்திய அணித்தலைவர் விராட் கோக்லி 206 ஓட்டங்கள் எடுக்கும் பட்சத்தில் 3000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டுவார். 38 டெஸ்ட் ஆட்டங்களில் பங்கேற்றுள்ள கோக்லி, தற்போது 2 ஆயிரத்து 806 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

**தாகிர் 50 இலக்குகள்:-**

தென்னாபிரிக்க சுழற்பந்து வீச்சாளர் இம்ரான் தாகிர் இதுவரை 49 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். 50 இலக்குகள் என்ற மைல்கல்லை எட்ட இவருக்கு இன்னமும் 1 இலக்கு தேவை.

**யாதேவ் 50 இலக்குகள்-**

இந்திய வேகப்பந்து வீச்சாளர் யாதேவ் இதுவரை 48 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். இவர் 50 இலக்குகள் என்ற மைல்கல்லை எட்ட இன்னும் 2 இலக்குகள் தேவைப்படுகிறது.

**அன்னிய மண்ணில் ஸ்ரெய்ன் 100 இலக்குகள்:-**

தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் டேல்ஸ்ரெய்ன் அன்னிய ஆடுகளங்களில் (தென்னாபிரிக்கா ஆடுகளங்களைத் தவிர்ந்த ஆடுகளங்கள்) 90 இலக்குகளை வீழ்த்தியுள்ளார்.. இன்னும் 10 இலக்குகளை வீழ்த்தும் பட்சத்தில் 100 இலக்குகளை வீழ்த்திய வெளிநாட்டு வீரர் என்ற பெருமையை பெறுவார்.

**இந்திய அணியின் கோட்டை:-**

நான்காவது ஆட்டம் நடைபெறும் டெல்லி கோட்லா மைதானம் இந்திய அணியின் கோட்டையாக இருந்து வருகிறது. இந்திய அணியை இந்த மைதானத்தில் வெற்றி பெறுவது எளிதல்ல. கடந்த 1987ஆம் ஆண்டு இந்தியாவை மேற்கிந்திய தீவுகள் அணி வீழ்த்தியது. அதன் பிறகு 28 ஆண்டுகளாக பல அணிகளுக்கு எத்தனையோ வாய்ப்புக்கள் கொடுக்கப்பட்ட போதிலும் இந்தியாவே அந்த மைதானத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

**அன்னிய மண்ணில் தொடரை இழக்காத தென்னாபிரிக்கா-**

பொதுவாக ஓர் அணி தனது மைதானங்களிலேயே கூடுதல் ஆதிக்கம் செலுத்தும். ஆனால் எதிலும் வேறுபாடாக இருக்கும் தென்னாபிரிக்கா இதிலும் வேறுபாடு காட்டுகிறது. கடந்த ஒன்பது வருடங்களில் தென்னாபிரிக்க அணி ஒரு டெஸ்ட் தொடரையேனும் இழக்கவில்லை. இந்த நிலையில் தற்பொழுது நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான தொடரைக் கைப்பற்றினால் 10வருடங்களாக அன்னிய மண்ணில் எந்தவொரு டெஸ்ட் தொடரை யும் இழக்காத அணி என்ற பெருமையைப் பெறும். இந்தியா தொடரைக் கைப்பற்றும் பட்சத்தில் தென்னாபிரிக்காவின் வெற்றிநடை முடிவுக்கு வரும்.

**அஸ்வின் அதிவேக 150 இலக்குகள்:-**

மேற்குறிப்பிட்டுள்ள சாதனைகள் இந்தத் தொடரில் படைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் சாதனைகள்.

ஆனால் ஒரு சாதனை ஏற்கனவே படைக்கப்பட்டாயிற்று. அது அஸ்வினின் அதிவேக 150 இலக்குகள் என்பததான். தொடர் தொடங்கும் பொழுது அஸ்வின் 145 இலக்குகளுடன் இருந்தார். இதனால் இன்னும் 5 இலக்குகளை வீழ்த்தினால் குறைந்த இன்னிங்சில் 150 இலக்குகளை வீழ்த்திய இந்திய வீரர் என்ற பெருமையைப் பெறுவார் என்ற நிலைமை இருந்தது. முதலாவது டெஸ்ட்டின் முதல் இன்னிங்ஸில் 5 இலக்குகளை வீழ்த்தியதன் மூலம் இந்த சாதனையை சாத்தியமாக்கியுள்ளார் அஸ்வின்.

அதிகம் சம்பாதிக்கும் காலப்பந்து வீரர். அதிகப்படியான ரசிகர்களைக் கொண்டவர், பெறுமதி வாய்ந்த வீரர். சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த வீரருக்கான விருதை அதிக தடவைகள் வென்றவர், சமூக வலைத்தளங்களில் அதிகமானோரால் பின்தொடரப்படுபவர், உதவும் மனப்பாங்கு கொண்ட வீரர் இவ்வாறான சாதனைகளுக்கும் பெருமைகளுக்கும் சொந்தக்காரனான ரொனால்டோ, தனது ஒரேயொரு தவறான முடிவால் ஒட்டுமொத்த ரசிகர்களதும் அதிருப்தியையம் வாங்கியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையே "லா லிகா" என்னும் பிரபல்யமான தொடர் தற்பொழுது நடைபெற்றுவருகிறது. ரியல் மட்ரிட் என்ற கழகத்தின் நட்சத்திர வீரராக ரொனால்டோ ஜொலித்து வருகிறார். இதன்மூலம் ரொனால்டோவுக்கு கோடிக்கணக்கான வருமானம் வருடாவருடம் கிடைக்கிறது. இந்த நிலையில் ரொனால்டோவின் நாடான போர்த்துக்கலுக்கும் ரஷ்யா, லக்சம்பேர்க் நாடுகளுக்கும் இடையே நட்பு ரீதியிலான உதைபந்தாட்டத் தொடர் ஒன்று இந்த வாரம் நடைபெறவுள்ளது. குறித்த தொடர்களில் இருந்து தான் விலகுவதாக அறிவித்துள்ளார் ரொனால்டோ. மொத்தத்தில் தேசியத்தைவிட பணமும் கழகமுமே தேவை என்று முடிவெடுத்துள்ளார்.

இத்தனைக்கும் ரொனால்டோ ஒரு சாதாரண வீரர் கிடையாது. போர்த்துக்கல் அணியின் தலைவரும் அவர்தான். போர்த்துக்கலில் ரொனால்டோவுக்கு இருக்கும் மரியாதையும் அந்தஸ்தும் உலக அளவில் எந்தவொரு விளையாட்டு வீரனுக்கும் இருந்ததில்லை என்றும் சொல்லிக் கொள்ளலாம். ரொனால்டோவின் பெயரில் நூதனக் காட்சிச்சாலை, தெருக்கள், பாடசாலைகள் போர்த்துக்கலில் உள்ளன.

அந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களில் ரொனால்டோவின் வாழ்க்கை வரலாறு பட்டப்படிப்பாகவும் பார்க்கப்படுகிறது. ஏன் போர்த்துக்கல் விஞ்ஞானிகள் தாம் கண்டுபிடித்த நட்சத்திரக் கூட்டத்துக்கு ரொனால்டோ என்று பெயரிட்டுள்ளனர். மண்ணின் மைந்தனாக இத்தனை கௌரவங்களையும் கொடுத்து மக்களால் தூக்கி வைத்து கொண்டாடப்பட்ட ரொனால்டோ அத்தனையையும் தவிடுபொடியாக்கியுள்ளார் அதே மண்ணைத் தூக்கியெறிந்து. ரொனால்டோவுக்கும் மெஸ்ஸி, நெய்மர் இருவருக்கும் இடையிலான இடைவெளி ஏணிவைத்தாலும் எட்டாது என்ற விமர்சனங்கள் திறமை அடிப்படையில் உண்மை என்று சிலர் வாதிட்டபோதிலும் மனச்சாட்சி என்று வரும்பொழுது அந்த நிலைப்பாடு அப்படியே தலை கீழ் ஆகிறது.

ஏனெனில் நெய்மர் பிரேசிலைவிட பார்சிலோனாவுக்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை. அதேபோல் மெஸ்ஸி ஆர்ஜென்ரினாவைவிட தனது கழகமான பார்ஸிலொனாவுக்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை.

